நியூயார்க்

நியூயார்க் விமான நிலையத்தில் விமானம் இறங்கிக்கொண்டு இருந்தபோது காலை 7 மணி. சூரியன் பனிப் போர்வைக்குள் சிக்கி, பட்டர் தாளில் சுற்றப்பட்ட ஆப்பிள் போலத் தெரிய... கோலப் பொடியைத் தூவும் தினுசில் பனி மழை.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

விஜேஷ் கெடுபிடியான கஸ்டம்ஸை முடித்துக்கொண்டு லவுஞ்சுக்குள் நுழைந்தபோது, அந்த அழகான பெண் பொன்னிற முடியும், கோபால்ட் நீல நிறக் கண்களுமாக விஜேஷை எதிர்கொண்டாள். கையில் அரை அடி உயரத்தில் ஒரு மினி பொக்கே.

"வெல்கம் விஜேஷ்!"

"யூ... யூ... ஃப்ளோரா?"

"யெஸ்!"

விஜேஷ் ஒரு புன்னகையை உதட்டில் நிறுத்தி ஆங்கிலத்தில் ஆச்சர்யப்பட்டான். "என் நண்பன் ஃப்ரெட்ரிக்குக்கு இப்படி ஓர் அழகான தங்கை இருப்பாள் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்தது இல்லை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ஃப்ளோரா சிரித்தாள். வாய்க்குள் இருந்து ஒரு முத்துச்சரம் வெளிப்பட்டு, எனக்கு என்ன விலை கொடுக்கலாம் என்று கேட்டது.

"பயணம் எப்படி இருந்தது?"

"போர்! எந்த ஏர் ஹோஸ்டஸ்சும் பார்க்கும்படி இல்லை. உணவும் சரி இல்லை. பெயர் தெரியாத ஏதோ ஒரு திரவத்தில் ஊறிய வெள்ளரிக்காய்த் துண்டுகளும், வெண்ணெய் தடவாத காய்ந்த ரொட்டிகளையும் கொடுத்தால், அது எப்படி வயிற்றுக்குள் போகும்?"

ஃப்ளோரா மறுபடியும் முத்துச்சரத்தைக் காட்டினாள். 'ஓல்ட் வெஸ்ட்ப்யூரி'க்குப் போகும் வழியில் ஒரு நல்ல இண்டியன் ரெஸ்டாரன்ட் இருக்கிறது."

"வேண்டாம்... வேண்டாம்! இப்போது பசி இல்லை. என் ஆர்வம் எல்லாம் இப்போது எதில் தெரியுமா? நான் வாங்கப்போகும் அந்த வீட்டைப்பற்றித்தான். இன்றைக்கே நான் வீட்டைப் பார்த்து முடிவு செய்ய வேண்டும் ஃப்ளோரா."

"கவலைப்படாதீர்கள் மிஸ்டர் விஜேஷ். என் வீட்டுக்குப் போகும் வழியில் தான் அந்த வீடு இருக்கிறது. கொஞ்சம் அமைதியான சூழ்நிலையில் அமைந்த பழங்கால வீடுதான் என்றாலும், உறுதியான வீடு. விலையைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம். ஏனென்றால், நான் ஒரு லாயர் என்கிற முறையில் அந்த வீட்டை விற்பதற்கான முழு உரிமையும் என்னிடம்தான் உள்ளது."

"அந்தத் தைரியத்தில்தான் பாரீஸில் இருந்து புறப்பட்டு வந்திருக்கிறேன்!"

இருவரும் விமான நிலையத்தைவிட்டு வெளியே வந்தார்கள். ஃப்ளோரா தன்னுடைய பென்ஸ் காரை பார்க்கிங் வரிசையில் இருந்து உருவிக்கொண்டாள். விஜேஷ் தன் கையில் இருந்த சூட்கேஸை டிக்கியில் வைத்துவிட்டு, ஃப்ளோராவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். காரின் ஏ.சி. காற்றில் பெர்ஃப்யூம் மணத்தது.

காரை விரட்டினாள் ஃப்ளோரா. ரோட்டின் நான்கு டிராக்குகளில் அதிவேக டிராக்கைத் தேர்ந்தெடுத்தாள். 140 மைல் வேகத்தில் பென்ஸ் வீல்கள் சுழன்றன.

ஃப்ளோரா கேட்டாள்... "நியூயார்க்குக்கு முதல்தடவை வருகிறீர்கள். உங்கள் பார்வையில் நியூயார்க் எப்படி?"

"மகா அழுக்கு! இப்படி ஓர் அழுக்கான நகரத்தை இந்தியாவில்கூடப் பார்க்க முடியாது. விமானத்தில் இருந்து கீழே இறங்கியவுடனே எனக்குப் பெரிய ஏமாற்றம். நம்முடைய ஷூவில் உள்ள தூசி பட்டு நியூயார்க் விமான நிலையத்தின் தரை அழுக்காகிவிடுமோ என்று விமானத்தில் இருந்தபோது நான் கற்பனை செய்திருந்தேன். ஆனால், விமான நிலையத்தில் இறங்கியபோது, அங்கு இருந்த அழுக்கு பட்டு என் ஷூ விணாகிவிடக் கூடாதேன்னு கவலைப்பட்டேன். விமான நிலையம் மட்டும்தான் அழுக்கு என்று நினைத்தேன். அதைவிட, நகரம் ரொம்பவும் மோசம். பாருங்கள், ரோட்டோரங்களில் எவ்வளவு குப்பைகள்?"

LIVAN_JOY@TAMILTORRENTS.COM

"அதற்குக் காரணம், இங்குள்ள மக்கள்தொகை. அது தவிர, நீக்ரோக்களின்..." என்று ஃப்ளோரா பேசிக்கொண்டு இருக்கும்போதே விஜேஷின் செல்போன் ரிங்டோனை வெளியிட்டது.

"எக்ஸ்கியூஸ்மீ ஃப்ளோரா" என்று சொல்லி, செல்போனை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான். ஒரு நம்பர்.

குரல் கொடுத்தான்.

"யெஸ்..."

"பேசறது விஜேஷா?"- ஒரு பெண் குரல் கேட்டது. நல்ல தமிழ்.

"ஆமா..."

"நீங்க பாரீஸில் ஒரு பெரிய சா◌ஃப்ட்வேர் கம்பெனியில் வேலை பார்க்கறீங்க இல்லையா?"

"நீங்க யாரு?"

"அது கடைசியில்! நான் இப்போ உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லணும். சொல்லலாமா... வேண்டாமா?"

"சொல்லு..."

"நியூயார்க்ல இப்போ உங்களுக்கு நல்ல வேலை கிடைச்சிருக்கு. அதுக்கு முன்னோட்டமாக ஒரு வீட்டைப் பார்த்து விலை பேச வந்திருக்கீங்க. சரியா?"

"ரொம்ப சரி!"

"உங்ககூட பாரீஸில் வேலை செய்யற ◌ஃப்ரெட்ரிக்கோட சிஸ்டர் ◌ஃப்ளோரா ஒரு லாயர். அவளோட கஸ்டடியில் இருக்கிற ஒரு பழைய வீட்டை வாங்கலாம்னு உங்களுக்குள்ளே ஓர் எண்ணம். சரியா?"

"சரி!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இந்த நிமிஷத்தோடு அந்த எண்ணத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வெச்சுட்டு, பாரிசுக்குப் போக அடுத்த ◌ஃப்ளைட்டைப் பிடிங்க."

"ஏன், அந்த வீட்டுக்கு என்ன?"

"சொன்னா நம்பணும்..."

"சொல்லு..."

"கடந்த ஆறு மாச காலத்துல அந்த வீட்டை வாங்க முயற்சி பண்ணி, அக்ரிமென்ட் போட்ட ரெண்டு பேர் அடுத்தடுத்து இறந்துட்டாங்க. இப்ப நீங்க மூணாவதா வந்திருக்கீங்க. நீங்க இந்தியா. அதிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்ங்கிற காரணத்துனாலதான் போன் பண்ணிப் பேசிட்டு இருக்கேன்."

"சரி! மொதல்ல நீ யார்னு சொல்லு!"

"என் பேர் காமாட்சி."

"ஊரு?"

"காஞ்சிபுரம்."

கோவை

மாவட்ட ஆட்சியர் அலுவலகம். காலை 11 மணி. மக்கள் ஏகப்பட்ட பிரச்னைகளோடு வரிசைகளில் காத்துக்கொண்டு இருக்க... கலெக்டர் பங்கஜ் குமார் ஜீப்பில் இருந்து இறங்கி, வேக வேகமாக உள்ளே போனார். பி.ஏ. எதிர்ப்பட்டார். அவர் விஷ் செய்ததை அலட்சியமாக ஏற்றுக்கொண்டார்.

"ஒரு அஞ்சு நிமிஷம் உள்ளே வாங்க" என்றார்.

"யெஸ் ஸார்..."

பங்கஜ் குமார் தன் அறைக்குள் நுழைந்து நாற்காலிக்குத் தன் முதுகைக் கொடுத்துக்கொண்டே பி.ஏ-வை ஏறிட்டார். பேச்சில் அனல் பறந்தது. "சண்முகம்! இது என்ன போலீஸ் ஸ்டேஷனா... இல்லை, கலெக்டர் ஆபீஸா? புருசன் பொஞ்சாதி சண்டை, என் பொண்டாட்டி எவன்கூடவோ ஓடிப் போயிட்டா... தேடிக் கண்டுபிடிச்சுக் குடுங்கன்னு ஒரு கூட்டம், அரிசியில் கல் இருக்கு; தண்ணியில் புழு இருக்குன்னு சொல்லிக்கிட்டு ரோடு மறியல். இந்த மாசத்துல மட்டும் 27 பேர் ஏதேதோ பிரச்னைகளுக்காக மண்ணெண்ணெய் டின்களோடு வந்து தீக்குளிக்கப் போறதா என் ஜீப் முன்னாடி உட்கார்ந்து பாடாய்ப்படுத்திட்டாங்க. இந்தப் பிரச்னைகளை ஏ.சி. உதவியோடு நீங்க பார்த்துக்கக் கூடாதா?"

LAVAN_JOSEPH@YAHOO.COM

"சார்... அதுல என்ன பிரச்னைன்னா?"

"நீங்க வழக்கமா சொல்ற எந்த எக்ஸ்பிளனேஷனும் எனக்கு வேண்டியது இல்லை. நான் மாவட்ட நிர்வாகப் பணிகளைக் கவனிப்பேனா? இல்லே... காணாமப் போன பொண்டாட்டிகளைத் தேடி அவனவன் புருஷன்களோடு சேர்த்துவெச்சிட்டு இருப்பேனா. நீங்களே சொல்லுங்க?"

"ஸாரி சார்... இனிமே இது மாதிரியான விஷயங்கள் உங்க மேஜை வரைக்கும் வராம நான் பார்த்துக்கிறேன் சார்!"

"இதையே 100 தடவை சொல்லிட்டீங்க..." பங்கஜ் குமார் எரிச்சலோடு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, அவருடைய செல்போன் அழைத்தது. எடுத்தார். 'விமிழிவிமிழிமி சிகிலிலிமிழிநி' என்று டிஸ்ப்ளே சொன்னது.

பி.ஏ-வைத் திரும்பிப் பார்த்தார்.

"நான் வர்றேன் சார்..." பி.ஏ. அறையைக் கடந்து போனதும், பங்கஜ் குமார் மலர்ந்த முகமாய் செல்போனைக் காதுக்குப் பொருத்தி, மெதுவாகக் குரல் கொடுத்தார். "சொல்லு மினி..."

"எனக்குக் காலையில் இருந்து மனசே சரியில்லைங்க."

"ஏன், என்னாச்சு?"

"ஏதோ போன் வந்ததுன்னு சொல்லி, டிபன்கூடச் சாப்பிடாம அவசர அவசரமாக் கிளம்பிட்டீங்களே? எனக்கும் அதுக்கு அப்புறம் சாப்பிடத் தோணலை. எல்லாத்தையும் தூக்கி வேலைக்காரிக்குக் கொடுத்துட்டேன்."

"என்னது! நீயும் சாப்பிடலையா? இதோ பார் மினி! நம்ம கல்யாணம் நடக்கிறதுக்கு முந்தி உன்னைப் பெண் பார்க்க வரும்போது, ஒரு அஞ்சு நிமிஷம் தனியா சந்திச்சுப் பேசினோம். அப்ப நான் என்ன சொன்னேன்னு உனக்கு ஞாபகம் இருக்கா?"

"நல்லா ஞாபகம் இருக்கு."

"என்ன சொன்னேன்?"

"நான் ஒரு கலெக்டரா இருக்கேன்கிற காரணத்துக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்காதே. மாசத்துல பாதி நாள் கேம்ப் போயிடுவேன். ஜனாதிபதி, பிரதமர்னு யார் வந்தாலும் வீட்டையும் உன்னையும் சுத்தமா மறந்துடுவேன். கலவரம் நடந்தா, அந்தப் பகுதிகளுக்குப் போகணும்... தீவிரவாதிகளோட மிரட்டல்களை எதிர்கொள்ளணும்... இப்படி வரிசையாக ஏதேதோ சொன்ன மாதிரி ஞாபகம். அதை மறுபடியும் ஒரு தடவை ரீ-வைண்ட் பண்ணிப் பார்த்துக்க."

LAVANYOY@TAMILTORRENTS.COM

"சரி... சரி! மத்தியானம் லஞ்ச்சுக்காவது வருவீங்களா... மாட்டீங்களா?"

"இன்னிக்கு மக்களின் குறை தீர்க்கும் நாள். நிறைய மனுக்கள் வரும்... படிச்சுப் பார்த்து உடனடியா முடிவு எடுக்கணும். எவ்வளவு நேரமாகும்னு எனக்கே தெரியாது மினி!"

"நீங்க வரலைன்னா, நான் மத்தியானமும் சாப்பிட மாட்டேன். உங்களுக்கும் எனக்கும் கல்யாணம் நடந்து இன்னிக்கு 51-வது நாள். இந்த ரெண்டு மாச காலத்துல நாம ரெண்டு பேரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிட்ட நாட்களை விரல்விட்டு எண்ணிடலாம். நீங்க இன்னிக்கு என்ன பண்ணுவீங்களோ, ஏது பண்ணுவீங்களோ, எனக்குத் தெரியாது. சாப்பிட வரணும்."

"இதோ பார் மினி... நான் வரலைன்னு பட்டினி கிடக்காதே. இன்னிக்குச் சாயந்தரம் புரந்தரதாஸ் ஹாலில் உன்னோட கச்சேரி இருக்கு. நீ சாப்பிடாமப் போனா ரெண்டு கீர்த்தனம் பாடறதுக்குள்ளே 'ஃபெய்ன்ட்' ஆயிடுவே!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அது உங்களுக்குப் புரிஞ்சா சரி! நான் இன்னிக்கு சபாவில் கச்சேரி பண்ணும்போது, ஒவ்வொரு கீர்த்தனைக்கும் அப்ளாஸ் வாங்கணும்னா... மத்தியானம் லஞ்ச்சுக்கு வரணும்... என்கூட உட்கார்ந்து சாப்பிடணும்!"

"நான் உன்னோட கழுத்துல தாலி கட்டினதே அந்தக் கீர்த்தனைகளோட இனிமைக்காகத்தான். அந்தக் கீர்த்தனைகளை நான் பட்டினி போட விரும்பலை. சரியாய் ஒரு மணிக்கு வந்துடறேன்."

"தேங்க்யூடா!"

"என்ன சொன்னே?"

"ஸாரிடா..." மறுமுனையில் மின்மினி ஒரு சிரிப்போடு செல்போனை அணைத்துவிட, பங்கஜ் குமாரும் தனக்குள் பீறிட்ட சிரிப்பை மென்றபடி செல்போனை அணைத்தார்.

கதவுக்கு வெளியே பியூன் அன்றைக்கு வந்த தபால் கட்டோடு நின்றிருப்பது தெரிந்தது. மேஜையின் மேல் இருந்த அழைப்பு மணியைத் தட்டியதும், பியூன் உள்ளே வந்தான். தபால்களை வைத்துக்கொண்டே தயக்கக் குரலில் கூப்பிட்டான்.

"ஐயா..."

"என்ன சாமித்துரை?"

"கடந்த ரெண்டு மூணு நாளா கையில் ஒரு கோரிக்கை மனுவோடு ஒருத்தர் வந்து உங்களைப் பார்க்கிறதுக்காக கால் கடுக்க நிக்கிறார். கோரிக்கை மனுவைப் பெட்டியில் போட்டுட்டுப் போங்கன்னு சொன்னாலும் அவர் கேட்கிறது இல்லை."

"கோரிக்கை என்னன்னு கேட்டியா?"

"கையில் மனு எழுதிவெச்சிருக்கார் ஐயா."

"அந்த ஆளை உள்ளே அனுப்பு."

பியூன் தலையாட்டிவிட்டு வெளியேறிப் போனதும் அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் அந்தப் பெரியவர் உள்ளே வந்தார். முடி கொட்டிப் போன மண்டை. மோவாயில் கொத்தாக நரை தாடி.

"ஐயா! வணக்கம்..."

பங்கஜ் குமார் நிமிர்ந்தார்.

"உங்களுக்கு என்ன வேணும்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஐயா! என்னோட கோரிக்கையை ஒரு மனுவா எழுதிக் கொண்டுவந்து இருக்கேன். அதை நீங்க படிச்சு..."

"வேண்டாம்... உங்க கோரிக்கை என்னன்னு வாய்லயே சொல்லுங்க..."

"ஐயா... அது வந்து... என்னோட மருமக இப்ப என்னையும் என் பையனையும் விட்டுட்டு வேற ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா. சட்டப்படி விவாகரத்தும் ஆகலை. இந்த விஷயத்துல நீங்கதான் எங்களுக்கு உதவி பண்ணணும்!"

பங்கஜ் குமாருக்குள் கோபம் கொப்பளித்துக் கிளம்பியது. ஆத்திரத்தோடு நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழ முயன்றவர், பெரியவரின் கையில் இருந்த போட்டோவைப் பார்த்ததும் தளர்ந்தார்.

"ஐயா! இதுதான் என் மருமகளோட போட்டோ."

போட்டோவில் மின்மினி!

இந்த வாரக் கேள்வி:

'கிரைம் சிட்டி' என்பது எது? 1. நியூயார்க் 2. பாரீஸ் 3. கோவை, AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணையும் டைப்

செய்து, 562636-க்கு உடனே எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

-பறக்கும்...

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

கோவை

போட்டோவில் கேமராவை நேர்ப்பார்வை பார்த்துப் புன்னகைத்துக்கொண்டு இருந்த மின்மினியைப் பார்த்ததும், பங்கஜ் குமாரின் உடம்பில் இருந்த ஒட்டுமொத்த நரம்பு மண்டலமும் ஓர் அதிர்வுக்கு உட்பட்டு, ரத்தத் தில் வெப்பம் பரவியது. அது மூளைக்குள் போய் குபுகுபுத்தது.

'இது மின்மினிதானா?' - பார்வைக்குக் கூர்மை கொடுத்துக் கண்களைச் சுருக்கிய பங்கஜ்குமாரை பெரியவர் ஒரு கேலிப் புன்னகையோடு ஏறிட்டார். குரலைத் தாழ்த்தி ஏற்ற இறக்கத்தோடு கேட்டார்... "என்னங்கய்யா... இந்தப் போட்டோவைப் பார்த்ததும் அப்படியே ஆடிப்போயிட்டீங்க..? இந்தப் போட்டோவில் இருக்கிற பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

பெரியவரின் கையில் இருந்த போட்டோவைப் பறித்து, அதையே சில விநாடிகள் வரை வெறித்தார் பங்கஜ்குமார்.

அவருடைய மனைவி மின்மினிதான்! சந்தேகமே இல்லை. வலது கன்னத்தின் கீழ்ப் பகுதியில் ஒட்டியிருந்த அந்தக் கடுகு சைஸ் மச்சமும், சற்றே விரிந்த காதுகளும் அவள் மின்மினிதான் என்று சூடம் ஏற்றி அடிக்காத குறையாகச் சத்தியம் செய்தன. பெரியவரைத் தீப்பார்வை பார்த்தார்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இ... இ... இந்த போட்டோ உங்களுக்கு எப்படிக் கிடைச்சுது?" - பங்கஜ்குமார் கோபத்தோடு கேட்ட கேள்விக்குப் பெரியவர் பவ்யமாகி, தன் இரண்டு கைகளையும் மார்புக்குக் குறுக்காகப் பெருக்கல் குறி போட்டுக்கொண்டார்.

"ஐயா! இது என் மருமகளோட போட்டோ. இந்தப் போட்டோ என்கிட்டே இல்லாம வேற யார்கிட்டே இருக்கும்? இந்த போட்டோவைத் தவிர, வேற ஒரு போட்டோவும் இருக்கு. பார்க்கறீங்களா?"-பெரியவர் கேட்டுக்கொண்டே தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அந்த பிரவுன் நிறக் கவரை எடுத்துப் பிரித்தார். போஸ்ட் கார்டு சைஸில் இருந்த போட்டோ ஒன்றை அதிலிருந்து உருவி நீட்டினார், "ம்... பாருங்க..."

போட்டோவை வாங்கிப் பார்த்த பங்கஜ்குமாருக்கு நெற்றி சட்டென்று வியர்த்து, வாய் உலர்ந்து போனது. அந்த வண்ணப் போட்டோவில் ஒரு சர்ச் பிரதானமாகத் தெரிய, அதன் பின்னணியில் கும்பல் ஒன்று தெரிந்தது. கும்பலின் மையத்தில் பாதிரியார் ஒருவர் வெள்ளை அங்கியில் நின்றிருக்க, அவருக்கு முன்னால் கிறிஸ்துவப் பாரம்பரியத் திருமண உடைகளோடு மின்மினியும் அந்த இளைஞரும் பார்வைக்குக் கிடைத்தார்கள். முகங்களில் பாதரசம் தடவிய மாதிரி பரவசம்.

பெரியவர் சொன்னார், "ஐயா! அஞ்சு வருஷத்துக்கு முந்தி ஆந்திர மாநிலம் பெல்லாரியில் இருக்கிற ஒரு சர்ச்சில் என்னோட மகன் அல்போன்சுக்கும் மின்மினிக்கும் கல்யாணம் நடந்தபோது எடுத்த போட்டோ இது."

பெரியவர் சொல்ல, போட்டோவைப் பிடித்து இருந்த பங்கஜ்குமாரின் கை நடுங்கியது. மூளை பிராமிஸ் செய்தது. 'இவள் மின்மினிதான். சந்தேகமே இல்லை!' அடித்துத் துவைத்த துணியாகத் துவண்டுபோன பங்கஜ்குமார் பெரியவரை வியர்த்த முகமாக ஏறிட்டார். "உங்க மகன் பேர் என்ன சொன்னீங்க?"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

"அல்போன்ஸ்."

"அவர் இப்ப எங்கே?"

"வீட்ல இருக்கான். அவனுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. மின்மினி அவனை விட்டுப் போனதிலிருந்தே பித்துப் பிடிச்சவன் மாதிரி ஆயிட்டான். குடிப் பழக்கத்தினால் ஆரோக்கியம் கெட்டுப்போய்... ஜாண்டிஸ் அட்டாக் ஆகி..."

எரிச்சலான பங்கஜ்குமார் கையமர்த்தினார். "உங்க பேர் என்ன?"

"மைக்கேல் எர்னஸ்ட்..."

"என்ன பண்றீங்க..?"

"டவுன்ஹால்ல பீ்ப் பிரியாணி ஸ்டால் ஒண்ணு நடத்திட்டு வர்றேன்!"

"மின்மினிக்கும் அல்போன்சுக்கும் கல்யாணம் நடந்ததாய்ச் சொன்னீங்க. கல்யாணம் பண்ணிக்கிட்ட அவங்க ஏன் பிரியணும்?"

"கல்யாணம் நடந்த ஒரு மணி நேரத்துக்குள்ளேயே அவங்க ரெண்டு பேருக் கும்

நடுவுல ஏதோ பிரச்னை வந்தது. மின்மினி சண்டை போட்டுக்கிட்டுப் போயிட்டா."

"என்ன பிரச்னை?"

"அது என்னான்னு எனக்குத் தெரியலீங்கய்யா! என்னோட பையன்கிட்டே கேட்டேன். அவன் சொல்லலை. மின்மினியைத் தனியா சந்திச்சுக் கேட்டேன். அவளும் சொல்லலை. ரெண்டு பேரையும் சேர்த்துவைக்க நான் முயற்சிகள் எடுத்துக்கிட்டு இருக்கும்போதே, மின்மினி பெல்லாரியில் இருந்த தன்னோட வீட்டைக் காலி பண்ணிட்டு, சென்னைக்குப் போயிட்டா. அவ வீட்டைக் காலி பண்ணின விவரம் எனக்கும் என் மகனுக்கும் நாலஞ்சு நாள் கழிச்சுதான் தெரிஞ்சுது. அல்போன்ஸ் இடிஞ்சுபோயிட்டான். நாங்களும் பெல்லாரியில் இருந்த வீட்டைக் காலி பண்ணிட்டு, மின்மினியைத் தேடி சென்னைக்குப் போனோம். கடந்த அஞ்சு வருஷ காலமா அவளைத் தேடி அலைஞ்சோம். மின்மினியை எங்களால கண்டுபிடிக்க முடியலை. போன வாரம் 'கொடீசியா' வளாகத்துல ஒரு ஃபங்ஷன் நடந்தப்ப நான் அங்கே இருந்தேன். அந்தச் சமயத்துல நீங்களும் மின்மினியும் அந்த ஃபங்ஷன்ல கலந்துக்கிறதுக்காக ஒரே கார்ல வந்தப்பதான் மின்மினிக்கும் உங்களுக்கும் கல்யாணம் நடந்திருக்கிற விவரம் எனக்குத் தெரிஞ்சுது. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. இந்த விஷயம் என் மகனுக்குக்கூடத் தெரியாது. சட்டப்படி மின்மினி என்னோட மருமக. அல்போன்ஸோட மனைவி. நீங்க அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது எந்த வகையில் நியாயம்னு தெரியலை. இந்தப் பிரச்னையை நான் ஒரு மனுவா எழுதிக் கொண்டாந்திருக்கேன். நீங்கதான் இதுக்கு ஒரு தீர்வு சொல்லணும்."

http://www.freetamilebooks.com

பங்கஜ்குமார் சில விநாடிகள் கண் மூடி மௌனமாக இருந்துவிட்டு, பெரியவர் மைக்கேல் எர் னஸ்ட்டை ஏறிட்டார். "உங்களுக்கு ஒரு தீர்வு வேணும். அவ்வளவுதானே?"

"ஆமாங்கய்யா! நான் நினைச்சிருந்தா பத்திரிகைக்கும் டி.வி-க்கும் போய் விஷயத்தைச் சொல்லி, இதைப் பெரிசுபடுத்தியிருக்க முடியும். அப்படி நான் பண்ண விரும்பலை. உங்ககிட்டே இருந்து எனக்கு ஒரு நியாயமான முடிவு கிடைக்கும்கிற நம்பிக்கை யில்தான் உங்களை ரெண்டு நாளாய்ப் பார்க்க முயற்சி எடுத்து, இன்னிக்குப் பார்த்துட்டேன்."

"இந்த விஷயத்தை வெளியே யார்கிட்டேயும் சொல்லலையே?"

"இல்லீங்கய்யா!"

"சரி... நாளை காலையில் உங்க மகனோடு என் பங்களாவுக்கு வந்துடுங்க. மேற்கொண்டு பேச வேண்டியதை அங்கே வெச்சுப் பேசிக்குவோம்."

"எத்தனை மணிக்கு வரணுங்கய்யா?"

"ஏழு மணிக்கெல்லாம் வந்துடுங்க."

"சரிங்கய்யா!"-மைக்கேல் எர்னஸ்ட் கும்பிடு ஒன்றைப் போட்டுவிட்டு, அறையில் இருந்து வெளி யேற, வெளிறிப்போன முகத்தோடு அவருடைய முதுகையே வெறித்தார் கலெக்டர் பங்கஜ்குமார்.

நியூயார்க்

பேர் காமாட்சி, ஊர் காஞ்சிபுரம் என்று சொல்லி செல்போனில் பேசிய அந்தப் பெண்ணுடன் விஜேஷ் மேற்கொண்டு பேச முயல, 'பை' சொல்லி இணைப்பைத் துண்டித்தாள்.

விஜேஷின் முகம் முழுக்கக் குழப்பமும் வியப்பும் பார்ட்னர்ஷிப் போட்டுக்கொண்டு ஸ்லோமோஷனில் பரவியது. அதைக் கவனித்துவிட்டு, காரை ஓட்டிக் கொண்டு இருந்த ஃப்ளோரா கேட்டாள்... "செல் போனில் பேசியது யார் மிஸ்டர் விஜேஷ்?"

'இவளிடம் சொல்லலாமா, வேண்டாமா' என்று விநாடிகள் யோசித்து, ஆறாவது விநாடியில் வேண்டாம் என்று முடிவு எடுத்து, "அது... அது... ஒரு ராங் நம்பர்" என்றான் விஜேஷ்.

"ராங் நம்பரா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஆமாம்..."



"ஒரு லாயரிடம் பொய் சொல்லக் கூடாது என்பது பொதுவான விதி. உங்களுக்கு வந்தது ராங் நம்பர் இல்லை. சரியான நம்பர்தான். ஆனால், பேசியது மட்டும் ராங் பர்சன். நான் சொல்வது சரியா?"

விஜேஷ் அவளை வியப்பாகப் பார்க்க, அவள் சிரித்தாள். "உங்களுக்கு வந்தது ராங் நம்பராக இருந்திருந்தால், அந்தப் பேச்சு ஒரு பத்து விநாடிகளுக்குள் முடிந்துபோயிருக்கும். ஆனால், நீங்கள் ஒரு நிமிடம் பேசினீர்கள். அந்த ஒரு நிமிடப் பேச்சு முடிவதற்குள், உங்கள் முகத்தில் ஓராயிரம் முகபாவங்கள். அதிர்ச்சி அலைகள். போனில் ஏதாவது கெட்ட செய்தியா?

"கிட்டத்தட்ட..."

"பேசியது யார்... ஆணா, பெண்ணா?"

"பெண்."

"என்ன சொன்னாள்?"

விஜேஷ் தயங்க, ஃப்ளோரா சிரித்துக் கண் சிமிட் டினாள். "என்னைப்பற்றி அந்தப் பெண் ஏதாவது மோசமான முறையில் விமர்சனம் செய்தாளா?"

"இல்லை."

"பின்னே?"

"என்னை எச்சரிக்கை செய்தாள்."

"எச்சரிக்கை செய்தாளா?"

"ம்... கடந்த ஆறு மாத காலத்தில் நீங்கள் சொல் லும் அந்த வீட்டை வாங்க அக்ரிமென்ட் போட்ட இரண்டு பேர் அடுத்தடுத்து இறந்துபோய்விட்டார் களாம். 'இப்போது நீங்கள் மூன்றாவது நபராக அந்த வீட்டை வாங்க வந்திருக்கிறீர்கள். இந்த நிமிஷத் தோடு அந்த எண்ணத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பாரீசுக்குப் போக அடுத்த ஃப்ளைட் டைப் பிடியுங்கள்' என்று சொன்னாள்."

ஃப்ளோராவின் முகம் லேசாக மாறியது. "நீங்கள் என்ன சொன்னீர்கள் விஜேஷ்?"

"நான் மேற்கொண்டு அவளிடம் பேசுவதற்கு முன்பாக இணைப்பைத் துண்டித்துவிட்டாள். பப்ளிக் பூத்தில் இருந்து பேசியிருக்கிறாள். அவள் ஒரு இந்தி யப் பெண். அதிலும் தமிழ்நாட்டுப் பெண். பெயர் காமாட்சி. ஊர் காஞ்சிபுரம்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ஃப்ளோரா சில விநாடிகள் வரை மௌனம் காத்து விட்டு, விஜேஷைத் திரும்பிப் பார்த்தாள். "இப்போது உங்கள் முடிவு என்ன விஜேஷ்? அந்த வீட்டை வாங்கப் போகிறீர்களா, இல்லை அவள் சொன்னது போல அடுத்த ஃப்ளைட்டைப் பிடித்து, பாரீஸ்போகப்போகிறீர்களா?"

"அந்த காமாட்சி சொன்னது உண்மையா, பொய்யா? நீங்கள் சொல்லும் அந்த வீட்டை இரண்டு பேர் வாங்க முயற்சி செய்து, அடுத்தடுத்து இறந்துபோனது உண்மையா?"

"உண்மைதான்!"

"எப்படி இறந்தார்கள்?"

"ஹார்ட் அட்டாக்! வீட்டை வாங்க வந்த அந்த இரண்டு பேருமே 70 வயதுக்கு மேற்பட்டவர்கள். ஒருவர் பெண். மற்றவர் ஆண். பெண்ணின் பெயர் பிரிட்டனி ஜான்சன். ஆணின் பெயர் ஜான் கரோல். முதலில் வீட்டை வாங்க முயற்சி செய்து அக்ரிமென்ட் போட்டவர் பிரிட்டனி ஜான்சன். அவருக்கு ஏற்கெனவே இருதய ஆபரேஷன் நடந்திருக்கிறது. டாக்டர் சொல்லியிருந்த நடைப்பயிற்சி தூரத்தைக்

காட்டிலும் அதிக தூரம் நடந்ததால், மாரடைப்பு ஏற்பட்டு மரணம். அதற்குப் பிறகு இரண்டாவதாக அக்ரிமென்ட் போட்டவர் ஜான் கரோல். அவர் பைபாஸ் சர்ஜரி செய்துகொண்டவர். குடிகாரர். ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் அளவுக்கு மீறிக் குடிப்பவர். ஒரு சனிக் கிழமை இரவு மதுவின் தாக்கம் அதிகமாகி, மாஸிவ் அட்டாக் ஏற்பட்டு மரணம். இரண்டுமே இயற்கையான முறையில் நேர்ந்த மரணங்கள். வீட்டை வாங்க நினைத்ததற்கும் அவர்கள் இறந்து போனதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. இது ஒரு சாதாரண பிரச்னை. இதை யாரோ ஊதிவிட்டுப் பெரிதாக்க நினைக்கிறார்கள்."

"இதனால் யாருக்கு என்ன லாபம்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. உங்களுக்கு போன் செய்து பயமுறுத்திய காமாட்சி யார் என்று தெரிந்தால்தான் இந்தக் கேள்விக்கான பதில் கிடைக்கும். ஆனால், மறுபடியும் அந்தக் காமாட்சி உங்களுக்கு போன் செய்ய மாட்டாள். ஏனென்றால், அந்த வீட்டை வாங்க விடாதபடி பயமுறுத்துவது ஒன்றுதான் அவளுடைய நோக்கம். இப்போது நான் உங்களிடம் கேட்க விரும்புகிற கேள்வி இதுதான். காமாட்சியின் எச்சரிக்கைக்கு உங்களுடைய ரியாக்ஷன் என்ன?"

விஜேஷ் சிரித்தான். "அவளுடைய எச்சரிக்கையை நான் குப்பைக் கூடைக்கு அனுப்பியாயிற்று. உங்களுடைய சகோதரன் ஃப்ரெட்ரிக் என் உயிர் நண்பன். எனக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைப்பவன். நியூயார்க்கில் நல்ல வேலை கிடைத்து போகப்போகிறேன் என்று தெரிந்ததும், அங்கே ஒரு வீட்டை வாங் கும் யோசனையை அவன்தான் சொன் னான். அதற்கேற்றாற்போல் ஒரு பழங் கால வீடு உடனடியாக விற்பனைக்கு இருக்கிறது என்று நீங்கள் போனில் சொன்னதும், நான் உடனே புறப்பட்டு வந்துவிட்டேன். நீங்கள் ஒரு லாயர். அந்த வீட்டை விற்கக்கூடிய உரிமையான பவர் ஆஃப் அட்டர்னி உங்களிடம் இருப்பதால், எனக்கு எந்தப் பிரச்னையும் இல்லை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நீங்கள் இப்படிப் பேசுவது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. இது எந்தப் பிரச்னையும் இல்லாத வீடு. காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதையாக, வீட்டை வாங்க முயற்சித்த இரண்டு பேர் இயற்கையான முறையில் இறந்து போயிருக் கிறார்கள். அதை ஒரு பெண் பொழுது போகாமல் கிளறிப் பார்த்து உங்களுக்கு கிலியை ஏற்படுத்த நினைத்து போன் செய்திருக்கிறாள்."

"நான் அவளை மறந்துவிட்டேன் ஃப்ளோரா! எனக்கு அந்த வீட்டைக் காட்டுங்கள். முடிவாக ஒரு விலை பேசி அக்ரிமென்ட் போட்டுக்கொள்ளலாம். எனக்கு பேங்கில் லோன் சாங்ஷன் ஆன துமே ரெஜிஸ்ட்ரேஷன்!"

"அப்படியென்றால் அந்தக் காமாட்சி யின் எச்சரிக்கையைப் பொருட்படுத்த வில்லையா?"

"ஒரு சதவிகிதம்கூட! உங்கள் வீட்டுக்குப் போகும் வழியில்தான் அந்த வீடு

இருப்பதாகச் சொன்னீர்கள் ஃப்ளோரா. போகும்போதே ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய்விடலாமா?"

"வீட்டுக்குப் போய்க் குளித்துச் சாப்பிட்டு, சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு போகலாமே?"

"இல்லை ஃப்ளோரா! எனக்கு விமானப் பய ணக் களைப்பு கொஞ்சம்கூட இல்லை. எதற்காக நியூயார்க் வந்தேனோ, அந்த வேலையை முதலில் பார்த்துவிடலாம்."

"இன்னும் பத்தே நிமிடங்களில் அந்த வீடு இருக் கும் ஓல்ட் ப்ளாக் க்ரூவ்ஸ் ஏரியா வந்துவிடும்."

"பிறகென்ன? பார்த்துவிட்டே போய்விடலாம்!"

கார் நெடுஞ்சாலையில் நான்காவது டிராக்கில் ஓர் இலவம்பஞ்சுத் துணுக்காகப் பறந்தது. நியூ யார்க்கின் பிரமாண்டமான கட்டடங்கள் இப்போது காணாமல் போயிருக்க, தொலைவில் மலைகள் நீல நிற பென்சிலால் கிழிக்கப்பட்ட கோணல்மாணல் கோடுகளாகத் தெரிந்தன.

விஜேஷ், ஃப்ளோராவிடம் ஏதோ பேச முயல, அவனுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட் டது. எடுத்து, அழைப்பது யார் என்று பார்த்தான். புது நம்பர். செல்போனைக் காதுக்குக் கொடுத்து, "யெஸ்" என்றான்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நான் காஞ்சிபுரம் காமாட்சி. என்ன முடிவு பண்ணியிருக்கீங்க விஜேஷ்?"

"ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்துக்குள்ளே பூந் துட்டுப் பேசறவங்களை நான் நம்பறது இல்லை. ஃப்ளோரா இன்னும் கொஞ்ச நேரத்துல அந்த வீட்டைக் காட்டப்போறாங்க. நான் பார்க்கப் போறேன்."

காமாட்சி சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே?"

"வலிது... வலிது... விதி வலிது! இப்ப சிரிச்சது நானில்லை. உங்க முதுகுக்குப் பின்னாடி இருக்கிற விதி!"

இந்த வாரக் கேள்வி: 'பெல்லாரி' எதற்குப் புகழ்பெற்றது?

1. தக்காளி 2. உருளைக்கிழங்கு 3. வெங்காயம்

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து

வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு உடனே எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

சென்ற வாரக் கேள்விக்கான சரியான விடை 'நியூயார்க்'. 'இனி, மின்மினி' தொடரின் முதல் அத்தியாயம் பற்றிய சூப்பர் கமென்ட்டுடன் இந்தச் சரியான விடையை எஸ்.எம்.எஸ். செய்திருந்த கீழ்க்கண்ட மூன்று பேருக்கும் தலா ரூ. 101 பரிசுத் தொகை அனுப்பிவைக்கப்படுகிறது.

- 1. பி.கற்பகம், ஈரோடு
- 2. என்.உஷாதேவி, மதுரை-9
- 3. எம்.கார்த்திக், பெருந்துறை.

- பறக்கும்...

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இனி, மின்மினி

நியூயார்க்

செல்போனில் தன் குரலின் டெசிபலை உயர்த்தினான் விஜேஷ்... "இதோ பார்... ஒரு டெலிபோன் பூத்துக்குள்ளே புகுந்துக்கிட்டு நீ சொல்ற கதையெல்லாம் நம்ப நான் தயாரா இல்லை. விதி சிரிச்சா என்ன... அழுதா என்ன? நான் இப்போ அந்த வீட்டுக்குப் பக்கத்துலதான் இருக்கேன். இன்னும் சில நிமிஷங்கள்ல அந்த வீட்டைப் பார்க்கப்போறேன். வீடு பிடிச்சிருந்தா, உடனே அட்வான்ஸ் கொடுத்து அக்ரிமென்ட் போட்டுடுவேன்!"

விஜேஷ் சொல்லச் சொல்ல, அந்தப் பெண் மறுமுனையில் கெஞ்சினாள்... "ப்ளீஸ் விஜேஷ்! நான் சொல்றதைக் கேளுங்க. உங்களுக்கு நியூயார்க்கில் ஒரு வீடு வேணும், அவ்வளவுதானே? நான் ஏற்பாடு பண்றேன். ஹட்சன் நதிக்கரையில் எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் வீட்டை விக்கிறதாச் சொல்லிட்டுஇருந்தார். நான் கேட்டுப் பார்க்கிறேன்."

"என்னது! ஹட்சன் நதிக்கரையில் வீடு விலைக்கு வருதா?"

"ஆமா..."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அந்த ஏரியாவில் வீடு வாங்கணும்னா, கையில குறைந்தபட்சம் பத்து லட்சம் டாலராவது இருக்கணுமே?"

"கண்டிப்பா..."

"அம்மா தாயே, ஆளை விடு! என் கையில் இருக்கிறது ரெண்டு லட்சம் டாலர்தான்! பத்துக்கு நான் எங்கே போவேன்?"

"நியூயார்க்கில் ரெண்டு லட்சம் டாலருக்கெல்லாம் வீடு கிடைக்கிறது ரொம்பவும் கஷ்டம். மூணு பெட்ரூம் கொண்ட ஒரு வீட்டை நீங்க வாங்கணும்னா, உங்க கையில் குறைஞ்சபட்சம் அஞ்சு லட்சம் டாலராவது வேணும், விஜேஷ்!"

"எனக்கு அதெல்லாம் தெரியாது. லாயர் ஃப்ளோரா ரெண்டு லட்சம் டாலருக்குள்ளே இப்பப் பார்க்கப்போற வீட்டை முடிச்சுத் தர்றதா சொல்லி இருக்காங்க. அது பழைய காலத்து வீடு. இருந்தாலும் பரவாயில்லை. கொஞ்சம் கொஞ்சமா ரெனவேஷன் பண்ணிக்கலாம்."

மறுமுனையில் அந்தப் பெண் பதற்றமானாள்... "விஜேஷ்! அந்த வீட்டை வாங்காதீங்க. அது வீடு இல்லை."

"பின்னே?"

"விபரீதம்!"

விஜேஷ் சிரித்தான். "கடந்த ஆறு மாத காலத்துல அந்த வீட்டை வாங்க முயற்சி பண்ணி அக்ரிமென்ட் போட்ட ரெண்டு பேர் அடுத்தடுத்து இறந்துபோயிட்டாங்க; உங்களுக்கும் அந்த நிலைமை வரலாம்னு சொல்லப்போறே... அதுதானே விபரீதம்?"

"ம்..."

"இதோ பார்... நீ சொல்ற அந்த விபரீதத்தைப்பத்தி நான் ஃப்ளோராகிட்டே பேசிட்டேன்."

"அதுக்கு என்ன சொன்னா?"

"அக்ரிமென்ட் போட்ட அந்த ரெண்டு பேருமே எழுபது வயசுக்கு மேற்பட்டவங்க. தவிர, அவங்க ஹார்ட் பேஷன்ட்ஸ். ஒரு பெண்; ஒரு ஆண். பெண் பிரிட்டனி ஜான்சன். அதிக நடைப் பயிற்சி காரணமா மாஸிவ் அட்டாக் ஏற்பட்டு மரணம். ஆண் ஜான் கரோல். ஒவ்வொரு சனிக்கிழமை ராத்திரியும் ஓவராக் குடிப்பார். பைபாஸ் சர்ஜரி பண்ணின அந்த ஹார்ட் தாங்குமா? மண்டையைப் போட்டுட்டார். ஸோ, அந்த ரெண்டு பேரோட மரணங்களுக்கும் வீடு காரணம் இல்லை. தங்களுடைய ஹெல்த்தைப் பாதுகாக்கத் தவறியதுதான் காரணம். அக்ரிமென்ட் போடாம இருந்திருந்தாக்கூட, அந்த ரெண்டு பேரும் செத்துப்போயிருப்பாங்க..."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"விஜேஷ்! உங்களுக்கு ஒரு முக்கியமான உண்மை புரியலை!"

"என்ன உண்மை?"

"அந்த ரெண்டு பேரும் வயசானவங்க, ஹார்ட் பேஷன்ட்ஸ்னு சொன்னதெல்லாம் உண்மை. ஆனா, அந்த ரெண்டு பேரோட மரணம் இயற்கையானது அல்ல."

"அப்புறம்?"

"மர்டர்ஸ்..."

"இப்படி ஏதாவது ஒண்ணைச் சொல்லி பயமுறுத்தி, என்னை அந்த வீட்டை வாங்கவிடாம பண்றதுதானே உன்னோட நோக்கம்."

LAVAN JOY@TAMILTORRENTS.COM

"இல்லை! உங்க உயிரைக் காப்பாத்தறதுதான் என் நோக்கம்."

"அப்படின்னா, என் முன்னாடி வந்து நில்லு. அந்த ரெண்டு பேரும் கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்களைக் காட்டு. அவை நம்புற மாதிரி இருந்தா, போலீசுக்குப் போவோம்."

"போலீசுக்குப் போக முடியாது விஜேஷ்."

"ஏன்?"

"அதுல ஒரு பிரச்னை இருக்கு."

"என்ன பிரச்னை?"

"அதை வெளியில் சொல்ல முடியாது."

"என்ன நீ, நான் எதைக் கேட்டாலும் நெகட்டிவ்வாவே பதில் சொல்லிட்டு இருக்கே? அந்த ரெண்டு பேரும் கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் உன்னிடம் இருந்தா, போலீசுக்குப் போக வேண்டியது தானே?"

"இது நம்ம ஊர் போலீஸ் இல்லை. நியூயார்க் போலீஸ். சட்டம் இங்கே நாணல்

மாதிரி வளைந்து கொடுக்காது. இரும்புத் தூண் மாதிரி நிக்கும்."

"உனக்கு பயமா இருந்தா சொல்லு... நானும் உன்கூட வர்றேன்."

"போலீசுக்கெல்லாம் போக முடியாது விஜேஷ். அப்படி போலீசுக்கு விஷயத்தைக் கொண்டு போனா அதனுடைய பின்விளைவுகள் ஒரு சுனாமி மாதிரி இருக்கும்."

விஜேஷ் சிரித்தான். "ஒரு பொய்யைப் பேசிட்டா, அந்தப் பொய்யைக் காப்பாத்த இன்னும் பத்து பொய்கள் சொல்ல வேண்டியிருக்குமாம். அதைத்தான் நீ இப்போ பண்ணிட்டு இருக்கே!"

"விஜேஷ்! நான் சொன்னதுல எதுவும் பொய் கிடையாது. தயவுபண்ணி அந்த வீட்டை வாங்கற எண்ணத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைங்க."

"ஒரு கால்புள்ளியைக்கூட வெக்கற மாதிரி இல்லை. ஃப்ளோரா காரை நிறுத்தியாச்சு. வீடு இருக்கிற ஏரியா வுக்கு வந்துட்டோம்."

"ஒருவேளை உங்களுக்கு அந்த வீடு பிடிக்க லைன்னா..."

"அதுக்கு சான்ஸே இல்லை. ஏன்னா, என்னுடைய நண்பன் ஃப்ரெட்ரிக்கும் அவனுடைய சிஸ்டர் ஃப்ளோராவும் ஒரு வீட்டை வாங்கிக்கச் சொல்லி சிபாரிசு பண்றாங்கன்னா, அதுல தப்பு நடக்க வாய்ப்பே இல்லை. ஸோ, இனிமே எனக்கு போன் பண்ணாதே! அந்த ஹட்சன் நதிக் கரையில் இருக்கிற வீட்டை வேற எந்த சோணகிரிக்காவது வாங்கிக் குடுத்து கமிஷன் பார்த்துடு!" - பேசிவிட்டு செல்போனை அணைத்தான் விஜேஷ்.

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஃப்ளோரா, பெர்ஃப்யூம் வாசனையோடு பார்த்தாள். பேசிய தமிழ் புரியாததால் பார்வையில் குழப்பம்.

"செல்போனில் யார்?"

"சிறிது நேரத்துக்கு முன்பு பேசிய அதே பெண்."

"அந்தப் பெண்ணிடம் கோபமாகப் பேசினீர்களே... ஏதாவது பிரச்னையா?"

"ஒரு பிரச்னையும் இல்லை. ஹட்சன் நதிக் கரையில் ஒரு வீடு விற்பனைக்கு வருகிறதாம். வாங்கிக்கொள்ளும்படி சொன்னாள். நான் வேண்டாம் என்று சொன்னதால், அவளுக்குக் கோபம். நாம் இப்போது பார்க்கப்போகிற வீட்டைப்பற்றி பொய் மழை பொழிந்து, அதை வாங்கவே கூடாது என்று சொல்லி, என்னை ஒருவழி செய்துவிட்டாள்."

"பொறாமை பிடித்தவள்! ரியல் எஸ்டேட் பிசினஸில் இது போன்ற

பொறாமைக்காரர்கள் இருக்கத்தான் செய்வார்கள்."

இருவரும் காரைவிட்டு இறங்கினார்கள். நகரை விட்டுத் தள்ளி இருந்த அந்த இடத்தில் நிசப்தம் ஏதோ செதுக்கப்பட்ட பொருள் மாதிரி தெரிந்தது. மனித நடமாட்டம் அறவே இல்லை. அடர்த்தியான சிப்ரஸ் மரங்களுக்கு நடுவில், அந்தச் செங்காவி வண்ணம் பூசப்பட்ட வீடு கண்ணாமூச்சி காட்டியது.

ஃப்ளோரா கையில் சாவியோடு முன்னால் நடந்தாள்.

விஜேஷ் கேட்டான்... "கார் உள்ளே போகாதா?"

ஃப்ளோரா ஒரு சின்னப் புன்னகையோடு, வீட்டுக்கு முன்பாகத் தெரிந்த அந்தப் பெரிய இரும்பு காம்பவுண்ட் கேட்டைக் காட்டினாள். கேட் ஒரு பக்கமாகச் சாய்ந்து மண்ணில் புதைந்து போயிருந்தது.

"சென்ற வாரம் பெய்த பெரு மழையில் காம்பவுண்ட் கேட்டின் பில்லர் சாய்ந்து, கேட் மண்ணில் போய் மாட்டிக்கொண்டது. இன்னும் இரண்டொரு நாட்களில் கேட்டைச் சரிசெய்யும் பணி துவங்கும். இப்போது நாம் இந்தப் பக்கவாட்டு கேட் வழியாக உள்ளே போய்விடலாம்."

ஃப்ளோரா சொல்லிக்கொண்டே அந்தச் சிறிய கேட்டில் இருந்த பூட்டுக்கு விடுதலை கொடுத்து கேட்டைத் தள்ளினாள். அது 'ழேய்ய்....' என்று ஒரு குடிகாரனைப் போல் கத்திக்கொண்டு பின்னால் போயிற்று. இருவரும் உள்ளே நுழைந்தார்கள். பனி பெய்து நனைந்து இருந்த புல் தரையில் ஃப்ளோரா முன்னால் நடந்து போக, விஜேஷ் அவளைப் பின்தொடர்ந்தான்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பத்தடி நடந்தவன் சட்டென்று நின்றான். அவனுடைய முதுகில் யாரோ கைவைத்த மாதிரியான உணர்வு.

'நிஜமா... பிரமையா?' என்று யோசிப்பதற்குள், முதுகுக்குப் பின்னால் அந்த மூச்சிரைப்புச் சத்தம்!

கோவை

அந்த மத்தியான வேளையிலும், ஃப்ரிஜ்ஜில் வைத்த பொருள் போல் கோவை குளிர்ந்து போய் இருக்க, மின்மினி மொட்டை மாடியில் மெள்ள உலவியபடி செல்போனில் சிரித்துப் பேசிக்கொண்டு இருந்தாள்.

"இல்ல மாலு... எனக்குக் கச்சேரி பண்றதுல இஷ்டமே இல்லை. என்னோட மிஸ்டர்தான் கம்பெல் பண்ணினார். ஏதோ இசை விழாவாம்... அதுக்குக் கிடைக்கிற ஃபண்ட்ஸ் எல்லாம் ஆதரவற்றோர் இல்லங்களுக்குப் போகுதாம். சரி, ஒரு நல்ல காரியத்துக்கு நாம கத்துக்கிட்ட பாட்டும் உதவட்டுமேன்னுதான் ஒப்புக்கிட்டேன். நீயும் உன் ஹஸ்பெண்டும் சரியா ஆறு மணிக்கெல்லாம் புரந்தரதாஸர் ஹாலுக்கு

வந்துடுங்க. சீஃப் கெஸ்ட் வேறு யாருமில்லை, வானவராயர்தான்!" - செல்போனில் பேசிக்கொண்டே திரும்பிய மின்மினி, வேலைக்காரி தயக்கமாக நிற்பதைப் பார்த்துவிட்டு, 'என்ன' என்பது போல் புருவங்களை உயர்த்தினாள்.

"அம்மா! கேட்ல இருக்கிற செக்யூரிட்டி பேசினாங்க. உங்களைப் பார்த்துப் பேசறதுக்காக பெரியவர் மல்லய்யா வந்து இருக்காராம். உள்ளே அனுப்பவான்னு கேட்டாங்க."

மின்மினி சற்றே பதற்றமானாள். "இதுக்கு என்கிட்டே கேட்கணுமா? அவர் எப்ப என்னைத் தேடி வந்தாலும், உடனடியாக உள்ளே அனுப்பிவைக்கணும்னு செக்யூரிட்டிகிட்டே ஏற்கெனவே சொல்லியிருந்தேனே!"

"இதோ அனுப்பச் சொல்றேம்மா!" வேலைக்காரி படிகளில் இறங்கி ஓட, மின்மினி செல்போனுக்கு உதட்டைக் கொடுத்து, "ஸாரி மாலு... எனக்குப் பாட்டு சொல்லிக்கொடுத்த குருநாதர் கீழே வந்து வெயிட் பண்ணிட்டு இருக்காராம். சாயந்திரம் நாம பார்ப்போம்!"

"யாரு... அந்த பெல்லாரி மல்லய்யாவா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"பரவாயில்லையே! அவரோட பேரை அட்சரசுத்தமாக ஞாபகம் வெச்சிருக்கியே!"

எதிர்முனையில் அந்த மாலு சிரித்தாள்... "தெலுங்கு சினிமா பட டைட்டில் மாதிரி இருக்கிற அவரோட பேரை அவ்வளவு சுலபத்துல மறந்துட முடியுமா என்ன?"

"ஏய்! பெரியவங்களைக் கிண்டல் பண்ணாதே! பெல்லாரியில் நான் அப்பா-அம்மாவை இழந்துட்டு அநாதையா நின்னப்ப, அவர்தான் எனக்கு ஆதரவாக இருந்து மஹிளா சமிதி விடுதியில் இடம் வாங்கிக் கொடுத்து..."

"ஸாரி மின்மினி! இந்த பெல்லாரி ஃப்ளாஷ்பேக் ரீல் ரொம்பவும் பழசாயிடுச்சு. புதுசா வேற ஒரு பிரின்ட் போட்டுக்கோயேன்."

"சாயந்திரம் வா சொல்றேன்... உன்னை..." - மின்மினி பற்களைக் கடித்து, செல்போனை அணைத்தாள். படிகளில் வேகவேகமாக இறங்கி ஹாலுக்கு வந்தபோது, மல்லய்யா வாசற்படிகள் ஏறி உள்ளே வந்துகொண்டு இருந்தார்.

மல்லய்யாவுக்கு 60 வயது இருக்கலாம். சராசரி உயரத்தில், சற்றே கனத்த உடம்பு. ரோமம் இல்லாத முன் மண்டையை மூன்று விபூதிக் கோடுகளும், ஒரு குங்குமப் பொட்டும் குத்தகைக்கு எடுத்திருக்க... பின்னந்தலையில் இருந்த நீளமான முடிகள் ஒரு குடுமியாக மாறியிருந்தன. ஆந்திரா பாணியில் கட்டப்பட்ட வேட்டியும், மார்பைச் சுற்றியிருந்த வெள்ளை வஸ்திரமும் அவரை மதிப்போடு

பார்க்கவைத்தது.

மின்மினி ஒட்டமும் நடையுமாகப் போய் அவருடைய பாதங்களில் விழுந்தாள். அவர் மின்மினியின் தலையில் தன் வலது கையைவைத்தார். "நீ என்னிக்கும் நல்லாயிருக்கணும்... எழுந்திரும்மா!"

மின்மினி எழுந்தாள். கும்பிட்ட கையோடு சொன்னாள், "ஐயா! மன்னிக்கணும்..."

"எதுக்கு?"

"கேட்ல இருந்த சென்ட்ரி கான்ஸ்டபிள் உங்களை உடனே உள்ளே அனுப்பாம வாசல்ல நிக்க வெச்சதுக்காக."

மல்லய்யா தன் கறை இல்லாத பற்களைக் காட்டிச் சிரித்தார். "அட, என்னம்மா நீ... இதுக்கெல்லாம் போய் மன்னிப்புக் கேட்டுக்கிட்டு? நீ யாரு... ஒரு கலெக்டரோட மனைவி. யார் வேணும்னாலும் சர்வசாதாரணமா வந்து போறதுக்கு இது என்ன சத்திரமா? நான் இந்த வீட்டுக்கு வேண்டியவன்னு தெரிஞ்சிருந்தும் பாம் டிடெக்டர் வெச்சு சோதனை போட்டுத்தான் அனுப்பினாங்க. யார் யாருக்கு என்னென்ன கடமைகள் இருக்கோ, அதை அவங்க பண்ணியாகணும்!" - மல்லய்யா சொல்லிக்கொண்டே போய், ஹாலில் போட்டிருந்த சோபாவில் சாய்ந்தார். மின்மினியும் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஐயா! திடீர்னு கோயம்புத்தூருக்கு வந்து இருக்கீங்க. ஏதாவது விசேஷமா?"

"விசேஷம்தாம்மா! இங்கே வடவள்ளிக்குப் பக்கத்துல க்யூரியோ கார்டன் அவென்யூன்னு ஒரு காலனி இருக்கு. அந்தக் காலனியில் அம்சமான விநாயகர் கோயில் ஒண்ணு இருக்கு. ஆபத்சகாய சுந்தர விநாயகர்னு பேர். சக்தி வாய்ந்த விநாயகர். அந்தக் கோயிலோட கும்பாபிஷேகம் நாளைக்கு. அதுல கலந்துக்கச் சொல்லி எனக்கு அழைப்பு வந்தது. உடனே புறப்பட்டு வந்துட்டேன்."

"ரொம்பச் சந்தோஷம். ஐயா, இன்னிக்குச் சாயந்திரம் நீங்க ஃப்ரீயா?"

"ஏம்மா கேட்கிறே?"

"ஐயா! இன்னிக்குச் சாயந்திரம் ஆர்.எஸ்.புரம் புரந்தரதாஸர் ஹால்ல என்னோட கச்சேரி. நீங்க அவசியம் முன் வரிசையில் உட்கார்ந்து கேக்கணும்."

"பஞ்சாமிர்தம் சாப்பிடக் கூலியா?" - சொல்லிச் சிரித்தவர் கேட்டார்... "உன்னோட கணவர் எப்படி இருக்கார்மா? கல்யாணத்துல பார்த்தது. அதுக்கப்புறம் இந்த வீட்டுக்கு ரெண்டு தடவை வந்தும் அவரைப் பார்க்கவே முடியலை."

"இன்னிக்கு அவரை நீங்க பார்த்துடலாங்கய்யா! மத்தியானம் லஞ்சுக்குக் கண்டிப்பா வர்றதாகச் சொல்லியிருக்கார். நாம எல்லாரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடலாம். அவரும் உங்களைப் பார்க்கணும்னு சொல்லிட்டு இருப்பார். 'எனக்கு ஒரு

வானம்பாடியைப் பரிசாகக் கொடுத்த வள்ளல் அவர்'னு புகழ்ந்துட்டே இருப்பார். நீங்க வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சா, அவர் ரொம்பவும் சந்தோஷப்படுவார். இப்பவே போன் பண்ணிச் சொல்லிடறேன்."

மின்மினி செல்போனை எடுத்தாள். தன் கணவரின் பெர்சனல் செல்போனுக்கு எண்களை அழுத்தினாள். மறுமுனையில் ரிங்டோன் போய், குரல் கேட்டது.

"யெஸ்!" பங்கஜ்குமாரின் குரல்.

"என்ன யெஸ்! நான் உங்க மின்மினி."

"ஸாரி... ராங் நம்பர்!" - பங்கஜ்குமாரின் குரலைத் தொடர்ந்து, செல்போன் இணைப்பு அறுந்தது.

இந்த வாரக் கேள்வி

நியூயார்க் நகரம் எந்தத் தீவில் அமைந்துள்ளது? 1. அலாஸ்கா 2. மன்ஹாட்டன், 3. ஹவாய்

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு உடனே எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

'இனி, மின்மினி' தொடரின் சென்ற வாரக் கேள்விக்கான சரியான விடை 'வெங்காயம்'.

'இனி, மின்மினி' தொடரின் இரண்டாம் அத்தியாயம் பற்றிய சூப்பர் கமென்ட்டுடன் இந்தச் சரியான விடையை எஸ்.எம்.எஸ். செய்திருந்த கீழ்க்கண்ட மூன்று பேருக்கும் தலா ரூ. 101 பரிசுத் தொகை அனுப்பிவைக்கப்படுகிறது.

1. சரிதா, திருப்பூர். 2. ஏ.எம்.ஹ§மாயூன், நாகர்கோவில். 3. பி.எஸ்.வடிவு, வீ.சத்திரம்.

-பறக்கும்...

கோவை

மின்மினி முதல் விநாடியில் அதிர்ந்து, இரண்டாவது விநாடியில் வியர்த்து, மூன்றாவது விநாடியில் இருதயத்தின் மையத்தில் நொறுங்கிப் போனாள். ரத்தம் சூடாகி, மூளை தகித்தது.

'என்ன சொன்னார்?', 'ராங் நம்பரா?', 'பேசியது அவர்தானா... இல்லை, வேறு யாராவதா?'

பெல்லாரி மல்லய்யா மின்மினியின் முகமாற் றத்தைக் கவனித்துவிட்டுக் கேட்டார்... "என்னம்மா, ஏன் ஒரு மாதிரியாயிட்டே?"

"அ... அ... அது... ஒண்ணுமில்லீங்கய்யா. நம்பர் தப்பாப் போட்டுட்டேன் போலிருக்கு."

"நீ ரொம்பவும் டென்ஷனாத் தெரியறே! பார்த்து டயல் பண்ணும்மா!"

மின்மினியின் உதடுகள் ஈரம் இல்லாமல் பேப்பர்தாளாக உலர்ந்துபோய் இருக்க, லேசான கை நடுக் கத்தோடு அதே எண்களை மறுபடியும் செல்போனில் ஒற்றி எடுத்தாள். மறுமுனையில் ரிங்டோன் போயிற்று. தொடர்ந்து பங்கஜ்குமாரின் குரல்... "சொல்லு மின்மினி!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஒரு நிமிஷம்" என்றவள், மல்லய்யாவைப் பார்த்து, "உள்ளேயிருந்து பேசினா சரியா டவர் எடுக்கலை. சிட் அவுட் பக்கமாகப் போய் பேசிட்டு வந்துடறேன்யா!"

"சரிம்மா!"

மின்மினி ஹாலைக் கடந்து, தோட்டத்துப் பக்கம் இருந்த சிட்-அவுட்டை நோக்கிப் போனாள். உதட்டுக்கு செல்போனைக் கொடுத்தாள். குரலைச் சற்றே உயர்த்தி, "என்னங்க..."

"சொல்லு..."

"ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடி உங்களுக்கு நான் போன் பண்ணிப் பேசினபோது எதுக்காக 'ராங் நம்பர்'னு சொன்னீங்க?"

"மின்மினி! நான் இப்போ ஒரு முக்கியமான மீட் டிங்கில் இருக்கேன். ஒரு விவகாரமான பிரச்னை யைப் பத்திப் பேசிட்டு இருக்கும்போதுதான் உன்னோட போன் வந்தது. பட், டிஸ்ப்ளேயில் உன் பேர் வரலை. நீ பேசினதும் சரியாக் கேட்கலை. அதான், 'ராங் நம்பர்'னு சொல்லிட்டேன்."

"இதுதான் உண்மைன்னா நான் நம்பறேன்."

"சரி! சாயந்திரம் வந்து எல்லாத்தையும் பேசிக் கலாம். நான் இப்போ மீட்டிங்கை விட்டு வெளியே வந்து பேசிட்டு இருக்கேன். நான் மறுபடியும் உள்ளே போகணும்!"

"என்னது... சாயந்திரம் வர்றீங்களா?"

"ஆமா."

"மத்தியானம் லஞ்ச்சுக்கு வர்றதா சொல்லி இருந்தீங்களே?"

"ஸாரி மின்மினி! இன்னிக்கு லஞ்ச்சுக்கு வர முடியும்னு எனக்குத் தோணலை. மீட்டிங் முடிய ரொம்ப நேரமாகும்னு நினைக்கிறேன்."

"ரொம்ப நேரம்னா எவ்வளவு?"

"எப்படியும் மூணு மணியாயிடும்."

"கலெக்டர் சார்! இன்னிக்கு நீங்களும் சரி இல்லை... உங்க பேச்சும் சரியில்லை. என்னாச்சு உங்களுக்கு?"

"பிரச்னை அப்படி!"

"அப்படி என்ன பெரிய பிரச்னை?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"சொன்னா உனக்குப் புரியாது!"

"சரி! இன்னிக்கு நம்ம வீட்டுக்கு ஒரு கெஸ்ட் வந்திருக்கார். உங்களுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கார். யாருன்னு கெஸ் பண்ணுங்க பார்க்க லாம்."

"அதுக்கெல்லாம் எனக்கு நேரம் இல்லை. நீயே சொல்லிடு."

"இன்னிக்கு நீங்க சுத்தமா அவுட் ஆ◌ஃப் ஆர்டர்! 'நீயா பேசுவது... என் அன்பே, நீயா பேசுவது'ன்னு ஹை பிட்ச்ல கத்திப் பாடணும் போலிருக்கு."

பங்கஜ்குமாரின் குரல் உயர்ந்தது... "இதோ பார் மின்மினி! உன்னோடு அரட்டையடிச்சுட்டு இருக்க இது நேரம் கிடையாது. நம்ம வீட்டுக்கு வந்திருக்கிற கெஸ்ட் யாரு?"

கணவரின் குரலில் கடுமை கலந்து ஒலித்ததை அறிந்ததும், மின்மினி சீரியஸானாள். சொன் னாள்... "என்னோட குருநாதர் பெல்லாரி மல்லய்யா."

மறுமுனையில் சிறு மௌன இடைவெளிக்குப் பின்பு... "எப்ப வந்தார்?"

"அவர் வந்ததுக்கான சந்தோஷம் உங்க குரல்ல மிஸ்ஸிங்! எப்ப வந்தார்னு நீங்க கேக்கி றது ஏன் வந்தார்னு கேக்கிற மாதிரி இருக்கு."

"நான் எது பேசினாலும் உனக்குத் தப்பாப் படுது! நானே அவரைப் பார்க்கணும்னு நினைச்சுட்டு இருந்தேன்."

"ந...ம்...ப... முடியவில்லை... இல்லை..!"

"நிஜமாத்தான்!"

"அப்படின்னா லஞ்ச்சுக்கு வாங்க."

"அது முடியாது. அவர் பக்கத்துல இருக் காரா?"

"நான் சிட்-அவுட்ல இருக்கேன். அவர் ஹால்ல ஏதோ புக் படிச்சிட்டு இருக் கார்."

"நான் பேசணும். செல்போனை அவர்கிட்ட குடு."



LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இப்பத்தான் நீங்க கொஞ்சம் இளகி, திருநெல்வேலி அல்வா பதத்துக்கு வந்திருக் கீங்க..."- சொன்ன மின்மினி, வேகவேகமாக ஹாலை நோக்கிப் போனாள். சோபாவுக்குச் சாய்ந்து புத்தகத்தைப் புரட்டிக்கொண்டு இருந்த மல்லய்யா நிமிர்ந்தார்.

"என்னம்மா?"

"மாப்பிள்ளை உங்ககிட்டே பேசணு மாம்."

"ரொம்ப சந்தோஷம்!" - சொன்ன மல்லய்யா, செல்போனை வாங்கி, வலது காதுக்கு ஏற்றினார்.

"வணக்கம் மாப்பிள்ளை!"

"நான் உங்களுக்குப் பதில் வணக்கம் சொல்லக்கூடிய மன நிலையில் இல்லை!"

"மா...ப்...பி...ள்...ளை..?!"

"நான் என்ன தப்பு பண்ணினேன்னு எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்திருக்கீங்க?"

பெல்லாரி மல்லய்யாவின் கையில் இருந்த செல்போன் உயிருள்ள ஜந்து போல் நடுங்கியது!

நியூயார்க்

தன் முதுகில் யாரோ கை வைத்த உணர்வில், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் விஜேஷ். கன்றுக் குட்டி சைஸில், அட்டைக்கரி நிறத்தில், அந்தக் கறுப்பு நிற நாய் மூச்சிரைத்தபடி இரண்டு கால்களையும் தூக்கியபடி நின்றிருந்தது.

விஜேஷ் சர்வாங்கமும் அதிர்ந்துபோனவனாக ஒரு சின்ன அலறலோடு பின்வாங்க, முன்னால் போய்க்கொண்டு இருந்த ஃப்ளோரா திரும்பிப் பார்த்தாள். அவள் இதழ்க் கோடியில் சட்டென்று ஒரு புன்னகை பிறந்தது.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஹாய் ப்ளாக்கி! கம் ஹியர். அவர் நம்ம கெஸ்ட். இப்படி எல்லாம் பின்னாடி ஓடி வந்து தொட்டுப் பயமுறுத்தக் கூடாது."

ப்ளாக்கி ஒரு துள்ளலோடு அவளை நோக்கித் தாவியது. ஃப்ளோராவின் இரண்டு தோள்களின் மீதும் கால்களைப் பதித்து வைத்துக்கொண்டு, அவளுடைய கன்னங்களை நாக்கால் ஒற்றியது. "யூ... நாட்டி பாய்!" என்று அதன் முதுகில் ஒரு அடி போட்டுவிட்டு, விஜேஷை ஏறிட்டாள் ஃப்ளோரா.

"மிஸ்டர் விஜேஷ்! இது இந்த வீட்டு ஓனரின் நாய். பெயர் ப்ளாக்கி. இந்த வீட்டை அவர்கள் காலி செய்துகொண்டு போகும்போது இங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இது இங்கேயே சுற்றிக்கொண்டு, கிடைத்ததைத் தின்றுவிட்டு, ராத்திரி வேளைகளில் இங்கே வந்து படுத்துக்கொள்ளும். நல்ல அறிவுள்ள நாய். அதற்குப் பிடிக்காதவர்கள் யாராவது இந்த வீட்டுக்குள் நுழைந்துவிட்டால் உறுமும்... குரைக் கும். ஆனால், உங்களைப் பார்த்து உறுமவில்லை; குரைக்கவில்லை. ஸோ, ப்ளாக்கிக்கு உங்களைப் பிடித்துவிட்டது என்று அர்த்தம்!"

ப்ளாக்கி இப்போது ஃப்ளோராவை விட்டு விட்டு, விஜேஷைச் சுற்றிச் சுற்றி வந்து முகர்ந்தது. அவன் மேல் தாவியது.

"ப்ளாக்கி! டோன்ட் டிஸ்டர்ப். கோ அண்ட் லை தேர்!" - ஃப்ளோரா அதட்ட... அது காதுகளை மடித்து, வாலைச் சுருட்டிக்கொண்டு வாசற்படிக்கு அருகே இருந்த குரோட்டன்ஸ் தொட்டிக்குப் பக்கத்தில் போய்ச் சுருண்டு படுத்தது.

LAYAR JOY@TAMILTORRENTS.COM

வீடு ஒரு வேண்டாத நிசப்தத்தில் உறைந்து கிடந்தது. அடித்த காற்றில் குளிர் ஊசி முனை களாக மாறி, உடலின் சதையைத் துளைத்து எலும்பைப் பதம் பார்த்தது. ஃப்ளோரா தன் கையில் இருந்த சாவியை உபயோகப்படுத்தி, மேக்னடிக் லாக்கரைத் திறந்தாள். கதவு வெண்ணெய்க் கட்டியில் இறங்கிய கத்தி போல் மெள்ளப் பின் வாங்க... உள்ளே வீடு சாம்பல் நிற இருட்டில் இருந்தது.

ஃப்ளோரா உள்ளே போய் சுவரில் இருந்த சுவிட்ச்களைத் தேய்க்க... சுவர்களில் ஒளிந்து இருந்த ஷேடோ பல்புகள் மின்சாரம் சாப்பிட்டு உயிர்பெற்றன.

வீடு அவ்வளவு சுத்தமாக இல்லை. தூசி மண்டிய ஃபர்னிச்சர்கள் அடைசலாகத் தெரிய, இரண்டு வெள்ளை எலிகள் விஜேஷ், ஃப்ளோ ராவின் அதிரடி வருகையால் பயந்து போய் தலைதெறிக்க ஓடாமல், 'யார்றா நீங்க?' என்பது போல் சிவப்பான சின்னக் கண்களால் பார்த் தன.

ஃப்ளோரா சொன்னாள்... "மிஸ்டர் விஜேஷ்! இப்போதைக்கு வீடு பார்க்க இப்படித்தான் இருக்கும். நீங்கள் ஓ.கே. சொல்லி அக்ரிமென்ட் போட்டுவிட்டால், இரண்டே நாட்களில் வீட்டைச் சுத்தப்படுத்தி பெயின்ட்டிங் வேலை பார்த்துவிடலாம். முதலில் உங்களுக்கு இந்த வீடு பிடிக்கவேண்டும்."

"வீடு ரொம்பவும் பழையதாக இருக்கும் போலிருக்கிறதே! அங்கே பாருங்கள்... பெயின்ட் நார் நாராக உரிந்து தொங்குவதை!"

"வீடு பழையதுதான்... ஆனால், உறுதியானது. நியூயார்க்கின் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் டிபார்ட் மென்ட் இந்தக் கட்டடத்தின் உறுதியைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, இன்னும் 75 ஆண்டுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் என்று தரச் சான்றிதழ் கொடுத்து உள்ளது. இந்த வீட்டின் பேரன்ட்டல் டாக்குமென்ட்ஸை உங்களிடம் நான் காட்டும்போது, அந்தத் தரச் சான்றிதழையும் நீங்கள் பார்க்கலாம்..."- ஃப்ளோரா பேசிக் கொண்டே அந்த அறையைக் கடந்து உள்ளே போக, விஜேஷ் பின்தொடர்ந்தான்.

தூசி நெடியோடு மூன்று அறைகள் பார்வைக் குக் கிடைத்தன. "அது கிச்சன். இது மாஸ்டர் பெட் ரூம். இது ரீடிங் ரூம்."

ரீடிங் ரூமை எட்டிப் பார்த்தான் விஜேஷ்.உடைந்துபோன கண்ணாடி ஷெல்ஃபில் தாறுமாறாக அடுக்கப்பட்ட புத்தகங்கள். ஷெல்ஃபுக்கு மேலே இருந்த சுவரில் வரிசையாக மூன்று போட்டோக்கள் நூலாம்படைகளுக்குப் பின்னால் தெரிந்தன. விஜேஷ் அந்த போட்டோக்களைப் பார்த்துவிட்டு ஃப்ளோராவைப் பார்க்க, அவள் சொன்னாள்...

"முதல் போட்டோவில் இருப்பது இந்த வீட்டின் உரிமையாளர். பெயர் ஆல்பர்ட்ஸன். கே.எஸ்.சி. எனப்படும் கென்னடி விண்வெளி மையத்தில் புரொகிராம் இன்ஜினீயராகப் பணிபுரிந்து ரிட்டை யரானவர். பிறகு, ஒரு ஸ்பேஸ்க்ராஃப்ட் கல்லூரியில் விரிவுரையாளராக இரண்டு வருட காலம் பணி புரிந்தார். பிறகு, பார்வையில் குறை ஏற்பட்டதால், அந்த வேலையையும் ராஜினாமா செய்துவிட்டு, வீட்டில் ஓய்வாக இருக்க ஆரம்பித்தார். இரண்டா வது போட்டோவில் இருப்பது அவருடைய மனைவி. பெயர் எமிலி. ஹவுஸ் ஒய்ஃப். இருதய நோயாளி. இந்த 55 வயதுக்குள் இரண்டு தடவை பைபாஸ் சர்ஜரி செய்துகொண்டவர். மூன்றாவது போட்டோவில் இருப்பது அவர்களுடைய மகள். பெயர் சில்வியா."

விஜேஷ் அந்த போட்டோக்களைப் பார்த்துவிட்டு, ஃப்ளோராவை ஒரு புன்னகையோடு பார்த்தான். "நான் ஒரு கேள்வி கேட்டால், நீங்கள் தப்பாக நினைத்துக்கொள்ள மாட்டீர்களே, ஃப்ளோரா?"

"நீங்கள் தப்பான கேள்வியைக் கேட்டாலும்கூட நான் தப்பாக நினைத்துக்கொள்ள மாட்டேன். கேளுங்கள்."

"போட்டோக்களில் ஆல்பர்ட்ஸனும் அவருடைய மனைவி எமிலியும் அழகான தோற்றத்தோடுகாணப் படுகிறார்கள். ஆனால், அவர்களுடைய மகள் அழகாக இல்லை. சற்றே தூக்கலான பல் வரிசையும், மேடிட்ட நெற்றியும், சிறிய கண்களும் அவளை ஒரு சராசரி அழகுக்கும் கீழே கொண்டுபோய் விட்டதே?"

"உண்மைதான்! ஆனால் சில்வியா, தான் அழ காக இல்லையே என்று ஒருநாள்கூட

வருத்தப்பட்டது கிடையாது. என்னதான் படித்தாலும், பெரிய பெரிய கம்பெனிகளில் தனக்கு வேலை கிடைக்காது என்பதைப் புரிந்துகொண்ட சில்வியா, ஆண்கள் படிக்க விரும்பும் படிப்பான ஆட்டோமொபைல் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட படிப்பைப் படித்து, முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்து 'AAA' என்ற அமைப்பில் வேலைக்கும் சேர்ந்துவிட்டாள்."

"அது என்ன கிகிகி?"

"அமெரிக்கன் ஆட்டோமொபைல் அசோஸி யேஷன். அமெரிக்காவில் கார் வைத்திருப்பவர் களுக்குப் பயணத்தின்போது தேவைப்படும் அவசர உதவிகளைச் செய்வதற்காகவே சில கம்பெனிகள் செயல்படுகின்றன. அப்படிப்பட்ட கம்பெனிகளில் ஒன்றுதான் கிகிகி. வழியில் பெட்ரோல் தீர்ந்துவிட் டால், டயர் பஞ்சர் ஆகிவிட்டால், கார் ஸ்டார்ட் ஆகவில்லை என்றால், ஜஸ்ட் ஒரு போன்கால் போதும்... உடனே ஸ்பாட்டுக்கு வந்துவிடுவார்கள். சில்வியா ஒரு நல்ல கார் மெக்கானிக். பழுதுபட்ட காரை ஒரு சில நிமிடங்களில் சரி செய்துவிடு வாள்."

விஜேஷ், சில்வியாவின் போட்டோவை மறுபடி யும் பார்த்துவிட்டு ஃப்ளோராவிடம் திரும்பிய வன்,

"இப்போது சில்வியா எனக்குப் பேரழகியாகத் தெரிகிறாள். அவளை நேரில் பார்க்க வேண்டும் என்கிற ஆசையும் மனசுக்குள்ளிருந்து லேசாக எட்டிப் பார்க்கிறது."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அந்த ஆசையின் தலை மேல் ஒரு தட்டுத் தட்டி அடக்கிவையுங்கள். அவளை நீங்கள் பார்க்க முடி யாது."

"ஏன்?"

"பார்க்கும்படியான நிலைமையில் அவள் இல்லை."

"எனக்குப் புரியவில்லை."

"விட மாட்டீர்களே! அவள் இப்போது இருப்பது நியூஜெர்ஸியில் இருக்கும் மனநல மருத்துவ மனையில்."

"ம... மனநல மருத்துவமனையா..?"

"யெஸ்..."
"என்னாயிற்று?"

"டாக்டர்களுக்கே இன்னமும் பிடிபடவில்லை. அவளைக் குணப்படுத்த பெரிய தொகையைச் செலவழிக்க வேண்டியிருக்கும் என்று டாக்டர்கள் சொன்னதால்தான் ஆல்பர்ட்ஸனும் எமிலியும் இந்த வீட்டை விற்கவேண்டிய நிலைமைக்கு வந்துள்ளனர். இந்த வீட்டை நீங்கள் வாங்கிக் கொண்டால், அது அவர்களுக்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும்."

விஜேஷ் திகைத்துக்கொண்டு இருக்கும்போதே... அவனுடைய செல்போன் அழைத்தது. எடுத்து காதுக்கு ஒற்றினான்... "யெஸ்!"

"ப்ளீஸ்! மறுபடியும் சொல்றேன், அந்த வீட்டை வாங்காதீங்க!"-

மறுமுனையில் காமாட்சியின் குரல்!

இந்த வாரக் கேள்வி

செல்வச் செழிப்பான கோவை நகரத்தை 'லட்சுமி நகரம்' என்று, மறைந்த முதலமைச்சர்களில் ஒருவர் அழைத்து மகிழ்வார். அந்த முதலமைச்சர் யார்?

1. ஓமந்தூர் ராமசாமி 2. காமராஜர் 3. பக்தவத்சலம்

-பறக்கும்...

நியூயார்க்

செல்போனில் காமாட்சியின் குரல் கேட்டதும், விஜேஷின் காது மடல்களில் வெப்பம் பரவியது.

"இதோ பார்... இது உன்னோட மூணாவது போன். இதுவே கடைசி தடவையா இருக்கட்டும். எனக்கு அட்வைஸ் பண்றதை விட்டுட்டு, வேற வேலை ஏதாவது இருந்தா போய்ப் பார். இல்லேன்னா, ஏதாவது ஒரு இண்டியன் ரெஸ்டாரென்ட்டுக்குப் போ. பிரெஞ்ச் தாடி வெச்சுக்கிட்டு, பொழுது போகாம யாராவது ஒரு 'இண்டியன் ரீuஹ்' டின் பீர் குடிச்சிட்டு இருப்பான். அவனுக்குக் கம்பெனி கொடு!"

"ஓ.கே. மிஸ்டர் விஜேஷ்! அப்படியே செய்யறேன். இப்போ எனக்கு அதைவிட முக்கியமான வேலை உங்க உயிரைக் காப்பாத்தறதுதான். அந்த வீட்டை வாங்கற எண்ணத்துக்கு உடனடியா ஒரு முற்றுப் புள்ளி வெச்சுட்டு, பாரீஸ் ஃப்ளைட்டைப் பிடிங்க."

விஜேஷ் சிரித்தான் பலமாக!

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நீ அடுத்த தடவை எனக்கு போன் பண்ணும்போது, நான் அக்ரிமென்ட் போட்டிருப்பேன். அதுக்கப்புறம் நான் ஃப்ளைட் பிடிச்சு பாரீசுக்குப் போறேன்... போதுமா?"

"ப்ளீஸ் விஜேஷ்! என்னோட பேர் காமாட்சி, ஊர் காஞ்சிபுரம்னு சொன்னேன். இந்த விஷயத்தில் அந்த காஞ்சிபுரத்துக் காமாட்சியே உங்களை எச்சரிக்கை செய்யறதா நீங்க ஏன் நினைக்கக் கூடாது?"

"ஸாரி! எனக்குக் கடவுள் நம் பிக்கை இல்லை."

"கடவுளுக்கு உங்க மேல ஒரு சாஃப்ட்கார்னர் இருக்கிற காரணத் தால்தான், என் மூலமா உங்ககிட்டே பேசிட்டு இருக்கார்னு நினைக்கிறேன்."

"இந்தக் கதாகாலட்சேபத்தை எல்லாம் உங்க ஊர் காஞ்சிபுரத்துக் கோயில்ல வெச்சுக்க. நான் இப்ப வீட்டைப் பார்த்துட்டு இருக்கேன். வீடு பழையதுதான். இருந்தாலும் எனக்குப் பிடிச்சிருக்கு. கொஞ்சம் பணம் செலவழிச்சு, வீட்டை ரெனவேட் பண்ணினா புது வீடு மாதிரி ஜொலிக்கும்."

"ஸோ... வீட்டை வாங்க முடிவு பண்ணிட்டீங்க?!"

"டூ ஹண்ட்ரட் பெர்சன்ட்! நாளைக்கு அக்ரிமென்ட். அடுத்த வாரம் ரெஜிஸ்ட்ரேஷன்.

முடிஞ்சா சாட்சிக் கையெழுத்துப் போட வா!" - விஜேஷ் சிரித்துப் பேசிவிட்டு செல்போனை அணைக்க, அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்த ஃப்ளோரா கேட்டாள்...

"போனில் யார்... மிஸ்.பப்ளிக் பூத்தா?"

"அவளேதான்!"

"ஒருவிதத்தில் அவளை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது."

"எந்த விதத்தில்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அவள் சொல்லும் குற்றச்சாட்டில் உண்மை இல்லையென்றாலும், தன் நாட்டைச் சேர்ந்த ஒருவரின் உயிருக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்று துடிக்கிறாள் பாருங்கள்... அந்தத் துடிப்பை நினைக்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. என்றைக்காவது அவளை நீங்கள் பார்க்க நேர்ந்தால், என் சார்பாக அந்தப் பெண் ணுக்கு ஒரு 'பொக்கே' வாங்கிக் கொடுங்கள்!"
விஜேஷ் சிரித்தான். "அப்படி ஓர் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்காது என்று நினைக்கிறேன். மிஸ். பப்ளிக் பூத் இனிமேல் எனக்கு போன் செய்ய மாட்டாள். இந்த முறை நான் கொஞ்சம் கடுமை யாகப் பேசிவிட்டேன்!"

"நோ விஜேஷ்! அவள் ஓய மாட்டாள். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் உங்களுக்கு எப்படியும் போன் வரும், பாருங்கள்."

"அப்படி போன் வந்தால், 'திஸ் இஸ் நியூயார்க் போலீஸ்... நீங்கள் பேசிக்கொண்டு இருக்கும் பப்ளிக் பூத் எது என்பதைக் கண்டுபிடித்துவிட்டோம். ஒரு பாப்கார்ன் பொட்டலம் சாப்பிட்டுக்கொண்டு, அதே பூத்தில் காத்துக்கொண்டு இருங்கள். போலீஸ் மரியாதையோடு வந்து அழைத்துப்போகிறோம். உங்களைப் போன்ற பொதுநலச் சேவகிகள் எங்களுடைய துறைக்குத் தேவை. உணவும் இருப்பிடமும் இலவசம்' என்பேன்!"

விஜேஷ் சொன்னதைக் கேட்டு ஃப்ளோரா தன் பிங்க் நிற ஈறுகள் தெரிய, பெரிதாகச் சிரித்து, சிரிப்பை அடக்க முடியாமல் வயிற்றைப் பிடித்துக்கொண்டு, பக்கத்தில் இருந்த நாற்காலிக்குச் சாய்ந்தாள்.

"பாவம், அந்தப் பெண்! நல்லது செய்கிறோம் என்று நினைத்துக்கொண்டு ஒரு தப்பான..." - ஃப்ளோரா பேச்சை முடிக்கவில்லை; வெளியே ப்ளாக்கியின் குரைப்புச் சத்தம் கேட்டது.

"யார்?" எழுந்து போய் ஜன்னல் வழியாகப் பார்த்த ஃப்ளோரா, லேசாக மலர்ந்தாள்.

"மிஸ்டர் விஜேஷ்! இந்த வீட்டின் உரிமையாளர் ஆல்பர்ட்ஸன்னும் அவருடைய மனைவி எமிலியும் வந்துகொண்டு இருக்கிறார்கள். நீங்கள் பாரீஸில் இருந்து வரப் போவது பற்றியும், இந்த வீட்டை வாங்கப்போவது பற்றியும் அவர்களிடம் முன்பே தெரிவித்து இருந்தேன். இப்போது நாம் வீட்டைப் பார்த்துக்கொண்டு இருப்பது பற்றியும் செல்போனில் மெசேஜ் கொடுத்திருந்தேன். அதைப் பார்த்துவிட்டுத்தான், உங்களிடம் நேரிடையாகப் பேச வந்துகொண்டு இருக்கிறார்கள்."

விஜேஷ் ஜன்னல் வழியே பார்வையை விரட்டி அவர்களைப் பிடித்தான். ஆல்பர்ட்ஸன்னும் எமிலியும் காரைவிட்டு இறங்கி மெதுவாக வந்துகொண்டு இருந்தார்கள். ஆல்பர்ட்ஸன் தன் மெலிந்த ஆறடி உயர உடம்பை சாக்லேட் நிற ஃபுல் சூட்டுக்குள் சுலபமாகத் திணித்து இருந்தார். ஹியரிங் எய்டைப் பார்ட்னராகச் சேர்த்துக்கொண்ட ரிம்லெஸ் ஸ்பெக்ட்ஸ் முகத்தின் பிரதான இடத்தைப் பிடித் திருக்க, எதற்கோ அவர் வாயைத் திறந்தபோது தெரிந்த வரிசை பிறழாத பற்கள் 'நாங்கள் பல் செட்டின் உபயம்' என்றன. எமிலி நரைத்த பாப் தலையோடும், லிப்ஸ்டிக் பூச்சு உதடுகளோடும், ஒரு கையில் வாக்கிங் ஸ்டிக்கையும், இன்னொரு கையில் கணவனின் இடுப்பையும் பிடித்துக்கொண்டு ஜாக் கிரதையாக நடை போட்டாள்.

LAWN JOY@YAHOO.COM

ப்ளாக்கி செல்லமாகக் குரைத்து, அவர்கள் மீது தாவியது. உடையைப் பிடித்து இழுத்தது. எமிலி தன் கையில் இருந்த வாக்கிங் ஸ்டிக்கால் ப்ளாக்கி யின் தலையில் ஒரு தட்டு தட்டி, "கீப் கொய்ட் ப்ளாக்கி" என்று அதட்ட... அதை ராணுவக் கட்ட ளையாக ஏற்றுக்கொண்ட ப்ளாக்கி, சட்டென்று அமைதியாகி வாலைக் குழைத்தது.

ஃப்ளோரா வீட்டினின்றும் வெளியே வந்து, எமிலியை நோக்கிப் போனாள். "மிஸஸ் எமிலி! நீங்கள் இங்கே வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. போன் செய்து தகவல் கொடுத்து இருக்க லாமே?"

"மிஸ்டர் விஜேஷ் உள்ளே இருக்கிறாரா?"

"இருக்கிறார்."

"வீடு அவருக்குப் பிடித்து இருக்கிறதா? என்ன சொன்னார்?"

"இன்னமும் அவர் வீட்டைப் பார்த்து முடிக்கவில்லை. இருந்தாலும், இந்த வீட்டை வாங்கிக்கொள்ளும் தீர்மானத்தோடுதான் பாரீஸிலிருந்து வந்திருக்கிறார்."

ஆல்பர்ட்ஸன் குறுக்கிட்டுக் கேட்டார், "இந்த வீட்டைப்பற்றிய வதந்திகளை அவர் நம்பவில்லையே?"

"ஒரு சதவிகிதம்கூட நம்பவில்லை. யாரோ ஓர் இந்தியப் பெண்... காமாட்சியாம்; இதுவரை மூன்று தடவை போன் செய்து வீட்டை வாங்க வேண்டாம் என்று சொல்லிப் பார்த்துவிட்டாள். விஜேஷ் அதைக் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. அவர் இந்த வீட்டை வாங்குவது ஏறக்குறைய முடிவாகிவிட்டது."

ஆல்பர்ட்ஸன் நெஞ்சில் சிலுவைக் குறி போட் டுக்கொண்டார். "கடவுளுக்கு நன்றி! இந்த வீட்டை விற்றுப் பணம் கைக்கு வந்தால்தான் சில்வியாவுக்கு ட்ரீட்மென்ட் கொடுத்து அவளைப் பழைய நிலைக் குக் கொண்டு வர முடியும். இந்த வீட்டின் விலை குறித்து அவரிடம் ஏதாவது பேசினாயா, ஃப்ளோரா?"

"இல்லை. இனிமேல்தான் பேச வேண்டும்."

LAVAN.JOY@GMAIL.COM

"ஓ.கே! அவருக்கு வீடு பிடித்து இருந்தால் இன்றைக்கே விலை பேசி முடித்துவிடலாம்."

மூன்று பேரும் பேசிக்கொண்டே, படிகளில் ஏறி வீட்டுக்குள் நுழைந்ததும்...

ஸ்தம்பித்தார்கள்.

விஜேஷ் மல்லாந்த நிலையில் கீழே விழுந் திருந்தான்.

திறந்த வாய்; நிலைத்த விழிகள்.

கடைவாயில் ஒரு ரத்தக் கோடு!

கோவை

பெல்லாரி மல்லய்யா திகைப்பில் இருந்து மீண்டு, சகஜ நிலைக்குத் திரும்பினாலும், தீனமான குரலில் கேட்டார்... "மாப்பிள்ளை! நீங்க என்ன சொல்றீங்க?"

பங்கஜ்குமார் செல்போனின் மறுமுனையில் சிரித்தார். "என்ன... பயந்துட்டீங்களா? நான் என்ன தப்பு பண்ணினேன்னு எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக்

குடுத்து இருக்கீங்கன்னு நான் சொன்னது எதுக்காகத் தெரியுமா? நான் ஐ.ஏ.எஸ். படிச்சுட்டு, ஒரு பொறுப்புள்ள கலெக்டரா வேலை பார்த்துட்டு இருந்தேன். பிரச்னைகளோடு வரும் மக்களை தினசரி பார்த்துப் பேசி, அவங்களோட நியாயமான பிரச்னைகளைத் தீர்த்துவெச்சு, அதன் காரணமாக அவங்க படற சந்தோஷத்தைப் பார்த்து, நானும் சந்தோஷப்பட்டுக்கிட்டு இருந் தேன். மின்மினி என்கிற ஒரு சொர்க்கத்தை என் னிக்கு நீங்க எனக்குத் தாரை வார்த்துக்கொடுத் தீங்களோ, அன்னிக்கே என்கிட்ட ஒரு மாற்றம். ஒரு சின்ன ஓசோன் ஓட்டையா தெரிஞ்ச மாற்றம் இன்னிக்குப் பூதாகாரமாத் தெரியுது. எந்த வேலையைப் பண்ணினாலும், எனக்குள்ளே மின்மினியோட ஞாபகம் இருந்துகிட்டே இருக்கு. என்னைப் பொறுத்தவரைக்கும் இது ஓர் இன்பமான ஆயுள் தண்டனை. தண்டனைன்னு நான் சொன்னது இதைத்தான்!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"விஷயம் இதுதானா... நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்!"-பெல்லாரி மல்லய்யா பெருமூச்சுவிட்டார்.

"உங்களைக் கல்யாணத்தன்னிக்குப் பார்த்தது. அதுக்கப்புறம் பார்க்க முடியலை. இன்னிக்கு லஞ்சுக்கு வர முடியாதா மாப்பிள்ளை?"

"வர்றது கஷ்டம்! ஒண்ணு செய்யுங்க. நீங்க வீட்ல சாப்பிட்டுட்டு நேரா ஆபீசுக்கு வந்து டுங்க. பார்க்கலாம்... பேசலாம்."

"வேண்டாம் மாப்பிள்ளை. உங்களுக்கு இருக்கிற வேலைப் பளுவில் நானும் வந்து தொந்தரவு தர விரும்பலை. எப்படியும் அடுத்த மாசம் மறுபடியும் கோவைக்கு வரணும். அப்ப பார்த்துட்டாப் போச்சு!"

"இல்லை... இன்னிக்கே நீங்க வரணும்னு நான் விரும்பறேன். மனசுல இருக்கிற பளுவோடு ஒப்பிடும் போது, வேலைப் பளு ரொம்ப சாதாரணம்தான்!"

"மனசுல பளுவா... யாருக்கு?"
"உங்களுக்குத்தான். பெல்லாரியில் இருந்து கோயம் புத்தூர் வந்துட்டு, என்னைப்

பார்க்காம போறது உங்களுக்கு மனப் பளுதானே?"

"ஆ... ஆமா..!"

"அப்ப... வாங்க பேசுவோம். நீங்க என்கிட்ட பேச றதுக்கு எந்த விஷயமும் இல்லேன்னாலும், உங்ககிட்ட பேசறதுக்கு என்கிட்ட நிறைய விஷயம் இருக்கு."

"எ... எ... எத்தனை மணிக்கு வரட்டும் மாப்பிள்ளை?"

"சாப்பிட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு, ஒரு நாலு மணி சுமாருக்கு வாங்களேன். டீ சாப்பிட்டுக் கிட்டே பேசுவோம்."

"வ... வர்றேன்" என்று சொல்லி பேச்சை முடித்துக்கொண்ட பெல்லாரி மல்லய்யா, செல்போனை அணைத்தார். வியர்த்துவிட்ட நெற்றியோடு, பக்கத்தில் இருந்த மின்மினியை ஏறிட்டார்.

"என்னம்மா... மாப்பிள்ளை பேச்சு இன்னிக்குக் கொஞ்சம் வித்தியாசமா இருக்கு?"

"வித்தியாசம்னா..?"

"மனசுக்குள்ளே ஏதோ ஒண்ணை வெச்சுக்கிட்டு பூடகமா பேசறார். பேச்சு அவ்வளவு இயல்பா இல்லை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

மின்மினி சிரித்தாள். "ஐயா! அவர் பார்க்கிறது பில் கலெக்டர் வேலை இல்லை; மாவட்ட கலெக்டர் வேலை. ஒரு மூச்சைவிட்டு இன்னொரு மூச்சை இழுக்கிறதுக்குள்ளே முன்னூறு பிரச்னை முன்னாடி வந்து நிக்கும். மனசைப் போட்டுக் குழப்பிக்காம சாப்பிட வாங்க."

மல்லய்யா எழுந்தார். மின்மினி சொன்ன சமாதான வார்த்தைகள் அவருடைய மனதில் ஒட்டாமல், பாத ரசத் துளிகளாய் உருண்டன. அடி வயிற்றில் புது பிளேடின் கூர்மையைப் போல் ஒரு பயம் எட்டிப் பார்த்தது. 'மின்மினியின் இன்னொரு பக்கம் கலெக்டருக்குத் தெரிந்து இருக்குமோ?'

"ஐயா! என்ன யோசனை?"

"ஒண்ணுமில்லேம்மா!"

"வாங்க சாப்பிடலாம்"- சொல்லிவிட்டு, மின்மினி பக்கத்து அறையில் இருந்த டைனிங் டேபிளை நோக்கி நடக்க, மல்லய்யா பின்தொடர்ந்தார். பத்து நிமிடங்களுக்கு முன்னால் வயிற்றுக்குள் இருந்த அகோரப் பசி, இப்போது ஆவியாகிக் காணாமல் போயிருந்தது.

பங்கஜ்குமார் செல்போனை வீசி எறியாத குறையாக மேஜையின் மேல் போட்டுவிட்டு கண்களை மூடிக்கொண்டார். ரிவால்விங் சேரில் ஓர் அரை வட்டம்

போட்டார். மூளையின் எல்லா நரம்பு அணுக்களிலும் மைக்கேல் எர்னஸ்ட் இம்சையாக உட்கார்ந்திருந்தார்.

'அவரிடம் உண்மை இருந்த காரணத்தினால்தான் தைரியத் தோடு மனு எழுதிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போய் இருக்கிறார்! பெல்லாரி மல்லய்யாவுக்கு இந்த விஷயம் தெரியாமல் இருக்க வாய்ப்பு இல்லை! வரட்டும்... போட்டோவைக் காட்டி இதுக்கு என்ன பதில் என்று கேட்டுவிடலாம்!'

பி.ஏ. சண்முகம் எட்டிப் பார்த்தார். "ஸார்..."

"என்ன?"

"லஞ்சுக்கு ஏற்பாடு பண்ணட்டுமா?"

"வேண்டாம். நீங்க போய் சாப்பிட்டு வாங்க."

சண்முகத்தின் தலை மறைந்தது.

அதே விநாடி பங்கஜ்குமாரின் பர்சனல் ஃபேக்ஸ் மெஷின் 'பீப்' சத்தத்தை வெளியிட்டபடி துடித்தது. பேப்பரை உமிழ்ந்துவிட்டு, அமைதியாயிற்று. 'ஏதாவது அவசர அரசாங்கச் செய்தியோ?'

எடுத்துப் பார்த்தவரின் முகம் ரத்தமின்றி மெள்ள வெளுத்தது. கோணல் மாணலான தமிழ் எழுத்துக்களோடு அந்தக் கடிதம் பார்வையை உன்னிப்பாக்கியது. படித்தார்.

'கலெக்டர் ஐயாவுக்கு,

வணக்கம். நான் மைக்கேல் எர்னஸ்ட். இன்னிக்குக் காலையில் கோரிக்கை மனுவோடு உங்களை வந்து பார்த்தப்ப, எனக்கு நல்ல மரியாதை குடுத்துப் பேசினீங்க. அதுக்காக என்னோட நன்றி. ஐயா! நீங்க சொன்னபடி நாளை காலை ஏழு மணிக்கெல்லாம் நானும் என் மகன் அல்போன்சும் உங்க வீட்ல இருப்போம். நீங்க நல்ல பதில் தரணும். தருவீங்க என்கிற நம்பிக்கையும் எனக்கு இருக்கு. ஆனால், அதுக்கு மாறாக நீங்க உங்க பதவி அதிகாரத்தை உபயோகப்படுத்தி எங்களை ஒடுக்க நினைச்சாலோ, ஏமாத்த நினைச்சாலோ அதனோட விளைவுகள் விஷ முட்களாய் மாறி, வாழ்நாள் முழுக்க உங்களைக் கீறிக்கிட்டே இருக்கும். எங்களைச் சந்தோஷப்படுத்துங்கள். நீங்களும் சந்தோஷமாக இருக்கலாம். எல்லாம் உங்கள் கையில்.

இப்படிக்கு,

மைக்கேல் எர்னஸ்ட்.'

இந்த வாரக் கோள்வி

அமெரிக்காவின் புகழ்பெற்ற இடமான 'WALL STREET' (சுவர் தெரு) எந்த நகரத்தில் உள்ளது?

1. வாஷிங்டன், 2. சிகாகோ, 3. நியூயார்க்.

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு உடனே எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!



-பறக்கும்...

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

கோவை

ஊட்டியாக மாறி இருந்த அந்த ஏ.சி. அறையிலும் வியர்த்து வழிந்தபடி, ஃபேக்ஸில் வந்த செய்தியைப் படித்துவிட்டுத் தன் நெற்றிப்பொட்டை இடது கையின் விரல்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டார் பங்கஜ்குமார். வயிற்றில் மத்தியான நேரத்துக்கான பசி, அடிவயிற்றில் ஓர் இனம் புரியாத திகில், இதயத்தின் மையத்தில் யாருக்கும் தெரியாமல் ஏறிக்கொண்ட கனம், இந்த மூன்றும் சரிவிகிதத்தில் கலந்து உடம்பு முழுவதும் இம்சையை உற்பத்தி செய்துவைத்திருந்தது.

'மின்மினி விஷயத்தில் ஏதோ ஒரு தப்பு நடந்து இருக்கப்போய்த்தான் மைக்கேல் எர்னஸ்ட்டுக்கு இவ்வளவு தைரியம்? இல்லாவிட்டால் இப்படி ஒரு ஃபேக்ஸ் வந்து இருக்காது!'

'இனியும் பொறுமை காப்பதில் அர்த்தம் இல்லை. பெல்லாரி மல்லய்யாவும் மின்மினியும் இப்போது வீட்டில் இருக்கிறார்கள். நேரிடையாகவே போய்ப் பேசிவிட்டால் என்ன? அவர்கள் இருவரும் சொல்லப் போகிற பதிலை வைத்துக்கொண்டு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதையும் உடனே முடிவு செய்துவிடலாமே!'

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பங்கஜ்குமார் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராகத் தன் செல்போனில் பி.ஏ-வை அழைத்தார்.

"சண்முகம்..."

"சார்..."
"இப்ப எங்கே இருக்கீங்க?"

"கேன்டீன்ல லஞ்ச் எடுத்துட்டு இருக்கேன், சார்."

"சண்முகம்... ஐ யம் நாட் ஃபீலிங் வெல்! கொஞ்சம் ஃபீவரிஷ்ஷா இருக்கு."

"நானும் கவனிச்சேன் சார்... நீங்க இன்னிக்கு நார்மலா இல்லை. ஸீம்ஸ் டு பி ரெஸ்ட்லெஸ்!"

"அதான் வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுக்கலாம்னு இருக்கேன். இஃப் எனி அர்ஜென்ஸி... கிவ் மீ அ எ கால். அதர்வைஸ் டோன்ட் டிஸ்டர்ப் மி!"

"ச...ச... சார்"- பதற்றமாகக் குறுக்கிட்டார் பி.ஏ.

"என்ன?"

"ரெண்டு நிமிஷத்துக்கு முந்தி போலீஸ் கமிஷனர் எனக்கு போன் பண்ணியிருந்தார், சார். சென்னை க்ரைம் பிராஞ்சில் இருந்து க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் விவேக்கும் அவருடைய அசிஸ்டென்ட் விஷ்ணுவும் உங்களைப் பார்த்துப் பேச வந்துட்டு இருக்காங்களாம் சார்!"

"என்கிட்ட பேசவா?"

"யெஸ், சார்!"

"என்ன விஷயமா?"

"கமிஷனர்கிட்டே கேட்டேன் சார். அதுக்கு அவர் சரியான பதில் சொல்லலை. மேட்டர் இஸ் ஹைலி கான்ஃபிடென்ஷியல்னு தீர்மானமாச் சொல்லிட்டார்."

"மிஸ்டர் விவேக் எத்தனை மணிக்கு வர்றார்?"

"கோயம்புத்தூர் ஏர்போர்ட்ல இருந்து வந்துட்டு இருக்கார். ஹி இஸ் ஆன் தி வே சார்! எப்படியும் அரை மணி நேரத் துக்குள்ளே வந்துடுவார்."

"இட்ஸ் ஓ.கே.! அவரைப் பார்த்துட்டே நான் வீட்டுக்குப் போறேன். நீங்களும் வந்துடுங்க."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பங்கஜ்குமார் செல்போனை அணைத்துவிட்டு ரிவால்விங் நாற்காலியில் மெள்ளச் சுழன்றார். சுவரில் மாட்டியிருந்த போர்டு அவருடைய பார்வையில்பட்டது. கோவை மாவட்ட கலெக்டராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட முதல் நாள் அவர் தன் கையால் மாட்டிய போர்டு. அதில் எழுதப்பட்டு இருக்கும் வாசகங்கள், வருகிற பார்வையாளர்களின் கண்களில் பட்டு மனதிலும் ஒட்டிக்கொள்ள வேண்டும்

என்பதற்காகத் தன் தலைக்குப் பின்புறம் மாட்டியிருந்தார். அந்த வாசகம் இப்போது பார்வையில்பட்டு நழுவியது.

SUCCESSFUL PEOPLE DO NOT RELAX IN CHAIRS.THEY RELAX IN THEIR WORKS.

போர்டில் இருந்த வார்த்தைகள் உயிருடன் அசைந்து பங்கஜ்குமாரை ஒரு கேலிப் பார்வை பார்த்தன. 'காலையில் இருந்து எந்த ஒரு வேலையையும் பார்க்காமல் உன் சொந்தப் பிரச்னையைப்பற்றியே யோசித்துக்கொண்டு இருப்பது எந்த வகையில் நியாயம்?'

மனசுக்குள் எழுந்த குற்ற உணர்வைச் சமாதானப்படுத்தும்விதமாக பங்கஜ்குமார் ஒரு ஃபைலை எடுத்துவைத்துக்கொண்டார். மின்மினி பற்றிய எண்ணங்களை மானசீகமாக ஒரு டஸ்டரை வைத்துத் துடைத்துவிட்டு, ஃபைலின் பக்கங்களைப் புரட்டினார். படித்துப் பார்த்துத் தேவையான இடங்களில் கையெழுத்து போட்டு, பாதி ஃபைலைக் கடந்திருந்தபோது, பி.ஏ. சண்முகம் உள்ளே வந்தார்.

"சார்..."

நிமிர்ந்தார் பங்கஜ்குமார். "யெஸ்..."

"மிஸ்டர் விவேக் வந்துவிட்டார். உள்ளே அனுப்பட்டுமா?"

"ப்ளீஸ்!" LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பங்கஜ்குமார், ஃபைலை மூடிவைத்துவிட்டு, மினரல் வாட்டர் பாட்டிலை எடுத்து, பசியால் பம்மிக்கொண்டு இருந்த வயிற்றை நிரப்பி, காலி பாட்டிலை மேஜையின் மீது வைத்தபோது விவேக்கும் விஷ்ணுவும் உள்ளே நுழைந்தார்கள்.

"குட் ஆஃப்டர்நூன் சார்."

சிரித்து பரஸ்பரம் கைகளைக் குலுக்கிக்கொண்டார்கள்.

"ப்ளீஸ் ஸீட்டட்!"

விவேக் உட்கார்ந்துகொண்டே சொன்னான், "சார்... இந்த மத்தியான நேரத்துல உங்களுக்குத் தொந்தரவு தர்றோம்."

பங்கஜ்குமார் தன் உதடுகளில் ஒரு கட்டாயப் புன்னகையை நிறுத்திக்கொண்டு பேசினார்... "மிஸ்டர் விவேக்! எனக்கு உங்களைப்பற்றியும் மிஸ்டர் விஷ்ணுவைப்பற்றியும் நல்லாவே தெரியும். சரியான காரணம் இல்லாம நீங்க யாரையும் பார்க்க வர மாட்டீங்க. சொல் லுங்க, என்ன விஷயம்?"

விவேக் குரலைத் தாழ்த்தினான்."சார்... திஸ் இஸ் ஹைலி கான்ஃபிடென்ஷியல்.

உளவுத் துறையில இருந்து வந்த செய்தி. அதைப்பற்றி உங்ககிட்டே யும், அதுக்கப்புறம் போலீஸ் கமிஷனர்கிட் டேயும் டிஸ்கஸ் பண்ண ணும்."

"ஓ.கே. லெட் அஸ் ஸ்டார்ட்!"

"விஷ்ணு, அந்த ஃபைலை எடு!"

ஒரு மணி நேர டிஸ்கஷனுக்குப் பிறகு ஃபைலை மூடிவைத்தான் விவேக். "சார்... கோவையைப்பற்றியும் கடந்த ஆறு மாத காலத்தில் இந்த நகரத்தில் நடந்த கொலைக் குற்றங்களைப்பற்றியும் தெளி வாக எடுத்துச் சொன்னீங்க. இன்னிக்கு இந்தியாவில் வேகமாக வளர்ந்து வர்ற நகரங்களில் கோவையும் ஒண்ணுன்னு சிட்டி டெவலப்மென்ட்ஸ் கார்ப்பரேஷன் புள்ளிவிவரத்தோடு எடுத்துக்காட்டி யிருக்கு. அந்த அடிப்படையில் பார்க்கும் போது உளவுத் துறை கொடுத்த அதிர்ச்சி யான செய்தியை நாம அலட்சியம் பண்ண முடியாது. அதான் புறப்பட்டு வந்தோம்! உங்ககிட்டே டிஸ்கஸ் பண் ணிட்டோம். இனி, கமிஷனரைப் பார்க் கணும்."

விவேக் சொல்லிக்கொண்டே எழ முயல, பங்கஜ்குமார் குறுக்கிட்டார்... "எக்ஸ்கியூஸ் மி!"

"சொல்லுங்க சார்?"

"கோவையில் எத்தனை நாள் ஸ்டே?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஒரு வாரம்..."

"எந்த ஹோட்டல்?"

"அன்னபூர்ணா."

பங்கஜ்குமார் சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, பின் விவேக்கை ஏறிட்டார். "மிஸ்டர் விவேக்! அரசாங்க வேலையாக வந்திருக்கிற உங்ககிட்டே நான் தனிப்பட்ட முறையில் ஓர் உதவி கேட்கலாமா?"

விவேக் லேசாக பதற்றப்பட்டான். "என்ன சார் இது... உதவி செய்யத்தானே போலீஸ் டிபார்ட்மென்ட்டே இருக்கு? சொல்லுங்க சார்... உங்களுக்கு நான் எந்த வகையில் உதவி செய்ய முடியும்னு நினைக்கிறீங்க?"

"மிஸ்டர் விவேக்! நான் இப்போ ஒரு பிரச்னையில் மாட்டிக்கிட்டு என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருக்கேன். நான் உங்களைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டு இருக்கேன். எத்தனையோ சிக்கலான கேஸ்களை சிறப்பாகக் கையாண்டு சுபம் போட்டிருக்கீங்க. அந்த நம்பிக்கையில் என் பிரச்னையை உங்ககிட்டே ஒப்படைக்கலாம்னு இருக்கேன்."

"சார்... டோன்ட் ஹெசிடேட்! பிரச்னை என்னன்னு சொல்லுங்க?"

பங்கஜ்குமார் தனக்கு வந்த ஃபேக்ஸ் தாளை விவேக்கிடம் நீட்ட, அவன் குழப்பத்தோடு வாங்கிப் படித்தான். படித்து முடித்ததும் கேட்டான்... "யார் இந்த மைக்கேல் எர்னஸ்ட்... அல்போன்ஸ்?"

ஐந்து நிமிட நேரத்தைச் செலவழித்து எல்லாவற்றையும் சொல்லி முடித்த பங்கஜ்குமார், பெல்லாரி சர்ச்சில் எடுக்கப்பட்ட அந்தத் திருமண போட்டோவையும் காட்டினார்.

விவேக் அந்த போட்டோவை இமைக்காமல் பார்த்தான். "சார்... போட்டோவில் இருக்கிறது, நிச்சயம் உங்க மனைவி மிஸஸ் மின்மினிதானா?"

"யெஸ்..."

"இது ஏன் ஒரு சில்மிஷ போட்டோவாக இருக்கக் கூடாது?"

"அப்படியிருக்க வாய்ப்பு இல்லை."

"எதை வெச்சு அப்படிச் சொல்றீங்க சார்?"

"மிஸ்டர் விவேக்... நான் ஒரு மாவட்டத்தின் கலெக்டர். என் பதவிக்கு உண்டான அதிகார பலம் எந்தளவுக்கு இருக்கும்னு ஒரு பாமரனுக்குக்கூடத் தெரியும். பொய்யான தகவல்களோடு ஒருத்தன் என்கிட்டே வந்தா அதனோட விளைவுகள் எப்படி இருக்கும்னு அவனுக்குத் தெரியாதா? மைக்கேல் எர்னஸ்ட் இவ்வளவு துணிச்சலாகச் செயல்படறதுக்குக் காரணம், அந்த ஆள்கிட்டே உண்மையும் நியாயமும் இருக்கலாம்கிறது என்னோட யூகம்!"

"ஓ.கே. சார்! இந்தப் பிரச்னையில் நான் உங்களுக்கு எந்த வகையில் உதவ முடியும்?"

"மின்மினிக்கே தெரியாமல் இந்தப் பிரச்னையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரணும்னு நான் விரும்பறேன். உங்களால் முடியுமா மிஸ்டர் விவேக்?"

விவேக்கின் தலை ஸ்லோமோஷனில் சுழன்றது!

நியூயார்க்

விஜேஷ் கீழே விழுந்துகிடந்த கோலத்தைப் பார்த்ததும், வெகுவாக அதிர்ந்துபோன ஃப்ளோரா ஒரு வீறிடலோடு அவனை நோக்கி ஓடிப் போய் மண்டியிட்டு உட்கார்ந்து, பதற்றத்துடன் கன்னங்களைத் தட்டினாள்.

"வி...ஜேஷ்... விஜேஷ்..."

விஜேஷின் முகம் நிலைத்த கண்களோடு சலனம் இல்லாமல் ஆடியது. பல்வரிசை

கிட்டித்துப்போய் தெரிந் தது. ஃப்ளோரா விஜேஷின் உடம்பை உலுக்கினாள். "விஜேஷ்... என்னா யிற்று உங்களுக்கு?"

ஆல்பர்ட்ஸன்னும் எமிலியும் கலவரம் படிந்த முகங்களோடு விஜேஷைப் பார்த்துவிட்டு, ஃப்ளோராவை ஏறிட்டார்கள்.

"ஃப்ளோரா! நம் டாக்டர் ஹென்றி லூயிசுக்கு போன் செய்து உடனடியாக அவரை வரச் சொல்."



"டாக்டருக்கு போன் செய்து அவரை வரவழைப்பதைவிட, விஜேஷை நாமே ஹாஸ்பிடலுக்குக் கொண்டுபோய்விடுவது உத்தமம்."

"இல்லை ஃப்ளோரா... டாக்டருக்கு போன் செய். அவர் வந்து சேர்வதற்குள் நாம் ஏதாவது முதல் உதவி செய்துகொண்டு இருக்கலாம்!"

எமிலி குறுக்கிட்டாள், "நோ... யு ஆர் ராங் ஆல்பர்ட்! ஃப்ளோரா சொல்வது போல் விஜேஷை ஹாஸ் பிடலுக்குக் கொண்டுபோவதுதான் சரி!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"எமிலி, புரியாமல் பேசாதே! விஜேஷ் இப்போது உயிருடன் இருக் கிறாரா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது. கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு இருப்பதற்கான அறிகுறி தான் விஜேஷிடம் தெரிகிறது. இந்த நிலையில் காரில் பயணம் என்பது, அவர் உயிருடன் இருக்கும்பட்சத்தில் பாதகமாக அமையலாம். டாக்டருக்கு விவரத்தைச் சொல்லி, அவரை இங்கே வரவழைப்பதே சரியான செயலாக இருக்க முடியும். ஃப்ளோரா, நீ டாக்டருக்கு போன் செய்!"

ஆல்பர்ட்ஸன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, அந்தச் சிரிப்புச் சத்தம் கேட்டது.

மூன்று பேரும் திடுக்கிட்டுப் போய் சுற்றும்முற்றும் பார்த்தார்கள். சிரிப்பைத் தொடர்ந்து விஜேஷின் குரல்...

"என்ன மிஸ். ஃப்ளோரா? நீங்களும் மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்னும் இப்படியே வாக்குவாதம் செய்துகொண்டு இருந்தால், நான் உயிர் பிழைப்பது எப்படி? இரண்டு பேரும் சேர்ந்து பேசி, சீக்கிரமாக ஏதாவது ஒரு முடிவுக்கு வாருங்கள்."

குரல் கேட்டுத் திடுக்கிட்ட மூன்று பேரின் பார்வையும் கீழே கிடந்த விஜேஷை நோக்கிப் போக, அவன் எழுந்து உட்கார்ந்து கைகளால் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு சிரித்தான்.

"ரொம்பவும் பயந்துவிட்டீர்கள் போல் இருக்கிறதே? இந்த வீட்டை வாங்க வந்த இரண்டு பேர் அக்ரிமென்ட் போட்டதும் ஹார்ட்அட்டாக் வந்து இறந்துபோனார்கள். நான் இந்த வீட்டைப் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே ஹார்ட் அட்டாக் வந்து இறந்து போனால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தேன். இங்கே இந்த டிரெஸ்ஸிங் டேபிளுக்குப் பக்கத் தில் ஒரு பழைய லிப்ஸ்டிக் பீஸ் கிடைத் தது. அதைவைத்து என் கடை வாய் அருகே ரத்தக்கறையைப்போல் கோடு போட்டுக்கொண்டு மல்லாக்கப் படுத்து விட்டேன். எப்படி என் நடிப்பு?"

ஃப்ளோரா கண்களில் நீர் கோத்து இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு விஜேஷை பொய்யாக ஒரு கோபப் பார்வை பார்த்தாள். "மிஸ்டர் விஜேஷ்... திஸ் இஸ் டூ மச்! இது விளையாட்டு என்றாலும் என் மனதை நிரம்பவே காயப்படுத்திவிட்டது. இந்த அதிர்ச்சியில் இருந்து மீள எனக்கு எப்படியும் இரண்டு நாட்கள் பிடிக்கும்."

"ஸாரி ஃப்ளோரா! ஜஸ்ட் ஃபார் ஃபன். அந்தக் காமாட்சியின் எச்சரிக்கைக்கு நான் எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து இருக் கிறேன் என்பது இந்தச் சம்பவத்தின் மூலமாகவே உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்..." - விஜேஷ் சொல்ல, ஆல்பர்ட் ஸன் இடைமறித்தார், "நான் புரிந்துகொண்டேன் மிஸ்டர் விஜேஷ். இந்த வீட்டை வாங்க வந்த இரண்டு பேர் இறந்துபோனது தற்செயலான ஒன்று என்பதையும், அதை ஒருபொருட்டாகவே எண்ண வேண்டியது இல்லை என்பதையும் கேலியும் கிண்டலுமாக அழகாக வெளிப்படுத்திக்காட்டிவிட்டீர்கள். என்னைப் பொறுத்தவரை, இந்த வீடு ராசியான வீடு. எங்களுடைய கால நேரம் சரியில்லாததால், இதை விற்க வேண்டிய சூழ்நிலை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

எமிலியும் பக்கத்தில் வந்து, தன் மெலிந்த வலது கை விரல்களால் விஜேஷின் கன்னத்தைத் தடவினாள். "எனக்கு ஒரு மகன் இருந்தால் அவன் உன் வயதில் இப்படித்தான் இருப்பான். ஆனால், எங்களுக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை. ஆனால், கர்த்தர் கருணையுள்ளவர். அதனால்தான் எங்களுக்கு உதவி செய்வதற்காக இங்கே உன்னை அனுப்பியுள்ளார். நாங்கள் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்தது இல்லை. எங்களுக்குக் கெடுதல் செய்ய யாரோ நினைக்கிறார்கள். இந்த வீட்டை விற்பதற்குத் தடையாக இருக்கிறார்கள். அவர்கள் எதற்காக அப்படிச் செய்கிறார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை..."

விஜேஷ், எமிலியின் கைகளைப் பற்றிக்கொண்டான். "கவலைப்படாதீர்கள். யார் என்ன சொன்னாலும் சரி, இந்த வீட்டை வாங்கிக்கொள்ளும் முடிவுக்கு வந்துவிட்டேன். எப்போது அக்ரிமென்ட் போடலாம். நீங்களே சொல்லுங்கள்?"

"அதை ஃப்ளோராதான் முடிவு செய்ய வேண்டும்!" - எமிலி ஒரு புன்னகையோடு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே - வெளியே - ப்ளாக்கி குரைக்கும் சத்தம் கேட்டது. கோபம் கலந்த குரைப்பு.

'யாரோ வருகிறார்கள் போலிருக்கிறதே?'

ஃப்ளோரா வேக வேகமாக ஜன்னல் அருகே போய் வெளியே எட்டிப் பார்த்தாள்.

சிறிய காம்பவுண்ட் கதவைத் தள்ளிக்கொண்டு, கருநீல நிற யூனிஃபார்மில் இரண்டு போலீஸ் அதிகாரிகள் உள்ளே நுழைந்துகொண்டு இருந்தார்கள். கேட்டுக்கு வெளியே நியூயார்க் போலீஸின் பேட்ரோலிங் கார், சுழலும் சிவப்பு விளக்கோடு தெரிந்தது!

அமெரிக்காவில் எந்த ஒரு அவசர உதவிக்கும் (FIRE, MEDICAL EMERGENCY, CRIME) கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் ஒன்றை மட்டுமே உபயோகிப்பார்கள். அந்த எண் எது?

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

(அ) 911 (ஆ) 811 (இ) 711

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய தொலைபேசி எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 16.11.09-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

-பறக்கும்...

நியூயார்க்

பீட்ரூட் நிற முகங்களோடு நியூயார்க் போலீஸ் அதிகாரிகள் இரண்டு பேர் கருநீல நிற யூனிஃபார்மில் வீட்டுக்குள் வருவதைப் பார்த்ததும், ஆல்பர்ட்ஸனும் எமிலியும் சற்றே பதற்றப்பட்டவர்களாக ஃப்ளோராவை ஏறிட்டார்கள்.

"இருங்கள், நான் விசாரித்து வருகிறேன். தேவைப்பட்டால் மட்டும் நீங்கள் வெளியே வாருங்கள்!" என்ற ஃப்ளோரா, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

ப்ளாக்கி தொண்டை நாண்கள் தெறித்துப்போகிற அபாயகரமான டெசிபல் அளவில் குரைத்துக்கொண்டு இருக்க, அந்த இரண்டு போலீஸ் அதிகாரிகளும் அதைப் பொருட்படுத்தாமல் புல்வெளியைக் கடந்து, இயல்பான நடையில் வந்துகொண்டு இருந்தார்கள். ஃப்ளோரா உதட்டில் உற்பத்தி செய்துகொண்ட ஒரு இன்ஸ்டன்ட் புன்னகையோடு அவர்கள் எதிரே போய் நின்றாள்.

"வீ ஆர் நியூயார்க் க்ரைம் பிராஞ்ச் பீப்பிள். ஐம் ஸ்மித். ஹி இஸ் தாம்ஸன்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஐம் ஃப்ளோரா... லாயர்!"

ஸ்மித் தன் பார்வையை வீட்டுக்குள் செலுத்தியபடியே கேட்டார்... "இது மிஸ்டர் ஆல்பர்ட்ஸனுக்குச் சொந்தமான வீடுதானே?"

"ஆமாம்."

"அவரைப் பார்க்க வேண்டும்."

"என்ன விஷயம்?"

ஸ்மித்தும் தாம்ஸனும் ஒருவரையருவர் பார்த்துக்கொள்ள, ஃப்ளோரா தொடர்ந்தாள்... "என்னிடம் விஷயத்தைச் சொல்வதில் உங்களுக்கு எந்தத் தயக்கமும் வேண்டியது இல்லை. நான் அவர்களுடைய குடும்ப லாயர்."

"மன்னிக்க வேண்டும். சில விஷயங்களைச் சம்பந்தப்பட்ட நபரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். ஆல்பர்ட்ஸன் உள்ளே இருக்கிறாரா?"

"இருக்கிறார். வாருங்கள்!"

ஃப்ளோரா வீட்டின் கதவை நோக்கி நடக்க, அவர்கள் தொடர்ந்தார்கள். 'நமக்கும் இப்படி ஓர் அழகான குடும்ப வக்கீல் வாய்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்'

என்று ஸ்மித் மெதுவான குரலில் தாம்ஸனிடம் சொல்ல, 'அடுத்த ஞாயிற்றுக்கிழமை சர்ச் சுக்குப் போகும்போது இதுதான் என் பிரார்த்தனையே' என்று சொல்லிக் கண்ணடித்துச் சிரித்தார் தாம்ஸன்.

ஃப்ளோராவோடு உள்ளே நுழைந்த போலீஸ் அதிகாரிகளைப் பார்த்ததும், ஆல்பர்ட்ஸன் தான் உட்கார்ந்திருந்த சோபாவில் இருந்து மெள்ள எழுந்து நின்றார். ஃப்ளோரா அறிமுகம் செய்துவைக்க... பரஸ்பரம் கை குலுக்கிக்கொண்டார்கள்.

"மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்... உங்களிடம் பேச வேண்டும். நேரம் ஒதுக்க முடியுமா?"

"என்ன விஷயம்?"

ஸ்மித், எமிலியைப் பார்த்தார். "இவர் உங்கள் மனைவியா?"

"ஆமாம்."

"அந்த இளைஞர்?" கொஞ்சம் தள்ளி ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்றிருந்த விஜேஷைக் காட்டினார்.

"அவர் மிஸ்டர் விஜேஷ்... இந்தியாவில் இருந்து வந்திருக்கிறார்."

"நாங்கள் உங்களோடு பேசும்போது அவர் இங்கே இருப்பதில் உங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையே?"

RAVAN_JOY@TAMILTORRENTS.COM

ஆல்பர்ட்ஸன் சின்னதாகச் சிரித்து, தன் பல்செட்டைக் கொஞ்சமாகக் காட்டியபடி சொன்னார்... "எந்த ஆட்சேபனையும் கிடையாது. நீங்கள் தாராளமாகப் பேசலாம்."

"தென் நோ பிராப்ளம்" என்ற ஸ்மித், தனக்குப் பக்கத்தில் இருந்த தாம்ஸனைப் பார்க்க, அவர் தன் யூனிஃபார்மின் அட்டையில் இருந்து ஒரு பழுப்பு நிறக் கவரை உருவிக்கொண்டே கேட்டார்...

"மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்! மேரிலாண்ட் ஸ்டேட்டில் உள்ள பால்டிமோர் நகரத்தில் ஒரு 'நேஷனல் அக்வேரியம்' இருப்பது உங்களுக்குத் தெரியுமா?"

"அதைத் தெரியாதவர்களும் இருக்க முடியுமா என்ன? அப்படித் தெரியாது என்று சொன்னால், அவன் ஓர் அமெரிக்கனாக இருக்க மாட்டான்."

"நீங்கள் அங்கே போயிருக்கிறீர்களா?"

"இல்லை."

"உங்கள் மனைவி..?"

"நானும் எங்கள் மகள் சில்வியாவும் போயிருக் கிறோம்" என்றாள் எமிலி.

"ஓ.கே.! இப்போது விஷயத்துக்கு வருகிறேன். நேற்று இரவு எங்களுக்கு அந்த நேஷனல் அக்வேரியம் நிர்வாகத்திடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் அவர்கள் தெரிவித்திருந்த ஒரு புகாரின் அடிப்படையில்தான் இப்போது உங்களை விசாரிக்க வந்திருக்கிறோம்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ஆல்பர்ட்ஸன் முகம் மாறினார்.

"புகாரா... என்ன புகார்?"

"முதலில் நான் கேட்கும் ஒரு கேள்விக்கு நீங்கள் உண்மையான பதிலைச் சொல்ல வேண்டும். அந்தப் பதிலை வைத்துக்கொண்டுதான் மேற்கொண்டு உங்களோடு பேச முடியும்."

"என்ன கேட்கப் போகிறீர்கள்?"

"உங்கள் மகள் சில்வியா இந்த வீட்டில் உள்ள ஓர் அறையை மியூஸியமாக மாற்றிவைத்திருப்பதும், அந்த அறை பூமிக்கு அடியில் இருப்பதும் உண்மையா?"

ஆல்பர்ட்ஸன், எமிலி இருவரின் கண்களிலும் இப்போது பயம் பரவித் தெரிந்தது. உலர்ந்துபோன உதடுகளில் மெல்லிய நடுக்கம்.

"அது... அது வந்து..."

"மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்... நீங்கள் உண்மையைத்தான் பேச வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். பொய் சொல்லிவிட்டு, பின்பு அந்தப் பொய்க்கு உயிரூட்ட உங்களால் முடியாது. இந்த வீட்டில் பூமிக்கு அடியில் உள்ள ஓர் அறை மியூஸியமாக மாற்றப்பட்டு இருக்கிறதா, இல்லையா?"

எமிலி பெருமூச்சு ஒன்றை வெளியேற்றிவிட்டு ஸ்மித்தை ஏறிட்டாள்... "யெஸ்! நீங்கள் சொல்வது உண்மைதான். அப்படி ஓர் அறை இந்த வீட்டின் பூமிக்கு அடியில் இருக்கிறது. ஆனால், அது நீங்கள் நினைப்பதுபோல் ஒரு மியூஸியம் அல்ல. என் மகள் சில்வியாவுக்குப் பத்து வயதில் இருந்தே அபூர்வமான பொருள்களைச் சேகரித்துவைப்பது ஒரு ஹாபியாக இருந்தது."

தாம்ஸன் குறுக்கிட்டார்... "அபூர்வமான பொருள்கள் என்றால் எது மாதிரியான பொருள்கள் என்பதைச் சொல்ல முடியுமா?"

"அதில் எல்லாமே அடங்கும். பழங்காலத்துச் செப்பு நாணயங்கள், தபால்தலைகள், கடற்கரை ஓரத்தில் கிடைக்கும் நத்தை ஓடுகள், கிளிஞ்சல்கள், ஸ்டஃப் செய்யப்பட்ட சின்னச் சின்ன பறவைகள், விலங்குகள், ஹெர்பேரியம் செய்யப்பட்ட தாவர வகைகள்... இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இது ஒரு வகையான ஹாபி. இது தவறு என்று சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கிறதா, என்ன?" LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"சொல்லப்படவில்லை."

"பின் எதற்காக இந்த விசாரணை?"

"பால்டிமோரில் உள்ள நேஷனல் அக்வேரியத்தில் வைக்கப்பட்டு இருந்த 'டைமண்ட் ஃபிஷ்' எனப்படும் வைர மீன்களில் இரண்டு காணாமல் போய்விட்டன. ஒரு வைர மீனின் விலை இரண்டு லட்சம் டாலர். அக்வேரியத்தில் பணிபுரியும் யாரோ ஒரு ஊழியர்தான் இந்தத் திருட்டுக்குக் காரணமாக இருக்க முடியும் என்று நினைத்து, அக்வேரிய நிர்வாகம் போலீஸ் உதவியோடு ஒரு விசாரணையை மேற்கொண்டது. அந்த விசாரணையில் மூர்சென் என்கிற ஊழியர் பிடிபட்டார். அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து லாக்கப்புக்குக் கொண்டுபோய் விசாரணை செய்தபோது, போலீஸார் அடித்த அடி, படக்கூடாத இடத்தில் பட்டு இறந்துபோனார். அவரிடம் இருந்த செல்போனைக் கிளறிப் பார்த்ததில், உங்களுடைய மகள் சில்வியாவின் செல்போன் நம்பர் இருந்தது. உடனே, குறிப்பிட்ட அந்த மொபைல் கம்பெனியின் உதவியை நாடினோம். மூர்சென் சில்வியாவோடு பேசின விவரங்களை சி.டி-யாகக் கொடுத்தார்கள். போட்டுப் பார்த்தோம். அதில் மூர்சென் சில்வியாவோடு 'டைமண்ட் ஃபிஷ்'பற்றிப் பேசியிருப்பது தெரிந்தது."

தாம்ஸன் சொல்லச் சொல்ல... ஆல்பர்ட்ஸனும் எமிலியும் கலவரமானார்கள்.

"இது எங்களுக்குப் புதுச் செய்தியாக உள்ளது. எங்கள் மகள் சில்வியா சட்டத்துக்குப் புறம்பான செயல்களைச் செய்ய மாட்டாள். அவள் 'ட்ரிபிள் கி' எனப்படும் கம்பெனியில் ஒரு பொறுப்பான அதிகாரியாகப் பணிபுரிந்து வருகிறாள்."

"தெரியும். ஆனால், ஒருவர் பொறுப்பான பதவியில் இருக்கிறார் என்கிற காரணத்துக்காக அவர் தவறே செய்ய மாட்டார் என்பதை எந்த அளவுகோலை வைத்துக்கொண்டு நம்புவது? எல்லா மனிதர்களுக்கும் இரண்டு முகங்கள் இருக்கின்றன. க்ரைம் சிந்தனை இல்லாத மனிதனே கிடையாது என்பது நியூயார்க் போலீஸின் தீர்க்கமான கருத்து."

"எங்கள் மகள் சில்வியாவுக்கு இப்போது உடல் நலம் சரியில்லை..." - எமிலி சொல்ல, தாம்ஸன் தன் சதைப்பற்று இல்லாத உதடுகளை ஒரு கோடு போல் விரித்துப் புன்னகைத்தார்.

"பொய் சொல்கிறீர்கள் மிஸஸ் எமிலி! உங்கள் மகள் சில்வியாவுக்கு உடல்நலம் நன்றாக இருக்கிறது. மனநலம்தான் சரியில்லை. அவள் ட்ரீட்மென்ட் எடுத்துக்கொண்டு இருக்கும் ஹாஸ்பிடலுக்குச் சென்று, அவளையும் டாக்டரையும் பார்த்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறோம்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

எமிலி கோபத்தில் வெடித்தாள்.. "ஓ.கே.! இப்போது நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?"

"இந்த வீட்டின் பூமிக்கு அடியில் மியூஸியமாக மாற்றப்பட்டுள்ள அந்த அறையை நாங்கள் பார்க்க வேண்டும்!"

கோவை

கலெக்டர் பங்கஜ்குமார் சொன்னதைக் கேட்டு ஸ்லோமோஷனில் சுழன்ற தன் தலையைச் சின்னதாக ஒரு 'பிரேக்' போட்டு நிறுத்தினான் விவேக்.

"சார்! இந்தப் பிரச்னையின் முக்கிய அச்சாணியே உங்கள் மனைவி மிஸஸ் மின்மினிதான். அவங்களுக்குத் தெரியாம பிரச்னையை எப்படி முடிவுக்குக் கொண்டு வர முடியும்னு நினைக்கிறீங்க?"

பங்கஜ்குமார் வியர்த்துப் போயிருந்த தன் முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டே விவேக்கை ஏறிட்டார்.

"விவேக்! அது எப்படின்னு எனக்குச் சொல்லத் தெரியலை. பட், அதைச் செயல்படுத்த உங்களால்தான் முடியும்னு நான் நினைக்கிறேன்."
"ஓ.கே. சார்! உங்ககிட்ட நான் சில கேள்விகள் கேட்கலாமா?"

"ப்ளீஸ்..."

"உங்க மனைவி மின்மினிக்கு அப்பா, அம்மா இல்லைன்னு சொன்னீங்க. பெல்லாரியில் இருந்தப்ப அவங்களுக்கு ஆதரவாக இருந்தது யாரு?"

"பெல்லாரி மல்லய்யான்னு ஒருத்தர். அவர் அந்த ஊர்ல 'மஹிளா சமிதி'ன்னு பெண்கள் விடுதி நடத் திட்டு வர்றார். அப்பா - அம்மாவை இழந்த ஆதரவற்ற பெண்களுக்கான விடுதி அது. அங்கேதான் மின்மினி தங்கிப் படிச்சா. வேலைக்கும் போனா. மல்லய்யா கிட்டே பாட்டும் கத்துக்கிட்டா."
"மின்மினியை எந்தச் சூழ்நிலையில், எப்படி விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?"

"நான் ஐ.ஏ.எஸ். முடிச்சதும், பெல்லாரியில் ஒரு டிரெய்னிங் கேம்ப் போட்டாங்க. ரெண்டு வார கேம்ப். அதுல ஒரு ஓய்வு நாள் கிடைச்சபோது, ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். வழியில் ஒரு மண்டபத்தில் மஹிளா சமிதி சார்பில் ஒரு மியூஸிக் கான்சர்ட் நடந்துட்டு இருந்தது. எனக்கு மியூஸிக்கில அதிக ஈடுபாடு இருந்தால, ஆர்வமா போய்க் கேட் டேன். அந்த இசை நிகழ்ச்சியில் மின்மினியும் பாடினா. அந்தக் குரல் இனிமை என்னை அப்படியே கட்டிப் போட்டது. ரெண்டு மணி நேர இசை நிகழ்ச்சி முடிஞ்சதும், நான் மின்மினியை நேரில் போய்ப் பாராட்டினேன். தான் பாட்டு கத்துக்கக் காரணமே இவர்தான்னு சொல்லி, பெரியவர் மல்லய்யாவை எனக்கு அறிமுகப்படுத்திவெச்சா. அதுக்கப்புறம் அந்த கேம்ப் முடியறதுக்குள்ளே நான் ரெண்டு தடவை மின்மினியைச் சந்திச்சுப் பேசினேன். மின்மினிக்கு அப்பா-அம்மா இல்லை என்கிற விஷயம் என்னைப் பாதிச்சது. காரணம், நானும் சின்ன வயதிலேயே அப்பா-அம்மாவை இழந்து ஒரு கிறிஸ்துவ மிஷனில் படிச்சு இந்த நிலைக்கு உயர்ந்த வன். எனக்குப் பிடிச்ச எல்லா அம்சங்களும் மின்மினி கிட்ட இருந்ததால, அவளையே கல்யாணம் பண் ணிக்கிட்டா என்னன்னு என் மனசுக்குப்பட்டது. மல்லய்யாகிட்ட என் விருப்பத்தைச் சொன்னேன். அந்த விருப்பம் சீக்கிரமே கல்யாணத்தில் போய் முடிஞ்சுது."

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

"நீங்க மின்மினியைக் கல்யாணம் பண்ணிக்கப்போறேன்னு சொன்னதும், அவங்க ரியாக்ஷன் எப்படி இருந்தது?"

"ரொம்ப சந்தோஷப்பட்டா. தன்னோட உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்க முடியாம என் கால்ல விழுந்து கதறி அழுதா. பெரியவர் மல்லய்யாவும் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டார்!"

"உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மின்மினி ஒரு சின்ன தயக்கத்தைக்கூட வெளிப்படுத்தலையா?"

"இல்லை."

"மின்மினிக்கு ஒரு 'கில்ட்டி கான்ஷியஸ்' இருந்திருந்தா, அவங்க உங்களைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சிருக்க மாட்டாங்கன்னு இப்ப நினைக்கிறீங்க இல்லையா சார்?"

"யூ ஆர் கரெக்ட் மிஸ்டர் விவேக்! எனக்கும் மின்மினிக்கும் கல்யாணம் நடந்து ரெண்டு மாசம் ஆகுது. இந்தக் குறுகிய காலத்திலேயே என்னோட உணர்ச்சிகளையும் எதிர்பார்ப்புகளையும் புரிஞ்சுக்கிட்டு அதுக்கு ஏத்த மாதிரி தன்னை மாத்திக்கிட்ட ஒரு நல்ல பெண் மின்மினி. அவளோட கடந்த கால வாழ்க்கையில் எந்தவிதமான ஒரு கறுப்பு அத்தியாயமும் இருக்கக் கூடாதுங்கிறது என்னோட விருப்பம். அப்படி இருந்துட்டா, அதை என்னால தாங்கிக்க முடியாது."

"சார்! உங்க நிலை எனக்குப் புரியுது. பட், பிரச்னைன்னு வரும்போது அதை ஃபேஸ் பண்ணாம, தவிர்க்கிறதுக்காக வேறு வழிகளை நாம கையாள ஆரம்பிச்சா, அந்தப் பிரச்னை விஸ்வரூபம் எடுக்க வாய்ப்பு இருக்கு."

"சரி... என்ன பண்ணலாம்னு சொல்லுங்க?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இதைப்பற்றி இனிமே நீங்க யார் கிட்டேயும் டிஸ்கஸ் பண்ணவேண்டாம். பெல்லாரி மல்லய்யா இன்னிக்குச் சாயந்தரம் உங்களைப் பார்க்க வந்தாலும் அன்பாப் பேசி அனுப்பிடுங்க. நாளைக் காலைல மைக்கேல் எர்னஸ்ட்டையும், அல்போன்ஸையும் உங்க வீட்டுக்கு எத்தனை மணிக்கு வரச் சொல்லியிருக்கீங்க?"

"ஏழு மணிக்கு."

"வரட்டும்! அவங்க ரெண்டு பேரையும் வீட்டுக்குள்ளே உட்கார வெச்சுப் பேசுங்க. மின்மினி அந்த மைக்கேல் எர்னஸ்ட்டையும் அல்போன்ஸையும் பார்க்கட்டும். மின்மினி அல்போன்ஸைப் பார்த்ததும் அவங்களோட ரியாக்ஷன் என்னன்னு தெரிஞ்சுடும். உண்மை எது, பொய் எது என்கிற விஷயத்தை அந்த நாலு சுவர்களுக்குள்ளேயே வெச்சு முடிவு பண்ணிடுவோம்."

"நாளைக்கு நீங்களும்..."

"உங்க வீட்டுக்கு வர்றோம். நாளைக் காலை ஆறரை மணிக்கு எல்லாம் உங்களோடு உட்கார்ந்து பேசிட்டு இருப்போம்."

"ஒருவேளை, அவங்க சொல்றது உண்மையா இருந்துட்டா..?"

"பொய்யா இருந்தா எப்படி இருக்கும்னு யோசிச்சுப் பாருங்களேன் சார்... பி

பாஸிட்டிவ்!"

கேள்வி: தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோயம்புத்தூர். வட இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம் எது?

(1) மும்பை (2) ஆமதாபாத் (3) ஜாம்ஷெட்பூர்

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 23.11.09-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

-பறக்கும்...

கோவை

கோவையின் கிழக்குத் திசை கோவைப் பழமாக மாறியிருக்க, ஒரு ராட்சஸ பாலிதீன் கவருக்குள் மாட்டிக்கொண்ட தினுசில் நகரம் பனிமூட்டத்தில் இருந்தது. கார்ப்பரேஷனின் சோடியம் வேப்பர் விளக்குகள் இன்னமும் மின் சாரம் சாப்பிட்டுக்கொண்டு இருந்த அந்த அதி காலை வேளையில், விவேக்கும் விஷ்ணுவும் ஹோட்டல் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். லி◌ப்ட்டில் கீழே இறங்கும்போது விஷ்ணு "பாஸ்" என்றான்.

"சொல்லு..."

"கலெக்டர் பங்கஜ்குமாருக்கு நேத்து ராத்திரி வைகுண்ட ஏகாதசியா இருந்து இருக்கும்."

"பாவம்... அவரால ஒரு பத்து நிமிஷம்கூட நிம்மதியாகத் தூங்கியிருக்க முடியாது. பிரச்னை எப்படி எல்லாம் வருது பார்த்தியா?"



"மின்மினியைப்பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க பாஸ்?"

"மின்மினிகிட்ட ஏதோ தப்பு இருக்கப் போய்த்தான் மைக்கேல் எர்னஸ்ட்டும் அல்போன்சும் தைரியமாக் களம் இறங்கியிருக்காங்க. ஒரு கலெக்டரை எதிர்க்கிற துணிச்சல் அவங்களுக்கு இருக்குன்னா, நியாயமும் உண்மையும் அவங்க பக்கம் இருக்குன்னு அர்த்தம்."

"என்ன பாஸ்! போற போக்கைப் பார்த்தா நீங்களே மின்மினியோட கையைப் பிடிச்சு அல்போன்சுக்குத் தாரைவார்த்துட்டு, பி.பி.ஸ்ரீனிவாஸ் வாய்ஸ்ல 'எங்கிருந்தாலும் வாழ்க!'ன்னு மங்களம் பாடிடுவீங்க போலிருக்கே?"

"அப்படிப் பாடவேண்டிய சூழ்நிலை வந்தா லும் ஆச்சர்யப்படறதுக்கு இல்லை."

"பாஸ்! எனக்கென்னவோ கலெக்டரோட ஒய்ஃப் மின்மினியைத் தப்பாவே நினைக்கத் தோணலை."

"பழைய தமிழ்ப் படத்துல ஒரு பாட்டு வருமே... 'ஆறும் அது ஆழமில்லே... அது சேரும் கடலும் ஆழமில்லே... ஆழம் அது ஐயா... அது பொம்பள மனசுதாய்யா...'ன்னு. இதிகாச காலத்துல இருந்து இந்த 21-வது நூற்றாண்டு வரைக்கும் புரிஞ்சுக்க முடியாத ஒரே விஷயம், பெண்ணோட மனசுதான்டா!"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

"பாஸ்! இப்படியரு அழகான, எளிமை... அழுக்கான ஸ்டேட்மென்ட் உங்க மனசுக்குள்ள இருக்கிற விஷயம் ரூபலா மேடத்துக்குத் தெரியுமா?"-கேட்ட விஷ்ணுவை விவேக் ஒரு தீப்பார்வை பார்த்துக்கொண்டு இருக்கும்போதே செல்போன் சிணுங்கியது. எடுத்துப் பேசினான். மறுமுனையில் கலெக்டர் பங்கஜ்குமாரின் குரல்.

"மிஸ்டர் விவேக்!"

"சார்... உங்க பங்களாவுக்குத்தான் வந்துட்டு இருக்கோம்."

"இப்போ மணி ஆறேகால்..."

"ஹோட்டலைவிட்டு வெளியே வந்துட்டோம் சார். ஆறரை மணிக்குள்ளே அங்கே இருப்போம்."

"விவேக்! நான் எடுத்த இந்த முடிவு சரிதானா? மைக்கேல் எர்னஸ்ட்டையும், அல்போன்ஸையும் வீட்டுக்கு வரச் சொன்னது தப்போ... ஒருவேளை இது விஷப் பரீட்சையோன்னு என் மனசுக்குள்ளே ஒரு தேர்ட் அம்பயர் குரல் கொடுத்துட்டே இருக்கார்."

"நோ சார்! நீங்க எடுத்திருக்கிறது சரியான முடிவு... அதிரடியான முடிவும்கூட! அந்த அல்போன்ஸைப் பார்த்ததும் உங்க மனைவி காட்ற ரியாக்ஷன்தான் நமக்கு

முக்கியம். அந்த ரியாக்ஷன் ஒருவேளை உங்களுக்கு ப்ளஸ் பாயின்ட்டாக்கூட இருக்கலாம். நான் நேற்றைக்கே சொன்ன மாதிரி பிரச்னையைப் பார்த்து ஓடி ஒளியாம அதை ஒரு தடவை நேரிடையா ஃபேஸ் பண்ணிடறது பெட்டர். நானும் விஷ்ணுவும் கால்டாக்ஸியில் ஏறிட்டோம். ஆர்.எஸ்.புரம் திவான் பகதூர் ரோட்ல இருக்கோம். பத்தே நிமிஷம்... உங்க வீட்ல இருப்போம்."

விவேக்கிடம் பேசிவிட்டு செல்போனை மௌனமாக்கிக் கொண்டே திரும்பிய பங்கஜ் குமார், கையில் கப் அண்ட் சாஸ ரோடு நின்றிருந்த மின்மினியைப் பார்த்ததும் லேசான ஓர் அதிர் வுக்கு உட்பட்டு, உடனே இயல் புக்கு வந்து உதட்டுக்குப் புன்னகை யைக் கொடுத்தார்.

"என்ன மின்மினி... குளிச்சாச்சு போலிருக்கே?"

"ம்..."

"கையில் இருக்கிற காபி உனக்கா... எனக்கா?"

"எனக்குத்தான்! நீங்கதான் காபி சாப்பிட்டாச்சே?"

"ஓ..."

"என்ன ஓ! இப்ப போன்ல யார்கிட்ட பேசிட்டு இருந்தீங்க?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அது... வந்து... சென்னையில் இருந்து வந்திருக்கிற க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் மிஸ்டர் விவேக் கிட்ட."

"ஏதாவது பிரச்னையா?"

"பிரச்னையா... அப்படி ஏதும் இல்லையே!"

"பின்னே... ஏன் உங்க குரல்ல ஒரு தடுமாற்றம்? இன்னிக்கு நீங்க வழக்கத்துக்கு மாறா சீக்கிரமாவே எந்திரிச்சுட்டீங்க. என்னிக்குமே மொட்டை மாடிக்கு வராத நீங்க, இன்னிக்கு வந்து செல் போன்ல பேசிட்டு இருக்கீங்க. நீங்க பேசின பேச்சு என்னோட காதிலேயும் விழுந்தது. அதுல ஒரு வார்த்தை விஷப் பரீட்சை. அது என்ன விஷப் பரீட்சை?"

பங்கஜ்குமார் மின்மினியைப் பார்த்துக்கொண்டு மௌனம் காக்க...

"என்ன பேச்சையே காணோம்?"

"இதோ பார் மின்மினி! இது ஒரு புலனாய்வுத் துறை சம்பந்தப்பட்ட பிரச்னை.

உளவுத் துறை கொடுத்த ஒரு முக்கியமான தகவலின்அடிப் படையில், சில தகவல்களைச் சேகரிக் கிறதுக்காக சென்னையில் இருந்து மிஸ்டர் விவேக் வந்திருக்கார். இன்னும் கொஞ்ச நேரத்துல இங்கேயே வரப்போறார். நானும் அவரும் முக்கியமான ஒரு விஷயத்தைப் பத்தி டிஸ்கஸ் பண்ணும்போது பேசப் பட்ட வார்த்தைதான் விஷப் பரீட்சை."

"இப்ப நீங்க சொன்னதுதான் உண்மைன்னா, நான் சந்தோஷப்பட்டுக்கிறேன்..."

"அப்படீன்னா... நான் சொன்னதை நீ நம்பலையா?"

"நம்பற மாதிரி இல்லை. ஏன்னா... நேத்து மத்தியானத்துல இருந்தே நீங்க நார்மலா இல்லை. மனசுக்குள்ளே எதையோ வெச்சுக்கிட்டுப் பேசற மாதிரி இருக்கு. நேத்திக்கு புரந்தரதாஸர் ஹாலில் என்னோட பாட்டுக் கச்சேரி நடந்தது. நீங்களும் முன் வரிசையில் உட்கார்ந்து கச்சேரியைக் கேட்டீங்க. ஆனால், அதுல ஒரு ஈர்ப்பு இல்லை. என்னோட பார்வைக்கு நீங்க ஒரு ரோபோ மாதிரி தெரிஞ்சீங்க. என் பாட்டைக் கேட்கும்போது வழக்கமா உங்க முகத்துல பவுடர் பூசின மாதிரி ஒரு பரவசம் பரவும். நேற்றைக்கு அது உங்க கிட்டே மிஸ்ஸிங்."

பங்கஜ்குமார் பெருமூச்சு ஒன்றைவிட்டார்.

"நீ சொல்றது சரிதான் மின்மினி! நேற்றைக்கு மத்தியானத்தில் இருந்தே நான் கொஞ்சம் ரெஸ்ட்லெஸ்ஸாகத்தான் இருக்கேன். அதுக்குக் காரணம், என்னோட வேலை சம்பந்தப்பட்ட பிரச்னைகள்தான். அந்தப் பிரச்னைகளும் இன்னிக்குச் சரியா யிடும்னு நினைக்கிறேன். அதைப்பற்றிப் பேசறதுக்காகத்தான் மிஸ்டர் விவேக் வந்துட்டு இருக்கார்."- சொன்ன பங்கஜ்குமார் பேச்சை இயல்பாக மாற்றுவதற்காகக் கேட்டார்...

"பெரியவர் மல்லய்யா ஊருக்குக் கிளம் பிப் போயிட்டாரா?"

"இன்னிக்குக் காலையில் வடவள்ளி கோயில்ல நடக்கிற ஒரு கும்பாபிஷேகத்துல கலந்துட்டு, மத்தியானம் இன்டர்சிட்டியில் பெங்களூர் போய், அங்கிருந்து பெல்லாரி போறார். அவர்கிட்டேகூட நீங்க நேத்து சரியாப் பேசலையாமே?"

"உண்மைதான்! நேத்து சாயந்திரம் அவர் என்னை வந்து ஆபீஸில் பார்த்தப்ப விசிட்டர்ஸ் யார் யாரோ வந்துட்டு இருந்தாங்க. ஒரு ரெண்டு நிமிஷம்கூட ஒழுங்காப் பேச முடியலை."

"நமக்கு எவ்வளவோ பிரச்னைகள் இருக்கலாம். அதையெல்லாம் தள்ளிவெச்சுட்டு ரெண்டு வார்த்தை நல்லபடியாகப் பேசியிருக்கலாம். நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்க அவர்தான் முக்கிய காரணகர்த்தாவா இருந்தார் என்கிற உண்மையை நாம மறந்துடக் கூடாது."

பங்கஜ்குமார் மேற்கொண்டு ஏதோ பேச முயல... செல்போன் அழைத்தது. எடுத்துப்

பேச, மறுமுனையில் செக்யூரிட்டியின் குரல்.

"சார்! சென்னை க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் மிஸ்டர் விவேக்கும் அவரோட உதவியாளரும் வந்திருக்காங்க. உள்ளே ரிசப்ஷன்ல வெயிட் பண்றாங்க."

"வர்றேன்..." - செல்போனை அணைத்தவர், மின்மினியை ஏறிட்டார்.

"அவங்க வந்துட்டாங்க..."

"இன்னிக்காவது உங்க பிரச்னைகள் எல்லாம் முடிஞ்சு பழைய பங்கஜ்குமாரா மாறி நார்மலுக்கு வந்துடுவீங்களா?"

"அது 7 மணிக்கு மேல தெரியும்."

"அது என்ன 7 மணி கணக்கு?"

"எந்த ஒரு பிரச்னைக்கும் டெட்லைன்னு ஒண்ணு இருக்கும். இந்தப் பிரச்னைக்கும் அப்படியரு டெட்லைன் இருக்கு. அது இன்னும் அரை மணி நேரத்தில் வரும். இப்போ மணி ஆறரை."

பங்கஜ்குமார் சொல்லிவிட்டுப் படிகளில் இறங்கிப் போக... மின்மினி அவரையே கலவர மாகப் பார்த்தாள். மனசுக்குள் இருந்து ஒரு பயக் கிளி கத்தியது.

LAVAN JOY@TAMILTORRENTS.COM

'மின்மினி! உன்னோட அவர் சரியில்லை. ஜாக்கிரதை... ஜாக்கிரதை... ஜாக்கிரதை!'

நியூயார்க்

போலீஸ் அதிகாரிகளான ஸ்மித் தையும் தாம்ஸனையும் எமிலி பார்த்த பார்வையில் அனல் பறந்து, கோபத்தில் குரல் வெடித்தது.

"என் மகள் சில்வியா எந்தத் தவறும் செய்யாத பெண். அவளுடைய அறையை எதற்காகச் சோதனை போட வேண்டும்? இதற்கு நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்!"



தாம்ஸன் சின்னதாகப் புன்னகைத் தார். "நீங்கள் இப்படிச் சொல்லி எங் கள் பணிக்குத் தடை போட முடியாது. அப்படித் தடை போட்டால், உங்கள் எல்லோரையும் கைது பண்ண வேண்டி இருக்கும்."

ஃப்ளோரா குறுக்கிட்டாள்... "அந்த அதிகப்படியான வேலை உங்களுக்கு வேண்டாம். நீங்கள் சில்வியாவின் அறையைப் பார்க்கலாம், மிஸ்டர் தாம்ஸன்!"

"ஒரு நல்ல லாயருக்கு இதுதான் அழகு!

சில்வியாவின் அறை எது? நீங்கள் சொல்லும் அந்த மினி மியூஸியம் எங்கே இருக்கிறது என்று காட்டுகிறீர் களா?"

"வாருங்கள்!" - சொன்ன ஃப்ளோரா வேகவேகமாக வீட்டின் பின்பக்கத்தை நோக்கிப் போனாள். அவளுக்கு இணை யாக நடந்து சென்ற விஜேஷ் கேட் டான்...

"மிஸ் ஃப்ளோரா! இது என்ன புது விவகாரம்? இந்த வீட்டுக்குள் ஒரு மினி மியூஸியம் இருக்கும் விஷயத்தை நீங்கள் ஏன் என்னிடம் சொல்ல வில்லை?"

"மிஸ்டர் விஜேஷ்! இது ஒரு அற்ப விஷயம். பழங்காலப் பொருட்களையும், அரிய வகைத் தாவரங்களையும், பூச்சி வகைகளையும் ஒரு ஹாபியாக நினைத்து சில்வியா சேகரித்து வந்தது எனக்குத் தெரியும். இந்த ஃபேமிலிக்கு வேண்டாதவர்கள் யாரோ இதைப் பூதாகாரமாக்கி போலீஸ் வரைக்கும் கொண்டுபோய் இருக்கிறார்கள். நீங்கள் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர்கள் மியூஸியம் என்று சொல்லும் அறையை நீங்களும் பார்க்கத் தானே போகிறீர்கள்! அப்போது நீங்களே உண்மையைப் புரிந்துகொள்வீர்கள்."
"இந்த வீட்டில் இவ்வளவு அறைகள் இருக்கும்போது, பூமிக்கு அடியில் எதற்காக ஒரு அறை?"

"இந்த வீட்டைக் கட்டியது ஆல்பர்ட்ஸன் இல்லை. எட்வர்ட் ஃப்ராங்க்ளின் என்ற சரித்திரப் பேராசிரியர் கட்டிய வீடு இது. அவர் ஆர்க்கியாலஜி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளையும் செய்து வந்தார். அது சம்பந்தமான சில ரகசிய தஸ்தாவேஜ்களைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்காகப் பூமிக்கு அடியில் ஓர் அறையைக் கட்டினார். அவர் இறந்த பிறகு, இந்த வீடு விற்பனைக்கு வந்தது. ஆல்பர்ட்ஸனுக்கு நான்தான் லீகல் அட்வைஸராக இருந்து, இந்த வீட்டை வாங்கிக் கொடுத்தேன். நீண்ட நாட்கள் வரை அந்த அறையை யாருமே பயன்படுத்தவில்லை. பிறகுதான் சில்வியா அதை எடுத்துக்கொண்டு தன் ஹாபியான ரேர் ஸ்பெசிமென் கலெக்ஷனை ஆரம்பித்தாள். அதை யாரோ ஸ்மெல் செய்து, அதற்கு மியூஸியம் முலாம் பூசி, போலீஸ் வரைக்கும் கொண்டுபோய் இருக்கிறார்கள். அந்தத் திரை மறைவு வேலைக்காரர்கள்தான் யார் என்று எனக்குத் தெரியவில்லை."

LAVASTLOVESTAMILTORRENTS.COM

"ஃப்ளோரா! நீங்கள் கவலைப்படாதீர்கள். அது எல்லாமே அந்த 'காமாட்சி' என்கிற பெண்ணின் வேலையாகத்தான் இருக்கும். யார் என்ன சொன்னாலும் சரி... எந்தப் பிரச் னையை எந்த ரூபத்தில் கொண்டுவந்தாலும் சரி... நான் இந்த வீட்டை வாங்கப்போகும் முடிவில் இருந்து பின்வாங்கப்போவது இல்லை. நீங்கள் முதலில் அந்த இரண்டு போலீஸ் அதிகாரிகளுக்கும் சில்வியாவின் அறையைக் காட்டுங்கள். அவர்கள் பார்த்துவிட்டுப் போகட்டும்."

"இதோ!" என்ற ஃப்ளோரா, வீட்டின் பின் பக்கம் மாடிப் படிகளுக்குக் கீழே இருந்த அந்தக் குட்டையான மரக் கதவுக்கு முன்பாகப் போய் நின்று, அதில் இருந்த மேக்னடிக் பூட்டுக்கு விடுதலை கொடுத்துத் தள்ளினாள். அது சிரமமாகப்

பின்னோக்கிப் போக... உள்ளே சதுரமாக ஓர் இருட்டு தெரிந்தது. ஃப்ளோரா கையை நுழைத்து ஸ்விட்சைத் தட்ட... மங்கலான வெளிச்சம் உற்பத்தியாகி, 'ஷி' போட்டுக்கொண்டு போன மரத்தாலான படிகள் தெரிந்தன.

ஸ்மித் உள்ளே குனிந்து பார்த்துவிட்டு ஃப்ளோராவிடம், "முதலில் நீங்கள் இறங்குங்கள். நாங்கள் உங்களைப் பின் தொடர்கிறோம்."

ஃப்ளோரா இறங்கினாள். அவளைத் தொடர்ந்து தாம்ஸன், ஸ்மித் இறங்க... பிறகு விஜேஷ், ஆல்பர்ட்ஸன், எமிலி என்று வரிசையாக உள்ளே போனார்கள்.

பத்துக்குப் பதினைந்து என்ற அளவிலான அந்த அறை நூலாம்படைகளாலும் ஒட்டடையாலும் நிரம்பி, ஏதோ ஓர் அறைகுறை லேப் மாதிரி தெரிந்தது. சுவர் அலமாரிகளில் சின்னச் சின்னதாக நிறைய பாட்டில்கள். அதில் நிறம் நிறமாய் அசையாத திரவங்கள். அந்தத் திரவங்கள் ஒவ்வொன்றிலும் எதுவோ உறைந்துபோய் மிதந்தன.

தாம்ஸன் அங்கே இருந்த ஒரு ஸ்டிக்கை எடுத்து ஒட்டடைகளை விலக்க... உள்ளங்கை சைஸில் பெரிது பெரிதாக இருந்த சிலந்திகள் தன் குடும்ப உறுப்பினர்களோடு தலைதெறிக்க ஓட்டம் பிடித்து, மர ஷெல்ஃப்களுக்குப் பின்னால் போய் ஒண்டிக்கொண்டன.

ஸ்மித் ஒரு பாட்டிலை எடுத்துப் பார்த்தார். பாட்டிலின் மேல் ஒட்டப்பட்டு இருந்த லேபிளில் டைப் செய்யப்பட்ட எழுத்துக்களைப் படித்தார்.

DAWNJOY@INDIATORRENTS.COM

ஷிசிஸிணிகீ சிளிஙிஸிகி

அவருக்குப் பின்னால் நின்றிருந்த ஃப்ளோரா சொன்னாள், "சார்! ஒரு மண் புழு மாதிரி தெரிகிற இது ஒரு பாம்பின் வகை. இரண்டு அங்குல நீளமே இருக்கும் இந்த வகை 'ஸ்க்ரூ கோப்ராக்'கள் அமே சான் காடுகளில் அரிதாகக் காணப்படும். இந்தச் சிறிய பாம்பு விஷமற்றதாக இருந் தாலும் ஆபத்தானது. இதன் முக்கிய உணவே ரத்தம் என்பதால், ஒரு மனித னையோ விலங்கையோ பார்த்துவிட்டால், எகிறிப் போய் உடம்பில் ஒட்டிக்கொண்டு ஒரு ஸ்க்ரூவைப்போல் உள்ளே துளைத்துக் கொண்டு போய், ரத்த நாளங்களில் நீச்சல் அடித்துவிட்டு, உடம்பின் எந்தப் பக்கம் வழி கிடைக்கிறதோ அந்த வழியாக வெளியேறும். அது வெளியேறும் வழி சில நேரம் இருதயமாகவும் இருக்கலாம்."

ஸ்மித்தின் அகலமான நெற்றி உடனடி யாக வியர்த்தது. அதே வேகத்தில், தொண்டையில் இருந்த ஈரமும் காய்ந்து போயிற்று.

ஃப்ளோரா புன்னகைத்தாள்.

"என்ன சார்... பயந்துவிட்டீர்களா? இப்படி இந்த அறையில் இருக்கிற எல்லா ஸ்பெசிமென்களும் ஏதாவது ஒரு வகையில் விசித்திரமாகவும் அபூர்வமாகவும்

இருக் கும். மற்றபடி, நீங்கள் நினைக்கிற அளவுக் குச் சட்ட விரோதமானது இல்லை. மேலும்..."

ஃப்ளோரா பேசிக்கொண்டு இருந்தபோதே, அந்தச் சத்தம் கேட்டது. மரப் படிகளில் யாரோ இறங்கி வரும் சத்தம்.

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை வாஷிங்டனில் எந்த இடத்தில் அமைந்துள்ளது..?

(1) லிபர்ட்டி அவென்யூ (2) கோர்ட்யார்ட் அவென்யூ (3) பென்ஸில்வேனியா அவென்யூ

AVCRIME செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 30.11.09-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

-பறக்கும்...

● இனி, மின்மினி

◉ நியூயார்க்

மாடிப் படிகளில் யாரோ இறங்கி வரும் சத்தத்தைக் கேட்டதும்,ஸ்மித்தும் தாம்ஸனும் சரேலென்று தலையை உயர்த்தி ஃப்ளோராவைப்பார்த்தார்கள்.

"இந்த வீட்டில் வேறு யாராவது இருக்கிறார்களா?"
"இல்லையே!"

"பின் வருவது யார்?"

"எனக்கும் அதுதான் குழப்பமாக இருக்கிறது. இருங்கள்... நான் பார்த்துவிட்டு வருகிறேன்!"

"வேண்டாம்... நீங்கள் போக வேண்டாம். வருகிற நபர் இங்கேயே வரட்டும்."

ஆல்பர்ட்ஸன் குறுக்கிட்டார், "எனக்குத் தெரிந்த நபர் யாராவது வீட்டுக்கு வெளியே நின்றிருக்கும் என் காரைப் பார்த்துவிட்டு உள்ளே வந்து இருக்கலாம். நான் போய்ப் பார்க்கட்டுமா? தவிர, எனக்கு உள்ள இன்னொரு சந்தேகம் என்னவென்றால்..."

LAVAN_JOY@KAMILTORRENTS.COM

தாம்ஸன், ஆல்பர்ட்ஸனைக் கையமர்த்திவிட்டு ஏதோ சொல்ல முயன்ற விநாடி, சட்டென்று - மரப் படிகளில் கேட்டுக்கொண்டு இருந்த அந்தக் காலடி ஓசை நின்றுபோயிற்று.

10 விநாடி எல்லோரும் மௌனம் காத்தார்கள். காலடி ஓசை மறுபடியும் கேட்காமல்போகவே, தாம்ஸன் அந்த அறையைவிட்டு வெளியே வந்து, மரத்தால் ஆன படிகளை நோக்கி வேகமாகப் போய் பார்வையை உயர்த்தினார்.

வெறுமை. தாம்ஸன் குரல் கொடுத்தார்...

"படிகளில் யாரும் இல்லை. வந்த நபர் திரும்பிப் போயிருக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் உள்ளேயே இருங்கள். நான் வெளியே போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்..."

"பத்திரம்! வந்த நபர் ஆபத்தான பேர்வழியாகக்கூட இருக்கலாம், சார்!" என்றார் ஸ்மித்.

"அப்படி அவர் ஆபத்தான பேர்வழியாக இருந்தால், அதைச் சமாளிப்பது எப்படி என்று என் பிஸ்டலுக்குத் தெரியும்!" - சொன்ன தாம்ஸன், படிகளில் வேகமாகத் தாவி ஏறி, வெளியே வந்தார். வீட்டின் பின்பக்கம் பார்வைக்குக் கிடைத்தது. யாரும் இல்லை.

ஓட்டம் கலந்த நடையோடு வீட்டின் முன்பக்கம் பாய்ந்து வந்து நின்றவர், தன் நீல நிற விழிகளைச் சுழற்றினார். கேட்டுக்குப் பக்கத்தில் படுத்திருந்த நாய் ப்ளாக்கி மட்டும் பார்வைக்குச் சிக்கியது. கேட் வரைக்கும் நிதானமாக நடந்து போய் தேடலில் ஐந்து நிமிடங்களைச் செலவிட்டவர், யாரும் பார்வைக்குத் தட்டுப்படாமல் போகவே, மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்து பூமிக்கு அடியில் இருந்த அறைக்குப் போனார். வேண்டாத நிசப்தத்தோடு எல்லோரும் காத்திருந்தார்கள்.

LAVANJOY@YAHOO.COM

ஆல்பர்ட்ஸன் கேட்டார்... "யாரையாவது பார்த்தீர்களா?"

"இல்லை."

"அப்படி யாராவது வந்திருந்தால்தானே நீங்கள் பார்த்து இருக்க முடியும்?"

"மரப் படிகளில் யாரோ இறங்கி வருவதுபோன்ற காலடி ஓசையை நீங்களும்தானே கேட்டீர்கள்?"

"அது மனிதக் காலடி ஓசை இல்லையென்று இப்போதுதானே தெரிகிறது!"

"என்னது... அது மனிதக் காலடி ஓசை இல்லையா?"

"இல்லை."

"பின்னே?"

"இந்த அறையில் நான்கைந்து பெரிய சைஸ் பெருச்சாளிகள் உள்ளன. நாம்

திடீரென்று உள்ளே வந்ததால், அவை மிரண்டு இடம் பெயர்ந்தபோது எழுந்த சத்தம்தான் அது!"

"உங்களுக்குத் தெரிந்த நபர் யாராவது வந்து இருக்கலாம் என்று நீங்கள்தானே சொன்னீர்கள், மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்?"

"சொன்னேன். அதற்குப் பிறகுதான் எனக்கு இப்படி ஒரு சந்தேகம் வந்தது. இதைச் சொல்வதற்காக நான் வாயைத் திறந்தபோது, நீங்கள் என்னைக் கையமர்த்திச்சொல்லவிடாமல் செய்துவிட்டீர்கள். அப்படியே நான் சொல்லியிருந்தாலும், அதை நீங்கள் நம்பியிருக்கப் போவது இல்லை."

"உங்கள் சந்தேகத்தில் உண்மை இல்லை. நாம் கேட்டது பெருச்சாளிகளின் நடமாட்டம் இல்லை. அது நிச்சயமாக மனிதக் காலடி ஓசைதான். ஸ்மித், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"சார்... நீங்கள் சொல்வது சரிதான். பெருச் சாளிகள் ஓடும். இப்படியா... ஒரு மனிதன் நடக்கிற மாதிரி ஒவ்வொரு படியாக இறங்கும்?"

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த விஜேஷ், தாம்ஸனை ஏறிட்டு, "மிஸ்டர் ஆல்பர்ட் ஸன் சொன்ன கருத்துதான் உண்மையானதாக இருக்க முடியும் என்று நினைக்கிறேன்" என்றான்.

LAVAN JOY@TAMILTORRENTS.COM

"எதைவைத்து அப்படிச் சொல்கிறீர்கள்?"

"முக்கியமான காரணம், வெளியிலிருந்து யாராவது ஒரு நபர் வீட்டுக்குள் வந்து இருந்தால், வெளியே காவலுக்கு இருக்கும் நாய் ப்ளாக்கி கண்டிப்பாகக் குரைத்து இருக்கும். ஒருவேளை, நாய்க்குப் பழக்கமான நபர் வந்து இருந்தால், நாய் குரைக்காமல் இருந்திருக்கலாமே என்று நீங்கள் கேட்கலாம். உங்கள் வாதப்படியே வைத்துக்கொண்டாலும், வந்த நபர் மரப்படிகளில் இறங்கிவிட்டுப் பின்பு திரும்பிப் போக வேண்டிய அவசியம் இல்லை. தவிர, இந்தக் குறுகிய கால அவகாசத்துக்குள் யாரும் இந்த இடத்தைவிட்டு வெளியேறி இருக்க முடியாது."

தாம்ஸன் தன் தோள்களைக் குறுக்கி, இரண்டு கைகளையும் விரித்தார். "ஓ.கே! அது 'மனிதனா, பெருச்சாளியா?' என்கிற விவாதத்துக்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்துவிட்டு, நாங்கள் எந்த வேலைக்காக வந்தோமோ, அதை மட்டும் இப்போது பார்க்கிறோம். நேஷனல் அக்வேரியத்தில் காணாமல் போன விலை உயர்ந்த அபூர்வ மீன்களான 'டைமண்ட் ஃபிஷ்' இந்த மியூஸியத்தில் இருக்கின்றனவா, இல்லையா என்று பார்த்துவிட்டு, இருந்தால் சட்டப்படி நடவடிக்கைஎடுப்போம். இல்லாவிட்டால், ஒரு 'ஸாரி' சொல்லிவிட்டுப் போய்க்கொண்டே இருப்போம்."

ஃப்ளோரா அவர்களுக்குப் பக்கத்தில் வந்தாள். "இந்த அறையில் நூற்றுக்கணக்கான சின்னச் சின்ன பாட்டில்கள் உள்ளன. நீங்கள் அந்த பாட்டில்களில் உள்ள

ஸ்பெசிமென்களை நிதானமாகப் பார்க்கலாம். எனக்கு இங்கே உள்ள ஒவ்வொரு ஸ்பெசிமென்பற்றியும் தெரியும். இந்த அறைக்குள் எதைப் புதிதாகக்கொண்டு வந்தாலும் சரி, சில்வியா எனக்கு போன் செய்து சொல்லிவிடுவாள்."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், சில்வியா உங்க ளுக்கு ஒரு நல்ல தோழியாக இருந்திருப்பாள்போல் இருக்கிறதே?"

"ஆமாம்! என்னோடு எல்லா விஷயங்களையும் பகிர்ந்துகொள்வாள்!"

"சில்வியாவுக்கு எப்படி மனநலம் பாதிக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா?"

"நீங்கள் கேட்ட இந்தக் கேள்விக்கு டாக்டர்களாலேயே பதில் சொல்ல முடியாதபோது, என்னால் மட்டும் எப்படி முடியும்?"

"சரி, ஸ்பெசிமென்களைப் பார்க்கலாமா?"

"வாருங்கள்!" - சொல்லிவிட்டு ஃப்ளோரா முன்னே நடக்க, விஜேஷ் அவளோடுஇணைந்துகொண்டான். தாம்ஸனும் ஸ்மித்தும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

ஆல்பர்ட்ஸனும் எமிலியும் அங்கிருந்த ஒரு பழைய சோபாவில் சாய்ந்துகொண்டார்கள்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இரண்டு நிமிட நேரம் கழித்து எமிலிசுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, குரலைத் தாழ்த்தித் தன் கணவர் ஆல்பர்ட்ஸனிடம் கேட்டாள், "நம் வீட்டில்தான் பெருச்சாளி இல்லையே? இருப்பதாக ஏன் போலீஸ் அதிகாரிகளிடம் பொய் சொன்னீர்கள்?"

அவரும் குரலைத் தாழ்த்தி, "எனக்கு வேறு வழி தெரியவில்லை. நிலைமையைச் சமாளிக்கப் பொய் சொல்லிவிட்டேன்" என்றார்.

"அப்படியானால் மரப் படிகளில் கேட்ட அந்தக் காலடிச் சத்தம்?"

"யாரோ வந்துவிட்டுப் போயிருக்கிறார் கள்!"

எமிலியின் முகத்தில் திகில். "யார்?"

மனைவியைப் பயத்தோடு பார்த்தார் ஆல்பர்ட்ஸன்.

"என் மனதிலும் அதே கேள்விதான்!"

ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, அந்த அறையில் இருந்த எல்லா ஸ்பெசிமென் களையும் பார்த்துவிட்டு நான்கு பேரும் திரும்பினார்கள்.

ஆல்பர்ட்ஸனை நெருங்கி, "ஸாரி மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்! நேஷனல் அக்வேரியம்

கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் இந்த வீட்டைச் சோதனை போட வந்தோம். நாங்கள் எதிர்பார்த்தது எதுவும் கிடைக்கவில்லை. எனவே புறப்படுகிறோம். உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக வருந்துகிறோம்" என்றார்கள் தாம்ஸனும் ஸ்மித்தும்.

"எங்கள் மகள் சில்வியா மேல் உங்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லையே?"

"இல்லை!"

"இனியும் சோதனை செய்ய வருவீர்களா?"

"அதற்கு அவசியம் இருக்காது. ஏனென்றால், நாங்கள் பார்த்த அளவுக்கு இது ஒரு முழுமையான மியூஸியம் கிடையாது. நீங்கள் ஆரம்பத்தில் சொன்னதுபோல் ரேர் ஸ்பெசிமென்களைச் சேகரிக்கும் ஹாபி உங்கள் மகளிடம் இருந்திருக்கிறது. நேஷனல் அக்வேரியத்தில் காணாமல்போன எந்த ஓர் அரிய உயிரினமும் இங்கே இல்லை. நாங்கள் வருகிறோம்!"

எல்லோரிடமும் கை குலுக்கிவிட்டுப் புறப்பட்டார்கள் தாம்ஸனும் ஸ்மித்தும். அவர்களின் தலை மறைந்ததும், ஃப்ளோரா உஷ்ணமான பெருமூச்சுஒன்றை வெளியேற்றினாள்.

"இப்படி ஒரு பிரச்னை வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

விஜேஷ் சிரித்தான். "இது ஒரு பிரச்னையே இல்லை. போலீஸார் தங்களுடைய கடமையைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள்... அவ்வளவுதான்!"

"நீங்கள் வீட்டை வாங்க வந்த நேரத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்காக நாங்கள் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் ஏதும் தப்பாக நினைத்துக்கொள்ளவில்லையே?" - எமிலி உடைந்த குரலில் கேட்க, விஜேஷ் அவள் கைகளைப் பற்றிக்கொண்டான்.

"நோ... நோ! இதில் தப்பாக நினைக்க ஒன்றுமே இல்லை. இன்னும் சொல்லப் போனால் உங்கள் மகள் சில்வியாவின் 'ரேர் ஸ்பெசிமென் காலரி'யைப் பார்த்த பின்புதான் இந்த வீட்டை வாங்கியே தீருவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். உங்களுடைய விலையைச் சொல்லுங்கள். பேசி முடித்துவிடுவோம்!"

ஆல்பர்ட்ஸன் எழுந்து விஜேஷைத் தழுவிக்கொண்டார். "மிஸ்டர் விஜேஷ்! உங்களுடைய பேச்சு எனக்கும் என் மனைவிக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. இந்த வீட்டுக்கு என்ன விலை என்பது எங்களுடைய லாயர் ஃப்ளோராவுக்குத் தெரியும். நீங்களும் அவளும் கலந்து பேசி விலையை முடிவு செய்யுங்கள். விலை முடிவானதும், மற்ற விஷயங் களைப் பேசிக்கொள்வோம்."

ஃப்ளோரா இடைமறித்தாள், "மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்!

விஜேசுக்கு வீடுபிடித்துவிட்டது. விலையைப்பற்றி உடனே பேச வேண்டாம். இன்று முழுவதும் அவர் ஹோட்டலில் தங்கி ஓய்வுஎடுக்கட் டும். நாளை காலையில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து பேசி, விலையை முடிவு செய்வோம்."



"விஜேஷ் எங்கே தங்கப்போகிறார்?"

"ஜமைக்காவில் உள்ள 'ஹாவேர்ட் ஜான்சன் இன்' ஹோட்டலில். நானே அவரைக் காரில் கொண்டுபோய் டிராப் செய்துவிட்டு வந்துவிடுகிறேன்!"

சரியாக அரை மணி நேரப் பயணத்தில் ஹோட்டல் 'ஹாவேர்ட் ஜான்சன் இன்' வந்தது. தனது சிறிய சூட்கேஸை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான் விஜேஷ்.

"தேங்க்யூ மிஸ் ஃப்ளோரா! நாம் இனி நாளை காலையில்தான் சந்திக்கப்போகிறோம், இல்லையா?"

"ஆமாம். பிட்வின் டென் அண்ட் லெவன்... நீங்கள் தயாராக இருங்கள். நானே வந்து உங்களை பிக்-அப் செய்துகொள்கிறேன்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"தேங்க்யூ!"

"வெல்கம்..." - அழகாய்ச் சிரித்து, கையை அசைத்துவிட்டு ஃப்ளோரா காரை நகர்த்திக்கொண்டு போய்விட, விஜேஷ் கார் மறையும் வரை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, ஹோட்டலின் வரவேற்பறைக்குள் நுழைந்தான். லஸ்தர் விளக்குகளுக்குக் கீழே ஒளி வெள்ளமாகக் காட்சியளித்தது அந்த வரவேற்பறை.

உறுத்தாத லிப்ஸ்டிக் பூசிய உதடுகளில் ஒரு புன்னகையை நிரந்தரமாக உட்காரவைத்திருந்த அந்த ரிசப்ஷனிஸ்ட்டை நோக்கிப் போனான் விஜேஷ். அவள் தன் 35 எம்.எம். புன்னகையை 70 எம்.எம்-முக்கு விரித்து, "யெஸ்" என்றாள்.

"ஐ'ம் விஜேஷ்... பாரீஸில் இருந்து வருகிறேன்!" என்று பேச ஆரம்பித்தவனை இடைமறித்தாள் அவள்... "நீங்கள்... மிஸ்டர் விஜேஷ்?"

"ஆமாம்!"

"உங்களைப் பார்க்க ஒரு மணி நேரமாக ஒருவர் காத்துக்கொண்டு இருக்கிறார்."

"என்னையா?"

"ஆமாம்! அதோ, அந்த சோபாவில்..."

விஜேஷ் திரும்பிப் பார்த்தான். கையில் நாளிதழைப் பிரித்துவைத்துக்கொண்டு, குளிர்க் கண்ணாடி தரித்த அந்த இளைஞன் தெரிந்தான். விஜேஷ் அவனை நோக்கிப் போக, அவன் பேப் பரை மடித்துவைத்துவிட்டு எழுந்தான். சிரித்தபடி கை நீட்டினான்.

"ஹலோ, விஜேஷ்..."

விஜேஷ் குழப்பமாக அவனைப் பார்த்து, "நீங்கள்..?" என்றான்.

"நான் காமாட்சி... காஞ்சிபுரம் காமாட்சி!"

கோவை

பங்கஜ்குமார் மாடியில் இருந்து கீழே இறங்கி வர, விவேக்கும் விஷ்ணுவும் பாலிவினைல் நாற்காலிகளில் சாய்ந்திருந்தார்கள். வரவழைத்துக்கொண்ட கட்டாயப் புன்னகையோடு நெருங்கினார். "குட்மார்னிங் போத் ஆ஼ப் யூ!"

பதிலுக்கு குட்மார்னிங் சொன்ன விவேக், விஷ்ணு இருவருடனும் கை குலுக்கிக்கொண் டார்.

விவேக் சொன்னான், "ஸாரி சார், இன்னும் கொஞ்சம் எர்லியரா வந்து இருக்கணும். எப்படியோ லேட்டாயிடுச்சு!"LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நோ பிராப்ளம் மிஸ்டர் விவேக்! இப்போ டைம் சிக்ஸ் தர்ட்டிதானே? பை த பை... உங்களுக்குக் காபி கொண்டுவரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம் சார்" என்ற விவேக் குரலைத் தாழ்த்தி, சுற்றும்முற்றும் பார்த்தபடி சொன்னான், "சார், நீங்க கொஞ்சம் ரெஸ்ட்லெஸ்ஸா தெரியறீங்க. நெற்றியில் வேர்வை. கொஞ்சம் இயல்பாக இருக்க லாமே?"

"முடியலையே! ஐ குட் நாட் கன்ட்ரோல் மைசெல்஼ப். ஏழு மணியாக இன்னும் இருபத்தஞ்சு நிமிஷம்தான் இருக்கு!"

"அவங்க வரட்டும் சார்! பிரச்னையை ஃபேஸ் பண்ணலாம். உங்க மனைவி அந்த ரெண்டு பேரை யும் தெரியாதுன்னு சொல்லிட்டாப் போதும்... அதுக்கு அப்புறம் பந்து நம்ம கால்களுக்கு வந்துடும். உதைச்சு விளையாடிட வேண்டியதுதான்!"

விவேக் பங்கஜ்குமாருக்குத் தைரியம் சொல்லிக்கொண்டு இருக்க, நேரம் கரைந்து, ஹாலில் இருந்த சுவர்க் கடிகாரம் 6:55 என்று எலெக்ட்ரானிக் எண்களில் சிவப்பாக ஒளிர்ந்தது.

பங்கஜ்குமார் நாற்காலியின் நுனிக்கு வருவதும், பிறகு பின்னுக்குச் சாய்வதுமாக இருந்தார். முகம் எண்ணெய் பூசிய தினுசில் வியர்த்துப் போயிருந்தது.

6.57 என்று எலெக்ட்ரானிக் கடிகாரம் ஒளிர்ந்த அதே விநாடி -

பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்குள் அந்த வெள்ளை நிற அம்பாஸடர் நுழைந்து, போர்டி கோவுக்குள் வந்து நின்றது.

காரின் கதவைத் திறந்துகொண்டு இறங்கிய அசிஸ்டென்ட் போலீஸ் கமிஷனர் நம்பெருமாள், பங்கஜ்குமாரை நோக்கி வந்து ஒரு சல்யூட்டோடு நின்றார்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ், சார்! ஒரு சின்ன க்ளாரிஃபிகேஷன்!"

"வாட் அபௌட்?"

"உங்களுக்கு மைக்கேல் எர்னஸ்ட் என்கிற நபரைத் தெரியுமா, சார்?"

பங்கஜ்குமாரின் உடம்புக்குள் ஏகப்பட்ட இடங் களில் பாம் ப்ளாஸ்ட்கள் நடந்துகொண்டு இருந் தாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல் முகத்தை இயல்பாக வைத்துக்கொண்டு கேட்டார், "எதுக்காக இந்த என்கொயரி?"

"அது வந்து சார்... நேற்றைக்கு ராத்திரி அந்த மைக்கேல் எர்னஸ்ட் என்கிற நபர் அவரோட வீட்டில் வைத்தே படுகொலை செய்யப்பட்டு இருக் கார். ஸ்பாட்டுக்குப் போன இன்ஸ்பெக்டர், மைக் கேல் எர்னஸ்ட்டின் டயரியை எடுத்துப் புரட்டிப் பார்த்தபோது, ஒரு பக்கத்தில் உங்களுடைய பர்சனல் செல்போன் நம்பரும், அரசு உயர்அதிகாரி களுக்கு மட்டுமே தெரிந்த ஹாட்லைன் டெலிபோன் நம்பரும், பர்சனல் ஃபேக்ஸ் நம்பரும் சிவப்பு ஸ்கெட்ச் பேனாவால் கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டு இருந்தது சார். அதான்..."

LAVANYATAMILNOVELS.COM

அசிஸ்டென்ட் போலீஸ் கமிஷனர் நம்பெருமாள் பேசிக்கொண்டே போக... விஷ்ணு, விவேக்கின் காதுக்குத் தன் உதட்டைக் கொடுத்தான்.

"பாஸ்..."

"என்னடா?"

"உங்களுக்கும் எனக்கும் சனிப் பெயர்ச்சி வேலை செய்ய ஆரம்பிச்சுடுச்சு!"

கேள்வி: அமெரிக்காவின் 'ட்வின் டவர்ஸ்' எனப்படும் இரட்டைக் கோபுரம் 2001-ம் வருஷம் செப்டம்பர் 11-ம் தேதி தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது. அதன் உயரம் எத்தனை அடி?

(அ) 1368 அடி (ஆ) 1402 அடி (இ) 1770 அடி

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடை (எத்தனை அடி) எண்ணையும் டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட் டையும் பளிச்சென்று ஐந்தே ஐந்து வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 7.12.09-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

-பறக்கும்

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ராஜேஷ்குமார், ஓவியங்கள்: அரஸ், ஸ்யாம்

கோவை

அசிஸ்டென்ட் போலீஸ் கமிஷனர் நம்பெருமாள் சொன்னதைக் கேட்டு பங்கஜ்-குமார் உள்ளுக்குள் இடிந்துபோய், என்ன பேசுவது என்று திகைக்க... விவேக் அந்தத் தர்மசங்கடமான விநாடிகளைத் தத்து எடுத்துக்கொண்டு புன்னகைத்தான்.

"கொலை செய்யப்பட்ட நபரின் டைரியில் ஒரு மாவட்ட கலெக்டரின் செல்போன் நம்பரும் ஃபேக்ஸ் நம்பரும் இருந்தா, உடனே இவ்வளவு காலையில் வந்து விசாரணை பண்ணணுமா என்ன?"

நம்பெருமாள் தன் காக்கி யூனிஃபார்முக்குள் பவ்யமானார். "ஸாரி சார்! இது விசாரணை இல்லை. கொலை நடந்த இடத்தில் வேற எந்தத் தடயமும் கிடைக்கலை. ஒரு டைரி மட்டும் கிடைச்சுது. அந்த டைரியில்கூட எதுவும் இல்லை. எல்லாப் பக்கங்களும் காலியா இருந்தது. ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் செல்போன் நம்பரும், டெலிபோன் நம்பரும், ஃபேக்ஸ் நம்பரும் எழுதப்பட்டு இருந்தது. விசாரணை பண்ணினபோது கலெக்டரோட எண்கள்னு தெரிஞ்சுது. அரசு உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே தெரிஞ்ச இந்த எண்கள், ஒரு சாதாரண நபருக்கு எப்படித் தெரிய வந்ததுன்னு குழப்பம். அதைத் தெளிவுபடுத்திக்கத்தான் உடனே புறப்பட்டு வந்தேன். மற்றபடி இது இலாகாபூர்வமான என்கொயரி கிடையாது சார்!"

"கொலை செய்யப்பட்ட நபரோட பேர் என்னன்னு சொன்னீங்க?"

"மைக்கேல் எர்னஸ்ட்."

"என்ன தொழில்?"

"டவுன்ஹால் பகுதியில் பீஃப் பிரியாணி ஹோட்டல் நடத்திட்டு வந்திருக்கார். 65 வயசு இருக்கலாம்."

நம்பெருமாள் சொல்ல... விவேக் பங்கஜ்குமாரை ஏறிட்டான். "சார், இவர் சொல்கிற அடையாளங்களில் உங்களுக்கு யாரையாவது தெரியுமா?"

பங்கஜ்குமாரின் தொண்டைக் குழி ஒரு சின்ன அவஸ்தையில் துடித்து, அந்தத் துடிப்பு 'தெ... தெ... தெரியாது' என்ற வார்த்தையாக வெளிப்பட்டது. உடனே நம்பெருமாள், "தென்... நோ பிராப்ளம் சார்! உங்களுக்குத் தெரியாதுன்னு சொல்லிட்ட பிறகு, இந்தப் பிரச்னையை

இனி எப்படி ஹேண்டில் பண்ணிக்கணுமோ அப்படிப் பண்ணிக்கிறேன்! ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்" என்று சொல்லி, சல்யூட் ஒன்றைக் கொடுத்துவிட்டு நகர முயன்றார்.

விவேக் குரலை நுழைத்தான்... "ஒரு நிமிஷம் மிஸ்டர் நம்பெருமாள்..."

அவர் நின்றார். "யெஸ் சார்!"

"மைக்கேல் எர்னஸ்ட் எத்தனை மணிக்குக் கொலை செய்யப்பட்டார்?"

"ராத்திரி பன்னிரண்டு மணியில் இருந்து ஒரு மணிக்குள்ளே சம்பவம் நடந்து இருக்கலாம்னு ஸ்பாட் விசிட் செய்த டாக்டர் ஒருத்தர் ரிப்போர்ட் கொடுத்து இருக்கார் சார்!"

"பாடியை பி.எம்முக்குக் கொண்டுபோயிட்-டீங்களா?"

"இல்ல சார்... பாடி ஸ்பாட்லதான் இருக்கு. ஃபாரன்ஸிக் ஆட்கள் காலையில ஆறு மணிக்குத்-தான் வந்தாங்க. ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்து ஃபிங்கர் பிரிண்ட்ஸைக் கலெக்ட் பண்ணிட்டு இருக்காங்க. பாடி ஜி.ஹெச் போக இன்னும் எப்படி-யும் ஒரு மணி நேரம் ஆயிடும்."

"சரி... வாங்க, போகலாம்!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"எங்கே சார்?"

"கொலைச் சம்பவம் நடந்த இடத்துக்கு!"

நம்பெருமாள் நெற்றியில் சின்னதாக ஒரு திகைப்-பைக் காட்டினார். "ச... சார்! நீங்க எதுக்காக அங்கே..."

"ஏன், வரக் கூடாதா? ஒரு குற்றச் சம்பவம் தமிழ் நாட்டின் எந்தப் பகுதியில் நடந்தாலும் அதை விசாரித்து உண்மைகளைக் கண்டறியும் உரிமையும் கடமையும் எனக்கு இருக்கு. வாங்க, போகலாம்."

"சார், இது சாதாரண நபரோட கொலை."

"நோ! மைக்கேல் எர்னஸ்ட் ஒரு சாதாரண நபராக இருந்திருந்தா, அந்த ஆளோட டைரியில் கலெக்டரோட பர்சனல் கம்யூனிகேஷன் நம்பர்ஸ் இடம் பெற-வேண்டிய அவசியம் என்ன? அந்த நபர் ஒரு டெரரிஸ்ட்டாகக்கூட இருக்கலாமே?"

"ஆனா, அந்த ஆளைப் பார்த்தா அப்படித் தெரியலையே சார்!"

"மிஸ்டர் நம்பெருமாள்! டெரரிஸ்ட்ஸ் இப்படித்-தான் இருப்பாங்கன்னு ஏதாவது சாமுத்ரிகா லட்சணப் பட்டியல் உங்ககிட்ட இருக்கா? நாங்க கோயம்புத்தூர்

வந்ததுக்குக் காரணமே, உளவுத் துறை கொடுத்த ஒரு செய்தியின் அடிப்படையில்தான்! டெரரிஸ்ட் ஊடு-ருவல் இந்த மாவட்டத்துக்குள்ளே நடந்திருக்கு. அதை ஸ்மெல் பண்ணித்தான் நாங்க வந்திருக்கோம். மைக்கேல் எர்னஸ்ட்டோட டைரி-யில் கலெக்டரின் பெர்சனல் டெலிபோன், செல்-போன் நம்பர்கள் இருப்பதைப் பார்க்கும்போது, மனசுக்குள்ளே ஒரு சந்தேகம் சம்மணம் போட்டு உட்கார்ந்தாச்சு. வாங்க ஸ்பாட்டுக்குப் போகலாம்."

நம்பெருமாள் தயக்கத்தோடு வெளியில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போனார். அவருடைய தலை மறையும் வரை பார்த்துக்கொண்டு இருந்த விவேக், பின் பங்கஜ்குமாரை ஏறிட்டான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு குரலைத் தாழ்த்தினான்.

"சார்... மைக்கேல் எர்னஸ்ட் வர்றதுக்குப் பதிலாக அந்த ஆளோட மரணச் செய்தி வந்திருக்கு. இதை நாம எதிர்பார்க்கலை. மைக்கேலோட கொலைக்குப் பின்னாடி ஏதோ ஒரு பெரிய விவகாரம் இருக்கு. அதைக் கிளறிப் பார்க்கத்தான் டெரரிஸ்ட் என்கிற வார்த்தையை உபயோகிச்சேன். நாங்க ஸ்பாட்டுக்குப் போறோம்."

பங்கஜ்குமார் வியர்த்துப்போன முகத்தோடு ஒரு பயப் பார்வையைச் சுற்றிலும் செலுத்திக்-கொண்டே பேசினார்... "விவேக்! இந்தப் பிரச்னையை இப்படியே விட்டுட்டா என்ன?"

"பிரச்னையை விடறதா... எப்படி சார்? மைக்கேல் எர்னஸ்ட் செத்துட்டாலும் அல்போன்ஸ் இருக்-கானே! அவன் நாளைக்கு இந்தப் பிரச்னையோடு உங்க முன்னாடி வந்து நின்னா, என்ன பண்ணுவீங்க? எல்லாத்துக்கும் மேலாக உங்க மனைவி மின்மினி மேல் இருக்கிற கரை போக வேண்டாமா?"

LAVAN JOY@TAMILTORRENTS.COM

"விவேக், எனக்குப் பயமாயிருக்கு. விவகாரம் இப்போ வேற திசையில் பயணம் பண்ணிட்டு இருக்கு. என்னை யாரோ குறி பார்த்து அடிக்குறாங்கன்னு தோணுது!"

"சார்! இப்ப பிரச்னை சிக்கலாயிருச்சுங்கிறது உண்மை--தான். அதுக்காக நாம பயப்பட வேண்டியது இல்லை. மைக்கேலோட மரணத்துக்குக் காரணம் யார்னு தெரிஞ்சா, இதை உடனடியா ஒரு முடிவுக் குக் கொண்டுவந்துடலாம். சரி, உங்க மனைவி வர்றாங்க. நாங்க கிளம்பறோம் சார்!"

இருண்ட முகத்தோடு பங்கஜ்குமார் தலையாட்டி-வைக்க, விவேக்கும் விஷ்ணுவும் வெளியே ஜீப்பில் காத்திருந்த நம்பெருமாளை நோக்கிப் போனார்கள். விஷ்ணு எரிச்சலாக முணுமுணுத்தான்...

"என்ன பாஸ்... சொந்தச் செலவுல யாராவது சூனியம் வெச்சுக்குவாங்களா?"

"அப்படி யார்றா வெச்சுக்கிட்டது?"

"நீங்கதான் பாஸ்! நாம கோயம்புத்தூருக்கு என்ன வேலையா வந்தோம்? இப்ப என்ன வேலை பார்த்துட்டு இருக்கோம்? மைக்கேல் எர்னஸ்ட்டும் அல்போன்சும்

வந்திருந்தா, மின்மினி 24 காரட்டா... 14 காரட்டா என்ற உண்மை தெரிஞ்சிருக்கும். பிரச்னையும் ஒரு முடிவுக்கு வந்திருக்கும். ஆனா, இப்போ நம்ம நிலைமையைப் பார்த்தீங்களா? பீ்ப் பிரியாணி கடையை நடத்திட்டு இருந்த மைக்கேல் எர்னஸ்ட்டுக்கு மலர்வளையம் வைக்கப் போயிட்டு இருக்கோம். இது தேவையா?"

"டேய்... ஒரு அரை மணி நேரத்துக்குக் கொஞ்சம் உன் திருவாயை மூடிட்டு வர்றியா?"

டவுன் ஹாலை ஒட்டிய சந்தில் நுழைந்து, அதற்கு மேல் போக முடியாமல் அப்படியே நின்றது போலீஸ் ஜீப். நம்பெருமாள் கீழே இறங்கி முன்னால் நடக்க, விவேக்கும் விஷ்ணுவும் பின் தொடர்ந்தார்கள். சந்து அவ்வளவு சுத்தமாக இல்லை.

'இங்கே சிறுநீர் கழிக்காதீர்கள்' என்று சுவரில் எழுதப்பட்டு இருந்த கட்டளையை அந்தப் பகுதி மக்கள் மீறியதன் விளைவு, குபீர் குபீரென்று காற்றில் மூத்திர நாற்றம் அடித்து, அடி வயிற்றில் ஒரு சூறாவளியை உண்டாக்கிவிட்டு ஓய்ந்தது. சுவாச மண்டலமே ஸ்தம்பித்துப் போயிற்று.

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

மூன்று பேரும் சின்னச் சின்ன சாக்கடைகளைத் தாண்டி நடந்-தார்கள். நம்பெருமாள் சொன்-னார், "சார்... மைக்கேல் கொலை செய்யப்பட்டது இந்த சந்தில் இருக்கிற நிறையப் பேருக்குத் தெரியாது. அதான், அவ்வளவாகக் கும்பல் இல்லை. இந்த வீடு தான் சார்!" சிதிலப்பட்டுப் போயிருந்த வாசற்படிகள் ஏறி, வெறுமனே சாத்தியிருந்த கதவைத் தள்ளிக்-கொண்டு நம்பெருமாள் உள்ளே போனார்.

பெரிய பெரிய சுவர்களோடு பழைமையான பெரிய வீடு. முன் பக்கத் தாழ்வாரத்தில் பரபரப்பாக இயங்-கிக்-கொண்டு இருந்த ஃபாரன்ஸிக் அதிகாரிகளுக்கு நடுவே, தரையில் குப்புற விழுந்து கிடந்தார் மைக்கேல் எர்னஸ்ட். பின்னந்தலை ஏதோ ஒரு கனமான ஆயுதத்தால் பலத்த அடி வாங்கி, சிவப்பாகச் சிதைந்து போயிருந்தது. கழுத்து எலும்புகள் நொறுங்கித் தெரிந்தன.

விவேக் நம்பெருமாளை ஏறிட்டான்.

"மரணம் எப்படி?"

"சார்... இது ஒரு மூர்க்கமான கொலை. கொலை-யாளி கொலை செய்யப் பயன்படுத்திய ஆயுதத்தைப் பார்த்தப்ப ஆடிப் போயிட்டேன்."

"அப்படி என்ன ஆயுதம் அது?"

"வாங்க சார்... பார்க்கலாம்!" நம்பெருமாள் அந்த அறையின் மூலைக்குக் கூட்டிப் போய், சுவரோடு சுவராக சாத்திவைக்கப்பட்டு இருந்த அந்த இரும்-பாலான உலக்கையைக் காட்டினார். அதன் உருண்டையான முன் பகுதி ரத்தத்தில் குளித்து, கருஞ்சிவப்பு நிறத்தில் உறைந்து போயிருந்தது. ஈக்கள் மாநாடு போட்டிருந்தன.

நம்பெருமாள் குரலைத் தாழ்த்தி, "சார், இந்த இரும்பு உலக்கையோட எடை 20 கிலோ. இந்த உலக்கையை எதுக்குப் பயன்படுத்துவாங்க தெரி யுமா? மாட்டை அடிச்சுக் கொல்றதுக்கு! நான் பார்த்திருக்கேன். மாட்டை ஒரு தடுப்பு வேலிக்குள்ளே கட்டிப் போட்டுட்டு, அதனோட நெத்தி-யைப் பார்த்து இந்த உலக்கையால ஒரே போடு! மாடு சாணம் தள்ளி, வாயில் ரத்தம் நுரை கக்கி..." கண்களில் பரவிய பயத்தோடு 'போதும்' என்று கையமர்த்திய விவேக், சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டுக் கேட்டான்...

"மைக்கேல் எர்னஸ்ட்டோட குடும்பத்தில் வேற யார் யாரெல்லாம் இருக்காங்க?"

"அக்கம்பக்கத்துல விசாரிச்சேன்! மைக்கேலுக்கு வொய்ஃப் கிடையாது. ஒரே ஒரு மகன் மட்டும்தான். பேரு அல்போன்ஸ்."

"அல்போன்ஸ் எங்கே?"

"நான் இங்கே வரும்போது அவன் வீட்ல இல்லை சார்! அவன் எங்கே போனான்னு யாருக்கும் தெரியலை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அப்பாவுக்கும் மகனுக்கும் ஏதாவது பிரச்னையா?"

"அதையும் விசாரிச்சேன் சார். அப்படி அவங்க சண்டை போட்டு நாங்க பார்த்தது இல்-லைன்னு பக்கத்து வீட்ல சொன்னாங்க. இனிமேதான் டீப்பா என்கொயரி பண்ணணும்!" - நம்பெருமாள் சொல்லிக்கொண்டு இருக்கும்-போதே...

"சார், நான் ஒரு தகவல் சொல்லலாமா?" - பக்கவாட்டில் ஒரு பெண் குரல் கேட்டு, விவேக் திரும்பிப் பார்த்தான்.

சுடிதாரில் அந்த இளம் பெண் தெரிந்தாள். "சார்! என் பேர் ரமலத். ஒரு கால்சென்டர்ல வொர்க் பண்-றேன். எதிர் வீட்லதான் குடியிருக்-கேன். டியூட்டி முடிஞ்சு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி-தான் வந்தேன். வீட்ல விஷயத்தைச் சொன்-னாங்க. உடனே இங்கே வந்தேன். மைக்கேல் அங்கிள் ரொம்பவும் நல்லவர். அவருக்கு இப்படியரு மரணம் வந்திருக்கக் கூடாது."

விவேக் அவளை நெருங்கி, "நீ என்னமோ சொல்ல வந்தியே... அதைச் சொல்லும்மா..."

"சார்... நேத்து சாயந்தரம் நாலரை மணி இருக்கும், பர்தா போட்டுக்-கிட்டு ஓர் அழகான பெண் மைக்கேல் அங்கிள் வீட்டுக்குள் போனா. அவ பர்தாவை

எதேச்சை-யாக விலக்கிய-போது, நெற்றியில் பொட்டும், கழுத்-துல தாலிக்கொடி-யும் தெரிஞ்சுது."

விவேக்கும் விஷ்ணுவும் 440 வோல்ட்ஸ் மின்சாரம் பாய்ந்த உணர்வில் சரேலென்று நிமிர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்துக்-கொண்டார்கள்.

நியூயார்க்

விஜேஷ் அந்த இளைஞனை நம்பாத ஒரு பார்வை பார்த்து, அவனோடு கை குலுக்குவதைத் தவிர்த்துவிட்டுக் கேட்டான்... "என்ன பேர் சொன் னீங்க?"

அவன் சிரித்தான். "காமாட்சி! முழுப் பேர் காமாட்சி-நாதன். தாத்தா பேரைத்தான் வைக்க ணும்னு அம்மா அடம் பிடிச்சதால இந்தப் பேர். ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள்ல என்னைக் காமாட்சின்னு கூப்பிடுவாங்க. சொந்த ஊர் காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற பிள்ளையார்பாளையம்."

"என்கூட செல்போன்ல பேசினது..."

"நான்தான்."

"அந்தப் பெண் குரல்..?"

"நானே... நானே..." என்று சொன்ன காமாட்சி நாதன், தொண்டையைக் கனைத்து அட்ஜஸ்ட் செய்துகொண்டு, விஜேஷுக்கு மட்டும் கேட்கும் தொனியில் அச்சுஅசலாக ஒரு பெண்ணைப்போலவே பேசினான்... "வேண்டாம் மிஸ்டர் விஜேஷ்! அந்த வீட்டை வாங்காதீங்க. இதுக்கு முன்னாடி அந்த வீட்டை வாங்க முயற்சி பண்ணின ரெண்டு பேர் ஹார்ட் அட்டாக்கில் இறந்துபோயிட்டாங்க. ப்ளீஸ்! அடுத்த ஃப்ளைட்டைப் பிடிச்சு பாரீசுக்குப் புறப்பட்டுப் போயிடுங்க!"

விஜேஷை வியப்பு புரட்டிப் போட்டது.

"மை குட்னஸ்! இதே குரல்தான்..."

காமாட்சி சிரித்தான். " 'கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்'னு தமிழ்ல ஒரு பழமொழி சொல்லுவாங்களே... அதுக்குச் சரியான உதாரணம் நான்தான்! சின்ன வயசில் இருந்தே மிமிக்ரி பண்ணுவேன். அதிலும் பெண் குரல் எனக்கு இயல்பாக வந்தது. கல்லூரி நாடகங்களில் பெண் வேஷம் போட்டு நடிச்சிருக்கேன்..."

விஜேஷ் குறுக்கிட்டான்.... "சரி, இங்கே என்ன பண்றீங்க?"

"'நியூயார்க் டேஸ்' பத்திரிகை கேள்விப்பட்டு இருக்கீங்களா?"

"ம்... புதுசா வந்த ஒரு மேகஸின்."

"அதில் நான் சீ்ப் ரிப்போர்ட்டர்."

"ஓ! சீ்ப் ரிப்போர்ட்டர் வேலையோடு பார்ட் டைமா பிளாக்மெயிலர் வேலையும் பண்றீங்க போலிருக்கு."

"இதோ பாருங்க விஜேஷ், நான் உங்களை பிளாக் மெயில் பண்ணலை. ஜஸ்ட் வார்ன் பண்ணினேன். அவ்வளவுதான்!"

"அது வார்னிங் மாதிரி தெரியலை. அப்படி வார்னிங் பண்றவங்க பி.சி.ஓ-வில் ஒளிஞ்சுட்டு பெண் குரல்ல பேச மாட்டாங்க!"

"விஜேஷ்! நான் உங்ககிட்ட நிறையப் பேச வேண்டி--யிருக்கு. அதுக்கு இந்த ஹோட்டலின் வரவேற்பறை சரியான இடம் இல்லை. உங்க அறைக்குப் போயிடுவோமா?"

தயக்கமாக விஜேஷ் காமாட்சியையே பார்க்க, அவன் சிரித்தான். "ஸோ, நீங்க என்னை நம்பலை?"

"எனக்குக் குழப்பமா இருக்கு. நான் அந்த வீட்டை வாங்கப் போகிற விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிஞ்-சுது? என்னோட பெர்சனல் செல்போன் நம்பரை காண்-டாக்ட் பண்ணியிருக்கீங்க. அந்த நம்பர் எப்படிக் கிடைச்சுது?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"சொல்றேன்... எல்லாத்தையும் சொல்றேன். உங்க அறைக்குப் போய் ஒரு பிளாக் காபி சாப்பிட்டுகிட்டே பேசலாமா?" விஜேஷ் இன்னமும் தயக்கமாகப் பார்க்க, காமாட்சி தன் தோள்பட்டைகளை 'ஜெர்க்' செய்து, கைகளை விரித்தான்.

"ஓ.கே. விஜேஷ்! உங்களுக்கு என் மேல நம்பிக்கை வரலை. நோ பிராப்ளம்! இந்தாங்க என்னோட விசிட்-டிங் கார்டு. உங்களுக்கு என் மேல எப்ப நம்பிக்கை வந்து பேசணும்னு தோணுதோ, அப்ப போன் பண்-ணுங்க. நான் வர்றேன். பட் ஒன் திங்க்... அந்த வீட்டை மட்டும் வாங்க அக்ரிமென்ட் போட்டுடா-தீங்க, ப்ளீஸ்..! இதுக்கு முன்னாடி அந்த வீட்டை வாங்க முயற்சி பண்ணின ரெண்டு பேரும் ஹார்ட் அட்டாக்கில் இறந்துபோகலை. ரொம்பவும் சாதுர்ய-மான முறையில் கொலை செய்யப்பட்டு இருங்காங்க. அதுக்கான ஆதாரங்கள் என்கிட்ட இருக்கு. அந்த ஆதாரங்களை எல்லாம்..." என்று சொல்லிக்கொண்டே போன காமாட்சி, சட்டென்று பேச்சை நிறுத்திக்கொண்டான். கண்களில் கலவரம்.

விஜேஷ் குழப்பமாக, "ஏன் பேச்சை நிறுத்திட் டீங்க?" என்றான்.

"உ... உ... உங்களுக்குப் பின்னாடி பாருங்க..."

கேள்வி: அண்மையில் கோவை மாவட்டத்தில் இருந்து பிரிந்து சென்ற ஓர் ஊர், தனி மாவட்டமாக

உருவாகியுள்ளது. அது எந்த ஊர்?

(1) பொள்ளாச்சி (2) திருப்பூர் (3) உடுமலை

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்-ணை டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட் டையும் பளிச்-சென்று ஐந்தே வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 14.12.09-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

-பறக்கும்

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ராஜேஷ்குமார், ஓவியங்கள்: அரஸ், ஸ்யாம்

நியூயார்க்

"உங்களுக்குப் பின்னாடி பாருங்க" என்று காமாட்சி சொன்னதும், விஜேஷ் திரும்பிப் பார்த்தான். ஃப்ளோரா தன் மார்புக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தாள்.

அவளை அந்தத் தருணத்தில் எதிர்பார்க்காத விஜேஷ், ஒரு விநாடி முகத்தில் திகைப்பைக் காட்டி, அடுத்த விநாடியே சுதாரித்தவனாக, "மிஸ் ஃப்ளோரா, நீங்களா? இப்படி ஒரு திடீர் வருகையை நான் எதிர்பார்க்கவில்லை. என்ன விஷயம்? என்னிடம் ஏதாவது சொல்ல மறந்துவிட்டீர்களா?" என்றான்.

"மிஸ்டர் விஜேஷ்! நான் உங்களிடம் எதையும் சொல்ல மறக்கவில்லை. நீங்கள்தான் ஹோட்டல் வாசலில் காரைவிட்டு இறங்கும்போது, ஒரு பொருளை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டீர்கள். அதைக் கொடுக்கத்தான் வந்தேன்."

"எதை மறந்துவைத்தேன்?"

"உங்கள் செல்போனை!" - சொன்னவள், தன் இடது உள்ளங்கையில் பொத்தி வைத்திருந்த செல்போனை விஜேஷிடம் நீட்டினாள்.

"தேங்க்யூ ஃப்ளோரா! இதுவரையிலும் என் செல்போனை மறந்து வைத்ததே இல்லை. இதுதான் முதல் தடவை."

"இதுவே கடைசி தடவையாகவும் இருக்கட்டும். இதயம் இல்லாமல்கூட இந்த நியூயார்க்கில் இருந்துவிடலாம். செல்போன் இல்லாமல் இருக்க முடியாது!"

"உண்மை... உண்மை!" என்று தலையசைத்த விஜேஷ், தனக்குப் பின்னால் நின்றிருந்த காமாட்சியைப்பற்றி சொல்லலாமா... வேண்டாமா என்று தன் மனதுக்குள் 'கருத்து யுத்தம்' நடத்திக்கொண்டு இருக்க, ஃப்ளோராவே கேட்டாள்...

"உங்களோடு பேசிக்கொண்டு இருந்த நண்பர் யார் என்று எனக்கு அறிமுகம் செய்துவைக்க மாட்டீர்களா?"

விஜேஷ் தலையசைத்து "ஷ்யூர்... ஷ்யூர்" என்றவன், ஒரு புன்சிரிப்போடு சொன்னான்... "நாம் எதிர்பார்த்த நபர்தான்!"

"காஞ்சிபுரம் காமாட்சி! சரியா விஜேஷ்?"

"அட! எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?"

"கடந்த ஐந்து நிமிட நேரமாக அப்படி ஓரமாக நின்று நான் உங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருந்தேன். நீங்கள் பேசும் தமிழ் பாஷை புரியாவிட்டாலும் உங்கள் முகங்களில் வெளிப்படும் உணர்வுகள், விஷயம் என்ன என்பதை எனக்கு மொழி பெயர்த்துச் சொல்லிவிட்டதே!" - ஃப்ளோரா கோபம் கலந்து பேசிக்கொண்டு இருக்கும்போதே, காமாட்சி தன் முகத்தில் மலர்ச்சியோடு, கையை நீட்டியபடியே மெள்ள ஃப்ளோராவுக்குப் பக்கத்தில் வந்தான்.

"கிளாட் டு மீட் யு மிஸ் ஃப்ளோரா!"

ஃப்ளோரா கையை நீட்டாமல் அப்படியே அதே போஸில் நின்று, உடம்பைக் கொஞ்சமும் அசைக்காமல், உதடுகளை மட்டும் அசைத்தாள்... "ஸாரி மிஸ்டர் காமாட்சி! உங்களைச் சந்திப்பதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை."

"ஏன்?"

"குரலை மாற்றி ஒளிந்துகொண்டு பேசுபவர்களை எனக்குப் பிடிக்காது."

RAJAN_JOY@TAMILTORRENTS.COM

"அப்படிப் பேசுவது ஒரு சிலரின் நன்மைக்காகக்கூட இருக்கலாம், இல்லையா?"

"எது நன்மை? உடல் நலம் குன்றி ஒரு மனநோயாளியாக மாறிவிட்ட பெண்ணைக் குணப்படுத்த வீட்டை விற்றுச் செலவு செய்ய வேண்டிய நிலைமையில், அந்த வீட்டை விற்க அவளைப் பெற்றவர்கள் படாத பாடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதை வாங்க வந்த விஜேஷை வீணாகப் பயமுறுத்தி வாங்கவிடாமல் செய்வதுதான் நீங்கள் செய்யும் நன்மையா?"

"விஜேஷைப் பயமுறுத்துவது என் நோக்கம் இல்லை மிஸ். ஃப்ளோரா! அவருடைய உயிரைக் காப்பாற்றுவது ஒன்றுதான் இப்போதைக்கு என் முன்னால் உள்ள பணி. மிஸ்டர் ஆல்பர்ட்ஸனின் வீட்டை வாங்க வந்த யாரோ இரண்டு பேர் அடுத்தடுத்து இறந்துபோனதைத் தற்செயல் நிகழ்வாக நினைத்து நீங்கள் உங்களை ஏமாற்றிக்கொள்ளலாம். அப்படி ஏமாந்துபோக நான் தயாராக இல்லை. அந்த இருவரும் இறந்தது ஹார்ட் அட்டாக்கினால் அல்ல. அவை அப்பட்டமான கொலைகள்!"

"போய் போலீஸில் புகார் செய்ய வேண்டியதுதானே?"

"இப்போதைக்குப் புகார் செய்ய முடியாத நிலைமை."

"அடடா..! அப்படி என்ன நிலைமையோ?"

"மிஸ் ஃப்ளோரா! உங்களுடைய கேலியும் கிண்டலும் எனக்குப் புரிகிறது. இப்படிப் பேசுவதால் மட்டுமே நீங்கள் உண்மையைக் குழிதோண்டிப் புதைத்துவிட முடியாது."

"ஸாரி! உங்களோடு பேசி நான் என் நேரத்தை வீணடித்துக்கொள்ள விரும்பவில்லை!" - சொன்ன ஃப்ளோரா விஜேஷை ஏறிட்டாள். "விஜேஷ்! நான் கிளம்புகிறேன். இந்த மிமிக்ரி நபரின் பேச்சைக் கேட்டு, வீட்டை வாங்கும் எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடாதீர்கள். சில்வியா என்கிற ஓர் அற்புதமான பெண்ணின் உயிர் கருகிப்போவதற்குக் காரணமாக இருந்துவிடாதீர்கள். பிறகு உங்கள் விருப்பம்!" ஃப்ளோரா சொல்லிவிட்டுக் கிளம்ப, விஜேஷ் பதற்றத்தோடு அவளைப் பின்தொடர்ந் தான்.

"நோ ஃப்ளோரா! மை வேர்டு இஸ் ஃபைனல். நான் அந்த வீட்டை வாங்கிக்கொள்ளும் எண்ணத்திலிருந்து சிறிதுகூடப் பின்வாங்கவில்லை. நாளைக்கு நாம் விலையைப் பேசி முடிக்கிறோம்; அக்ரிமென்ட் போடுகிறோம். இதில் எந்த மாற்றமும் இல்லை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

வேக நடை போட்ட ஃப்ளோரா நின்றாள். முகத்தில் கூடுதல் வெளிச்சம்.

"இது உங்களுடைய உறுதியான பேச்சுதானா?"

"இறுதியான பேச்சும்கூட!"

"பிராமிஸ்?" - சொல்லிக் கொண்டே தன் அழகான ரோஜாப்பூ போன்ற உள்ளங் கையை நீட்டினாள் ஃப்ளோரா.

"பிராமிஸ்!" - அவளின் கையைத் தனது கைகளில் பொத்தி மூடினான் விஜேஷ்.

"தேங்க்யூ விஜேஷ்! 'ஏ வேர்டு மஸ்ட் பி ஏ வேர்டு' என்ற வார்த்தைகளுக்கு நீங்கள் வெகு அழகாகப் பொருந்துகிறீர்கள். நாளை இதே ஹோட்டலில் சந்தித்து, வீட்டின் விலையைப் பற்றிப் பேசி முடிவு செய்வோம்."

உதடுகள் விரியச் சிரித்து விடை பெற்றுக்கொண்ட ஃப்ளோரா ஹோட்டலின் கார் பார்க்கிங்கில் நின்றிருந்த தன் காரில் போய் ஏறிக்கொண்டாள். கார் புறப்பட் டுப் போகும் வரை பார்த்துக் கொண்டு இருந்த விஜேஷ், பின் ரிசப்ஷன் க்யூபுக்கு வந்தான். முகம் இறுகிப் போய் தாடையைத் தடவியபடி காத்திருந்த காமாட்சி யின் எதிரே போய் நின்று, "அப்புறம்..?" என்றான்.

காமாட்சி தன் உதட்டில் உற்பத்தி செய்துகொண்ட ஒரு சின்னப் புன்னகையோடு

விஜேஷை ஏறிட்டு, "எப்படியோ ஃப்ளோராவைக் கன்வின்ஸ் பண்ணி சந்தோஷப்படுத்தி அனுப்பிட்டீங்க. இனி, நாம உங்க ரூமுக்குப் போய்ப் பேசலாமா?"

"ஸாரி காமாட்சி! இனிமே நீங்களும் நானும் எதைப்பத்தியும் பேசப் போறது இல்லை. இப்போதைக்கு நான் மட்டுமே என் ரூமுக்குப் போகப்போறேன். நீங்க வெளியே போகப்போறீங்க!"

"அப்படீன்னா நீங்க என்னைத் துரத்தறீங்க?"

"சரியாப் புரிஞ்சுக்கிட்டீங்க."

"விஜேஷ்! எனக்கு ஒரு 15 நிமிஷம் டைம் குடுங்க போதும்... சொல்லவேண்டியதைச் சொல்லிட்டுப் போயிடறேன்."

"இல்லை காமாட்சி! நான் ரொம்பவும் டயர்டா இருக்கேன். ஒரு ரெண்டு மணி நேரத் தூக்கமாவது எனக்கு உடனடியா தேவை."

"ஸோ... நோ அப்பாயின்ட்மென்ட்?"

"நெவர்!" - சொல்லிவிட்டு நகர முயன்ற விஜேஷைக் கை நீட்டி மறித்தான் காமாட்சி. "ஒரு நிமிஷம்..."

"என்ன?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நான் சொல்லப்போறதை எதுவும் நீங்க இப்போ கேட்கக்கூடிய நிலைமையில் இல்லாததால, ஒரே ஒரு போட்டோவை மட்டும் காட்டறேன். அதை மட்டுமாவது பார்த்துட்டுப் போங்க."

காமாட்சி தன் சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு போஸ்ட்கார்டு சைஸ் போட்டோவை எடுத்து விஜேஷிடம் நீட்ட... அதை அலட்சியமாக வாங்கிப் பார்வையைப் பதித்தான்.

முதல் விநாடியின் ஆரம்பத்தில் விஜேஷின் கண்களில் உற்பத்தியான அதிர்ச்சி அலைகள், பின்பு சிறிது சிறிதாகத் தவணை முறையில் அதிகரித்து, முகப் பிரதேசம் முழுவதும் பரவியது.

கோவை

விவேக் அந்தப் பெண் ரமலத்தை ஆச்சர்யம் தடவிய பார்வையால் நனைத்தபடி கேட்டான்... "பர்தாவுக்குள் இருந்த பெண்ணோட முகத்தை நீ முழுசாப் பார்த்தியா?"

"இல்ல சார். பர்தா எதேச்சையா கொஞ்சம் விலகியபோது, அந்தப் பெண்ணோட நெற்றியும் கழுத்தும் மட்டும் தெரிஞ்சுது. நெற்றியில் இருந்த பொட்டையும் கழுத்தில் இருந்த தாலிக் கொடியையும் பார்த்துதான் அது ஓர் இந்துப் பெண்ணாக

இருக்கலாம் என்கிற முடிவுக்கு வந்தேன்."

"அந்தப் பொண்ணு மைக்கேலைத்தான் பார்க்க வந்தாளா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்."

"நேத்து சாயந்தரம் அல்போன்ஸை நீ பார்த்தியாம்மா?"

"இல்ல சார்..."

"மைக்கேல் கோரமாகக் கொலை செய்யப்பட்டுக்கிடக்கிற இந்த நேரத்துல அல்போன்ஸ் வீட்டில் இல்லை. அவர் எங்கே போயிருப்பார்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியாது சார்."

"மைக்கேல் நல்லவர்னு சொன்னே... அல்போன்ஸ் எப்படி?"

"அவரைப்பத்தி எனக்கு சரியாத் தெரியல, சார்! எப்பவுமே அவர் குடிபோதையில் இருக்கிறதால அவரைப் பார்த்தாக்கூட நான் பேச மாட்டேன்."

"மைக்கேலுக்கும் அல்போன்சுக்கும் இடையில் அடிக்கடி ஏதாவது சண்டை வருமா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இல்லை சார்! அவங்க ஒருநாள்கூட சண்டை போட்டு நான் பார்த்தது இல்லை. மைக்கேலுக்குத் தன் மகன் அல்போன்ஸ் மேல் அளவுகடந்த பாசம். குடிபோதையில் இருக்கிற அவரை எழுப்பித் தூக்கி உட்காரவெச்சு, சாப்பாடு ஊட்டிப் படுக்கவைப்பதை நான் பல தடவை பார்த்திருக்கேன். அல்போன்ஸ் அளவுக்கு மீறிக் குடிக்கிறதுக்குக் காரணம் அவர் ஏதோ ஒரு மன விரக்தியில் இருந்ததா மைக்கேல் அங்கிள் சொன்னார்."

"அந்த விரக்தி எதனாலன்னு சொன்னாரா?"

"சொல்லலை சார்."

"சரி! மைக்கேலைப் பார்க்க வந்த அந்த பர்தாப் பெண் எத்தனை நேரம் உள்ளே இருந்தா?"

"தெரியலை. அவ வெளியே வரும்போது நான் பார்க்கலை சார்!" - ரமலத் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, விவேக்கின் செல்போன் டயல் டோனை வெளியிட்டது.

"பாஸ்! நீங்க போனை அட்டெண்ட் பண்ணுங்க... நான் ரமலத்தைக் கண்டினியூ பண்ணிக்கிறேன்!" - விஷ்ணு சொல்லிக்கொண்டே ரமலத்தை நோக்கிப் போக... விவேக் செல்போனில் அழைப்பது யார் என்று பார்த்தான்.

கலெக்டர் பங்கஜ்குமார்.

"சார்... நான் விவேக்!"

"மிஸ்டர் விவேக்! அங்கே என்ன நிலவரம்?"

"மைக்கேல் எர்னஸ்ட் ரொம்பவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு இருக்கார். அவரோட மகன் அல்போன்ஸ் வீட்டில் இல்லை. ஆள் எங்கேன்னு கேட்டா யாருக்கும் தெரியலை. எதிர் வீட்டில் இருக்கிற ஒரு பெண் சொன்ன தகவல் மன சுக்குக் கொஞ்சம் உறுத்தலா இருக்கு."

"என்ன தகவல்?"

பர்தா அணிந்த இந்துப் பெண் ஒருத்தி மைக்கேல் எர்னஸ்ட்டைச் சந்தித்துப் பேசியதைப் பற்றிச் சொன்னான் விவேக். மறுமுனையில் பங்கஜ்குமார் சற்றே பதற்றப்பட்டார்.

"அந்தப் பெண் எத்தனை மணிக்கு வந்தாள்னு சொன்னீங்க?"

"நாலரை மணி!"

"மை குட்னஸ்!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஏன் சார்... என்னாச்சு?"

"அது வந்து... ஒண்ணுமில்லை. மின்மினி நேத்து சாயந்திரம் நாலேகால் மணி சுமாருக்கு போன் பண்ணினாள். சாயந்தரம் புரந்தரதாஸர் ஹாலில் கச்சேரி பண்ணப் போறதால, பியூட்டி பார்லருக்குப் போறேன்னு சொன்னாள்."

"அப்படிச் சொல்லிட்டு, உங்க மனைவி மைக்கேல் எர்னஸ்ட்டைப் பார்க்கப் போயிருக்கலாம்னு நினைக்கிறீங்களா சார்?"

"லிட்டில் சான்ஸ் இஸ் தேர்."

"மிஸஸ் மின்மினி எந்த பியூட்டி பார்லருக்குப் போவாங்க?"

"சாய்பாபா காலனியில் இருக்கிற 'ஃப்யூச்சர் பியூட்டி' என்கிற பார்லருக்கு."

"அங்கே போன் பண்ணி, ஒரு க்ராஸ் செக் பண்ணிப் பாருங்களேன், சார்!"

"அது சரியா இருக்குமா விவேக்? ஏதோ சந்தேகப்பட்டு விசாரணை பண்ற மாதிரி ஆயிடாதா?"

"சார், இந்த விஷயத்துல ஹெஸிடேட் பண்ண ஒண்ணுமே இல்லை. இந்த நிமிஷம் பிரச்னை விஸ்வரூபம் எடுத்து நமக்கு முன்னாடி நின்னுட்டு இருக்கு.

உண்மைகளை வெளியே கொண்டுவர வேண்டிய தருணம் இது. நேத்து சாயந்திரம் நாலரை மணி சுமாருக்கு உங்க மனைவி பியூட்டி பார்லர்லதான் இருந்தாங்கன்னு ஆதாரபூர்வமான செய்தி நமக்குக் கிடைச்சுட்டா, ஒரு சின்ன ஆறுதலும் ஆசுவாசமும் கிடைக்கும். மைக்கேல் எர்னஸ்ட்டை வந்து பார்த்தது உங்க மனைவி இல்லேன்னு தெரிஞ்சுட்டா, என்னோட இன்வெஸ்டிகேஷனின் கோணம் மாறிடும். நான் உங்களுக்கு ஆரம்பத்திலேயே சொன்ன மாதிரி பிரச்னைகளை ஃபேஸ் பண்ணித்தான் தீரணும்!"

"ஓ.கே. மிஸ்டர் விவேக்! அந்த பியூட்டி பார்லருக்கு போன் பண்ணி க்ராஸ் செக் பண்ணிடறேன். ஒரு பத்து நிமிஷத்துக்குள்ளே மறுபடியும் உங்களுக்கு கால் தர்றேன்."

"ப்ளீஸ்!" - விவேக் செல்போனை அணைத்து ஷர்ட் பாக்கெட்டுக்குக் கொடுத்தபடி விஷ்ணுவை நோக்கிப் போனான். ரமலத் இல்லை. விஷ்ணு மட்டும் செல்போனில் எதையோ தேடிக்கொண்டு இருந்தான்.

"எங்கடா ரமலத்?"

"போயிட்டா பாஸ்!"

"அவளை ஃபர்தரா என்கொயரி பண்ணினியா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"பண்ணேன் பாஸ். யூஸ்ஃபுல் க்ளூஸ் நிறையக் கிடைச்சுது!"

"வரிசையா சொல்லு..."

"ரமலத்துக்கு இன்னொரு சிஸ்டரும் உண்டு. பேர் நூருன்னிஸா. ரெண்டு பேருமே சூர்யாவோட ஃபேன்ஸ். ரமலத் ப்யூர் வெஜிடேரியன். நூருக்கு நான்-வெஜ் இல்லாத நாள் பொல்லாத நாள். ரெண்டு பேருக்குமே கவிதைகள் பிடிக்குமாம்; காதல் பிடிக்காதாம். வீட்ல பார்த்து முடிவு பண்ணின மாப்பிளை களைத்தான் கல்யாணம் பண்ணிக்குவாங்களாம். எல்லாத்துக்கும் மேலா பாஸ்..."

"பேசாதே!"

"கோபப்படாதீங்க பாஸ்... நான் ஏதோ ரமலத் கிட்டே கடலை போட்டதா நீங்க நினைக்கலாம். அப்படி நான் கடலை போட்டதுக்கு ஒரு காரணம் இருக்கு பாஸ்!"

"என்ன காரணம்?"

"ஒரு முன்னூறு செகண்ட் கழிச்சுச் சொல்றேனே!"

ஜன்னலுக்கு வெளியே பார்வையைப் போட் டிருந்த பங்கஜ்குமார், முதுகுக்குப் பின்னால் எழுந்த கனைப்புச் சத்தம் கேட்டுத் திரும்பினார்.

இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி மின்மினி தெரிந்தாள். "டைனிங் டேபிள்ல 'பிரேக் ஃபாஸ்ட்' ரெடியா இருக்கு. எப்போ சாப்பிடறதா உத்தேசம்?"

"மணி எவ்வளவு?"

"எட்டு!"

"ஒரு அரை மணி நேரம் போகட்டுமே?"

"அதுவரைக்கும் ஜன்னலுக்கு வெளியவே பார்த்துட்டு இருக்கப்போறீங்களா?"

"நான் ஒரு முக்கியமான போன்காலுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கேன். கால் வந்ததும் பேசிட்டு, உடனே சாப்பிட வந்துடறேன்."

"எட்டரை மணிக்குள்ளே கால் வந்துடுமா?"

"வந்துடும்! உனக்குப் பசிச்சா நீ சாப்பிடு."

"உங்களுக்கு முன்னாடி எனக்கு எப்பவும் பசிச் சதே இல்லை. போன் பேசிட்டு வாங்க. நான் வெயிட் பண்றேன்!" - சொல்லிவிட்டு மின்மினி ஒரு பெருமூச்சோடு நகர்ந்து போக, பங்கஜ்குமார் மறுபடியும் ஜன்னல் பக்கம் பார்வையைச் செலுத்தினார். அடி வயிற்றில் பயம் ஒரு பாறையைப்போல் இறுகிப்போயிருந்தது.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

'பியூட்டி பார்லருக்கு போன் செய்யலாமா, வேண்டாமா?' - தயக்கமான யோசனையில் நிமிடங் கள் கரைய, அவருடைய செல்போன் அலறியது. பதற்றமாக எடுத்து இடது காதுக்கு ஏற்றினார்.

"யெஸ்..."

"பேசறது கலெக்டர் சாரா?"

"ஆமா..."

"சார்! நான்தான் கோட்டை குமார் பேசறேன். நீங்க சொன்னபடி மைக்கேல் எர்னஸ்ட்டை முடிச் சுட்டேன். நீங்க பேசினபடி பணம் கொடுத்துட்டா பரவாயில்லை. பணத்துக்கு எங்கே, எப்போ வரட் டும் சார்?"

மறுமுனையில் அந்த கோட்டை குமார் பேசிக் கொண்டேபோக... பங்கஜ்குமார் வியர்த்துப்போய் சுற்றுமுற்றும் பார்த்தார்.

கேள்வி: நாசா விண்வெளி மையத்துக்கு எந்த அமெரிக்க ஜனாதிபதியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?

1. கென்னடி 2. ஆபிரகாம் லிங்கன் 3. கிளின்ட்டன்

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு,
சரியான விடைக்குரிய எண்ணை டைப் செய்து, கூடவே மறக்காமல்
இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே
வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 21.12.09-க்குள் எஸ்.எம்.எஸ்.
பண்ணுங்க!

-பறக்கும்...

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ராஜேஷ்குமார், ஓவியங்கள்: அரஸ், ஸ்யாம்

கோவை

பங்கஜ்குமாரின் உடம்புக்குள் எரிமலை ஒன்று நெருப்பு கக்கிய தினுசில் உஷ்ணம் பரவியது. மீண்டும் ஒரு தடவை சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, முகத்தில் வழியும் வியர்வையோடு செல்போனுக்கு உதட்டைக் கொடுத்தார். அடித் தொண்டையில் ஏறக்குறைய உறுமினார்... "யார்றா நீ?"

பதிலுக்கு மறுமுனை சிரித்தது.

"என்ன சார் இது? காரியம் முடிஞ்சதுமே யார்றா நீன்னு கேட்கறீங்க? கோட்டைமேடு குமார் சார்! நேத்து ராத்திரி நீங்க அனுப்பின ஆள் வந்து என்னைப் பார்த்து விஷ யத்தைச் சொல்லி, அட்வான்ஸ் கொடுத்து மைக்கேல் எர்னஸ்ட்டை முடிக்கச் சொல்லிட்டுப் போனார். சொன்னபடி காரியத்தை முடிச்சுட்டேன். மீதிப் பணம் கைக்கு வராததால உங்களுக்கு போன் பண்ணினேன். பணம் வந்தி ருந்தா நான் ஏன் சார் போன் பண்ணப் போறேன்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"உன்னை யார்றா வந்து பார்த்தது?"

"நீங்க அனுப்பின ஆள்தான் சார்... பேர்கூட சையத். உயரமா... கறுப்பா... அம்மைத் தழும்பு முகத்தோடு..."

"ஷிட்! உளறாதே! அப்படி யாரையும் நான் அனுப்பலை. எனக்கு யாரையும் கொலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை."

குரல் பெரிதாகச் சிரித்தது. "பெரிய மனு ஷங்களே இப்படித்தான் சார்! காரியம் நடக்க ணும்னா, ஒருமாதிரிப் பேசுவாங்க. காரியம் முடிஞ்சு துன்னா, வேற மாதிரிப் பேசுவாங்க. பரவாயில்லை சார், நீங்க பெரிய பதவியில் இருக்கிறவங்க. அப்படித்தான் நடந்துக்க முடியும். ஆனா, ஒண்ணு சார். இந்த கோட்டைமேடு குமார் போலீஸ்ல மாட்டிக்கிட்டாலும் சரி; யாரையும் காட்டிக் கொடுக்க மாட்டான்."

"இதோ பார்! எனக்குச் சம்பந்தமே இல்லாத ஒரு விஷயத்தைப்பத்தி நீ என்கிட்டே தப்புத்தப்பா பேசிட்டு இருக்கே. நீ யார்னு எனக்குத் தெரியாது. நான் எந்த ஆளையும் உன்கிட்டே அனுப்பலை."

"சார்... நீங்க இந்த மாவட்டத்துக்கே கலெக்டர். என்னை மாதிரியான புரொ஫ஷனல் கில்லர்கிட்டே பொய் பேசலாமா? நீங்க அனுப்பின சையத் எல்லாத்தையும் என்கிட்டே சொல்லிட்டான் சார்! உங்க வொய்஫ப் மின்மினி உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முந்தி மைக்கேல் எர்னஸ்ட்டோட மருமகளாமே? மைக்கேல் எர்னஸ்ட் டைத் தீர்த்துக்கட்டறதுக்காக எனக்குப் பேசப்பட்ட தொகை 10 லட்சம். நீங்க அனுப்பின சையத், அட்வான்ஸா ஒரு லட்சம் கொடுத்தான். மீதிப் பணத்தைக் காரியம் முடிஞ்சதும் கொண்டுவந்து தர்றதாச் சொன்னான். சொன்னபடி ஆள் வரலை. அதான் உங்களுக்கு போன் பண்ணிப் பேசிட்டு இருக்கேன். பேசின தொகை என் கைக்கு வந்துட்டா, அந்த நிமிஷத்தில் இருந்து நான் ஊமையாயிடுவேன். உங்களுக்குச் சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் டயம் தர்றேன். நான் ஊமையாகறதும் ஆகாததும் உங்க கையிலதான் இருக்கு."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

மறுமுனையில் செல்போன் அணைக்கப்பட்டுவிட, பங்கஜ்குமார் நெற்றியைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்த நாற்காலிக்குச் சாய்ந்தார். முதுகில் மின்மினி யின் குரல் கேட்டது... "போன்ல யாருங்க?"

முகத்தை இயல்பாக்கிக்கொண்டு திரும்பினார் பங்கஜ்குமார். "அது வந்து... சென்னை சி.எம். ஆபீஸில் இருந்து போன். செக்ரெட்டரி பேசினார்."

"ஏதாவது மோசமான செய்தியா?"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"உங்க முகம்தான் சொல்லுதே! பனி கொட்டற இந்த மார்கழி மாசத்துல யாருக்கு இப்படி வேர்க்கும்? நமக்குக் கல்யாணமான இந்த ரெண்டு மாச காலத்துல உங்க முகத்தை இப்படி இருளோன்னு நான் பார்த்ததே இல்லை. உங்களுக்கு இப்போ என்னதான் பிரச்னை?"

"டெரரிஸ்ட் பிராப்ளம்தான்! ஏற்கெனவே 98-ல் குண்டு வெடிப்புக்கு உள்ளான சிட்டி

இது. மறுபடியும் அதுமாதிரியான ஒரு பயங்கரம் நடந்துடக் கூடாது இல்லையா... அதான் கொஞ்சம் டென்ஷ னாவே இருக்கு."

"கொஞ்சம்னு கிராம் கணக்குல சொல்லாதீங்க. நீங்க இப்ப இருக்கிற நிலைமையைப் பார்த்தா, டன் கணக்கில் இருக்கும்போலத் தெரியுது!" - மின்மினி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, போர்டிகோவில் போலீஸ் ஜீப் வந்து நின்றது. எட்டிப்பார்த்துவிட்டுச் சொன்னாள்... "க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் விவேக்கும் அவரோட அசிஸ்டென்ட்டும் வந்திருக்காங்க. நான் பிரேக்ஃபாஸ்ட் அரேஞ்ச் பண்ணவா?"

"நான் அவங்ககிட்டே பேசிட்டு உனக்குத் தகவல் தர்றேன். அப்ப ஏற்பாடு பண்ணினாப் போதும்."

மின்மினி தலையசைத்துவிட்டு, ஹாலைக் கடந்து வீட்டின் உட்புறத்தை நோக்கிப் போய்விட, விவேக்கும் விஷ்ணுவும் உள்ளே நுழைந்தார்கள். பங்கஜ் குமார் களைத்துப்போனவராக எழுந்து, கைகுலுக்கி சோபாக்களைக் காட்ட... அவர்கள் உட்கார்ந்தார்கள். ஹாலில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட விவேக், மெள்ள பேச்சைத் தொடங்கினான்... "சார்! அந்த ஃப்யூச்சர் பியூட்டி அழகு நிலையத்துக்கு போன் பண்ணி, உங்க மனைவி நேத்து சாயந்தரம் நாலரை மணி சுமாருக்கு அங்கே இருந்தாங்களானு விசாரிச்சுப் பார்த்தீங்களா?"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

'இல்லை' என்பதுபோல் தலையை ஆட்டினார் பங்கஜ்குமார்.

"ஏன் சார்?"

"அந்த பியூட்டி பார்லருக்கு போன் பண்ணிப் பேசறதுக்குள்ளே எனக்கொரு போன்கால் வந்தது விவேக். அப்படியே ஆடிப்போயிட்டேன்."

"போன் பண்ணினது யாரு?"

"கோட்டைமேடு குமார்னு ஒருத்தன்..." என்று குரலைத் தாழ்த்திய பங்கஜ்குமார், எல்லாவற்றையும் அதே தொனியில் சொல்லி முடிக்க... விவேக், விஷ்ணு முகங்களில் பதற்றம் பரவியது.

விஷ்ணு நாற்காலியின் நுனிக்கு வந்தான். "என்ன பாஸ் இது! செம்மண் ரோட்ல மாட்டுவண்டி மாதிரி போய்க்கிட்டு இருந்த மேட்டர், இப்போ ஹைவேஸ் ரோட்ல பென்ஸ் கார் மாதிரி ஸ்பீட் எடுத்திருக்கு. எனக்கு மூச்சு முட்டுது பாஸ்!"

விவேக் கேட்டான், "சார்! கோட்டைமேடு குமார்ங்கிற பேர்ல உண்மையிலேயே அப்படி யாராவது இருக்காங்களா?"

"தெரியலை. இனிமே விசாரிச்சுப் பார்க்கணும். அவன் பேசின செல்போன் நம்பர் இருக்கு."

"அவன் ஒரு செல்போனில் இருந்து தைரியமா பேசியிருக்கான்னா, அந்த செல்போனுக்குக் கண் டிப்பா 'ஐ.எம்.இ.ஐ' நம்பர் இருக்காது."

"மிஸ்டர் விவேக்! விஷயம் இப்போ நிமிஷத்துக்கு நிமிஷம் சீரியஸாயிட்டு வருது. யாரோ என் குடும்ப விவகாரத்தைக் கையில் எடுத்துக்கிட்டு கார்னர் பண்றாங்க. மைக்கேல் எர்னஸ்ட்டைத் தீர்த்துக் கட்டியவங்க, அந்தக் கொலைப் பழியை என் மேல் சுமத்தவும் காய்களை நகர்த்திட்டு வர்றாங்க. எனக்கு எதிரிகள் யார்னும் தெரியலை; யாருக்கு என்ன கெடுதல் பண்ணினேன்னும் புரியலை."

"சார்... நீங்க எந்தத் தப்பும் பண்ணாத வரைக்கும் எதுக்காகவும் கவலைப்பட வேண்டியது இல்லை. இந்த விவகாரத்தைப் பகிரங்கமா விசாரணை பண்ண முடியாததற்குக் காரணம், இதில் உங்க மனைவி மின்மினியோட பெயரும் அடிபடறதுனாலதான். உங்க மனைவியை விசாரணை பண்றதுக்கு முந்தி சில ஆதாரங்களைத் திரட்ட வேண்டி இருக்கு. நேற்றைக்குச் சாயந்தரம் நாலரை மணி சுமாருக்கு, அவங்க பியூட்டி பார்லர்ல இருந்தாங்களா, இல்லையான்னு தெரியணும். உங்களுக்குத் தயக்கமா இருந்தா, அதன் நம்பரைக் குடுங்க சார். விஷ்ணு அவனோட செல்லில் இருந்து பேசி, விஷயத்தை வாங்கிடுவான்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பங்கஜ்குமார் ஒரு துண்டுப் பேப்பரில் பியூட்டி பார்லரின் செல்போன் நம்பரை எழுதிக்கொடுத்தார். விஷ்ணு அந்த எண்ணை வாங்கித் தன் செல்போனில் டயல் செய்து காதுக்கு ஏற்றினான். ரிங்டோன் போய் ஒரு பெண்ணின் குரல் கேட்டது...
"ஹலோ..."

"ஃப்யூச்சர் பியூட்டி?"

"யெஸ்!"

"மேடம்... என் பேர் புகழேந்தி. டாடாபாத் எக்ஸ் டென்ஷன் செவன்த் ஸ்ட்ரீட்ல இருக்கேன். என் வொய்ஃப் சாருலதா, நேத்து சாயந்தரம் உங்க பியூட்டி பார்லருக்கு ஃபேஷியல் பண்றதுக்காக வந்திருக் காங்க. கூட்டம் அதிகமா இருந்ததால வெயிட் பண்ணிப் பார்த்திருக்காங்க. 10 நிமிஷத்துல அவசர போன்கால் ஒண்ணு வரவும், உடனே கிளம்பி வந் துட்டாங்க. வர்ற அவசரத்துல தன் ஹேண்ட்பேக்கை அங்கேயே விட்டுட்டு வந்துட்டாங்க போலிருக்கு. அதை நீங்க எடுத்து வெச்சிருக்கீங்களா மேடம்? பேக்கோட கலர் டீப் ப்ளூ."

"அப்படி எந்த பேக்கும் இங்கே இல்லையே? உங்க வொய்ஃப் பேர் என்னன்னு சொன்னீங்க?"

"சாருலதா."

"பார்லருக்கு எத்தனை மணிக்கு வந்தாங்க?"

"நாலரை மணி இருக்கும். என்னோட மிஸஸ் வந்த அதே நேரத்துலதான் கலெக்டரோட மனைவியும் உங்க பார்லருக்கு வந்தாங்களாம்!"

"ஸாரி... உங்க மனைவி உங்களுக்குத் தப்பான தகவல் கொடுத்திருக்காங்க. கலெக்டரோட வொய்ஃப் இந்த பார்லரோட கஸ்டமர்தான். ஆனா, நேத்து அவங்க வரலையே!"

"ஆர் யூ ஷ்யூர்?"

"ஏன்... சத்தியம் பண்ணினாத்தான் நம்புவீங்களா?"

"ஸாரி மேடம்! என் மனைவி வேற யாரையோ பார்த்துட்டு கலெக்டரோட வொய்ஃப்னு நினைச்சுட்டா போலிருக்கு. பை த பை... அந்த ப்ளூ பேக் அங்கே இல்லையா மேடம்?"

"ஒரு சுருக்குப் பை கூடக் கிடையாது!" - எதிர்முனை சூடாவதை உணர்ந்துகொண்ட விஷ்ணு, தன் செல்போனை அணைத்தான். விவேக்கிடம் விஷயத்தைச் சொல்ல... அவன் பங்கஜ்குமாரை ஏறிட்டான்.

"சார்... உங்க மனைவி நேத்திக்கு பியூட்டி பார்லருக்குப் போகலை. போனதா உங்க கிட்டே பொய் சொல்லியிருக்காங்க. மேற் கொண்டு என்ன செய்யலாம் சார்?"

DAILYJOKESANDSTORIES.COM

"இனிமேலும் என்னால் பொறுமையாக இருக்க முடியாது மிஸ்டர் விவேக். மின்மினியைக் கூப்பிட்டு மைக்கேல் எர்னஸ்ட்டையும் அல்போன்ஸையும் உனக்குத் தெரியுமான்னு கேட்டுட வேண்டியதுதான்!"

பங்கஜ்குமார் நாற்காலியினின்றும் ஒரு நேர்க் கோட்டைப்போல் எழுந்து நின்றார்.

நியூயார்க்

காமாட்சி காட்டிய போட்டோவைப் பார்த்து விட்டுச் சில விநாடிகள் சுவாசிக்கத் திணறிய பின் இயல்புக்கு வந்தான் விஜேஷ்.

"இ... இந்த போட்டோ உங்ககிட்டே எப்படி?"

காமாட்சியின் உதட்டில் ஒரு புன்முறுவல்.

"உங்க தவிப்பு எனக்குப் புரியுது விஜேஷ். என்னடா இது... நாம கல்யாணம் பண்ணிக்கப்போற வாசமதியோட போட்டோ இவன்கிட்டே இருக்கேனு உங்க மனசுக்குள்ளே ஒரு நெருடல். நானே சொல்லிடறேன். இன்னும் மூணு மாசத்துல நீங்க கல்யாணம் பண்ணிக்கப்போற அந்த வாசமதி என்னோட கஸின் சிஸ்டர்தான்.

நீங்க நியூயார்க் வரப்போறது பத்தியும், அங்கே ஒரு வீடு வாங்கப் போறது பத்தியும் வாசமதி என்கிட்டே சொன்னா. மாப்பிள்ளைக்குத் துணையா இருந்து நல்லபடியா பார்த்துக்கோன்னு சித்தியும் சித்தப்பாவும் எனக்கு ஏகப்பட்ட அட்வைஸ். பதிலுக்கு நானும், என்னைப்பத்தி மாப்பிள்ளைகிட்டே எதுவும் சொல்ல வேண்டாம்; நான் அவரை க்ளோஸா ஃபாலோ பண்ணி தேவையான உதவி களைப் பண்றேன். சரியான நேரத்துல நானே என்னை இன்ட்ரடியூஸ் பண்ணிக்கிறேன்னு சொல்லியிருந்தேன்..."

விஜேஷ் புன்னகைத்தான். "வெரி இன்ட்ரஸ்டிங்! நான் கல்யாணம் பண்ணிக்கப்போற வாசமதிக்கு கஸின் பிரதர் நீங்க என்கிற விஷயம் எதிர்பார்க்காத ஒண்ணு. பை த பை... நான் ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்கப்போற விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நியூயார்க் ஏர்போர்ட்டிலேயே உங்களைச் சந்தித்துப் பேச நான் வந்திருந்தேன். லௌன்ச்ல நான் வெயிட் பண்ணிட்டு இருந்தப்போ, ஃப்ளோராவைப் பார்த்தேன். ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்க வந்த இரண்டு பேர் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போன மேட்டரை நியூயார்க்கில் உள்ள மற்ற பத்திரிகைகள் மறந்துபோனாலும், எங்களுடைய 'நியூயார்க் டேஸ்' மறக்கத் தயாராக இல்லை. அதனால, எனக்குக் கீழே வேலைபார்க்கிற ஒரு பெண் நிருபரை ஃப்ளோரா கிட்டே அனுப்பி, செய்திகள் சேகரிக்க முயற்சி பண்ணினேன். பட், அவங்க பிடி கொடுக்கலை.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இந்தச் சூழ்நிலையில் ஃப்ளோராவை ஏர்போர்ட்டில் பார்த்ததும், யாரை வரவேற்க வந்திருக்காங்கன்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன். உங்களைத்தான்னு தெரிஞ்சதும், ஆடிப்போயிட்டேன். நீங்க நியூயார்க் வந்தது ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்கத்தான் என்கிற விஷயம் தெரிஞ்சதும் அதிர்ச்சியாயிட்டேன். ஃப்ளோரா உங்ககூடவே இருக்கும்போது, உங்களை எப்படி வார்ன் பண்றதுன்னு யோசிச்சேன். பிறகு, என் மிமிக்ரி கலையை உபயோகப்படுத்திக்கிட்டேன். கடைசி வரைக்கும் என் எச்சரிக்கையை நீங்க சட்டை பண்ணாததாலே இதோ, நேரிடையாகவே ஆஜர் ஆகிட்டேன்."

"ஸாரி மிஸ்டர் காமாட்சி! எனக்கு எப்பவும் வெளிப்படையான பேச்சுதான் பிடிக்கும். மிமிக்ரி செஞ்சு பேசுறது, மொட்டைக் கடுதாசி எழுதறது இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. அதை நான் நம்பவும் மாட்டேன்."

"ஓ.கே! இப்பதான் வெளிச்சத்துக்கு வந்துட்டேனே! இனிமேலாவது நான் சொல்றதை நம்புவீங்களா?"

"ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்க வந்த அந்த ரெண்டு பேரும் கொலை செய்யப்பட்டதாகச் சொல்றது எந்த அளவுக்கு உண்மை? அதுக்கான ஆதாரங்கள் உங்ககிட்டே இருக்கா?"

"இன்றைய நிலவரப்படி மிகப் பிரபலமான பத்திரிகை 'நியூயார்க் டேஸ்'. அங்கே

சீ்ப் ரிப்போர்ட் டரா வொர்க் பண்ற நான், கையில் ஆதாரங்கள் இல்லாமல் வாயைத் திறப்பேனா விஜேஷ்?

வீட்டை வாங்க முயற்சி பண்ணி இறந்துபோன பெண்ணின் பெயர் பிரிட்டனி ஜான்சன். ஆணின் பெயர் ஜான் கரோல். இந்த இரண்டு பேரும் அடுத்தடுத்து ஹார்ட் அட்டாக்கில் இறந்துபோனதால் நியூயார்க் போலீஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டு, கோர்ட் உத்தரவு வாங்கி, கல்லறைத் தோட்டத்தில் புதைக்கப்பட்ட இருவரின் உடல்களையும் தோண்டி எடுத்து, போஸ்ட்மார்ட்டம் செய்தார்கள். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட், அவர்கள் இறந்துபோனது ஹார்ட் அட்டாக்கில்தான் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டது."

"அப்புறமென்ன..?"

"அதை எப்படி நம்பறது விஜேஷ்? அந்த ரிப்போர்ட் சொன்னது முழுப் பொய்!"

"பொய்யா?"

"ஆமாம், 'உடல்களை போஸ்ட்மார்ட்டம் பண்ணி போலீஸ்கிட்ட ரிப்போர்ட் கொடுக்கும்போது, அதுல இயற்கையான மரணம் என்கிற வார்த்தை இருக்கணும்; தவிர, போலீசுக்குச் சந்தேகம் வர்ற மாதிரி எந்த வார்த்தை எழுதப்பட்டாலும், நீங்க உயிரோடு இருக்க மாட்டீங்க'ன்னு அந்த ரெண்டு டாக்டர்களையும் போன்ல சம் எக்ஸ் மிரட்டியிருக்காங்க. டாக்டர்களும் பயந்து அவங்க சொன்னதுபோலவே ரிப்போர்ட்ல எழுதிக்கொடுத்துட்டாங்க!"

LAVAN_JOY@YAHOO.COM

"இது எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது?"

"உடல்களை போஸ்ட்மார்ட்டம் பண்ணின ரெண்டு டாக்டர்களில் ஒருத்தர் இந்தியர். மும்பை யைச் சேர்ந்தவர். பேர் முகேஷ் குப்தா. ராத்திரி நேரங்கள்ல மனச்சாட்சி அவரைப் பிறாண்டி எடுத் திருக்கு. அந்த இம்சையைத் தாங்க முடியாம எனக்கு போன் பண்ணி எல்லா விஷயத்தையும் சொல்லி, உண்மையான போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டையும் தபால்ல அனுப்பிவெச்சுட்டார்.

அதுல, 'இது ஒரு கொடூர மரணம். இறந்துபோன இரண்டு பேரின் இதயங்களும் வெடித்துச் சிதறி, சின்னச் சின்ன சதைத் துணுக்குகளாக அவர்களுடைய விலா எலும்புகளில் ஒட்டிக்கொண்டு இருந்தது. ரத்த நாளங்கள் சின்னச் சின்னத் துண்டுகளாக வெட்டுப் பட்டுத் தெரிந்தன. இது ஓர் அரிதான மரணம். ஆனால், இயற்கையான மரணம் அல்ல..."

காமாட்சி சொல்லச் சொல்ல... விஜேஷ் முதல் தடவையாகப் பயந்தான். அவனுடைய முதுகுத் தண்டுவடத்தில் ஒரு ஐஸ் பார் வழுக்கிக்கொண்டு போயிற்று!

கேள்வி: உலகத்திலேயே இரண்டாவது சுவையான குடிநீர்

என்று கோவை சிறுவாணி நீருக்கு பெயர் கிடைத்துள்ளது. முதலிடம் எந்த நாட்டில் உள்ள நீருக்குக் கிடைத்துள்ளது?

1.சிட்னி 2. பெர்லின் 3. க்ளாஸ்கோ

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணை டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம் பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 29.12.09-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

-பறக்கும்...

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இனி, மின்மினி

.

நியூயார்க்

விஜேஷ் தன் வியர்த்த முகத்தை கர்சீப்பால் ஒற்றிக்கொண்டே, காமாட்சியை ஒரு கலவரப் பார்வை பார்த்தபடி கேட்டான்... "டாக்டர் முகேஷ் குப்தா அனுப்பிவெச்ச உண்மையான போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் இப்போ உங்ககிட்டே இருக்கா?"

"இருக்கு."

"போன்ல மிரட்டினவங்களுக்கு இந்த உண்மை தெரிஞ்சா, டாக்டர் முகேஷ் குப்தாவோட உயிருக்கு ஆபத்து வராதா? எப்படி அவ்வளவு தைரியமா உண்மையான போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை உங்களுக்கு அனுப்பிவெச்சார்?"

"ரிப்போர்ட்டை அனுப்பின அவர், அந்த ரிப்போர்ட்டோடு ஒரு கடிதத்தையும் அனுப்பி இருந்தார். அந்தக் கடிதத்தில் எக்காரணத்தைக்கொண்டும் தன் பெயர் வெளியே வரக் கூடாதுன்னு மென்ஷன் பண்ணியிருந்தார். போலீஸுக்கும் விஷயத்தைக் கொண்டுபோகாம ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர் என்கிற முறையில் பிரிட்னி ஜான்சன், ஜான் கரோல் ரெண்டு பேரின் கொடூரமான மரணங்களுக்குக் காரணமான கொலைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும்படி சொல்லியிருந்தார். தவிர, கேஸ் சம்பந்தமா தன்னைப் பார்த்துப் பேச வரக் கூடாதுன்னும் உத்தரவு போட்டிருந்தார். இப்போதைக்கு என்னோட பாடுதான் பெரிய திண்டாட்டம். கேஸை போலீஸுக்கும் கொண்டுபோகாம, தனியாவும் டீல் பண்ண முடியாம திணறிட்டு இருக்கேன்."

RAVAN_JOY@TAMILTORRENTS.COM

விஜேஷ் இப்போது ஓரளவுக்குத் தெளிந்தவனாகப் பேச ஆரம்பித்தான். "காமாட்சி! இந்த விபரீதமான கேஸை நீங்க தனி ஆளா டீல் பண்றது ரொம்பவும் ரிஸ்க்! போலீஸுக்கு விஷயத்தைக் கொண்டுபோயிடறதுதான் பெட்டர்."

"அப்படிக் கொண்டுபோனா, டாக்டர் முகேஷ் குப்தாவை வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டியிருக்கும். அதை அவர் விரும்ப மாட்டார்."

"டாக்டர்கிட்டே பேசிப் பார்க்கலாமே?"

"ரெண்டு தடவை முயற்சி பண்ணிட்டேன். அவர் என்னைச் சந்திக்கவே மறுத்துட்டார்."

"நீங்களும் நானும் நேரிடையா டாக்டரைப் போய்ப் பார்த்தா என்ன?"

"வேண்டாம் விஜேஷ். நான் ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர். என்னால இந்த கேஸைத் தனியா இன்வெஸ்டிகேட் பண்ணி குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியும்னு நினைக்கிறேன். கொலைக் குற்ற வாளி யார்னு ஓரளவு யூகம் பண்ணின பிறகு, போலீஸுக்குப் போனா யாருக்கும் எந்தப் பிரச்னையும் இருக்காது."

"சரி, நானும் இந்த விஷயத்தில் உங்களுக்கு உதவலாம்னு இருக்கேன்."

"நோ விஜேஷ்! நீங்க இதுல இன்வால்வ் ஆக வேண்டாம். இன்னும் மூணு மாசத்தில் உங்க கல்யாணம். இந்த நிலைமையில் நீங்க எந்த ரிஸ்க்கும் எடுக்க வேண்டாம். ஃப்ளோராவை நாளைக்கு மீட் பண்ணிப் பேசும்போது, வீடு வாங்கற எண்ணத்தைத் தற்போதைக்கு டிராப் பண்ணியிருக்கேன், பிறகு பார்க்கலாம்னு சொல்லிடுங்க."

LAYAL JOY@TAMILTORRENTS.COM

"காரணம் கேட்பாளே..?"

"கேட்டா பேங்க்கை காரணமா சொல்லுங்க. பேங்க் லோன் கிடைக்கிறதுல ஒரு சிக்கல்; அதைச் சரிபண்ண உடனடியா லண்டன் புறப்பட்டுப் போகணும்னு சொல்லிடுங்க."

"ஃப்ளோரா நம்பணுமே?"

"இதோ பாருங்க விஜேஷ், ஃப்ளோரா நம்பறதுபத்தியும் நம்பாததுபத்தியும் நாம கவலைப்படக் கூடாது. இது உங்க உயிர் பற்றிய பிரச்னை. யாருக்காகவும் எதுக்காகவும் நாம காம்ப்ரமைஸ் ஆகக் கூடாது. டாக்டர் முகேஷ் குப்தாவின் உண்மையான போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டையும் அவர் எழுதியிருந்த லெட்டரையும் நீங்க பார்க்கணும். அப்பதான் இந்த விவகாரத்தோட சீரியஸ்னஸ் உங்களுக்குப் புரியும்!" - சொன்ன காமாட்சி, ப்ரீஃப்கேஸைத் திறந்து ஒரு ஃபைலை எடுத்துப் பிரித்தான்.

காமாட்சி நீட்டிய ஃபைலை விஜேஷ் கை நீட்டி வாங்கிக்கொண்டு இருக்கும்போதே, பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது... "எக்ஸ்கியூஸ்மி ஜென்டில்மேன்!"

விஜேஷ், காமாட்சி இருவரும் திரும்பிப் பார்த்து, முகம் நிறைய திகைப்பைப் பூசிக்கொண்டார்கள். நியூயார்க் போலீஸ் சார்ஜண்ட்ஸ் தாம்ஸனும் ஸ்மித்தும் இன்ஸ்டன்ட் புன்னகைகளோடு தெரிந்தார்கள்.

தாம்ஸன் கையை நீட்டியபடி, "நாங்கள் அந்த ஃபைலைப் பார்க்கலாமா?" என்று கேட்டார்.

"நீங்கள்..?"

"பார்த்தால் தெரியவில்லையா? நியூயார்க் சிட்டி போலீஸ். ஐ'ம் தாம்ஸன். ஹி இஸ் ஸ்மித்... ஐ.டி. காட்ட வேண்டுமா?"

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இப்போதைக்கு இந்த ஃபைல். பிறகு நாங்கள் கேட்கப்போகும் சின்னச் சின்ன கேள்விகளுக்குச் சரியான, தெளிவான பதில்கள்."

காமாட்சி சற்றே கோபமாகக் குரலை உயர்த்தினான்... "திஸ் இஸ் டூ மச்! நாங்கள் இருவரும் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி பெர்சனலாகப் பேசிக்கொண்டு இருக்கிறோம். இதில் உங்கள் குறுக்கீடு தேவை இல்லாத ஒன்று."

ஸ்மித் ஒரு சிக்கனப் புன்னகையோடு காமாட்சி யின் தோள் மீது மெத்தென்று கையை வைத்தார். "மிஸ்டர் விஜேஷைச் சிறிது நேரத்துக்கு முன்புதான் ஆல்பர்ட்ஸன் வீட்டில் லாயர் ஃப்ளோராவோடு பார்த்தோம். அவரைப் பின்தொடர்ந்து வந்தோம். அதோ அந்தத் தூணுக்குப் பின்னால் நின்றபடி எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதான் இருந்தோம். நீங்கள் இருவரும் பேசிக்கொண்ட பாஷை புரியாவிட்டாலும், உங்கள் உரையாடலில் அடிபட்ட பெயர்களை வைத்து விவகாரம் என்ன என்பதைப் புரிந்துகொண்டோம். டாக்டர் முகேஷ் குப்தா என்ற பெயர், போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் என்ற வார்த்தை... தவிர, ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்க முயற்சி பண்ணின பிரிட்னி ஜான்சன், ஜான் கரோல் இரண்டு பேரின் மரணங்களும் உங்கள் பேச்சில் அடிபட்டது. உங்களை மேற்கொண்டு விசாரிக்க இந்த ஆதாரங்கள் போதாதா?" ஸ்மித் புன்னகை அழியாமல் பேசிக்கொண்டே போக, விஜேஷும் காமாட்சியும் ஒருவரையருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"நீங்கள் இருவரும் ஒரு விஷயத்தை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆல்பர்ட்ஸனுக்குச் சொந்தமான அந்த வீட்டை வாங்க அக்ரிமென்ட் போட்ட பிரிட்னி ஜான்சன், ஜான் கரோல் இருவரும்

ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு இயற்கையான முறையில் இறந்துபோகவில்லை என்ற சந்தேகம் நியூயார்க் போலீஸுக்கும் இருந்தது. ஆனாலும், டாக்டர்கள் கொடுத்த போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் இயற்கையான மரணம் என்று குறிக்கப்பட்டு இருந்ததால், சட்டப்படி போலீஸாரால் புலனாய்வு முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. இருந்தாலும், நியூயார்க்கின் ஒரு போலீஸ் பிரிவான 'ஷேடோ ஸ்குவாட்' அந்த இரண்டு பேரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதை ஊர்ஜிதம் செய்து, மறைமுகமாக ஒரு புலனாய்வு முயற்சியை மேற்கொள்ளும்படி எங்களிடம் கேட்டுக்கொண்டது. நாங்களும் முழு மூச்சாக இதில் இறங்கினோம்."

விஜேஷ் குறுக்கிட்டான்... "சார்! சற்று நேரத்துக்கு முன்னால் ஆல்பர்ட்ஸன் வீட்டுக்கு வந்து நேஷனல் அக்வேரியம் கொடுத்த புகாரின் அடிப்படையில் சில்வியாவின் மியூஸியத்தைப் பார்க்க வந்ததாகச் சொன்னீர்களே, அது எதற்காக?"

தாம்ஸன் சிரித்தார். "அது அந்த வீட்டில் நாங்கள் நுழைவதற்காகச் சொன்ன பொய். அப்படிப்பட்ட புகார் எதையும் நேஷனல் அக்வேரியம் தரவில்லை. ஆல்பர்ட்ஸன் வீட்டில் என்ன பிரச்னை? அந்த வீட்டை வாங்க வந்து அக்ரிமென்ட் போட்ட அந்த இரண்டு பேர் அடுத்தடுத்து ஏன் இறந்துபோனார்கள்? இந்த இரண்டு முக்கியமான கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொள்ளத்தான் சில திரைமறைவு வேலைகளைச் செய்துகொண்டு இருக்கிறோம். இதில் உங்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான், குற்றவாளிகளை அணுக முடியும்."

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"முதலில் அந்த ஃபைலைக் கொடுக்க வேண்டும். பிறகு, ஓர் அறையில் உட்கார்ந்து பேச வேண்டும்."

தாழிடப்பட்ட ஹோட்டல் அறை.

ஃபைலைப் புரட்டிப் பார்த்து, அதில் இருந்த டாக்டர் முகேஷ் குப்தாவின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டையும், அவர் எழுதிய கடிதத்தையும் படித்த தாம்ஸன், காமாட்சியின் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

"மிஸ்டர் காமாட்சி! டாக்டர் முகேஷ் குப்தாவைக் காட்டிக்கொடுக்காமல், நீங்கள் ஒருவரே தன்னந்தனியாகப் புலனாய்வு செய்து குற்றவாளியைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்ததற்கு நியூயார்க் போலீஸ் சார்பாக என் பாராட்டுதல்கள். பொதுவாக, இந்தியர்களுக்குக் கடமை உணர்வும், பொறுப்பு உணர்வும் அதிகம். அதை இந்த விஷயத்தில் நிரூபித்துக்காட்டிவிட்டீர்கள். இனி, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்; குற்றவாளியை நோக்கி நாம் எந்த வழியில் பயணிக்க வேண்டும்

என்பதை நாம் இப்போது தீர்மானிக்க வேண்டும். இது ஒரு ரகசியப் புலனாய்வு முயற்சி."

காமாட்சி தாம்ஸனை ஏறிட்டான். "சார்! நான் இப்போதுதான் நிம்மதியாகச் சுவாசிக்கத் தொடங்கிஉள்ளேன். ஏனென்றால், பிரச்னை இப்போது முழுக்க முழுக்க போலீஸ் அதிகாரிகளான உங்கள் கைகளில் இருக்கிறது. குற்றவாளியைக் கண்டுபிடிக்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு என்னுடைய ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்!"

"இதில் உங்கள் ஒத்துழைப்பு மட்டும் போதாது மிஸ்டர் காமாட்சி. மிஸ்டர் விஜேஷின் ஒத்துழைப்பும் வேண்டும். இல்லாவிட்டால், குற்றவாளியை நெருங்குவது மிகக் கடினம்."

"என்னுடைய ஒத்துழைப்பையும் தரத் தயாராகஇருக்கேன் சார்!"- சொன்ன விஜேஷைப் புன்முறுவலோடு பார்த்தார் தாம்ஸன்.

"நான் என்ன கேட்கப்போகிறேன் என்று தெரிந்தால், ஒருவேளை நீங்கள் பின்வாங்கலாம்."

"நோ சார்! ஐயாம் வித் மை வேர்ட்ஸ். பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை."

"ஆர் யூ ஷ்யூர்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஷ்யூர் சார்!"

"ஓ.கே. மிஸ்டர் விஜேஷ்! அப்படியானால், நாம் ஒரு பரீட்சைக்குத் தயாராக வேண்டும்."

"பரீட்சையா?"

"ஆமாம். நீங்கள் அந்த வீட்டை வாங்கும் முயற்சியில் இருந்து பின்வாங்கக் கூடாது. நாளைக்கே 'ரேட்' பேசி, அக்ரிமென்ட் போட வேண்டும். அக்ரிமென்ட் போட்ட பின்பு, உங்களைச் சுற்றி நடக்கப்போகிற சம்பவங்களை போலீஸ் கூர்ந்து கவனிக்கும். உங்கள் உயிரைப் பணயம்வைக்கிற முயற்சி இது..."

தாம்ஸன் பேசிக்கொண்டு இருக்கும்போதே, விஜேஷின் செல்போன் சிணுங்கியது. 'எக்ஸ்கியூஸ்மி' சொல்லி, செல்போனை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான். அடுத்த மூன்றாவது மாதம் அவனுக்கு கணவன் என்ற புதுப் பதவியைக் கொடுக்கப்போகிற வாசமதி!

கோவை

பங்கஜ்குமார் ஆத்திரமும் ஆவேசமுமாக எழுந்து நிற்கவும், விவேக்

கையமர்த்தினான்.

"சார்... ப்ளீஸ்! இப்ப உங்க முன்னாடி இருக்கிற நிமிஷங்களை ரொம்பவும் நிதானத்தோடு கையாளணும். உங்க மனைவியைக் கூப்பிட்டு விசாரிக்க ரெண்டு நிமிஷம் போதும். பட், அதோட பின்விளைவுகள் எப்படி இருக்கும்னு தெரியாது. ஒரே ஒருநாள் வெயிட் பண்ணுங்க. மைக்கேல் எர்னஸ்ட் கொலையுண்ட சம்பவத்தில் சின்னச் சின்ன சந்தேகங்கள் நிறைய இருக்கு. அதுக்கெல்லாம் விடை கிடைச்சா, உங்க பிரச்னையிலும் ஒரு தெளிவு பிறக்கலாம். லெட்ஸ் வெயிட் அண்ட் ஸீ!"

விவேக் பேச்சில் பங்கஜ்குமார் கோபம் தணிந்தவராக சோபாவுக்குச் சாய்ந்தார். விஷ்ணு பேச்சைத் தொடர்ந்தான்... "சார்! இந்தப் பிரச்னையில் இன்னொரு பகுதி இருட்டாவே இருக்கு. அது அல்போன்ஸைப்பத்தி கேள்விப்படற செய்திதான். அவன் ஒரு குடிகாரன். 24 மணி நேரத்துல 20 மணி நேரம் போதையிலேயே இருப்பவன். ஏதோ ஒரு விரக்தி அவனோட வாழ்க்கையைப் புரட்டிப்போட்டு இருக்கு. அப்பா, மகன் ரெண்டு பேருமே பெல்லாரியில் இருந்து வந்து கோயம்புத்தூர்ல செட்டில் ஆயிருக்காங்க. டபுள் ஹால் ஏரியாவில் மைக்கேல் எர்னஸ்ட்டுக்கு நல்ல பேர் இருக்கு. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புலிய குளத்தில் இருக்கிற அந்தோணியார் சர்ச்சுக்குப் போய், சர்ச் வாசலில் இருக்கிற பிச்சைக்காரர்களுக்கு ரொட்டியும் வாழைப்பழங்களும் கொடுப்பாராம். அல்போன்ஸுக்கு சர்ச் எந்தப் பக்கம் இருக்குன்னுகூடத் தெரியாதாம். பொறுப்பில்லாத ஒரு மகனைப் பார்த்தா, எந்த ஒரு அப்பாவுக்குமே கோபம் வரும். ஆனா, மைக்கேல் எர்னஸ்ட்டுக்கு அல்போன்ஸ் இப்படி இருக்கிறதுல எந்தக் கோபமும் கிடையா தாம்."

பங்கஜ்குமார் வீட்டின் உள்பக்கம் திரும்பி, மின்மினி தட்டுப்படுகிறளா என்று பார்த்துவிட்டு, விஷ்ணுவை ஏறிட்டார். "அந்த பெல்லாரி சர்ச்சில் எடுக்கப்பட்ட கல்யாண போட்டோ உண்மையானதுதானா... இல்லை, இஸ் தேர் எனி மார்ஃபிங் வொர்க்?"

"மார்ஃபிங் வொர்க் இல்ல சார்... நான் இங்கே ஃபாரன்ஸிக் போய் டெஸ்ட் பண்ணிட்டேன். போட்டோவில் எந்த ஒரு சில்மிஷமும் இல்லை. போட்டோ நிஜமானதுதான்!"

இப்போது விவேக் குறுக்கிட்டான்... "சார்! அந்த போட்டோ ஒரு அசைக்க முடியாத ஆதாரம். அதை நினைச்சாதான் மனசுக்குள்ளே ஒரு பயம் ஓடுது. பட், அந்த போட்டோ என்ன மாதிரியான சூழ்நிலையில் எடுக்கப்பட்டதுன்னு தெரிய வந்தா பரவாயில்லை."

"மிஸ்டர் விவேக்... பெல்லாரி மல்லய்யான்னு ஒருத்தர் இங்கே வந்திருக்கார். அவரைப் பத்திக்கூட உங்ககிட்டே சொல்லியிருக்கேன். அவரை வேணும்னா தனியா ஒரு இடத்துக்குக் கூட்டிப்போய் அந்த சர்ச் போட்டோவைக் காட்டி விவரம்

கேட்கலாமா? மின்மினியோட கடந்த கால வாழ்க்கையைப்பற்றி அவருக்குத் தெரிஞ்சு இருக்கலாம்."

"இப்ப வேண்டாம் சார்... தேவைப்படும்போது அவரை கான்டாக்ட் பண்ணிக்கலாம்."

"பாஸ்! கலெக்டரோட வொய்ஃப் வர்றாங்க!"

விவேக் பேச்சை மாற்றினான். குரலின் டெசிபலை உயர்த்தினான். "சார்! உளவுத் துறை கொடுத்த ரிப்போர்ட்படி டெரரிஸ்ட் ஊடுருவல் நிச்சயமா இந்த சிட்டிக்குள்ள நடந்து இருக்கு. அவங்க இப்ப வெள்ளியங்கிரி ஃபாரஸ்ட் ஏரியாவுக்குள் இருக்கலாம். இல்லேன்னா, வாளையார் ஃபாரஸ்ட்டில் பதுங்கி இருக்கலாம். சிட்டியில் முக்கியமான இடங்களில் செக்போஸ்ட்களை நிறுவி, 24 மணி நேரமும் கண்காணிப்பை கன்டினியூ பண்ணினால்தான் சட்டம்-ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்."

"டோண்ட் வொர்ரி மிஸ்டர் விவேக்! ஏற்கெனவே அதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணிட்டேன். சிட்டியில் சென்சிட்டிவ் ஏரியா எது எதுன்னு கணக்கு எடுத்துட்டு இருக்கோம். உங்களுக்கு நாளைக்குக் காலையில் ரிப்போர்ட் கிடைக்கும்."

மின்மினி பக்கத்தில் வந்தாள். "என்னங்க... பிரேக்ஃபாஸ்ட் ரெடி!"

பங்கஜ்குமார் எழுந்தார். "வாங்க மிஸ்டர் விவேக், விஷ்ணு... லெட்ஸ் ஹேவ் அவர் பிரேக்ஃபாஸ்ட்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

விவேக்கும் விஷ்ணுவும் தயங்க, மின்மினி அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தாள். "ப்ளீஸ் கம்... எல்லாமே என்னோட பிரிப்ரேஷன்தான்! தைரியமா சாப்பிடலாம்."

"தேங்க் யூ மேடம்!" என்றான் விவேக்.

"உங்க வொய்ஃப் ரூபலா எப்படி இருக்காங்க?"

"ஃபைன்!"

மின்மினி, "விஷ்ணு..." என்றபடி ஏறிட்டாள்.

"மேடம்..."

"இன்னமும் நீங்க ஜொள்ளு பார்ட்டிதானா? இன்னும் எத்தனை வயசு வரைக்கும் இப்படியே இருக்கப்போறீங்க?"

"90 வயசு வரைக்கும் மேடம்! அதுக்கப்புறம் திருந்தி, ஆன்மிகத்துக்குப் போய் இளம் பெண் களுக்குச் சேவை செய்யலாம்னு ஒரு திட்டம் இருக்கு" - மின்மினி பலமாகச் சிரிக்க, பங்கஜ் குமாரும் மன இறுக்கம் தளர்ந்து உதட்டில் ஒரு சின்ன சிரிப்பை நெளியவிட்டார். சூழ்நிலை கலகலப்பாக மாறியது.

எல்லோரும் டைனிங்டேபிளை நோக்கிப் போக, ஹாலின் மூலையில் இருந்த லேண்ட்லைன் டெலிபோன் தன் தொண்டையைத் திறந்தது. பங்கஜ்குமார் நின்று டெலிபோனைப் பார்க்க, மின்மினி கையமர்த்தினாள். "நீங்க டைனிங் ரூமுக்குப் போங்க. நான் யார்னு பார்க்கிறேன்!" திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மூவரும் தயக்கமாக நடக்க, மின்மினி டெலிபோனை நெருங்கி ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்.

மறுமுனையில் ஒரு ஆண் குரல் ஒலித்தது. "இது கலெக்டரோட பங்களாவா?"

"ஆமா..."

"கலெக்டர் இருக்காரா?"

"நீங்க யாரு?"

"அல்போன்ஸ்."

-பறக்கும்...

-

இனி,மின்மினி

கோவை

மின்மினி டெலிபோன் ரிஸீவரைக் காதில் சரியாகப் பொருத்திக்கொண்டு குரல் கொடுத்தாள்... "ஸாரி, நீங்க பேசுறது சரியாக் கேட்கலை. என்ன பேர் சொன்னீங்க?"

"மறுபடியும் ஸாரி! ஏதோ பப்ளிக் பூத்தில் இருந்து பேசறீங்களா? ஒரே சத்தமா இருக்கு!"-மின்மினி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, டைனிங் ரூமை நோக்கிப் போய்க்கொண்டு இருந்த பங்கஜ்குமார், வேகமாகத் திரும்பி வந்து அவளருகே நின்றார்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"யார் போன்ல?"

"தெரியலைங்க... ஒரே இரைச்சலா இருக்கு. பி.சி.ஓ-விலிருந்து பேசறாங்க போலிருக்கு. நம்ம பெர்சனல் லேண்ட்லைனுக்குப் போன் பண்றாங்கன்னா நிச்சயமா நமக்கு வேண்டப்பட்டவங்களாத்தான் இருக்கணும்!"

"என்கிட்டே ரிஸீவரைக் குடு. நான் பேசறேன்!"

மின்மினி கொடுத்த ரிஸீவரை வாங்கிக் காதுக்குக் கொடுத்தார். "யெஸ்..."

மறுமுனை இரைந்தது. பஸ் ஹார்ன் சத்தம். புரிந்துகொள்ளமுடியாத பேச்சுக் குரல்கள். நடுவே ஒரு நாயின் குரைப்பு.

"ஹலோ..."

"ஹலோ... யார் பேசறது?"

மறுபடியும் அதே இரைச்சல். பங்கஜ்குமார், ரிஸீவரைக் கையில் வைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தார். மின்மினி டைனிங் ரூமை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தாள். விவேக் வேகமாகப் பக்கத்தில் வந்து, குரலைத் தாழ்த்தி, "என்ன சார்,

போன்ல யாரு?"

"தெரியலை! பட், இந்த லேண்ட்லைன் என் பெர்சனல் போன். ஸோ, பேசற நபர் சாதாரண நபரா இருக்க முடியாது."

விவேக் ஐ.டி. காலரில் அந்த நம்பரைப் பார்த்து ஒரு தாளில் குறித்துக்கொண்டு இருக்கும்போதே இணைப்பு அறுந்தது.

"ரிஸீவரை வெச்சுட்டாங்க!" - பங்கஜ்குமார் பதற்றப்பட... விவேக் தன் செல் போனை எடுத்து, அந்த ஐ.டி. காலர் நம்பரை டயல் செய்தான். மறுமுனையில் ரிங் போயிற்று. நீண்ட நேரத்துக்குப் பிறகு, ரிஸீவர் எடுக்கப்பட்டு ஒரு பெண் குரல் விளித்தது... "ஹலோ..!"

விவேக் கேட்டான்... "யார் பேசறது?"

"நீங்க யாரு?" - பெண் குரல் அதட்டியது.

"போலீஸ்..." - சொன்னதுமே மறுமுனையின் குரலில் குளிர்.

"எ... எ... என்ன வேணும் சார்?"

"அது பி.சி.ஓ-வா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஆமா சார்."

"உன் பேர் என்ன?"

"பாக்யம் சார்."

"எந்த ஏரியா?"

"காந்திபுரம் பஸ்ஸ்டாண்ட் சார்."

"சரி... இதுக்கு முன்னாடி இந்த நம்பரில் பேசினது யாரு?"

"ஒரு ஆள் சார்."

"பக்கத்துல இருக்கானா?"

"இல்ல சார்... லைன் சரியா இல்லைன்னு திட்டிட்டு வேகமா ஓடிப்போய், ஒரு டவுன் பஸ்ல ஏறிட்டான்."

"பேசின ஆள் எப்படி இருந்தான்?"

"அவ்வளவு டீசன்ட்டா இல்ல சார்... அழுக்கான ஷர்ட்-பேன்ட், பரட்டைத் தலை, ஷேவ் பண்ணாத முகம்."

"வயசு?"

"முப்பதுக்குள்ளே இருக்கலாம் சார்."

"மறுபடியும் அவனைப் பார்த்தா அடையாளம் கண்டுபிடிக்க முடியுமா?"

"முடியும் சார்! அவன் கழுத்துல வெள்ளி டாலர் ஒண்ணு தொங்கிட்டு இருந்தது. அப்புறம்..."

"சொல்லு..."

"போதையில் இருந்த மாதிரி தெரிஞ்சது."

"அவன் எந்த டவுன் பஸ்ஸில் ஏறினான்னு தெரியுமா?"

"ஸாரி சார்... காந்திபுரம் பஸ்ஸ்டாண்டில் இருந்து நிமிஷத்துக்கு ஒரு பஸ் உள்ளே வருது... வெளியே போகுது. அவன் ஓடிப் போய் எந்த பஸ்ஸில் ஏறினான்னு பார்க்கலை சார். ஏன் சார்... அவனால ஏதாவது பிரச்னையா?"

"ஆமா! அவன் ஒரு ஈவ்-டீஸிங் பேர்வழி. மறு படியும் போன் பண்ண அங்கே வந்தா, போலீ ஸுக்கு உடனடியா இன்ஃபார்ம் பண்ணு."

"கண்டிப்பா பண்றேன் சார்." LAVAN_JOY@TAMILTORRENTS.COM

விவேக் செல்போனை அணைத்துக்கொண்டே... பங்கஜ் குமாரை ஏறிட்டான். "சார்! பி.சி.ஓ. பெண் சொல்ற விவரங்களை வெச்சுப் பார்க்கும்போது, போன் பண்ணிப் பேசினது அல்போன்ஸா இருக் கலாமோனு என் மனசுக்குப் படுது."

பங்கஜ்குமார் வாஷ்பேசினில் கையைக் கழுவும்போது மின்மினியிடம் இயல்பான குரலில் கேட்டார்... "அந்த போன்காலை நீ அட்டெண்ட் பண்ணினபோது மறுமுனையில் பேசின ஆள் என்ன கேட்டான்?"

"அது கலெக்டர் பங்களாவானு கேட்டான். ஆமான்னு சொன்னதும், அவர்கூடப் பேசணும்னு சொன்னான். நீங்க யார்னு கேட்டேன். அதுக்கு அவன் ஏதோ பேர் சொன்னான். அப்போ பஸ் ஹார்ன் சத்தம் பலமாகக் கேட்டதால, என்ன பேர்னு சரியா காதுல விழலை. பப்ளிக் பூத்தில் இருந்து பேசறீங்களானு கேட்டேன். அதுக்கும் பதில் இல்லை. ஏன்... என்ன பிராப்ளம்? அவன் ஏதாவது தப்பான ஆசாமியா?"

"தப்பான ஆசாமியா இருக்கலாமோனு ஒரு சந்தேகம். பை த பை... உனக்கு அந்த நபரின் குரல் பரிச்சயமான குரல் மாதிரி தெரிஞ்சுதா?"

"இல்லீங்க."

"அவன் தன் பேரைச் சொல்லும்போது பஸ்ஸோட ஹார்ன் சத்தம்கேட்டதால அந்தப் பேர் காதுல விழலை... அப்படித்தானே?"

"ஆமா!"

"கொஞ்சம் உன்னிப்பா யோசனை பண்ணி, அவன் சொன்ன பேரை மெமரியில் ரீ-கலெக்ட் பண்ண முடியுதா பாரு?"

மின்மினி புருவங்களை உயர்த்தினாள். "என்னங்க இது... ஏதோ போலீஸ் விசாரணை மாதிரி இருக்கு?"

விவேக் குறுக்கிட்டான், "மேடம்... சார் இந்த மாவட்டத்தோட கலெக்டர். அவர் வீட்ல இருக் கிற பிரைவஸி டெலிபோனுக்கு பி.சி.ஓ-வில் இருந்து ஒருத்தன் பேசியிருக்கான். இது ஒருசாதார ணமான விஷயம் இல்லை. அந்த நபர் சார்கூடப் பேச விரும்பியிருக்கான். தன் பேரையும் சொல்லிஇருக்கான். அதை நீங்க அரைகுறையாக் கேட்டு இருக்கீங்க. கொஞ்சம் முயற்சி பண்ணீங்கன்னா அந்தப் பேரை உங்களால சொல்ல முடியும்னு சார் நினைக்கிறார். தட்ஸ் ஆல்!"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

மின்மினி ஒரு பெருமூச்சோடு விவேக்கை ஏறிட்டாள். "ஸாரி! நான் அந்த போன்காலை முழு மனசோடு அட்டெண்ட் பண்ணலை. கார ணம், காலையில இருந்தே எனக்கு மனசு சரிஇல்லை. அதுக்குக் காரணமே உங்க கலெக்டர்தான். நேற்றைக்கு மத்தியானத்தில் இருந்தே அவர் சரியில்லை. எங்களுக்குக் கல்யாணமாகி இந்த ரெண்டு மாசத்தில் அவர் இப்படி இருந்து நான் பார்த்தது இல்லை. ஏன் இப்படி இருக்கீங்கன்னு கேட்டா, டெரரிஸ்ட் பிரச்னைங்கிறார். அதை நம்பறதா வேண்டாமான்னு தெரியலை. இப்படிப்பட்ட ஒரு குழப்ப மனசோடு அந்த போன்காலை அட்டெண்ட் பண்ணினேன். போன்ல பேசின நபர் தன்னோட பேரைச் சொன்னான். நான் அதை அவ்வளவாக் கவனிக்கலை. அதுவும் இல்லாம, அப்போ ஹார்ன் சத்தமும் வந்தது."

"ஓ.கே. மேடம்! நான் இப்போ சில பெயர்களைச் சொல்லிட்டு வர்றேன். அதுல ஏதாவது ஒரு பெயர் உங்களை உசுப்பி, இந்தப் பெயர்தான்னு சொல்லவைக்கலாம்... சொல்லட்டுமா?"

மின்மினி தலையாட்டினாள்.

"ம்... சொல்லிட்டு வாங்க..."

விவேக் மின்மினியின் முகத்தை உன்னிப் பாகப் பார்த்தபடி ஒவ்வொரு பெயராகச்

சொல்ல ஆரம்பித்தான்.

"பார்த்திபன்..."

"இல்லை."

"அரவிந்தன்..."

"இல்லை."

"விஸ்வநாதன்..."

"இல்லை."

"அல்போன்ஸ்..."

மின்மினியின் முகத்தில் சின்ன தாக ஒரு மின்னல்!

நியூயார்க்

செல்போனைக் காதுக்குக் கொடுத்து மெள்ள "ஹலோ" என்றான் விஜேஷ் மறுமுனையில் வாசமதி செல்லமாகச் சீறினாள்... "என்ன, மாப்பிள்ளை சார்... நியூயார்க் போனதும் இந்த கோயம்புத்தூர் அம்மிணியை மறந்துட்டீங் களா? போய்ச் சேர்ந்ததும் போன் பண்றேன்னு சொன்னீங்க. காத்துக் காத்து பூத்துப் போயிட்டேன்."

LAVANYA@TAMILPARENTS.COM

"ஸாரி வாசமதி! நியூயார்க் ஏர்போர்ட்டில் இறங்கினதில் இருந்து இந்த நிமிஷம் வரைக்கும் நடந்த சம்பவங்களை லோடு பண்ணணும்னா, ரெண்டு லாரி வேணும். நான் முழுசா மூச்சுவிட்டு ரெண்டு மணி நேரம் ஆகுது."

"ஏன்... என்ன பிரச்னை?"

"அதை எல்லாம் செல்போன்ல சொல்லிட்டு இருக்க நேரம் இல்லை. மத்தியானத்துக்கு மேல நானே போன் பண்றேன்."

"என்னோட கஸின் பிரதர் காமாட்சி உங்களை வந்து பார்த்தாரா?"



"ம்... பார்த்தார், பேசினார். இப்போ பக்கத்துலதான் இருக்கார்."

"நியூயார்க்ல நீங்க வீடு வாங்கப் போறதைப்பத்தி காமாட்சிகிட்டே

சொல்லியிருக்கேன். அவர் உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவார். அவர் ஒரு பிரஸ் ரிப்போர்ட்டரா இருக்கிறதால நியூயார்க் சிட்டியில் ஒவ்வொரு அங்குலமும் அவருக்குத் தெரியும். அவரை யாரும் ஏமாத்த முடியாது. மிமிக்ரி நல்லாப் பண்ணுவார். அதிலும் லேடீஸ் வாய்ஸ் சூப்பர்பா இருக்கும். போனை அவர்கிட்ட கொஞ்சம் கொடுங்களேன்!"

"ஒன் மினிட்!" என்று சொன்ன விஜேஷ், தன் செல்போனை காமாட்சியிடம் கொடுக்க... அவன் வாங்கிக்கொண்டு ஜன்னல் பக்கமாகப் போய் நின்று பேசினான்.

விஜேஷ், ஸ்மித்தையும் தாம்ஸனையும் ஒரு புன்னகையோடு ஏறிட்டபடி சொன்னான்... "என் னிடம் இப்போது செல்போனில் பேசியது என் வுட்பி!"

"இஸிட்... எப்போது திருமணம்?"

"இன்னும் மூன்று மாதம் கழித்து..."

"காதல் திருமணமா?"

"இல்லை. அரேஞ்ச்டு மேரேஜ்தான்!"

தாம்ஸன் பெருமூச்சுவிட்டு, தன் இரண்டு தோள்களையும் ஜெர்க் செய்தபடி சொன்னார், "ஸாரி! இன்னும் மூன்று மாதங்களில் உங்களுக்குத் திருமணம் நடக்கப்போகிற நிலையில் உங்களை விஷப் பரீட் சைக்கு உட்படுத்துவது சரியில்லை. பரவாயில்லை, குற்றவாளியைக் கண்டுபிடிக்க நாங்கள் வேறு ஏற்பாடு செய்துகொள்கிறோம்..."

LAVAN JOY@TAMILTORRENTS.COM

விஜேஷ் குறுக்கிட்டான், "நோ சார்! என் உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்க நியூயார்க் போலீஸ் இருக் கும்போது நான் ஏன் பயப்படவேண்டும்?"

"உங்களுடைய ஆர்வத்துக்கு நன்றி மிஸ்டர் விஜேஷ்! இருந்தாலும், யோசிக்க அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், கொலையாளி அதிபுத்திசாலியாக இருப்பதுபோல் தோன்றுகிறது. பொதுவாகவே, நியூயார்க்குக்கு 'க்ரைம் சிட்டி' என்று ஒரு கெட்ட பெயர் உண்டு. உலகிலேயே அதிகக் குற்றங்கள் நடக்கும் நகரம் இது. இங்கே பல குற்றங்கள் விஞ்ஞானத்தின் உதவியோடு செய்யப்படுகின்றன. எனவே, நீங்கள் இந்த விஷப் பரீட்சையில் இறங்குவதற்கு முன்னால், ஒரு தடவைக்குப் பல தடவை யோசித்துப் பார்த்துவிடுவது நல்லது!"

தாம்ஸன் பேசிக்கொண்டு இருக்கும்போதே காமாட்சி பக்கத்தில் வந்தான். "விஜேஷ்! அவங்க சொல்றது சரிதான். தேவை இல்லாம ஏன் ரிஸ்க் எடுக்கணும்!"

விஜேஷ், காமாட்சியை ஏறிட்டான். "வாசமதிகிட்ட இந்தப் பிரச்னையைப்பத்தி ஏதாவது சொன் னீங்களா?"

"சொல்லுவேனா? சொன்னா, அங்கே ஒரு பிரள யமே நடந்துடுமே!"

"இனியும் சொல்ல வேண்டாம்! நியூயார்க் போலீஸுக்கு உதவுறதா நான் முடிவு பண்ணிட்டேன். நாளைக்கு அந்த வீட்டை வாங்க அக்ரிமென்ட் போடத்தான் போறேன்!"

"தேங்க் யூ மிஸ்டர் விஜேஷ்! நீங்கள் உங்கள் உயிரைப்பணயம்வைத்து, போலீஸுக்கு உதவ முன் வந்த காரணத்தால், உங்கள் மீதும் உங்கள் நாட்டின் மீதும் இப்போது ஒரு தனி மரியாதையே ஏற்பட்டுள்ளது. நாங்கள் எங்கள் போலீஸ் துறை மூலம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. நீங்கள் இப்போது ஓய்வு எடுங்கள். முடிந்தால் இரவு பேசுவோம்!" - தாம்ஸனும் ஸ்மித்தும் கை குலுக்கி விடைபெற்றுப் போனதும், காமாட்சி விஜேஷின் தோளைத் தொட்டான். "எனக்குக் கொஞ்சம் பயமாயிருக்கு..."

விஜேஷ் சிரித்தான். "எனக்குக் கொஞ்சம்கூடப் பயம் இல்லை. எனக்கு 101 வயசுன்னு ஜோசியர்கள் சொல்லியிருக்காங்க. நாளைக்கு அக்ரிமென்ட் போடும்போது நீங்களும்கூட இருக்கீங்க, காமாட்சி!"

"இருப்பேன்!"

விஜேஷ் குளித்துச் சாப்பிட்டு, சிறிது நேரம் டி.வி. பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, கனமான கம்பளிக்குள் நுழைந்து தூக்கம் போட்டான். கண் விழித்தபோது சாயந்தரம் 6 மணி. சீஸ் தடவிய பிரட் பீஸ்களையும், ப்ளாக் காபியையும் வர வழைத்துச் சாப்பிட்டு முடித்தபோது, ஃப்ளோரா செல்போனில் கூப்பிட்டாள்.

LAVANYA@THAMIZHKURINJI.COM

"விஜேஷ்! உங்கள் மனதில் எந்த மாற்றமும் இல்லையே?"

"கண்டிப்பாக இல்லை. நாளைக்குக் காலையில் அக்ரிமென்ட்."

"ஆனால், நீங்க வீட்டை வாங்கப் பயந்து பின் வாங்கிவிடுவீர்களோ என்று வீட்டுச் சொந்தக் காரர்கள் பயப்படுகிறார்கள்."

"அந்தப் பயமே அவர்களுக்கு வேண்டாம்."

"நாளைக்கு அக்ரிமென்ட் போட்டு, முன் பணத் துக்கான செக்கைக் கொடுக்கிற வரையில் அவர் களுக்கு நம்பிக்கை இருக்காது!"

"மிஸ் ஃப்ளோரா! உங்களுக்கு என் மீது நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா?"

"ஹண்ட்ரட் பர்ஸன்ட்!"

"அது போதும்..."

"நாளை காலை போன் செய்கிறேன். எத்தனை மணிக்கு வரவேண்டும் என்பதையும் சொல்கிறேன்."

"நல்லது!" - விஜேஷ் செல்போனை அணைத்தான். ஜன்னலுக்கு வெளியே சாயந்தர இருட்டில் நியூயார்க் வெளிச்சப் புள்ளிகளில் ஒரு மெகா வைர நெக்லஸ் மாதிரி ஜொலித்தது. 'டி.வி. பார்க்கலாமா? இல்லை, விட்ட தூக்கத்தைத் தொடரலாமா?' - விஜேஷ் யோசித்து ஒன்றைத் தேர்ந்து எடுப்பதற்குள் -அந்தச் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான். உள்பக்கமாகச் சாத்தியிருந்த அறைக் கதவை யாரோ திறக்க முயற்சி செய்து கொண்டு இருந்தார்கள்.

'யாரது?' - விஜேஷ் படுக்கையில் இருந்து எழுந்து நின்று கலவரத்துடன் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே, அந்த அழகான அமெரிக்கப் பெண் கதவை ஓசைப்படாமல் திறந்துகொண்டு உள்ளே வந்தாள்.

இளம் பெண். அணிந்திருந்த மேல் சட்டையில் பட்டன்கள் கழன்றிருந்தன. மினி ஸ்கர்ட் அபாய கரமான உயரத்தில் இருந்தது.

கையில் கூர்மையாக ஏதோ ஆயுதம்!

-பறக்கும்...

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இனி மின் மினி

நியூயார்க்

விஜேஷ் அந்த அழகான பெண்ணையும், அவள் கையில் இருந்த மிகச் சிறிய கூர்மையான ஆயுதத்தையும் பார்த்து, மிரண்டு போனவனாகக் கட்டிலில் இருந்து எழ முயன்றான். அவளுடைய லிப்ஸ்டிக் பூசிய அழகான உதடு களில் இருந்து அமெரிக்க ஆங்கி லம் வெடித்தது...

"அசையாதே... அப்படியே உட்கார்! இப்போது நான் சொல்லப்போகும் இரண்டு கோரிக்கைகளைக் கவனமுடன் கேள். அதில் ஒன்றைத் தேர்ந்தெடு! இரண்டில் நீ எதைத் தேர்ந்தெ டுத்தாலும், எனக்குச் சந்தோஷமே! என்னுடைய கோரிக்கைகளை நீ அலட்சியப்படுத்தினாலோ அல்லது நீ என்னைத் தாக்க முயன்றாலோ, என் கையில் இருக்கும் இந்தக் கூர்மையான ஆயுதம் உன் உடம்பில் ரத்தக் கால்வாய் களை உண்டாக்கிவிடும்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பயம் இறுகிப்போன இதயத்தோடு, அசையாமல் அவளைப் பார்த்துக்கொண்டே கேட்டான் விஜேஷ்... "உனக்கு என்ன வேண் டும்?"

"உன்னோடு நான் படுக்கையைப் பகிர்ந்துகொள்ளத் தயார். அப்படிப் பகிர்ந்துகொண்டால், எனக்கு நீ இரண்டாயிரம் டாலர் தர வேண்டும். இது என் முதல் கோரிக்கை. படுக்கையைப் பகிர்ந்துகொள்ள விரும்பாவிட்டால், ஆயிரம் டாலர் கொடுத்துவிடு... போய்விடுகிறேன். இது என் இரண்டாவது கோரிக்கை. இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை அடுத்த ஒரு நிமிடத்துக் குள் நீ தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால், நீ உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஹாஸ்பிடலுக்குப் போய் ஒரு பெரிய தொகையைச் செலவழிக்க வேண்டியிருக்கும். எப்படி வசதி?"

விஜேஷ் அந்த ஏ.சி. அறையிலும் வியர்த்து வழிந்துகொண்டு, எச்சில் விழுங்கியபடியே அவளைப் பார்த்தான். மூளைக்குள் யோசனை ஓடியது. 'இவளை

எப்படி எதிர்கொள்ளலாம்... பதிலுக்குத் தாக்கலாமா? இல்லை, அவள் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு பிரச்னையை முடித்துக்கொள்ளலாமா?'

"என்ன யோசிக்கிறாய்? நான் அழகானவள் மட்டுமல்ல... ஆபத் தானவளும்கூட!"

விஜேஷ் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்.

"ம்... சீக்கிரம்! இன்னமும் 15 விநாடிகள்தான் இருக்கின்றன..."

"நான் ஆயிரம் டாலர் கொடுத்துவிடுகிறேன்..."-விஜேஷ் சொல்ல, அவள் உதட்டைக் கடித்தாள்.

"நான் வேண்டாமா?"

"வேண்டாம்..."

"முட்டாள் இந்தியனே! எனக்கு என்ன குறை... வா! படுக்கையைப் பகிர்ந்துகொள்ளலாம். சந்தோஷமாய்..." - அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவளுடைய இடுப்புச் செயினில் இடம் பிடித்திருந்த செல்போன் ரிங்டோனைத் தெளித்தது. எடுத்து காதுக்குப் பொருத்தியவள் முகம் மாறினாள். விஜேஷை ஒரு பார்வை பார்த்துக்கொண்டே குரலைத் தாழ்த்திப் பேசினாள்...

"வேண்டாமா... ஏன்?" LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"....."

"இதை நீ முதலிலேயே சொல்லியிருக்கலாமே?"

"....."

"சரி.... நான் கிளம்புகிறேன்!" - பேசி முடித்தவள் செல்போனை அணைத்தாள்.

"மன்னிக்க வேண்டும் இந்திய இளைஞனே! அறை மாறி வந்து விட்டேன். சரியான நேரத்தில், சரியான இடத்திலிருந்து தகவல் வந்ததால், இரண்டு பேருமே தப்பித்துக்கொண்டோம்."

அவள் விருட்டென்று அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினாள். விஜேஷ் திகைப்பில் இருந்து மீண்டு, சுதாரித்து நிலைக்கு வரச் சில விநாடிகள் பிடித்தன. 'யாரவள்?'

படுக்கையில் இருந்து எழுந்து டீபாயைத் தள்ளிக்கொண்டு வேகமாக வந்து கதவைத் திறந்து பார்த்தான். அந்த ஹோட்டலின் நீளமான வராந்தா வெறிச்சோடிப்போயிருந்தது. அதற்குள் எப்படி மாயமானாள்?

'அவளை விடக்கூடாது; மடக்க வேண்டும்!' - விஜேஷ் அறையைப் பூட்டிக்கொண்டு

வராந்தாவில் வேகமாக நடந்தான். யாரும் பார்வைக்குச் சிக்கவில்லை. கண்கள் சுழன்றன.

'லி◌்ப்ட்டில் இறங்கிப் போயிருப்பாளோ?'

எதிர்ப்பட்ட லி◌்ப்ட்டுக்குள் நுழைந்து கிரவுண்ட் ◌்ப்ளோருக்கு உரிய பட்டனைத் தட்டினான்.

இருபதே விநாடிகளில் கிரவுண்ட் ◌்ப்ளோர் வந்தது.

ரிசப்ஷன் அறை வெளிச்ச மாகத் தெரிந்தது. விஜேஷ் பார்வையைத் துரத்தி எல்லாப் பக்கமும் பார்த்தான். அந்தப் பெண் தென்படவில்லை.

ரிசப்ஷன் கவுன்ட்டருக்குள் உட்கார்ந்து, லேப்டாப்பைத் தட்டிக்கொண்டு இருந்த இளைஞனை நோக்கிப் போனான். "எக்ஸ்கியூஸ்மீ..."

அந்த இளைஞன் தன் பழுப்பு நிற விழிகளை உயர்த்தினான்.

"யெஸ்..."

குரலைத் தாழ்த்திக்கொண்ட விஜேஷ், நடந்த சம்பவத்தை ஆங்கிலத்தில் நிறுத்தி நிதானமாகச் சொல்லி முடிக்க, அவன் லேப்டாப்பை அணைத்துவிட்டு, திடுக்கிட்டு எழுந்து நின்றான். LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஒரு பெண் ஆயுதத்தோடு வந்து உங்களை மிரட்டினாளா... அதுவும் இரண்டு நிமிடங்களுக்கு முன்பு?"

"ஆமாம்!"

"என்ன மாதிரியான உடை அணிந்திருந்தாள் என்று சொல்ல முடியுமா?"

"கறுப்பு டாப்ஸும் கறுப்பு மிடியும்!"

"இளம் பெண்?"

"ஆமாம்!"

"என்ன வயது?"

"25-ல் இருந்து 30-க்குள் இருக்க லாம்."

"மன்னிக்க வேண்டும்! கடந்த ஒரு மணி நேரமாக இதே இடத்தில் அமர்ந்திருக்கிறேன். நீங்கள் சொல்கிற அடையாளத்தில் எந்த ஒரு பெண்ணையும் பார்க்க வில்லையே! அதுவும் இல்லாமல், மாலை ஆறு மணிக்கு மேல் இந்த ஹோட்டலில் விசிட்டர்கள் வர அனுமதி இல்லை. அப்படி யாராவது விசிட்டர்கள்

வந்தால், இந்த வரவேற்பறையிலேயே உட்காரவைத்துப் பேசி அனுப்பிவிட வேண்டும்."

"பிறகு, அந்தப் பெண் என்னுடைய அறைக்கு எப்படி வந்தாள்? ஒருவேளை அந்தப் பெண்ணும் இதே ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கியிருக்கிறாளோ என்னவோ?"



"அதற்கும் வாய்ப்பில்லை."

"என்ன சொல்கிறீர்கள்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இப்போது ஹோட்டலில் 32 பேர் மட்டும் அறை எடுத்துத் தங்கியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்கூடப் பெண் இல்லை."

விஜேஷ் அயர்ந்துபோனவனாக அந்த வரவேற்பு இளைஞனைப் பார்த்தான். "அப்படியானால் நான் சொல்வது பொய் என்கிறீர்களா?"

"அப்படி நான் சொல்ல வில்லை. வியப்பாக உள்ளது என்றுதான் சொல்கிறேன்!"

"சரி... என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?"

"போலீஸுக்குத் தகவல் கொடுத்துவிடலாமா? போலீஸ் வந்தால் விசாரணை என்கிற பெயரில் உங்களைக் கேள்விகளால் துளைத்துச் சல்லடையாக்கிவிடுவார்கள், பரவாயில்லையா?"

"பரவாயில்லை! என்னிடம் எந்தத் தப்பும் இல்லை. போலீஸுக்குத் தகவல் கொடுங்கள்."

பத்தே நிமிடத்தில் இரண்டு போலீஸ் அதிகாரிகள் வந்துவிட்டார்கள். நல்ல உயரத்தில் பந்தயக் குதிரைகள் போல் தெரிந்தார்கள். பதற்றப்படாமல் பேச்சை ஆரம்பித்தார்கள்.

"என்ன நடந்தது... சொல்லுங்கள்?"

விஜேஷ் சொன்னான். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் கண்ணைச் சிமிட்டிக்கொண்டே கேட்டார். "படுக்கையைப் பகிர்ந்து கொள்ள அவள் எவ்வளவு பணம் கேட்டாள்?"

"இரண்டாயிரம் டாலர்."

"கொள்ளை!" சிரித்துவிட்டுக் கேட்டார்... "அழகாக இருந்தாளா?"

"ஆமாம்."

"நீங்கள் உங்கள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள ஆயிரம் டால ரைத் தாரைவார்க்க நினைத்தபோது, அவளுக்கு ஒரு செல்போன் அழைப்பு வந்தது. அவள் செல்போனில் பேசிவிட்டு 'அறை மாறி வந்துவிட்டேன். சரியான நேரத்தில், சரியான இடத்தில் இருந்து தகவல் வந்ததால் இரண்டு பேருமே தப்பித்துக் கொண்டோம்' என்று சொல்லி விட்டு, கதவைத் திறந்துகொண்டு வெளியேறிவிட்டாள். நீங்கள் வெளியே வந்து பார்க்கும்போது அவளைக் காணோம். மாயமாய் மறைந்துவிட்டாள்... அப்படித் தானே?"

"ஆமாம்!"

"மிஸ்டர் விஜேஷ்! நீங்கள் நியூயார்க் வருவது இதுதான் முதல் தடவையா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஆமாம்."

"சமீபகாலமாக நியூயார்க்கின் சில ஹோட்டல்களில் இது மாதிரியான சம்பவங்கள் நடக்கின்றன. இங்குள்ள விபசாரப் பெண்கள் ஹோட்டலில் உள்ள மேனேஜரையும், பேரர்களையும் கைக்குள் போட்டுக்கொண்டு, தனியாக அறை எடுத்துத் தங்கிஇருக்கும் அறைக்குள் நுழைந்து 'என்னோடு படு... இல்லையேல் பணத்தை எடு' என்று மிரட்டிப் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த ஹோட்டலிலும் அது மாதிரி நடந்திருக்கலாம். முறையாக விசாரணை மேற்கொண்டால் எல்லா உண்மைகளும் வந்து விடும்."

விஜேஷ் குறுக்கிட்டான்... "சார்! என் அறைக்கு வந்தவள் நீங்கள் சொல்வதுபோல் ஒரு விபசாரப் பெண் இல்லை."

"பின்னே?"

"என் உயிரைப் பறிக்க வந்த வள்."

"பின்பு ஏன் பேரம் பேச வேண்டும்?"

"அவள் விபசார அழகியாக நடிக்க முயற்சி செய்திருக்கிறாள்."

"அவள் விபசாரம் செய்ய வந்த பெண் இல்லையென்று எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அந்தப் பெண்ணுக்குரிய சாகசம் அவளிடம் இல்லை. அவள் கையில் கூர்மையான ஓர் ஆயுதம் இருந்தது. அவளுக்கு செல்போன் அழைப்பு வந்தபோது, எதிர்முனையில் இருந்தவரிடம் கோபமாக 'வேண்டாமா... ஏன்? இதை நீ முதலிலேயே சொல்லிஇருக்கலாமே?' என்று பேசிவிட்டு செல்போனை அணைத்தாள். பிறகு, அவளை நான் விபசார அழகியாக நினைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக 'அறை மாறி வந்துவிட்டேன்' என்று பொய் சொல்லிவிட்டு, விருட்டென வெளியேறிப் போய்விட் டாள்."

"சரி, அவள் ஏன் உங்களைக் கொலை செய்ய நினைக்க வேண்டும்?"

"எனக்குத் தெரியவில்லை."

"சரி... அந்தப் பெண் எப்படி இருந்தாள்?"

விஜேஷ் யோசிக்க... போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் தன் கையில் வைத்திருந்த போட்டோவை அவனிடம் நீட்டினார்.

"இவள்தானா? போட்டோவைப் பாருங்கள்..."

விஜேஷ் போட்டோவை வாங் கிப் பார்த்தான். வியப்பு விழி களை விரித்தது.

"இ... இ... இவளேதான் சார்! இவள் போட்டோ எப்படி உங்கள் கையில்..?"

DAWN JOY@TAMILTORRENTS.COM

"போட்டோ மட்டும் இல்லை... அவளே இப்போது எங்களிடம் தான் இருக்கிறாள். வெளியே வந்து பாருங்கள். எங்களுடைய பேட்ரோல் வாகனத்தின் உள்ளே கை விலங்கோடு உட்கார்ந்திருக்கிறாள்."

கோவை

மின்மினியின் முகத்தில் சின்னதாக மின்னிய அந்த மின்னலைச் சட்டென்று படம் பிடித்துக்கொண்டான் விவேக்.

அவள் கேட்டாள். "கடைசியாக என்ன பேர் சொன்னீங்க..?"

"அல்போன்ஸ்."

"அநேகமா அந்தப் பேராகத்தான் இருக்கும்னு நினைக்கி றேன்."

"ஏன் மேடம், அல்போன்ஸ் என்கிற பேர்ல உங்களுக்கு யாரையாவது தெரியுமா?"

"தெரியாது."

விவேக் பங்கஜ்குமாரிடம் திரும்பி, "சார் உங்களுக்கு?"

"எனக்கும் தெரியாது."

"ஓ.கே! அந்த அல்போன்ஸை இப்போதைக்கு மறந்துடுவோம். அவன் தப்பான பேர்வழியா இருந்தா கண்டிப்பா போலீஸ்ல மாட்டுவான். எல்லாப் பிரச்னைகளையும் மறந்துட்டு, டெரரிஸ்ட் பத்தின வேலைகளையும் மறந்துட்டு இட்லி, பொங்கல் சாப்பிடுவோம். மேடம்... வித் யுவர் பர்மிஷன், நாங்க டைனிங் டேபிள்ல போய் உட்காரலாமா?"

மின்மினி சிரித்தாள். "காலையி லிருந்து அதைத்தானே சொல் லிட்டிருக்கேன். பட், இன்னிக்கு பிரேக்ஃபாஸ்ட் இட்லி, பொங்கல் கிடையாது."

"தென்?"

"தக்காளி தோசை, தேங்காய்ப் பால் ஆப்பம், அப்புறம் வடை சாம்பார்."

"ஆஹா... திவ்யம்!" - விவேக் செயற்கையாக உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு டைனிங் டேபிளில் போய் உட்கார்ந்தான். விஷ்ணுவும் பக்கத்தில் போய் உட்கார, எதிரில் பங்கஜ்குமார் உற்சாகம் இல்லாமல் நாற்காலிக்கு வந்து சாய்ந்தார்.

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

மின்மினி தட்டுக்களை எடுத்து வைத்துவிட்டு, ஹாட்பேக்கில் இருந்த பிரேக்ஃபாஸ்ட் அயிட் டங்களை எடுத்து வர கிச்சனை நோக்கிப் போனாள். விவேக், பங் கஜ்குமாரிடம் குரலைத் தாழ்த்தி, "சார்... இந்த கேஸில் முதல் ப்ளஸ் பாயின்ட் கிடைச்சி ருக்கு!"

"எதைச் சொல்றீங்க விவேக்?"

"உங்க மனைவிக்கு அல்போன்ஸ் யார்னு தெரியலை."

"விவேக்! மின்மினி சொன்னது ஏன் பொய்யா இருக்கக் கூடாது?"

"நீங்க நம்பலையா?"

"நம்பற மாதிரி இல்லையே?"

"ஏன் சார்?"

"விவேக், எனக்கும் மின்மினிக் கும் கல்யாணம் நடந்து ரெண்டு மாச காலமே ஆனபோதிலும், அவளோடு 20 வருஷ காலம் வாழ்ந்த உணர்வு என்கிட்டே இருக்கு. அவளோட ஒவ்வொரு அசைவும் எனக்குத் தெரியும். 'அல்போன்ஸ் என்கிற பேர்ல

உங் களுக்கு யாரையாவது தெரி யுமா?'னு நீங்க மின்மினிகிட்டே கேட்டபோது, அவளோட முகத்தை நான் பார்த்துட்டுதான் இருந்தேன். அவ முகத்துல ஒரு மைக்ரோ செகண்ட் தெரிஞ்ச அந்தப் பிரளய அதிர்ச்சியை நான் பார்த்துட்டேன்.."

"ஸோ... அவங்க சொன்னது பொய்!"

"சர்வ நிச்சயமா..."

"கொஞ்சம் பாஸிட்டிவ்வா திங்க் பண்ணிப் பாருங்களேன் சார்! ஏன் உண்மையா இருக்கக் கூடாது?"

"அதுக்கு வாய்ப்பு இல்லை."

"எதுக்கு வாய்ப்பு இல்லை? மறுபடியும் டெரரிஸ்ட் பிரச்னையைப்பற்றிப் பேச ஆரம்பிச்சுட் டீங்களா? சாப்பிடும்போதாவது கொஞ்சம் அதை மறந்து இருங்க ளேன்!" - படபடவென்று பேசிக்கொண்டே சமையலறையில் இருந்து இரண்டு ஹாட்பேக் குகளோடு வந்தாள் மின்மினி.

விஷ்ணு சிரித்தான். "மேடம்... மூக்கும் ஜலதோஷமும் மாதிரி நம்ம இந்தியாவும் தீவிரவாதிகளும் பின்னிப் பிணைஞ்சு இருக்காங்க. நாம கொஞ்சம் ஏமாந்தாலும் அவங்க தீபாவளி கொண்டாடி, பொங்கல் வெச்சுடுவாங்க. அவங்க திரியைக் கொளுத்திப் போடறதுக்குள்ளே நாம தண்ணி யைத் தெளிச்சாகணும்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நான் அதை வேண்டாம்னு சொல்லலை. மொதல்ல சாப்பி டுங்க. அப்புறமா பேசுங்க." - சொன்னவள், தட்டில் வடையை வைத்து, அதன் தலை மேல் சாம் பாரை ஊற்றினாள்.

"நல்லா குளிப்பாட்டுங்க மேடம்! இந்த சாம்பார் வாச னைக்கே எக்ஸ்ட்ரா எட்டு வடை சாப்பிடலாம் போலிருக்கே! எல்லாமே உங்க பிரிப்ரேஷனா மேடம்?"

"ம்! சமையல் என்னோடது தான். இல்லேன்னா, சாருக்குப் பிடிக்காது. நீங்க சாப்ட்டுட்டே இருங்க; நான் சூடா தக்காளி தோசை வார்த்து எடுத்துட்டு வரேன்."

மின்மினி மறுபடியும் கிச்சனுக் குள் நுழைந்தாள். உதவிக்காக நின்றிருந்த வேலைக்காரியிடம் தோசை வார்க்கச் சொல்லிவிட்டு, வீட்டின் பின்பக்கம் போய் மறை வாக நின்று, இடுப்பில் இருந்த செல்போனை எடுத்துக்கொண் டாள். சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்துவிட்டு, பெல்லாரி மல்லய் யாவின் எண்களை அழுத்தி னாள். மறுமுனையில் ரிங்டோன் போய் மல்லய்யாவின் குரல் கேட்டது... "சொல்லும்மா மின்மினி!"

"ஐயா... நீங்க இப்போ எங்கே இருக்கீங்க?"

"ஆனைக்கட்டிக்குப் பக்கத்துல மாங்கரைன்னு ஒரு ஊர். அந்த ஊர்ல இருக்கிற சப்தமாதர்கள் கோயில்ல இருக்கேன். ஏன்... என்னம்மா விஷயம்? உன்னோட

குரல்ல பதற்றம் தெரியுதே?"

"ஐயா! அந்த அல்போன்ஸ் எப்போ கோயம்புத்தூருக்கு வந்தான்?"

- பறக்கும்...



LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இனி,மின்மினி

.கோவை

பெல்லாரி மல்லய்யா செல்போனின் மறுமுனையில் அதிர்ந்து போனவராக மின்மினியிடம் கேட்டார்...

"எதுக்காகம்மா... அந்த அல்போன்ஸைப்பத்திக் கேக்கறே?"

"அல்போன்ஸ் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் பண்ணியிருந்தான்யா!"

"யாருக்கு... உனக்கா..?"

"எனக்குத்தான் பண்ணியிருப்பான்னு நினைக்கிறேன். போன் வந்தது. நான்தான் அட்டெண்ட் பண்ணேன். அவருக்குத் தெரிஞ்ச க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ் யாராவது இருக்கலாம்னு நினைச்சேன். ஆனா, பேசினது அல்போன்ஸ்."

"உன்கிட்டே என்ன கேட்டான்?"

"பேசினது நான்தான்னு அவனுக்குத் தெரியாது. நான் போன் எடுத்ததுமே அது கலெக்டர் பங்களாவான்னு கேட்டான். நான் ஆமான்னு சொல்லிட்டு, நீங்க யார்னு கேட்டேன். அவன் அல்போன்ஸ்னு சொன்னான். நான் அப்படியே ஆடிப்போயிட்டேன். பக்கத்துல என்னோட கணவர், க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் விவேக், அவரோட அசிஸ்டென்ட் விஷ்ணு எல்லோரும் இருந்தாங்க."

LAYAN_JOY@TAMILTORRENTS.COM

"அ... அப்புறம்?"

"அல்போன்ஸ்னு தெரிஞ்சதுமே நான் அதிர்ச்சியைக் காட்டாம இயல்பா பேசினேன். பேர் சரியா காதுல விழலை... இன்னொரு தடவை சொல்லுங்கன்னு நான் கேட்டுக்கிட்டு இருக்கும்போதே, தெய்வாதீனமாக அவன் பேசிட்டிருந்த பி.சி.ஓ. போனும் சரியா வேலை செய்யாம சத்தம் போட்டது. அதே நேரத்துல என்னோட கணவரும் பக்கத்துல வந்து, போன்ல யார்னு கேட்டு வாங்கிப் பேசினார். போன் போட்ட சத்தத்துல அவராலேயும் பேச முடியலை. ரிஸீவரை வெச்சுட்டார்.

மறுபடியும் போன் வருமோன்னு பயந்துட்டே இருந்தேன். நல்லவேளையா வரலை."

பெல்லாரி மல்லய்யா மறுமுனையில் பதற்றப்பட்டார்.

"என்னம்மா இது... பொங்கி வழியிற பால்குடம் மாதிரி இருக்கிற உன்னோட வாழ்க்கையில் இப்படியரு பிரச்னை முளைவிட்டு இருக்கு. அந்த அல்போன்ஸ§ம் அவனோட அப்பா மைக்கேல் எர்னஸ்ட்டும்..."

"அ... ஐயா! நான் அப்புறமா பேசறேன்... வேலைக்காரி என்னைப் பார்த்து வந்துட்டு

இருக்கா."

"அம்மா! நீ ஒரு காரியம் செய்..."

"சொல்லுங்கய்யா..."

"இன்னிக்குப் பதினோரு மணி சுமாருக்கு ராஜவீதியில் இருக்கிற ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலுக்கு வா. அந்த நேரத்துக்குக் கோயில்ல கூட்டம் இருக்காது. அந்த அம்பாளைத் தரிசனம் பண்ணிட்டு, அவ சந்நிதியில் உட்கார்ந்து அல்போன்ஸ் பிரச்னையைப்பத்திப் பேசுவோம். உனக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஐயா! அவருக்குத் தெரியாமே..."

"எதாவது ஒரு காரணம் சொல்லிட்டு வாம்மா... இந்த விஷயத்தை எல்லாம் நீ இப்படிப் போன்ல பேசக் கூடாது."

"ச... ச... சரிங்கய்யா. கோயிலுக்கு
வர்றேன்..."

வேகவேகமாகப் பேசிவிட்டு செல்போனை அணைத்தாள் மின்மினி. வேலைக்காரி எதிரில் வந்து நின்றாள்.

"அம்மா... ஐயா உங்களைக் கூப்பிட்டார்மா..."

"தோசை வார்த்தியா?"

"பெரிய கல்லையேவெச்சு வார்த்துட்டேம்மா."

'எதுக்குக் கூப்பிட்டிருப்பார்?' மின்மினி யோசித்துக் கொண்டே வேக நடை போட்டு, சமையல்கட்டைக் கடந்து டைனிங் ரூமை நோக்கிப் போனாள். லேசாக சிரிப்புச் சத்தம், காற்றில் சாம்பார் வாசனை.

விஷ்ணு கவிதை சொல்லிக்கொண்டு இருந்தான்.

"அவனும் இல்லை

அவளும் இல்லை

நிற்கிறது காதல் காவியமாக
தாஜ்மகால்!"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

டைனிங் டேபிளில் ஓர் இறுக்கமான சூழ்நிலை நிலவிக்கொண்டு இருக்கும் என்ற நினைப்பில் உள்ளே நுழைந்த மின்மினிக்கு, மூன்று பேரும் உற்சாகமாக இருப்பதைப் பார்த்ததும் அடிவயிற்றில் உறைந்து போயிருந்த பயம் சட்டென்று காணாமல் போயிற்று. அவளும் அந்த உற்சாகத்தில் கலந்துகொண்டாள்.

"என்ன விஷ்ணு... உங்களுக்குக் கவிதைகூட வருமா?"

"என்ன மேடம் இப்படிக் கேட்டுட்டீங்க... நான் போலீஸ் டிபார்ட்மென்ட்டுக்கு வர்றதுக்கு முன்னாடி 'ரஜ்னிஷ் பித்தன்' என்கிற பெயர்ல கவிதைகள் எழுதி ரெண்டு தொகுப்பு போட்டிருக்கேன்."

"அப்படியா... என்ன தலைப்புல?"

"ஒண்ணு, 'கற்கண்டு ஆயுதம்.' ரெண்டாவது, 'மோனலிசாவின் அழகை'..."

"ப்ளீஸ் விஷ்ணு! எனக்கு அதைக் கொண்டுவந்து கொடுங்களேன்... படிச்சுப் பார்க்கலாம்."

"தேடிப்பிடிச்சு வாங்கித்தர்றேன் மேடம்..."

"தேடிப்பிடிச்சு வாங்கித் தர்றீங்களா... ஏன்?"

"பழைய பேப்பர் கடையில் விசாரிச்சுப் பார்த்து வாங்கறதுன்னா சும்மாவா?"

எல்லோரும் சிரித்ததில் சூழ்நிலையின் கனம் இலவம் பஞ்சாக மாறியிருக்க, மின்மினி பங்கஜ்குமாரிடம் திரும்பினாள்.

"நீங்க கூப்பிட்டதாக வேலைக்காரி வந்து சொன்னா..."

"அது ஒண்ணுமில்லை... ஒரு நாலஞ்சு நாளைக்கு நான் கேம்ப் போக வேண்டியிருக்கும் போலத் தெரியுது. நீ வீட்டுல தனியா இருக்கணும், இருப்பியா மின்மினி?"

"கேம்ப் எங்கே?"

"வெள்ளியங்கிரி ஃபாரஸ்ட்... டெரரிஸ்ட் பதுங்கிஇருக்கலாம்னு உளவுத் துறை சொல்லுது. போய் ஆய்வு பண்ணி சி.எம். செல்லுக்கு ரிப்போர்ட் அனுப்பணும். மிஸ்டர் விவேக் அண்ட் விஷ்ணு ரெண்டு பேரும் என்னோடுதான் ஸ்டே பண்ணப்போறாங்க. நீ வீட்ல தனியா இருக்கணும். உன்னால இருக்க முடியுமா?"

மின்மினி புன்னகைத்தாள்.

"என்னங்க இது, நிழலையும் இருட்டையும் பார்த்துப் பயப்படறதுக்கு நான் என்ன எல்.கே.ஜி. படிக்கிற குழந்தையா? நீங்க இந்த டிஸ்ட்ரிக் கலெக்டர். நான் உங்க ஒய்ஃப். இந்த வீட்டோட பாதுகாப்புக்கு செக்யூரிட்டி கார்ட்ஸ் இருக்காங்க. நான் எதுக்காகப் பயப்படணும்? ஸ்ரீலங்காவில் நான் என் அப்பா - அம்மாவோடு மட்டக்களப்பு சின்ன வீட்ல இருக்கும்போது துப்பாக்கி வெடிக்கிற சத்தங்களுக்கு நடுவே சாப்பிட்டு, தூங்கி, வாழ்ந்து பழக்கப்பட்டவ. பயம் என்னைப் பார்த்து பயந்து ஓடிப்போய் ரொம்ப நாளாகுது."

LAVEN.JOY@TAMILTORRENTS.COM

விவேக் வியப்பாக மின்மினியைப் பார்த்தான்.

"மேடம்... நீங்க ஸ்ரீலங்காவா?"

"ம்... நான் பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாமே ஸ்ரீலங்காதான். என்னோட பேரைப் பார்த்தாலே தெரியுமே... காமினி, மாலினி, சந்திரவதனி, மதியாழினி... இந்த வரிசையில் மின்மினியும் ஸ்ரீலங்கா வாசனை அடிக்கிற தமிழ்ப் பெயர்."

"ஓ! இப்படியரு சேஃப்டி லாக்கர் விஷயம் உங்க பேருக்குப் பின்னாடி இருக்கிறதை சார் சொல்லவே இல்லை."

மின்மினி சிரித்தாள், "நேத்திக்கு மத்தியானத்திலிருந்து சார் நார்மலாவே இல்லை. இப்போ அவரோட மனசுக்குள்ளே டெரரிஸ்ட்ஸ் மட்டுந்தான் இருக்காங்க. நான் தொடர்பு எல்லைக்கு அப்பால் இருக்கேன். அவரைப் பழையபடி நார்மலுக்குக் கொண்டு வர வேண்டியது உங்க பொறுப்பு."

விஷ்ணு குறுக்கிட்டான்...

"மேடம்... பிரேக் ஃபாஸ்ட் சாம்பார் வடையோடு நிக்குது. அதுக்கு மேல நகரலை. எதோ தேங்காய்ப் பால், அப்பம், அடை, தோசைன்னு சொன்னீங்க! நானும் நெற்றியில் கையைவெச்சுப் பார்க்கிறேன். கண்ணுக்கெட்டின தூரம் வரைக்கும் எதுவும் தட்டுப்படலையே..."

"ஓ! ஸாரி... பேச்சு சுவாரஸ்யத்துல மறந்துட்டேன்." மின்மினி கிச்சனைப் பார்த்து ஓட, விவேக் பங்கஜ்குமாரிடம் குரலைத் தாழ்த்தினான். "பார்த்தீங்களா சார்! சூழ்நிலை இறுக்கமா இல்லாதபோது வீடு எப்படி இருக்குன்னு! மனசுக்குள்ள புயலே அடிச்சிட்டு இருந்தாலும், உதட்டுக்குப் புன்னகையைக் கொடுத்தா நிறைய விஷயங்களில் நாம ஜெயிக்கலாம். நீங்க கேம்ப் போறேன்னு சொன்னதுமே மிஸஸ் மின்மினியோட முகத்துல ஒரு மைக்ரோ செகண்டுக்கு வெளிச்சம் அடிச்சதை நான் க்ளிக் செய்தேன். நீங்க வீட்ல இல்லாதபோது அவங்களோட செயல்பாடுகள் எப்படியிருக்குன்னு அப்சர்வ் பண்ணாலே போதும்... பூனைக்குட்டி வெளியே வந்துடும்."

"பாஸ்! மேடம் வர்றாங்க..."

"விஷ்ணு ஏதாவது ஜோக் சொல்லு?"

மின்மினி ஹாட்பேக்கோடு பக்கத்தில் வந்ததும் விஷ்ணு பேச்சை ஆரம்பித்தான்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"பாஸ்! எனக்கும் பில்கேட்ஸுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு... அது என்னான்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாதே!"

"நான் அவருக்கு எஸ்.எம்.எஸ். பண்ண மாட்டேன். அவரும் எனக்கு எஸ்.எம்.எஸ். பண்ண மாட்டார். காரணம், எங்க ரெண்டு பேருக்குமே ஒரே மாதிரியான ஈகோ பிராப்ளம்தான்!

அறையில் சிரிப்பலைகள் பரவிய விநாடி-

பக்கத்து ஹாலில் இருந்த லேண்ட்லைன் டெலிபோன் ரிங்டோனை வெளியிட்டது. பங்கஜ்குமார், மின்மினி இரண்டு பேருமே போனை அட்டெண்ட் செய்ய நகர்ந்த விநாடி - விவேக் கைஅமர்த்தினான்.

"சார்... ப்ளீஸ்..."

நின்றார்கள்.

"விஷ்ணு! நீ போய் அட்டெண்ட் பண்ணு..."

விஷ்ணு எழுந்தான்...

நியூயார்க்

அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் தாம்ஸனுக்கும் ஸ்மித்துக்கும் தகவல் போய் நியூயார்க்கின் DOWN Town ஏரியாவில் இருந்த போலீஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்தபோது குளிரை தாஜா செய்வதற்காக ஜெர்கின் கோட் அணிந்த விஜேஷ் அவர்களை எதிர்கொண்டான். கம்ப்யூட்டரில் எதையோ பதிவு செய்துகொண்டு இருந்த போலீஸ் சார்ஜென்ட் எழுந்து வந்தார். க்ளவுஸ் அணிந்த கைகளோடு குலுக்கிக்கொண்டார்கள்.

தாம்ஸன் கேட்டார்,

"யார் அந்தப் பெண்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அவள் பெயர் நிவியா... நியூஜெர்ஸியில் இருக்கும் 'லிட்டில் ஹெவன்' அவென்யூவைச் சேர்ந்தவள். இரவு விடுதிகளில் நடனமாடும் பெண். உப தொழில் விபசாரம். அவளுடைய சோஷியல் செக்யூரிட்டி எண்ணைவைத்து பூர்வாசிரமத்தைக் கிளறிப் பார்த்ததில் இரண்டு முறை கோர்ட்டுக்குப் போயிருக்கிறாள். ஒரு தடவை அபராதம். இரண்டாவது தடவை மூன்று மாதச் சிறை. செய்த குற்றம் ஆண்களை வலிய அழைத்து செக்ஸ§வல் ஹராஸ்மென்ட் கொடுத்தது."

"வேறு ஏதாவது சொன்னாளா?"

"சொல்லவில்லை... சுலபத்தில் வாயைத் திறக்க மாட்டேன் என்கிறாள்."

"இனி திறந்து விடுவோம்" தாம்ஸனும் ஸ்மித்தும் உள்ளே போனார்கள். இரண்டு செல்கள் கடந்த பிறகு, நிவியா அடைக்கப்பட்டு இருந்த செல் வந்தது. காப் ஒருவர் கதவின் தாழ்ப்பாளைத் திறந்துவிட, நுழைந்தார்கள்.

செல்லில் மெலிதான வெளிச்சம். செல்லின் நடுவில் ஒரு ஸ்டூலின் மேல் அசௌகரியமாக உட்கார வைக்கப்பட்டு இருந்தாள் நிவியா. அதே அரைகுறை ஆடை. கண்களில் போலீஸ் பயம் துளியும் இல்லை.

தாம்ஸனும் ஸ்மித்தும் அவளுக்கு முன்பாகப் போய் நின்றார்கள்.

தாம்ஸன் அவளருகே குனிந்தார்.

"இதே செல்லில் நீ உண்மையைச் சொல்லி விட்டால் உன்னுடைய உடல் ஆரோக்கியம் நீ சந்தோஷப்படும்படியாக இருக்கும். இல்லாவிட்டால் நீ எழுந்து நடக்கவே மூன்று மாதங்களாகிவிடும்."

நிவியா தன் சாயப்பூச்சு உதடுகளை ஒரு புன்னகையால் விரித்தாள், "நான் உண்மையைச் சொல்ல மாட்டேன் என்று உங்களுக்கு யார் சொன்னது?"

"இந்த சார்ஜென்ட் கேட்டு நீ பதில் சொல்லவில்லையாமே?"

"அவர் கேட்ட கேள்வியில் உண்மையில்லை. அதனால் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை."

"அவர் அப்படி என்ன உண்மையில்லாத கேள்வியைக் கேட்டார்?"

"ஹோட்டலில் தங்கியிருந்த விஜேஷ் என்ற இந்தியரைக் கொலை செய்ய முயன்றதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்."

"அது உண்மையில்லை..."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"பிறகு..."

"அந்த விஜேஷ் என்ற இந்தியரை நான் கொலை செய்ய வரவில்லை..."

"அப்புறம் எதற்காக... செக்ஸ் தொடர்புக்காகவா?"

"அதுவும் இல்லை..."

"பின்..."

"அவரைப் பயமுறுத்துவதற்காக! அவர் உயிருக்குப் பயந்து நியூயார்க்கை விட்டு உடனடியாகப் புறப்பட்டுப் போவதற்காக..."

"என்ன காரணம்?"

"காரணம் எனக்குத் தெரியாது. விஜேஷ் யார்? அவர் எதற்காக நியூயார்க் வந்தார்? அவர் யாருக்கு என்ன பரிசு? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எனக்கு சர்வ நிச்சயமாகப் பதில் தெரியாது. நேற்று இரவு எனக்கு ஒரு போன்கால் வந்தது. பப்ளிக் பூத்திலிருந்து ஒரு பெண் பேசினாள். விஜேஷ் நியூயார்க்குக்கு வரப் போவதைப் பற்றியும், தங்கப் போகும் ஹோட்டல், அறை எண் பற்றியும் சொல்லிவிட்டு அசைன்மென்ட் ஒன்றைக் கொடுத்தாள்.

அந்த அசைன்மென்ட்படி நான் விஜேஷைக் கொலை செய்ய முயல்வது போல் பயமுறுத்த வேண்டும். இந்த வேலையை மட்டும் செய்வதற்கு எனக்குப் பேசப்பட்ட தொகை இருபதாயிரம் டாலர். பத்தாயிரம் டாலர் தொகை எனக்கு முன் பணமாக என்னுடைய வீட்டில் உள்ள லெட்டர் பாக்ஸில் போடப்பட்டது. மீதிப் பணம் வேலை முடிந்ததும் அதே லெட்டர் பாக்ஸில் போடப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது!"

"பேசியது பெண்ணா... ஆணா?"

"பெண்..."

"அந்தப் பெண் யார் என்று உனக்குத் தெரியாது?"

"தெரியாது."

"பப்ளிக் பூத்திலிருந்து பேசினாளா?"

"ஆமாம்."

"சரி! உன்னுடைய செல்போனைக் கொடு..."

"என்னிடம் செல்போன் இல்லை. நேற்றைக்கு எதிர்பாராத விதமாக தண்ணீரில் விழுந்து கெட்டுப் போய்விட்டது. இனி புதிதாக வாங்க வேண்டும்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

தாம்ஸன் அருகில் இருந்த சார்ஜென்ட்டிடம் திரும்பினார். "இவளை டிடெக்டர்வைத்து முழுமையாகச் சோதனை போட்டீர்களா?"

"இல்லை..."

"சோதனை போடுங்கள். இவளைப் போன்ற பெண்கள் மைக்ரோ சிப் செல்போன்களை உடம்பின் அந்தரங்கமான பகுதிகளில் மறைத்துவைத்து இருப்பார்கள். டிடெக்டர் இவளை முகர்ந்து பார்த்தால் அது எங்கே இருக்கிறது என்று காட்டிக் கொடுத்துவிடும்."

சார்ஜென்ட் டிவைஸ் அண்ட் இன்ஸ்ட்ரூமென்ட் அறைக்குள் நுழைந்து கையடக்க டிடெக்டர் ஒன்றைக் கொண்டுவந்து நிவியாவின் உடம்பு மேல் மேயவிட்டார். அவளுடைய வலது தொடைப் பகுதிக்கு வந்ததும் டிடெக்டர் சிரித்தது.

தாம்ஸன் கையை நீட்டினார்.

"எடுத்துக் கொடுத்துவிடுகிறாயா... இல்லை பெண் சார்ஜென்ட்டை அழைக்கட்டுமா?"

"எமகாதகர்கள்!" எரிச்சலோடு முனகிக்கொண்டே ஸ்கர்ட்டை உயர்த்தி ஸ்கர்ட்டின்

உட்புறம் தைத்து இருந்த சிறிய பைக்குள் கையை நுழைத்து, மெலிதான தகட்டைப்போல் இருந்த செல்போனை எடுத்துக் கொடுத்தாள்.

தாம்ஸன் அந்த செல்போனை வாங்கி மெமரிபாக்ஸைத் திறந்து, அதில் ஷிகிக்ஷிணி செய்யப்பட்டிருந்த எண்களையும் பெயர்களையும் பார்க்க ஆரம்பித்தார். ஆல்ஃபபடிகல் வரிசையில் கிஙிசிஞிணி முடித்து 'தி' வரிசை ஆரம்பமாகி முதல் பெயராக ஃப்ளோரா பெயரும் செல்போன் எண்ணும் டிஸ்ப்ளேயில் பளிச்சிட்டதும் அதிர்ந்தார்.

"மிஸ்டர் விஜேஷ்..."

"சார்..."

"இதைப் பாருங்கள்..."

விஜேஷ் பார்த்துவிட்டுத் திகைத்தான். "ச... சார் இது..." என்று பேச்சு வராமல் வாய் உலர்ந்தான்.

"ஃப்ளோரா என்பது இங்கே பொதுப்பெயர். இருந்தாலும் இந்த ஃப்ளோரா யார் என்று இவளிடமே கேட்டு விடுவோம்"- விஜேஷின் காதில் முணுமுணுத்துவிட்டு நிவியாவிடம் திரும்பினார் தாம்ஸன்.

"யார் இந்த ஃப்ளோரா?" LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"என்னுடைய லாயர்" என்றாள் நிவியா.

- பறக்கும்...



-

நியூயார்க்

தாம்ஸனின் நீல நிறக் கண்களில் வியப்பு உறைந்துபோயிற்று. தன் லேசர் பார்வையால் நிவியாவின் முகத்தை ஊடுருவியபடி கேட்டார், "என்ன சொன்னாய்... ஃப்ளோரா உன் லாயரா?"

"ஆமாம்! நான் விபசாரப் பிரச்னைகளில் மாட்டிக்கொண்டால், என்னை ஜாமீனில் வெளியே கொண்டுவருவதே லாயர் ஃப்ளோராதான்!" - நிவியா உதட்டை அலட்சியமாகச் சுழித்தபடி சொல்ல, விஜேஷ் குறுக்கிட்டான்...

தாம்ஸனை ஏறிட்டபடி, "மிஸ்டர் தாம்ஸன்! இவள் சொல்வதை நான் நம்ப மாட்டேன். லாயர் ஃப்ளோரா ஒரு ஜெனியுன் வுமன். லண்டனில் இருக்கும் என் நண்பன் ஃப்ரெட்ரிக்கின் தங்கைதான் ஃப்ளோரா. தன் தங்கையைப்பற்றி அவன் நிறையச் சொல்லியிருக்கிறான். குற்றம் செய்த நபர்களைக் காப்பாற்றுவதற்காக ஃப்ளோரா ஒருபோதும் வழக்குகளை எடுத்துக்கொள்வது இல்லையாம். நியாயமான கோரிக்கைகளோடு வரும் கட்சிக்காரர்களுக்குத்தான் ஃப்ளோராவின் அலுவலகத்தில் முதல் இடமாம். அப்படி ஒரு கொள்கையுடன் இருக்கும் ஃப்ளோரா, நிச்சயமாக இந்த விலைமாது நிவியாவுக்கு லாயராக இருக்கவே முடியாது. இவள் பொய் சொல்கிறாள். நம்பாதீர்கள்."

LAYAN_JOY@TAMILTORRENTS.COM

நிவியா தன் உதட்டை மறுபடியும் சுழித்தாள். "நான் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? எனக்கு ஃப்ளோரா லாயரா, இல்லையா என்பதை ஃப்ளோராவிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளலாமே?"

"அதுவும் சரிதான்!" - தாம்ஸன் விஜேஷைப் பார்க்க, அவன் தன் செல்போனை எடுத்து ஃப்ளோராவைத் தொடர்புகொண்டான்.

மறுமுனையில் ரிங்டோன் ஒரு மியூஸிக் நோட் வாசித்தது. பிறகு, ஃப்ளோராவின் குரல் கேட்டது. குரலில் தூக்கம் கெட்டுப்போனதற்கான அடையாளம் தெரிந்தது. "சொல்லுங்கள் விஜேஷ்... என்ன இந்த வேளையில் போன். ஏதாவது அவசரச் செய்தியா?"

"ஆமாம் ஃப்ளோரா! கடந்த ரெண்டு மணி நேரத்துக்குள் சில வேண்டாதநிகழ் வுகள் நடந்துவிட்டன."

"வேண்டாத நிகழ்வுகளா?"

"ஆமாம்... என்னைக் கொலை செய்யும் முயற்சியோடு ஒரு பெண், நான் தங்கியிருந்த அறைக்குள் ஆயுதத்தோடு நுழைந்துவிட்டாள்."

"மை குட்னஸ்! அப்புறம் என்ன ஆயிற்று?"

"எப்படியோ உயிர் தப்பிவிட்டேன். அந்தப் பெண்ணையும் போலீஸார் பிடித்துவிட்டார்கள். இப்போது அவள் Down Town போலீஸ் ஸ்டேஷனில் லாக்கப்புக்குள் அடைக்கப்பட்டிருக்கிறாள்."

"யார் அந்தப் பெண்?"

"அவள் பெயர் நிவியா. பாலியல் தொழிலாளி. நியூஜெர்ஸியில் லிட்டில் ஹெவன் என்ற இடத்தில் வீடு."

"அவள் உங்களைக் கொலை செய்ய முயற்சித்தாளா?"

"ஆமாம்."

"காரணம்?"

"தனக்குக் காரணம் தெரியாது என்கிறாள். யாரோ பணம் கொடுத்தார்களாம். இவள் செயல்பட்டாளாம்."

"அந்த யாரோ, யார்?"

LAVAN.LOVASTAMIL.TORRENTS.COM

"தெரியவில்லை. அவளுடைய செல்போனுக்கு போன் செய்து, என்னைக் கொன்றுவிடப்போவதாகப் பயமுறுத்தச் சொன்னார்களாம். அதற்கு ஒரு பெரிய தொகையைக் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்களாம்."

"மிஸ்டர் விஜேஷ்! அவளை போலீஸார் சரியாக விசாரிக்கவில்லை என்று நினைக்கிறேன். உங்களுக்குப் பக்கத்தில் இப்போது போலீஸ் அதி காரிகள் யாராவது இருக்கிறார்களா? இருந்தால் உங்கள் செல்போனைஅவர் களிடம் கொடுங்கள். நான் பேசிக்கொள்கிறேன்."

"மிஸ் ஃப்ளோரா! இப்போது என் அருகில் மிஸ்டர் தாம்ஸன், மிஸ்டர் ஸ்மித் மற்றும் Down Town போலீஸ்ஸ்டே ஷனின் சார்ஜென்ட் மூன்று பேருமே இருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் பேசும் முன்பாக நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?"

"கேளுங்கள்..."

"நிவியாவை உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமா?"

"எ... எ... எனக்கு எப்படித் தெரியும்? அப்படி ஒரு பெயரையே இப்போதுதான் கேள்விப்படுகிறேன்."

"பிறகு எப்படி அவள் உங்களைத் தன்னுடைய லாயர் என்று

சொல்கிறாள்? அவளுடைய செல்போன் மெமரி பாக்ஸில் உங்களுடைய பெயரும் செல்போன் எண்ணும் இருந்ததை நானே பார்த்தேன்."

செல்போனின் மறுமுனையில் ஃப்ளோரா கலவரமானாள். "மிஸ்டர் விஜேஷ்! அந்தப் பெண் நிவியா சொல்வது தவறான தகவல். என் பெயரை அவள் உபயோகப்படுத்தி இந்தப் பிரச்னையைத் திசைதிருப்பப் பார்க்கிறாள். நிவியா என்கிற பெயரில் எனக்கு யாரையும் தெரியாது. பை த பை... அந்த நிவியா பக்கத்தில் இருக்கிறாளா? இருந்தால், செல்போனை அவளிடம் கொடுங்கள்."

விஜேஷ் செல்போனை உள்ளங்கையால் மூடித் தாழ்த்திக்கொண்டு தாம்ஸனைப் பார்த்து, "சார்! மிஸ் ஃப்ளோரா, தனக்கு நிவியா யார் என்றே தெரியாது என்கிறாள். நிவியாவிடம் ஏதோ தப்பு இருப்பதாகவும், எனவே அவளிடம் பேச விரும்புவதாகவும் சொல்கிறாள். நிவியாவிடம் செல்போனைத் தரலாமா?"

"வேண்டாம்" என்றவர், விஜேஷின் செல்போனை வாங்கி ஃப்ளோராவிடம் பேசினார். "மிஸ் ஃப்ளோரா! அந்த நிவியாவிடம் எந்தவிதமான டெலிபோனிக் கான்வர்சேஷனும் வேண்டாம். நீங்கள் சிரமம் பார்க்காமல் நேரிடையாகப் புறப்பட்டு வாருங்கள். ஒருவேளை நிவியாவை நேரில் பார்த்தால், அவள் யார் என்பது உங்களுக்குத் தெரியவரலாம்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அதுவும் சரிதான்! உடனே வருகிறேன். Down Town ஈஸ்ட் போலீஸ் ஸ்டேஷன்தானே?"

"ஆமாம்."

"அரை மணி நேரத்தில் அங்கே இருப்பேன்."

"ப்ளீஸ்"... தாம்ஸன் செல்போனை அணைத்து விஜேஷிடம் கொடுத்துவிட்டு, ஸ்டூலில் நகம் கடித்தபடி உட்கார்ந்திருந்த நிவியாவிடம் திரும்பினார். "ஃப்ளோரா உன்னுடைய லாயர் என்று நீ சொன்னது பொய்தானே?"

"நான் இதுவரைக்கும் சொன்னதில் எதுவுமே பொய் இல்லை. ஃப்ளோரா என் லாயர்தான் என்பதை அவர் இங்கே வந்த பின் ஒப்புக்கொள்வார்."

தாம்ஸன் நிவியாவின் செல்போனைக் கிளறிப் பார்த்துக்கொண்டு இருக்க... விஜேஷ் அந்த காவல் நிலையத்துக்கு முன்பாக நேர்த்தியான அழகுடன் இருந்த லானில் பதற்ற நடை போட்டுக்கொண்டு இருந்தான்.

'ஒரு வீட்டை வாங்குவதில் இவ்வளவு பிரச்னையா? யார் சொல்வது உண்மை, யார் சொல்வது பொய் என்றே புரியவில்லையே?'

'மகளின் மருத்துவச் செலவுக்காகப் பெற்றவர்கள் வீட்டை விற்க முன்வரும்போது யாரோ முட்டுக் கட்டை போடுகிறார்கள். அந்த யாரோ, யார்? அதில் அவர்களுக்கு என்ன நஷ்டம்?' - விஜேஷின் மூளைப் பகுதிக்குள் கேள்விகள் மொய்த்தன.

'பேசாமல் வீட்டை வாங்கும் யோசனையில் இருந்து பின்வாங்கிவிடலாமா? இந்த அந்நிய தேசத் தில் ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டு ஏன் அவஸ்தைப்பட வேண்டும்?'

யோசனையோடு நடைபோட்ட விஜேஷ் தனக்குப் பக்கத்தில் யாரோ வந்து நிற்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். தாம்ஸன் தெரிந்தார். அவருடைய சதைப் பிடிப்பான உதடுகளில் பெரிய புன்னகை ஒன்று உற்பத்தியாகியிருக்க, பேசினார்... "நிவியா பெரிய தொழில்காரிதான். அவளுடைய செல்போன் மெமரி பாக்ஸ் முழுவதும் கஸ்டமர்கள் நிரம்பி வழிகிறார்கள்."

தாம்ஸன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே விஜேஷின் செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. அழைப்பது யார் என்று எடுத்துப்பார்த்தான். டிஸ்ப்ளேயில் ஃப்ளோரா பெயர் பளிச்சிட்டது. விஜேஷ் குரல் கொடுத்தான்... "சொல்லுங்கள் மிஸ் ஃப்ளோரா!"

LAVAN-KING.TAMILTORRENTS.COM

பதிலுக்கு ஓர் ஆண் குரல் கேட்டது. அமெரிக்க ஆங்கிலம்.

"பேசுவது மிஸ்டர் விஜேஷா?"

"யெஸ்!."

"ஃப்ளோராவுக்கு நீங்கள் தெரிந்தவரா?"

"யெஸ்."

"எப்படி?"

விஜேஷ் கோபத்தில் முகம் சிவந்தான். "முதலில் நீங்கள் யார் என்று சொல்லுங்கள்."

"நியூயார்க் டிராஃபிக் போலீஸ். இப் போது சொல்லுங்கள், ஃப்ளோராவை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"ஃப்ளோரா என் நண்பனின் தங்கை. அவள் ஒரு லாயர். பை த பை, எதற்காக இந்த விசாரணை?"

"ஸாரி டு ஸே திஸ்! நீங்கள் சொல்கிற அந்த ஃப்ளோரா க்ரீன் ஃபோர்ட் நெடுஞ்சாலையில் ஒரு ஓரத்தில் நிறுத்தப்பட்டு இருந்த காருக்குள் உயிரற்ற சடலமாகக் கிடக்கிறாள். உடலில் ரத்தக் காயங்கள் எதுவும் இல்லை. ஸீம்ஸ் டு பி... நேச்சுரல் டெத். உடனே புறப்பட்டு வருகிறீர்களா? அந்த ஃப்ளோரா வின் செல்போனில் இருந்துதான் இப்போது பேசிக் கொண்டு இருக்கிறேன்."

கோவை

ஹாலில் லேண்ட்லைன் குரல் கொடுத்துக்கொண்டு இருக்க, விஷ்ணு போய் ரிஸீவரை எடுத்தான்... "ஹலோ."

மறுமுனையில் ஒரு பெண் பேசினாள்.

"மின்மினி... ப்ளீஸ்?"

"நீங்க?"

"நான் மாலு. மின்மினியோட ஃப்ரெண்ட்!"

"ஒரு நிமிஷம்..." என்ற விஷ்ணு ரிஸீவரின் வாயை இடது கைவிரல்களால் பொத்திக்கொண்டு, பங்கஜ்குமாருக்குப் பக்கத்தில் கலக்க முகத்துடன் நின்றிருந்த மின்மினியை ஏறிட்டான். "மேடம்! மாலுன்னு யாரோ பேசறாங்க."

DMANJOY@YAHOO.COM

மலர்ந்தாள் மின்மினி. "ஓ... மாலுவா! ஷி இஸ் மை ஃப்ரெண்ட்" என்று சொன்ன மின்மினி, வேக நடையோடு வந்து விஷ்ணுவிடம் இருந்து ரிஸீவரை வாங்கிப் பேச ஆரம்பித்தாள்.

"என்ன மாலு?"

"ஆமா, இப்ப போன்ல பேசுனது யாரு?"

"என் கணவருக்குத் தெரிஞ்ச க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர்!"

"நேத்து உன் வீட்டுக்கு வந்திருந்த பெல்லாரி மல்லய்யா ஊருக்குப் போயிட்டாரா?"

"இல்ல. கோயம்புத்தூர்லதான் இருக்கார்."



"போச்சுடா! சரி, நீ இன்னிக்கு சாயந்திரம் ஃப்ரீயா மின்மினி?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"எதுக்குக் கேட்குறே?"

"இல்ல... புதுசா ஒரு வைர நெக்லஸ் வாங்கினேன். உன்கிட்டே கொண்டுவந்து காட்டலாம்னுதான். புது மோஸ்தர்."

"வாயேன் சாயந்திரம். பேசலாம். அவங்க பிரேக்ஃபாஸ்ட்டுக்காக டைனிங் டேபிள்ல இருக்காங்க... மாலு."

"ஓ... ஸாரி! மொதல்ல போய் அவங்களைக் கவனி. நான் பேச ஆரம்பிச்சா நிறுத்தவே மாட் டேன்." மறுமுனையில் அந்த மாலு ரிஸீவரைவைத்து விட, மின்மினியும் ரிஸீவரை வைத்துவிட்டு டைனிங் டேபிளுக்கு வந்தாள். விஷ்ணு ஹாட்பேக் கில் இருந்த அயிட்டங்களை எடுத்து பரிமாறிக் கொண்டு இருந்தான்.

"அடேடே, என்ன விஷ்ணு நீங்க போய் பரி மாறிட்டு. உட்காருங்க, நான் போடறேன்!"

"பரவாயில்லை மேடம், யார் பரிமாறினா என்ன? தேங்காய்ப் பாலும் ஆப்பமும் சூப்பர் காம்பினேஷன்."

"தேங்க்யூ விஷ்ணு."

"எனக்கு எதுக்கு மேடம் தேங்க்ஸ்?"

"இந்த கோவை மாவட்டத்தோட கலெக்டர் நேத்து மத்தியானத்திலேர்ந்து சரியா பேசலை; சிரிக்கலை. நீங்களும் மிஸ்டர் விவேக்கும் வந்த பிறகுதான், பழைய பொசிஷனுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பிட்டிருக்கார். அதுக்காகத்தான் தேங்க்ஸ் சொன்னேன்."

"மேடம்! வீட்ல ஒரு பிரச்னைன்னா உடனே முடிவு எடுத்துடலாம். ஊர்ல பிரச்னைன்னா அப் படி முடிவு எடுத்துட முடியாது. சாருக்கு எவ்வ ளவோ பிரச்னைகள். சாக்கடை வசதி இல்லைன்னு சொல்லிட்டு மனு கொண்டுவர்ற ராமசாமியைப் பார்க்கிற விஷயத்தில இருந்து, பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள வருகிற ஜனாதிபதியை ஏர்போர்ட்டுக்குப் போய் வரவேற்கிற 'புரொட்டோ கால்' சடங்கு வரைக்கும் சார் பார்த்தாகணும். எப்படி வரும் சிரிப்பு?"

விஷ்ணு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, விவேக்கின் செல்போனுக்கு எஸ்.எம்.எஸ் வந்ததற்கு அறிகுறியாக 'பீப்' சத்தம் கேட்டது. விவேக் எடுத் துப் பார்த்தான். உதவி போலீஸ் கமிஷனர் நம் பெருமாள் கொடுத்த செய்தி கண்களில் பட்டது.

'சார்! நீங்கள் சந்தேகப்பட்டது சரிதான்! பட்சி இப்போது என் பார்வையில்! புறப்பட்டு வாருங்கள். புதிர் புரியும் நேரம் இது!'

விவேக் செய்தியைச் சலனம் இல்லாமல் படித்து விட்டு செல்போனை அணைத்தான். விஷ்ணு கேட்டான்... "பாஸ்! ஏதோ மெசேஜ் வந்த மாதிரி இருந்தது. யாரு ரூபலா மேடமா?"

"ஆமா."

"என்ன மெசேஜ் பாஸ்?"

"மருதமலைக்கும் பேரூர் பட்டீஸ்வரர் கோயிலுக் கும் உன்னையும் என்னையும் போய்ட்டு வரும்படி உத்தரவு. நீ அங்கப்பிரதட்சணம் பண்ணணுமாம்."

பங்கஜ்குமாரிடமும் மின்மினியிடமும் விடை பெற்றுக்கொண்ட விவேக், தனக்கு டிபார்ட்மென்ட் கொடுத்திருந்த இன்னோவா காரில் ஏறி உட்கார்ந்து இக்னீஷியனை உசுப்பினான். பக்கத்தில் விஷ்ணு.

"தேங்க்யூ மேடம்! உங்களை மறந்தாலும் நீங்க கொடுத்த பிரேக்ஃபாஸ்ட்டை மறக்க மாட்டோம்."

மின்மினி சிரித்தாள். "ஒரு நாளைக்கு லன்சுக்கும் வாங்க. நீங்க எத்தனை பிறவி எடுத்தாலும் என்னை மறக்க மாட்டீங்க."

இன்னோவா கிளம்பி, சுற்றுச்சுவரைக் கடந்து சாலைக்கு வந்தது.

"பாஸ்... ரூபலா மேடம் மெசேஜ் கொடுத்ததா ஏன் பொய் சொன்னீங்க?" என்றான் விஷ்ணு.

"கண்டுபிடிச்சுட்டியா?"

"பின்னே, ஐயா யாருன்னு நினைச்சீங்க? மெசேஜ் கொடுத்தது யாருன்னும் தெரியும். அஸிஸ்டென்ட் கமிஷனர் நம்பெருமாள்தானே?"

"அட, எப்படிடா?"

"எல்லாம் சித்துவேலை பாஸ்! குப்பை மூட்டைச் சித்தரோட அருள் என்கிட்ட பரிபூர்ணமாக இருக்கிறப்ப இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை."

"சரி... அப்படின்னா நம்பெருமாள் கொடுத்த மெசேஜ் என்னன்னு சொல்லு பார்க்கலாம்."

"சொல்றேன் பாஸ்! ஆனா, நீங்க மயக்கம்போட்டு விழுந்துடக் கூடாது."

"சொல்லேன் பார்க்கலாம்."

"சார்! நீங்கள் சந்தேகப்பட்டது சரி! பட்சி இப் போது என் பார்வையில். புறப்பட்டு வாருங்கள். புதிர் புரியும் நேரம் இது!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

விவேக் வியப்பின் உச்சிக்கே போனான். "அட, எப்படிடா?"

"சொன்னேனே பாஸ்... சித்து வேலைன்னு!"

"இது சித்து வேலை கிடையாது. சரியான எத்து வேலை."

"என்ன பாஸ் சொல்றீங்க?"

"நான் டிபன் சாப்பிட்டுட்டு வாஷ்பேசினுக்குக் கை கழுவப் போனப்ப, டைனிங் டேபிள் மேல இருந்த என் செல்போனை எடுத்து இன்பாக்ஸைத் திறந்து பார்த்துப் படிச்சிருக்கே!"

"ஹைய்யோ! உங்களுக்குச் சிலந்தி மாதிரி எல்லாப் பக்கமும் கண்ணு, பாஸ்."

டி.எஸ்.பி. அலுவலகம் வந்தது. காரை உரிய இடத்தில் பார்க் செய்துவிட்டுக் கீழே இறங்கிய விவேக்கை அஸிஸ்டென்ட் கமிஷனர் நம்பெருமாள் ஒரு சல்யூட்டோடு எதிர்கொண்டார். விவேக் கேட்டான், "பிரஸ் பீப்பிள் யாருக்கும் தெரியாதே?"

"தெரியாது சார்."

"ஏதாவது பேசினாளா?"

"வாயைத் திறக்கலை சார்! ஃபோர்ஸ் பண்ணவும் பயமா இருந்தது."

"ரூம் எந்தப் பக்கம்?"

"ப்ளீஸ்... கம் திஸ் சைட் சார்." நம்பெருமாள் வலது பக்கம் நீளமாகத் தெரிந்த வராந்தாவில் கூட்டிக்கொண்டுபோக, விவேக்கும் விஷ்ணுவும் பின்தொடர்ந்தார்கள்.

ஒரு நிமிஷ நடை. வராந்தாவின் கோடியிலிருந்த அந்தச் சிறிய அறைக்கு முன்பாக நின்றார்கள். நம்பெருமாள் கதவில் இருந்த பூட்டுக்கு விடுதலை கொடுக்க, உள்ளே நுழைந்தார்கள்.

அறையின் மூலையில் சுவரோடு சுவராகச் சாய்ந்து உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும், விஷ்ணுவின் இதயம் ஒரு குரங்குக் குட்டியாக மாறி குட்டிக்கரணம் போட்டது!

- பறக்கும்

கேள்வி: அமெரிக்கா ஒரு மெகா நாடு என்று எல்லோருக்கும் தெரியும். அந்த நாடு எத்தனை மாநிலங்களைக்கொண்டது என்று தெரியுமா?

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

பதில்: அ. 50 ஆ. 49 இ. 48

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணை டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம்பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 1.2.2010-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

ராஜேஷ்குமார், ஓவியங்கள்: அரஸ், ஸ்யாம்

இனி, மின்மினி

கோவை

விஷ்ணு குட்டிக்கரணம் அடிக்கும் தன் இதயத்தை இடது கையால் பிடித்தபடி அந்தப் பெண்ணைப் பார்த்து விசிலடித்தான்.

"அட... ரமலத் நீயா?"

ரமலத் கண்ணீர் கீறிய விழிகளோடு தலையைக் குனிந்துகொண்டாள். விஷ்ணு விவேக்கிடம் திரும்பி, "என்ன பாஸ் இது! கூண்டுக்குள்ளே ஒரு புலி இருக் கும்னு பார்த்தா ஒரு மான் குட்டி. நீங்க சொல்லவே இல்ல..!" என்றான்.

"விஷ்ணு! மைக்கேல் எர்னஸ்ட் கொலை செய் யப்பட்ட விவகாரத்தில் அந்த சந்துக்குள் குடியிருந்த ஒட்டுமொத்த ஜனமும் வாய் மூடி மௌனிகளாய் இருக்க, ரமலத் மட்டும் தன்னிச்சையாக முன் வந்து, மைக்கேல் எர்னஸ்ட்டைப்பற்றி சில விவரங்களைச் சொன்னது கொஞ்சம் நெருடலாகப்பட்டது. குறிப்பா, மைக்கேல் எர்னஸ்ட்டைப் பார்க்கிறதுக்காக பர்தா போட்ட பெண் சாயந்திரம் நாலரை மணி சுமாருக்கு வந்ததாகவும், அந்தப் பெண்ணோட பர்தா கொஞ்சம் விலகினபோது, நெற்றியில் இருந்த பொட்டையும், கழுத்தில் தொங்கின தாலிக்கொடியையும் பார்த்ததாகவும் சொன்னது ரொம்பவே உறுத்தல். அதேபோல் மைக்கேல் எர்னஸ்ட் ரொம் பவும் நல்லவர்னு தானா முன்வந்து அவருக்கு ஒரு நன்னடத்தைச் சான்றிதழ் கொடுத்ததும் எனக்குச் சரியாப்படலை. பொதுவா, குற்றம் நடந்த இடத்துக்கு வந்து தகவல்கள் தர பெண்கள் தயங்குவாங்க. பட், ரமலத்கிட்டே அந்தத் தயக்கமே இல்லை..."

"இதான் பாஸ்... உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம். நான் ரமலத்தோட அனாடமியைப் பார்த்தேன். நீங்க அவளோட அஸ்ட்ராலஜியையே தோண்டிப் பார்த்து, இப்படி ஒரு என்கொயரி செல் லுக்குக் கொண்டுவந்துட்டீங்க. இனிமே நான் இவளை ஹேண்டில் பண்ணிக்கிறேன் பாஸ்!"

"சரி, அவகிட்டே பேசி உண்மையை வாங்கிடு பார்க்கலாம்!"- சொல்லிவிட்டு, அறையின் ஓர் ஓரத் தில் இருந்த நாற்காலிக்குப் போய் விவேக் சாய்ந்து கொள்ள... விஷ்ணு, ரமலத்தை நெருங்கினான்.

"சினிமாவில் வர்ற போலீஸ் வேற... நிஜ போலீஸ் வேற! நீ எங்களை சினிமா போலீஸ்னு நினைச்சு ஏமாத்தப் பார்த்திருக்கே! திருக்குர் ஆன் 68: 44 என்ன சொல்லுது தெரியுமா? 'நபியே! நீர் இந்த வேதவாக்கைப் பொய்யெனத் தூற்றுபவர்களின் விவகாரத்தை என்னிடம் விட்டுவிடும். படிப்படியாக இவர்கள்

INDIANMOVIECOMICBOOKS.COM

அறியாதவிதத்தில் அழிவின் பக்கம் இவர் களை நாம் கொண்டுசெல்வோம்.' நீயும் இந்த வாச கத்தைப் படிச்சிருப்பேன்னு நினைக்கிறேன்."

ரமலத் எதுவும் பேசாமல் அப்படியே நின்றாள். கண்களில் நீர் சுரந்து பளபளத்தது. உதடுகளில் மெலிதான நடுக்கம்.

"சொல்லு... மைக்கேல் எர்னஸ்ட்டை எதுக்காகக் கொலை பண்ணினே? அவருக்கும் உனக்கும் என்ன பகை?"

"ஐயோ!" என்று பெரிதாக அலறி, இரண்டு காதுகளையும் கைகளால் பொத்திக்கொண்டாள் ரமலத்.

"சார்... மைக்கேல் எர்னஸ்ட்டை நான் கொலை பண்ணலை. எனக்கும் அவருக்கும் எந்தச் சம்பந் தமும் இல்லை. நான் அவரோடு ஒரு வார்த்தைகூடப் பேசினது கிடையாது..."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"சரி, நீ கொலை பண்ணலைன்னா வேற யார்?"

"எ... எ... எனக்குத் தெரியாது சார்."

"பர்தா போட்டுக்கிட்டு ஒரு இந்துப் பெண் மைக்கேல் எர்னஸ்ட்டைப் பார்க்க வந்ததா, நீ சொன்னது பொய்தானே?"

"ஆ... ஆமாம். பொய்தான்!"

"எதுக்காக அந்தப் பொய்?"

"அப்படியரு பொய்யைச் சொல்லச் சொன் னாங்க."

"யாரு?"

"தெரியலை சார்! இன்னிக்கு விடிகாலை அஞ்சு மணிக்கு, என் செல்போனுக்கு பப்ளிக் பூத்திலிருந்து ஒருத்தன் பேசினான். 'உன் வீட்டுக்கு எதிரே குடி யிருக்கிற மைக்கேல் எர்னஸ்ட் இப்போ உயிரோடு இல்லை. அவனோட மூச்சை நிறுத்தினது நான்தான். நான் கேட்ட ஒரு உதவியை அவன் பண்ணலை. அதனால அவனைத் தீர்த்துக்கட்ட வேண்டியதாயிடுச்சு. இப்ப உன்கிட்டே ஒரு உதவி கேட்கப்போறேன். அதை நீ பண்ணலேன்னா மைக்கேலுக்கு நேர்ந்த கதி உனக்கும் நேரும். உனக்கு மட்டும் இல்லை... உன் சிஸ்டர் நூருன்னிஸா, அபுதாபியிலிருக்கிற உன் அண்ணன் சுக்கூர் இப்படி யாருமே உயிரோடு இருக்க முடியாது'ன்னான். நான் நடுங்கிப்போயிட்டேன் சார்!"
விவேக் எழுந்து வந்தான். "உடனே உயிருக்குப் பயந்து, அவன் என்ன சொல்லச் சொன்னானோ, அதை அட்சரம் பிசகாம சொல்லிட்டே... அப்படித்தானே?"

"ஆ... ஆமா! எனக்கு வேற வழி தோணலை சார். எனக்கு அப்பா கிடையாது. அண்ணன் அபுதாபியில் ஒரு எண்ணெய்க் கம்பெனியில் இன்ஜினீயரா இருக்கார். அக்கா, பீளமேட்டில் இருக்கிற ஒரு ஸ்கூலில் டீச்சரா வேலை பார்க்கிறா. நான் கால் சென்டர்ல வொர்க் பண்றேன். நாங்க மூணு பேரும் உயிரோடு இல்லைன்னா, உடம்பு சரியில்லாம இருக்கிற அம்மாவோட நிலைமை என்னவாகும்னு நினைச்சுப் பார்க்கும்போதே 'பகீர்'னு இருந்தது. அதான், டெலிபோன்ல மிரட்டின அந்த ஆள் சொல்லிக்கொடுத்த மாதிரி பொய் சொல்லிட்டேன்."

LAVAN JOY@TAMILTORRENTS.COM

"எங்கே உன் செல்போன்?" - விஷ்ணு கேட்க, அசிஸ்டென்ட் கமிஷனர் நம்பெரு மாள் பக்கத்தில் வந்தார்.

"அது என்கிட்டே இருக்கு சார்!"
"அதுல கால் ரெஜிஸ்டரை செக் பண்ணிப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன் சார்! மிஸ்டு கால்ஸ், ரிசீவ்டு கால்ஸ், டயல்டு கால்ஸ், எல் லாமே டெலிட் செய்யப்பட்டு இருந்தது."

விவேக் ரமலத்தைப் பார்க்க, அவள் பதற்றத்துடன், "நா... நான்தான் சார் டெலிட் பண்ணேன். என்னை மிரட்டின ஆள்தான் அப்படிப் பண்ணச் சொன்னான்!"

"இப்ப நீ சொல்லிட்டு இருக்கிறதெல்லாம் உண்மையா, இல்லை... இதுவும் பொய்யா?"

"இனி, நான் பொய் பேச மாட்டேன் சார்!"

"இதோ பார், உன்கிட்டே ஏதோ தப்பு இருக்குன்னு தெரிஞ் சதுமே உன்னை என்னால அரெஸ்ட் பண்ணியிருக்க முடியும். எல்லார் முன்னாடியும் ஜீப்ல ஏத்தி ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிருக்க முடியும். ஆனா, நான் அப்படிச் செய்ய விரும் பலை. காரணம், நீ ஒரு குடும்பப் பெண். கல்யாணமாக வேண் டிய பெண்.

அதனாலதான் காய்கறி வாங்க மார்க்கெட்டுக்கு வந்த உன்னை, அசிஸ்டென்ட் கமிஷனர் சந்திச்சு நைச்சி யமா பேசி, கார்ல உன்னை இங்கே கூட்டிட்டு வந்தார். நீ சொன்னதெல்லாம் உண்மைன்னு நம்பி உன்னை வீட்டுக்கு அனுப்பிவைக்கிறோம். இப்ப நீ பேசினதுல ஒரு வார்த்தை பொய்யா இருந்தாலும், உன்னோட மொத்த குடும்பமும் லாக்கப்புக்கு வர வேண்டி இருக்கும்!"

ரமலத் கண்ணீருடன் கை கூப்பி, "நான் சொன்னதெல்லாம் உண்மை சார்! ப்ளீஸ், என்னை நம்புங்க!" என்றாள்.

"ஓ.கே! போலீஸ் குற்றவாளியைக் கண்டுபிடிக்கிறவரை நீயும் உன் ஃபேமிலி மெம்பர்சும் ஜாக்கிரதையா இருக்கணும். நீ வேலைக்குப் போக வேண்டாம். அபுதாபியில் இருக்கிற உன்னோட அண்ணனுக்கும் போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிடு. உன்னோட வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பும் கொடுக்கப்படும்" - விவேக் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே அவனுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து காதுக்குக் கொடுக்க... மறுமுனையில் கோவை ஜி.ஹெச்-சில் இருந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் பேசினார்.

"சார்... நான் பி-1 இன்ஸ்பெக்டர் ஜெயச்சந்திரன்! மைக்கேல் எர் னஸ்ட்டோட பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ணிய டாக்டர்கள் ரிப் போர்ட் கொடுத்துட்டாங்க சார்."

"ரிப்போர்ட் என்ன சொல்லுது?"

LAWAN_JOY@TAMILTORRENTS.COM

"குழப்புது சார்! போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி, மைக்கேல் எர்னஸ்ட் கொலை செய்யப்படலை சார். அவர் இறந்தது ஹார்ட் அட்டாக் காரணமாகத்தானாம்!"

"என்னது... ஹார்ட் அட்டாக்கா? பின்னே எப்படி தலையில் ரத்தக் காயம்?"

"அவர் இறந்த பின்னாடி, யாரோ அது தெரியாத நிலையில் தலையில் அடிச் சிருக்காங்க சார்!"

நியூயார்க்

அந்த முன்னிரவு நேரத்தில் க்ளீன் ஃபோர்ட் நெடுஞ்சாலை நேர்த்தியாக வெட்டப்பட்ட ஒரு ரிப்பன் மாதிரி தெரிய, சாலை யின் வலது பக்க ஓரத்தில் மண் டையில் சுழலும் சிவப்பு நீல நிற விளக்குகளோடு நியூயார்க் போலீ ஸின் பேட்ரோலிங் கார் நின்றிருந்தது. அதைப் பார்வையில் வாங் கிய தாம்ஸன் தன் காரின் வேகத் தைக் குறைத்து, அந்தக் காரின் பின்புறமாகக் கொண்டுபோய் நிறுத்தினார். கொஞ்சம் தள்ளி ஒரு ஆம்புலன்ஸ் தெரிந்தது. பக்கத்திலேயே ஃப்ளோராவின் கார். விஜேஷ், தாம்ஸன், ஸ்மித் மூவரும் காரைவிட்டு இறங்க... பேட்ரோலிங் காரில் இருந்து அந்த இரண்டு போலீஸ் சார் ஜன்ட்களும் வெளிப்பட்டார்கள். பார்வை விஜேஷ் மேல் விழுந் தது.

"நீங்கள் மிஸ்டர் விஜேஷ்?"

"யெஸ்..!"

"இண்டியா?"

"யெஸ்..!"

"விச் பார்ட் ஆ:ப் இண் டியா?"

"சென்னை."

"வாருங்கள் என்னோடு!" - ஆம்புலன்ஸ் வேனை நோக்கி டார்ச் வெளிச்சத்தோடு நடந்த தார்கள். விஜேஷின் அடிவயிற்றில் பயம் ஒரு பாறையைப்போல் இறுகிப் போயிருந்தது.

'காலையில் தன்னை வரவேற்க ஏர்போர்ட்டுக்கு வந்த அந்த அழகான :ப்ளோரா இப்போது உயிரோடு இல்லை. விஷயத்தைக் கேள்விப்பட்டால், அவளுடைய அண்ணன் :ப்ரெடரிக் இடிந்து போவானே! வீட்டை வாங்க வந்தவர்களின் மேல் இருந்த கோபம் இப்போது :ப்ளோரா வின் மேல் பாய்ந்திருக்கிறது. யாருக்கு என்ன கோபம்? வீட்டு உரிமையாளர்களான ஆல்பர்ட் ஸன்-எமிலி அந்த வீட்டை விற் கக் கூடாது என்பதில் யாருக்கு அப்படியரு பிடிவாதம்?'

LADY.JOY@YAHOO.COM

ரோட்டை விட்டுச் சில அடி தூரம் நடந்ததுமே :ப்ளோராவின் கார் ஒரு மரத்தடிக்குக் கீழே தெரிந்தது. காரின் கதவுகள் விரியத் திறந்துகிடக்க... உள்ளே வெளிச்சம். ':பாரன்ஸிக்' என்று மார்புப் பகுதியில் கொட்டையாக எழுதப்பட்ட வாசகங்களோடு இரண்டு :பாரன்ஸிக் அதிகாரி கள் பென் டார்ச்களின் உதவி யோடு ஸீன் ஆ:ப் க்ரைம் பார்த் துக்கொண்டு இருந்தார்கள். அழைத்துப்போன போலீஸ் சார் ஜன்ட்கள் நின்றார்கள். விஜேஷை ஒருவர் ஏறிட்டபடி கேட்டார்... "காருக்குள்ளே இறந்துகிடப்பது நீங்கள் சொன்ன அந்த லாயர் :ப்ளோராதானா என்று பார்த் துச் சொல்லுங்கள்?"

விஜேஷ் காய்ந்துபோன தொண்டையோடும் எகிறித் துடிக்கிற இதயத்தோடும் காரின் அருகே போய் குனித்து பார்த் தான். :ப்ளோராதான்!

மல்லாந்து தெரிந்தாள். அவள் இப்போது அழகாக இல்லை. மரண பயம் உறைந்த முகம். பாதி ஷட்டர் திறந்தது போன்ற தினுசில் மூட மறுத்த இமைகளில் 50 சதவிகித விழிகள் தெரிந்தன. கிட்டித்துப்போன பல் வரிசை. கடைவாயில் ஒரு துளி

ரத்தம் எட்டிப் பார்த்திருந்தது.

விஜேஷ் ஒரு வெப்பப் பெரு மூச்சோடு போலீஸ் சார்ஜன்ட் களை ஏறிட்டான். "சார்... ஷி இஸ் ஃப்ளோரா. நோ டவுட்!"

"மிஸ்டர் விஜேஷ்! நீங்கள் டெலிபோனிலேயே எல்லா விஷ யத்தையும் சொல்லிவிட்டீர்கள். இருந்தாலும், எங்களுக்குச் சில சந்தேகங்கள்..."

"ப்ளீஸ் சார்..."

"ஆல்பர்ட்ஸன் எமிலிக்குச் சொந்தமான ஒரு வீடு விற்கப்படு வதில் யாருக்கு என்ன பிரச்னை இருக்க முடியும் என்று நினைக் கிறீர்கள்?"

"அதுதான் சார், எனக்கும் புரியாத புதிராக இருக்கிறது. ஆல்பர்ட்ஸன், எமிலி இரண்டு பேருமே தங்களுடைய மகள் சில்வியாவின் வைத்தியச் செலவுக்காக அந்த வீட்டை விற்கப் படாதபாடு பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சில்வியாவின் வாழ்நாட்கள் நியூஜெர்ஸி மருத்துவமனையில் எண்ணப்பட்டுக்கொண்டு இருக்கின்றன."

"நீங்கள் சொல்வதை வைத் துப் பார்க்கும்போது, சில்வியா உயிர் பிழைப்பதில் யாருக்கோ உடன்பாடு இல்லை என்று எடுத்துக்கொள்ளலாமா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

இப்போது தாம்ஸன் குறுக் கிட்டார். "நாங்கள் அந்த முடி வுக்கு எப்போதோ வந்துவிட் டோம். சில்வியாவுக்கு வந் துள்ள நோய் டாக்டர்களுக்கே புரியாத புதிராக இருப்பதாக ஆல்பர்ட்ஸன் என்னிடம் சொன்னார். சில்வியாவைத் தாக்கியிருப்பது நோய் மட்டு மல்ல; அவளுடைய மனநிலை யும் பெரிய அளவில் பாதிக்கப் பட்டு இருக்கிறது. சில்வியா ஒரு வித்தியாசமான பெண். அவளைப்பற்றிய எல்லா விவ ரங்களையும் நியூயார்க்கின் ஷேடோ ஸ்க்வாட் போலீஸ் சேகரித்துவிட்டது. சில்வியா அழகானவள் இல்லை. எந்த ஆண் மகனும் அவளை விரும்ப மாட்டான். இருந்தாலும், சில் வியா தான் அழகாக இல்லையே என்று ஒருநாள்கூட வருத்தப்பட்டது கிடையாது. தன்னை ஒரு ஆண் மகனாகவே நினைத்துக்கொண்டு, ஆண்கள் படிக்க விரும்பும் படிப்பான ஆட்டோ மொபைல் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட படிப்பைப் படித்து, முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்து 'கிகிகி' என்ற நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து, ஒரு சிறந்த மெக்கானிக் என்று தன்னை நிலைநிறுத்திக் கொண்டாள். அவளுடைய திறமையை அறிந்து, அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற கார் நிறு வனங்கள் லட்சக்கணக்கான டாலர்களில் சம்பளம் அளிப்பதாகச் சொல்லி, வேலை நியமன உத்த ரவுகளை அனுப்பிவைத்தன. அதில் ஏதாவது ஒரு கம்பெனியைத் தேர்ந்தெடுத்து, வேலையில் சேரும் முடிவில் இருந்தபோதுதான், சில்வியாவை அந்த நோய் தாக்கியது. மனநிலையையும் பேதலிக்க வைத்தது. மகளின் நிலையைப் பார்த்து, ஆல்பர்ட் ஸனும் எமிலியும் இடிந்துபோனார்கள். எப்படியும் தங்கள் மகளின் உயிரைக் காப்பாற்ற நினைத்து, அவளைக் குணப்படுத்த பெரிய தொகையைச் செலவழிக்க வேண்டியிருக்கும்

என்று டாக்டர்கள் சொன்னதால், வீட்டை விற்க வேண்டிய நிலைக்கு வந்தார்கள். அந்தப் பொறுப்பைத் தங்கள் குடும்ப லாயரான ஃப்ளோராவிடம் ஒப்படைத்து, பவர் ஆஃப் அட்டர்னி உரிமையையும் கொடுத்திருந் தார்கள். வீடு எளிதாக விலை போய்விடும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால், வீட்டை வாங்க வந்து அக்ரிமென்ட் போட்ட இரண்டு பேர் அடுத் தடுத்து இறந்துபோனதும் அதிர்ந்துபோனார்கள். விஜேஷ் வீட்டை வாங்கிக்கொள்வார் என்ற நம் பிக்கையிலும் மண் விழுந்துவிட்டது! ஃப்ளோரா இப்போது உயிரோடு இல்லை." தாம்ஸன் நீளமாகப் பேசி முடித்ததை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்ட போலீஸ் சார்ஜன்ட்களில் ஒருவர், விஜேஷை ஏறிட்டார்...

"நீங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குள் ஒரு பெண், கையில் கூர்மையான ஆயுதத்தோடு நுழைந்து கொல்ல முயற்சித்து, பின்னர் போலீஸில் பிடிபட்டு லாக்-அப்பில் இருப்பதாகச் சொன்னீர் களே... அவள் பெயர் என்ன?"

"நிவியா."

"அவள் என்ன சொல்கிறாள்?"

ஸ்மித் குறுக்கிட்டார். "அவளை இரண்டு மணி நேரம் விசாரித்துப் பார்த்துக் களைத்துப் போய்விட் டோம். யாரோ பணம் கொடுத்து விஜேஷைப் பய முறுத்தச் சொன்னார்களாம். பணம் கொடுத்த நபர் யார் என்பதும் அவளுக்குத் தெரியவில்லையாம்." LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அவள் சொல்வது உண்மையா, பொய்யா?"

"நிஜம்போல்தான் தெரிகிறது."

"ஆல்பர்ட்ஸனுக்கும் எமிலிக்கும் தகவல் கொடுத்து வரச் சொல்லிவிட்டீர்களா?"

விஜேஷ் சொன்னான்... "ஸார்! என் நண்பன் காமாட்சிக்குத் தகவல் கொடுத்து, ஆல்பர்ட்ஸனையும் எமிலியையும் இங்கே அழைத்து வரச் சொல்லி யிருக்கிறேன். இன்னும் சில நிமிடங்களுக்குள் வந்து விடுவார்கள்."

"உங்கள் நண்பர் காமாட்சி, ஏதோ ஒரு பத்திரி கையில் சீஃப் ரிப்போர்ட்டராக இருப்பதாகச் சொன்னீர்களே, எந்தப் பத்திரிகை?"

"நியூயார்க் டேஸ்!" - விஜேஷ் சொன்ன அதே விநாடி... ஃப்ளோராவின் காருக்குள்ளும் வெளியே யும் 'ஸீன் ஆஃப் க்ரைம்' பார்த்துக்கொண்டு இருந்த ஃபாரன்ஸிக் அதிகாரிகளில் ஒருவர் குரல் கொடுத்தார்... "சார்! ஒரு நிமிடம், இங்கே வந்து விட்டுப் போக முடியுமா?"

இரண்டு சார்ஜன்ட்களும், தாம்ஸன் மற்றும் ஸ்மித்தும் காரை

நோக்கிப் போக... விஜேசும் அவர்களைத் தொடர்ந்தான். நான்கைந்து அடிகள் எடுத்து வைத்திருந்தபோது, அவனுடைய பேன்ட் பாக்கெட்டில் இடம்பிடித்திருந்த செல்போன் மெசேஜ் வந்ததற்கு அறிகுறியாக ஒரு 'பீப்' சத்தத்தை வெளியிட்டது. எடுத்துப் பார்த்தான்.

தொடரின் 17-வது அத்தியாயம் பற்றிய சூப்பர் கமெண்ட்டுடன் இந்தச் சரியான விடையை எஸ்.எம்.எஸ். செய்திருந்த தஞ்சாவூர் முரளி, ஜம்னா மரத்தூர் பிரின்ஸ் நீல், கும்பகோணம் மாணிக்கவாசகம் ஆகியோருக்கு தலா ரூ.101 பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்படுகிறது!

1 MESSAGE RECEIVED என்று டிஸ்ப்ளே வெளிச்சம்! பட்டனைத் தட்டினான். SMS வரிகள் பளிச்சிட்டன.

'விஜேஷ்! நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் எதிர்பாராதது நிறையவே நடக்கிறது. EVERY DAY IS A LITTLE LIFE. நாளை என்ன நடக்கிறது என்று பார்ப்போம். நீ எச்சரிக்கையாகவும் ஜாக்கிரதை யாகவும் இருக்க வேண்டிய நிமிடங்கள் இவை!

இப்படிக்கு, நான்.'

செய்தியை ஒரு புன்முறுவலோடு படித்துவிட்டு உடனே அதை 'டெலிட்' செய்தான் விஜேஷ்.

- ***பறக்கும்...***

DAVAN_JOY@YAHOO.COM

கேள்வி: ஒரு பாஸ்போர்ட் எத்தனை வருடங்களுக்குச் செல்லுபடியாகும்?

விடை: (அ) 6 வருடங்கள் (ஆ) 8 வருடங்கள் (இ) 10 வருடங்கள்

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணை டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம்பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 8.2.2010-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

நியூயார்க்

ஃப்ளோராவின் கல்லறை மேல் ஒரு பெரிய ரீத் ஒன்றை வைத்த எமிலியும் ஆல்பர்ட்ஸன்னும் துக்கம் தாளாமல் கதறித் தீர்த்துவிட்டு, ஒரு மரத் துக்குக் கீழே நின்றிருந்த விஜேஷ், காமாட்சியிடம் வந்தார்கள். எமிலியின் விழி களில் குளமாகக் கண்ணீர். குரல் உடையக் கூப்பிட்டாள், "மிஸ்டர் விஜேஷ்!"

"சொல்லுங்கள் மேடம்..."

"நீங்கள் அடுத்த ஃப்ளைட் பிடித்து உடனே லண்டன் போய்ச் சேருங்கள். இனி, அந்த வீட்டை நாங்கள் யாருக்கும் விற்பதாக இல்லை. எங்கள் மீது யாருக்கு என்ன கோபமோ தெரியவில்லை. எங்களுடைய வீட்டை வாங்க வருபவர்கள், மர்மமான முறையில் இறந்துபோகிறார்கள். இதுவரைக்கும் வீட்டை வாங்க வந்து அக்ரிமென்ட் போட்டவர்கள்தான் இறந்தார்கள். இப்போதோ, எங்கள் குடும்ப லாயரான ஃப்ளோராவே உயிரோடு இல்லை. ஃப்ளோரா வீட்டை விற் கத் தீவிரமாக இருப்பதை விரும்பாமல், அவளையும் தீர்த்துக்கட்டி இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் இனியும் ரிஸ்க் எடுக்க நாங்கள் விரும்பவில்லை. நாளையே எல்லாப் பத்திரிகைகளிலும் வீட்டை விற்பதாக இல்லையென்று விளம்பர அறிவிப்பு கொடுக்கப்போகிறோம்."

LAVAN JOY@TAMILTORRENTS.COM

"நோ..!" - இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு ஒரு கல்லின் மேல் உட்கார்ந்திருந்த ஃப்ளோராவின் அண்ணன் ஃப்ரெட்ரிக் வேகமாக எழுந்து வந்தான். அழுது அழுது களைத்துப்போய் இருந்தவன் ஆவேசமாகக் கத்தினான். "நோ மேடம்! திஸ் இஸ் ஹைலி அன்ஃபார்ச்சுனேட்! இந்த விவகாரத்தில் கொலையாளி யார் என்பதைக் கண்டுபிடிக்கும் வரை நீங்கள் இந்த வீட்டை விற்கும் விஷயத்தில் பின்வாங்கக் கூடாது. அப்படிப் பின்வாங்கினால், கொலை யாளி யார் என்பதே தெரியாமல் போய்விடும் வாய்ப்பு இருக்கிறது."

"மிஸ்டர் ஃப்ரெட்ரிக்! உங்களுடைய கோபமும் ஆதங்கமும் எனக்குப் புரி கிறது. இருந்தாலும், இந்த விஷயத்தில் நாம் ரிஸ்க் எடுக்கத்தான் வேண்டுமா என்பதை யோசியுங்கள். விஜேஷ் அக்ரிமென்ட் போடுவதற்கு முன்பாகவே, ஃப்ளோராவின் மூச்சு நின்றுவிட்டது. 'இது கொலையல்ல... சடன் மாஸிவ் அட்டாக். இயற்கையான மரணம்' என்கிறது போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட். இவை இயற்கை மரணங்கள் அல்ல; கொலைகள்தான் என்று தீர்க்கமாக நம்பும் போலீஸாரால் இதுவரைக்கும் ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப்போட முடியவில்லை. கொலையாளி யார்? ஆணா... பெண்ணா? கொலைகளுக்கான காரணம் என்ன? எங்களுடைய மகள் சில்வியாவின்

மருத்துவச் செலவுக்குப் பணம் கிடைக்கக் கூடாது... அவள் நோயோடு போராடி இறந்துபோக வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு யார் செயல்படுகிறார்கள்? இதுபோன்ற கேள்விகளுக்கு ஒரு வார்த்தைகூட பதிலாகக் கிடைக்காதபோது, வீட்டை விற்க முயற்சி எடுப்பது புத்திசாலித்தனமான செயலாக எனக்குத் தோன்றவில்லை."

எமிலி சொன்னதைக் கேட்டு முகம் சிவந்துபோன ஃப்ரெட்ரிக், விஜேஷிடம் திரும்பினான். "விஜேஷ்! நீ என்ன சொல்கிறாய்? வீட்டை வாங்கும் முயற்சியில் இருந்து நீ பின்வாங்கப் போகிறாயா?"

விஜேஷ் ஒன்றும் பேசாமல் மௌனமாக நிற்க... காமாட்சி குறுக் கிட்டுப் பேசினான்... "வீட்டை வாங்கும் முயற்சியில் இருந்து விஜேஷ் பின்வாங்கிவிட்டார். நேற்று வரை இருந்த தைரியம் இப்போது அவ ரிடம் இல்லை. இன்னும் ஆறு மாதத்துக்குள் அவருக்குத் திருமணம் நடக்க இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர் ரிஸ்க் எடுத்து உயிரோடு விளையாட விரும்பவில்லை."

"என்ன விஜேஷ், உன் நண்பர் சொல்வது உண்மையா?"- ஃப்ரெட்ரிக் உதட்டில் தெரிந்த ஒரு கேலிச் சிரிப்போடு கேட்டான்.

விஜேஷ் ஆமோதிப்பாகத் தலையாட்டினான். "ஸாரி ஃப்ரெட்ரிக்! ஒரு விஷயத்தில் ஆபத்து இருக்கிறது என்று தீர்க்கமாகத் தெரிந்த பிறகு, அந்த விஷயத்துக்குள் நுழையாமல் இருப்பதே உத்தமம்."

LAVANJOY@TAMILTORRENTS.COM

"ஸோ... நீ விலகிக்கொள்கிறாய்?"

"ஆமாம்."

"ஓ.கே! நீ விலகிக்கொண்டாலும் நான் விடுவதாக இல்லை. அந்த வீட்டை நான் விலைக்கு வாங்கிக்கொள்ள விரும்புகிறேன்."

"வேண்டாம் ஃப்ரெட்ரிக்... அது வீடு அல்ல; விபரீதம்!"

"அந்த விபரீதத்தோடு விளையாடிப் பார்த்தால்தானே கொலையாளி யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியும்?"

ஆல்பர்ட்ஸன் ஒரு பெருமூச்சோடு ஃப்ரெட்ரிக்கை கையமர்த்தினார். "கொஞ்சம் பொறுமையாக இருங்கள் மிஸ்டர் ஃப்ரெட்ரிக். எங்கள் மீது யாருக்கோ உள்ள கோபம் உங்களைப்போன்ற இளை ஞர்களைச் சுட்டு எரிப்பதில் எனக் கும் என் மனைவிக்கும் உடன்பாடு கிடையாது. உங்கள் சகோதரியின் மரணத்துக்குக் காரணமானவர் களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வக்கோளாறினால், நீங்கள்

பரிசோதனை எலியாக மாறுவதை நாங்கள் விரும்பவில்லை. இப்போது போலீஸார் கொலையாளியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். நியூ யார்க் க்ரைம் பிராஞ்ச் ஷேடோ ஸ்க்வாட் அதிகாரிகளான தாம்ஸனும் ஸ்மித்தும் சாமான்யமானவர் கள் அல்ல. கொலையாளி எந்தத் திசையில் மறைந்து இருந்தாலும் சரி, கோடு போட்டுக்கொண்டே போய் திடுமென்று கொலையாளி யின் எதிரில் நின்றுவிடுவார்கள்."

"அப்படியானால், நீங்கள் வீட்டை விற்கத் தயாராக இல்லையா?"

"வீட்டை விற்க நாங்கள் தயாராகவே உள்ளோம். ஆனால், போலீஸார் கொலையாளியைக் கண்டுபிடித்த பின் பேச்சுவார்த்தைகளை வைத்துக்கொள்ளலாம். இப்போது எதுவும் வேண்டாம் மிஸ்டர் ஃப்ரெட்ரிக்! இந்த விவகாரத்தில் நாம் ரிஸ்க் எடுத்தால், உங்கள் உயி ருக்கு மட்டும் இல்லை... எனக்கும் என் மனைவியின் உயிருக்கும்கூட ஆபத்து ஏற்படலாம்."

"உங்கள் உயிருக்கு எப்படி ஆபத்து ஏற்படும்?"

"எங்களுடைய வீட்டை விற்கும் உரிமையான பவர் ஆஃப் அட்டர் னியை உங்கள் சகோதரிக்குக் கொடுத்து இருந்தோம். ஃப்ளோரா ஒரு லாயர். அவர் ஒரு வீட்டை விற்பனை செய்கிறார் என்றால், அதில் எந்தவிதமான சட்டச் சிக்க லும் வில்லங்கமும் இருக்காது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிறையப் பேர் வீட்டை விலைக்கு வாங்க வந்தார்கள். அது எங்களுக்கு ஒரு ப்ளஸ் பாயின்ட்டாக இருந்தது. ஆனால், வீட்டை வாங்க அடுத்தடுத்து அக்ரிமென்ட் போட்ட இரண்டு பேர் மர்மமான முறையில் இறந்து போனார்கள். மூன்றாவது நபராக வீட்டை வாங்க வந்த விஜேஷ், இன்னமும் அக்ரிமென்ட்கூடப் போடவில்லை; அதற்குள் லாயர் ஃப்ளோரா உயிரோடு இல்லை. காரணம், கொலையாளியின் பார்வை சல்லி வேர்களை விட்டு விட்டு, ஆணி வேரின் மேல் பாய்ந்துள்ளது. அடுத்து, அந்தப் பார்வை எங்கள் மீது பாயலாம். வீட்டை விற்கும் முயற்சியில் நாங்கள் தொடர்ந்து ஈடுபட்டால், இந்தக் கல்லறைத் தோட்டத்துக்கு நாங்களும் சீக்கிரமாகவே வர நேரிடலாம்..!"- ஆல்பர்ட்ஸன் பேசிக்கொண்டு இருக்கும்போதே அவருடைய செல்போன் அழைத் தது. மறுமுனையில் பேசியவர் தாம்ஸன்.

LAVEN.JOY@TAMILTORRENTS.COM

"மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்! எங்கே இருக்கிறீர்கள்?"

"ஃப்ளோராவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக செயின்ட் பீட்டர்ஸ் கல்லறைத் தோட்டத்துக்கு நானும் என் மனைவியும் வந்திருக்கிறோம்."

"உங்கள் அருகில் வேறு யாரா வது இருக்கிறார்களா?"

"ஆமாம். விஜேஷ், அவருடைய நண்பர் காமாட்சி, ஃப்ளோராவின் அண்ணன் ஃப்ரெட்ரிக்..."

"ஓ.கே! அவர்களிடம் எதுவும் சொல்லிக்கொள்ளாமல், உங்கள் மகள் சில்வியா அனுமதிக்கப்பட் டுள்ள ஹாஸ்பிடலுக்கு உடனே வாருங்கள்."

"எதற்கு?"

"வாருங்கள் சொல்கிறேன். நான் இப்போது அந்த ஹாஸ்பி டலில் உங்கள் மகளுக்குப் பக்கத் தில்தான் உட்கார்ந்திருக்கிறேன். கவனம், யாரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம்!"

மறுமுனையில் தாம்ஸன் செல்போனை அணைத்துவிட, ஆல்பர்ட்ஸன் செல்போனைப் பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்டு, மனைவியைப் பார்த் தார். "வீட்டுக்கு கெஸ்ட் வந்து இருக்கிறார்கள். நாம் உடனே புறப்பட வேண்டும்." சொன்ன ஆல்பர்ட்ஸன் தலையசைப்பால் மூன்று பேரிடமும் விடைபெற்றுக் கொண்டு, எமிலியோடு கல்லறைத் தோட்டத்துக்கு வெளியே நின்றி ருந்த காரை நோக்கிப்போனார்.

தலை குனிந்தபடி உட்கார்ந்து ஃப்ளோராவின் கல்லறையையே வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்த ஃப்ரெட்ரிக் திடுமென்று உடல் குலுங்கி அழ ஆரம்பித்தான். காமாட்சி அவனைத் தேற்றுவதற் காகப் பக்கத்தில் போய் உட்கார்ந் தான்.

LAVAN JOY@TAMILTORRENTS.COM

விஜேஷ் காமாட்சியிடம், "காலையிலிருந்தே வயிறு சரி யில்லை. கல்லறைத் தோட்டத் துக்கு வெளியே ரோட்டோரமாக ஒரு ரெஸ்ட் ரூம் பார்த்தேன். போயிட்டு வந்துடட்டமா?"

"ம்... போயிட்டு வாங்க! நான் ஃப்ரெட்ரிக்கிட்டே பேசிட்டு இருக்கேன்."

விஜேஷ் நடந்தான். கல்லறைகளுக்கு நடுவே இருந்த புல் பாதையில் மெள்ள நடைபோட் டவன், தன் செல்போனை உயிர்ப் பித்து எண்களை அழுத்தினான். மறுமுனையில் ரிங்டோன் போய், குரல் கேட்டது. ஆண் குரல்.

"விஜேஷ்! இப்போது எங்கே இருக்கிறாய்?"

"ஃப்ளோராவின் கல்லறைக்குப் பக்கத்தில்..."

"நிலவரம் என்ன?"

"பாதி வெற்றி..!"

"புரியவில்லை."

"ஆல்பர்ட்ஸன் இனி வீட்டை விற்க மாட்டார்."
"வேறு செய்தி?"

"விரைவில் புயல் புன்னகை பூக்கும். ஓவியம் சத்தம் போடும்!"

கோவை

ஆயிரக்கணக்கான கோரிக்கை மனுக்களோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் காத்துக்கொண்டு இருக்க... விவேக்கும் விஷ்ணுவும் ஒரு மரத்தடிக்குக் கீழே காரை நிறுத்திவிட்டு உள்ளே போனார்கள். பங்கஜ்குமாரின் பி.ஏ. வராந்தாவிலேயே கிடைத் தார். அடையாளம் கண்டு புன்ன கைத்து 'விஷ்' செய்தார்.

"வாங்க சார்!"

"சாரை பார்க்கணுமே? பிஸியா இருக்காரா?"

"இன்னிக்கும் மக்கள் குறை தீர்க்கும் நாள்தான். பட்... சார் அட்டெண்ட் பண்ணலை. ஊட்டி வெலிங்டனில் இருந்து ரிடையர்ட் ஆர்மி மேஜர் பிரதாப் சிங் தன்னோட டாட்டர் மேரேஜுக்காக இன்விடேஷன் கொடுக்க வந்திருக்கார். பிரதாப் சிங் கலெக்டரோட குடும்ப நண் பர். ரொம்ப நாள் கழிச்சு மீட் பண்றதால, அரை மணி நேரமா பேசிட்டு இருக்காங்க. நான் சாருக்கு இன்ஃபார்ம் பண்ணி டறேன்."- சொன்ன பி.ஏ. தன் செல்போனில் பங்கஜ்குமாரைத் தொடர்பு கொண்டு பேசிவிட்டு, விவேக்கிடம் நிமிர்ந்தார்.

"சார்... உங்களை உள்ளே வரச் சொன்னார்."
"தேங்க் யூ..."

விவேக்கும் விஷ்ணுவும் அந்த நீளமான வராந்தாவை 30 விநாடி நடையில்

முடித்துக்கொண்டு, பங்கஜ்குமாரின் அறைக்குள் நுழைந்தார்கள். பங்கஜ்குமாரும் மேஜர் பிரதாப் சிங்கும் டீ பருகிக்கொண்டு இருந்தார்கள்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..."

"நோ ஃபார்மாலிடீஸ்... வாங்க மிஸ்டர் விவேக்... ஹி இஸ் மிஸ்டர் பிரதாப் சிங். ரிடையர்ட் ஆர்மி மேஜர். என் குடும்ப நண் பர். நான் ஊட்டியில் இரண்டு வருஷம் கலெக்டராக இருந்த போது நல்ல பழக்கம். சனி, ஞாயிறுகளில் ரெண்டு பேரும் கோல்ஃப் விளையாடுவோம்..." - சொன்ன பங்கஜ்குமார், சஃபாரி அணிந்து ஆஜானுபாகுவாக உட்கார்ந்திருந்த பிரதாப் சிங் கிடம் திரும்பினார்.

"பை த .பை... மிஸ்டர் பிரதாப்! ஹி இஸ் மிஸ்டர் விவேக். சென்னை க்ரைம் பிராஞ்ச்... அண்ட் ஹி இஸ் விஷ்ணு. அசிஸ்டென்ட் டு ஹிம்."

"வெரி நைஸ் டு மீட் யூ..." பரஸ்பரம் கைகளைக் குலுக்கிக்கொண்டார்கள். பிரதாப் சிங் தன் பெரிய மீசைக்குக் கீழே புன் னகைத்தார். "மிஸ்டர் விவேக்... உங்களைப்பற்றி நிறையவே கேள் விப்பட்டு இருக்கிறேன். ஆனால், பார்ப்பது இதுதான் முதல் முறை. நீங்கள் வருகிற 23-ம் தேதி கோவையில் இருப்பீர்களா?"

"மே பி... சார்..!" - விவேக் தலையாட்ட, அவர் ஆங்கிலத்தில் தொடர்ந்தார்... "அப்படியென்றால், நீங்கள் என் மகள் திருமணத் துக்குக் கண்டிப்பாக வர வேண் டும்." சொன்னவர், தன் ப்ரீஃப் கேஸைத் திறந்து, தங்க நிறத்தில் டாலடித்த இரண்டு கல்யாணப் பத்திரிகைகளை வெளியே எடுத்து, ஒன்றை விவேக்கிடமும் இன்னொன்றை விஷ்ணுவிடமும் நீட்டினார்.

Lavanya (+91 [redacted])

"தேங்க் யூ சார்..."

"ஏதோ பார்த்துவிட்டோமே என்பதற்காகக் கொடுக்கப்பட்ட அழைப்பிதழ்கள் அல்ல இவை. திருமண நாளன்று கலெக்டர் பங்கஜ்குமாரோடு நிச்சயம் உங் கள் இருவரையும் எதிர்பார்ப்பேன். ஆவாரம்பாளையம் ராம கிருஷ்ணா மண்டபத்தில் திரும ணம். அவசியம் வரவேண்டும்."

"ஷ்யூர்... ஷ்யூர்! ராணுவமும் காவல் துறையும் நாட்டின் இரு கண்கள். வீ ஆர் இன் த சேம் போட்! நிச்சயமாக உங்கள் வீட் டுத் திருமணத்தில் கலந்துகொள் வோம்."

"நன்றி... நன்றி!" மேலும், சில நிமிட நேரங்கள் பேசிக்கொண்டு இருந்துவிட்டு, பிரதாப் சிங் கிளம்பிவிட... பங்கஜ்குமார் விவேக்கை ஏறிட்டார்.

"விவேக்! நானே உங்களுக்கு போன் பண்ணலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே பிரதாப் சிங் வந்துட்டார். ஆர்மி பர்ஸன். கொஞ்சம் தேச பக்தி அதிகம். விட்டா மணிக்கணக்காகப் பேசிட்டு இருப்பார். நமக்கு விரோதி பாகிஸ்தான்காரன் கிடையாது, சீனாக்காரன்தான்னு சொல்வார். அதை நிரூபிக்கிறதுக்காகப் புள்ளிவிவரங்களை அள்ளி வீசுவார். கேக்கிறதுக்குப் பொறுமை இருந்தா இட் வில்

பி இன்ட்ரெஸ்ட்டிங்!"

விவேக் சிரித்தான். "சார்... காலையில் பார்த்தபோது நீங்க சந்தோஷமா இல்லை. இப்ப கல கலப்பா இருக்கீங்க. காரணத்தைத் தெரிஞ்சுக்கலாமா?"

"காரணம் உங்களுக்கே தெரியுமே விவேக். கொலை செய்யப்பட்ட மைக்கேல் எர்னஸ்ட்டை என் ஒய்ஃப் மின்மினி நேத்து சாயந்திரம் போய்ப் பார்த்திருப் பாளோனு நாம சந்தேகப்பட் டோம். பட், ரமலத் கொடுத்த ஸ்டேட்மென்ட்டில் அது பொய்னு தெரிஞ்சுபோச்சு. தவிர, நேத்து சாயந்திரம் மின்மினி ஃபேஷியல் பண்ணிக்கிறதுக்காக வேற ஒரு பியூட்டி பார்லருக்கு போயிருக்கா. அந்த பியூட்டி பார்லரோட பேர் ரதி. ஆர்.எஸ்.புரம் பாஷ்யகார்லு ரோட்ல அந்த பார்லர் இருக்கு. நான் வீட்டைவிட்டுக் கிளம்பி ஆபீசுக்கு வரும்போதுதான் வீட்டுக்கு அந்த பார்லரில் இருந்து போன்கால் வந்தது. நான்தான் எடுத்துப் பேசினேன். மின்மினியைக் கேட்டாங்க. என்ன விஷ யம்னு விசாரிச்சேன். அதுக்கு அந்த பார்லரோட லேடி ஓனர், 'ஒண்ணுமில்ல சார்... நேத்திக்கு மேடம் வந்து இங்கே ஃபேஷியல் பண்ணிக்கிட்டாங்க. நான் ஒரு புது வகையான க்ரீமை யூஸ் பண்ணினேன். அது சிலருக்கு அலர்ஜியாயிடும். மேடத்துக்கு பிரச்னை ஏதாவது ஏற்பட்ட தானு தெரிஞ்சுக்கத்தான் போன் பண்ணினேன்'னாங்க."

விஷ்ணு குறுக்கிட்டான்... "பார்த்தீங்களா சார், நாம மேடம் விஷயத்துல பொறுமையாய் இருக்கப் போய்த்தான் இவ்வளவு பெரிய பாஸிட்டிவ்வான ரிசல்ட் கிடைச்சிருக்கு."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"யூ ஆர் கரெக்ட் விஷ்ணு! உணர்ச்சிவசப்படற சமயங்களில் நாம கொஞ்சம் நிதானத்தைக் கடைப்பிடிச்சா, பல விஷயங்களில் ஜெயித்துக்காட்டலாம். பட், இந்த அல்போன்ஸ் விஷயம்தான் எனக்குக் கொஞ்சம் உறுத் தலா இருக்கு. மின்மினிக்கு உண் மையிலேயே அல்போன்ஸைத் தெரியுமா, தெரியாதா? இந்தக் கேள்விக்குத் தெளிவான விடை கிடைக்கும்போதுதான் என் மன சுக்கு முழு நிம்மதி கிடைக்கும்."

"யெஸ்!" விவேக் ஆமோதித்தான். "பெல்லாரி சர்ச்சில் எடுக்கப்பட்ட அந்தக் கல்யாண போட்டோ ஹண்ட்ரட் பர்ஸன்ட் மார்ஃபிங் கிடையாது. போட்டோ டெக்னாலஜியைப் பயன்படுத்தி, எந்த ஒரு சில்மிஷமும் பண்ணப்படலை. அல்போன்சும் உங்க மனைவியும் மணக்கோலத்தில் இருப்பதும், ஃபாதர் ஒருவர் அந் தக் கல்யாணத்தை நடத்திவைக் கிறதும் நிஜம். அந்தக் கல்யாணத் தைச் சுமார் 50 பேர் வரை பார்த்துட்டும் இருக்காங்க."

"பாஸ்! அந்த போட்டோவோடு பெல்லாரிக்கே போய் சர்ச்சைத் தேடிப் பிடிச்சு ஒரு என்கொயரி பண்ணிப் பார்த்தா என்ன?"- விஷ்ணு கேள்வியை எழுப்பிய அதே விநாடி -

பங்கஜ்குமாரின் செல்போன் விளித்தது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார். வீட்டில் இருக்கும் செக்யூரிட்டி ஆபீஸர் வேல்கண்ணன்.

"சொல்லுங்க வேல்..!"

"ஐயா! அம்மா அங்கே வந்் தாங்களா?"

"இல்லேயே! ஏன்?"

"அம்மா வீட்லயும் இல்லீங் கய்யா..."

"என்னது, வீட்ல இல்லையா? எங்கே போனாங்க?"

"காலையில 11 மணி சுமாருக்கு காரை எடுத்துக்கிட்டு வெளியே கிளம்பினாங்கய்யா. எங்கே போறேன்னு சொல்லிட்டுப் போகலை. மத்தியானம் லஞ்சுக் கும் வரலை. இப்போ மணி நாலு. அம்மா இன்னும் வீடு திரும்பாததால உங்களுக்கு போன் பண்ணினேன்."

"சரி... நான் பார்த்துக்கிறேன்!"- சொன்ன பங்கஜ்குமார் வேல்கண் ணனின் இணைப்பைத் துண்டித் துவிட்டு, மின்மினியின் செல் போன் எண்களைத் தட்டினார். மறுமுனையில் நிசப்தம்.

சில விநாடிகளுக்குப் பின் ரெக்கார்டட் வாய்ஸ் கேட்டது... 'நீங்கள் அழைத்த செல்போன் எண் தற்போது உபயோகத்தில் இல்லை!'

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

- பறக்கும்...

கேள்வி: ஐக்கிய நாடுகள் சபை அதிகாரபூர்வமாக எந்த ஆண்டு செயல்பட ஆரம்பித்தது?

பதில்: அ.1945 ஆ.1944 இ.1943

AVCRIME என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, சரியான விடைக்குரிய எண்ணை டைப் செய்து, கூடவே மறக்காமல் இந்த அத்தியாயம்பற்றிய உங்கள் கமென்ட்டையும் பளிச்சென்று ஐந்தே வார்த்தைகளுக்குள் டைப் செய்து, 562636-க்கு 15.2.2010-க்குள் எஸ்.எம்.எஸ். பண்ணுங்க!

கோவை

பங்கஜ்குமாரின் பங்களா பதற்றத்தில் ததும்பிக்கொண்டு இருந்தது.

வேலையாட்கள் ஆங்காங்கே கலவரமாக நின்றிருக்க, விவேக் செக்யூரிட்டியிடம் விசாரித்துக்கொண்டு இருந்தார்.

"மிசஸ் மின்மினி காலையில் எத்தனை மணிக்கு வீட்டைவிட்டுக் கிளம்பிப் போனாங்க?"

"11 மணிக்கு சார். வழக்கமா வெளியே கிளம்பிப் போகும்போது எங்கே போறேன்னு சொல்லிட்டுப் போவாங்க. இன்னிக்கு சொல்லிட்டுப் போகலை."

"மேடம் கிளம்பிப்போறதுக்கு முந்தி வெளியே இருந்து ஏதாவது இன்-கமிங் கால் வந்ததா?"

"லேண்ட்லைனுக்கு ஒரு காலும் வரலை சார்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"கார்ல திங்க்ஸ் ஏதாவது இருந்ததா?"

"நான் பார்க்கலை சார்."

விவேக் மேற்கொண்டு பேசும் முன்பு, பங்கஜ்குமார் வேகவேகமாகப் பக்கத்தில் வந்தார். "மிஸ்டர் விவேக்... கன்ட்ரோல் ரூமில் இருந்து இப்பதான் தகவல் வந்தது. மின்மினியோட கார் ராஜ வீதியில் இருக்கிற ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு சந்தில் இருக்கிறதா தகவல். காருக்குள் யாரும் இல்லை. அசிஸ்டென்ட் கமிஷனர் நம்பெருமாள் அங்கே நமக்காக வெயிட் பண்றார். ஷல் வீ மூவ்?"

கிளம்பினார்கள்.

பங்களாவில் இருந்து 10 நிமிடப் பயணம். நெரிசலான ராஜ வீதியும், கோயிலை ஒட்டியிருந்த அந்தச் சந்தும் பார்வைக்குக் கிடைத்தன. மின்மினி பயன்படுத்தும் அட்லான்டிக் ப்ளூ நிற மாருதி ஆல்ட்டோ கார் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் ஓர் ஓரத்தில் சாதுவாக நின்றிருந்தது. கார் அருகே இருந்த நம்பெருமாள், விவேக்கைப் பார்த்ததும் பக்கத்தில் வந்தார்.

"சார்... கார் பூட்டியிருக்கு. பக்கத்தில் இருக்கிற பாத்திரக் கடையில் விசாரிச்சேன். காலைல 11 மணியில இருந்து கார் இதே இடத்துலதான் நின்னுட்டு இருக்கிறதாச்

சொன்னாங்க. காரில் இருந்து ஒரு பெண் இறங்கிப் போனதையும் பார்த்து இருக்காங்க."

"யார் அந்த ஆள்?"

"நான்தான் சார்" லுங்கியும் பனியனும் அணிந்த ஒரு நபர் பக்கவாட்டில் இருந்து பவ்யமாகக் குரல் கொடுத்தார். விவேக் அவரிடம் திரும்பினான்.

"காரில் இருந்து இறங்கிப் போன பெண்ணைப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன் சார்."

"எப்படி இருந்தாங்க?"

"நல்ல உயரம். சிவப்பு. பார்க் கிறதுக்குப் பெரிய இடத்துப் பொண்ணு மாதிரி இருந்தாங்க சார். கொஞ்சம் டென்ஷனா, வேகமா நடந்து போனாங்க."

"அவங்களோடு வேறு யாராவது இருந்தாங்களா?"

"இல்ல சார்... அவங்க மட்டும்தான்."

"எந்தப் பக்கம் போனாங்க?"

"நான் பார்க்கலை சார்." LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"கார் 11 மணியில இருந்து இதே இடத்துல நின்னுட்டு இருக்கு. உங்களுக்குச் சந்தேகம் வரலையா?"

"சார்... இந்த ஏரியாவில் கார் பார்க்கிங் பெரிய பிராப்ளம். ஒப்பனக்கார வீதியில் பர்ச்சேஸ் பண்ண வர்றவங்கள்ல பெரும்பாலோர் இது மாதிரியான சந்துகளில் காரை நிறுத்திட்டுப் போயிடறாங்க. அவங்க எப்ப வந்து காரை எடுப்பாங்கன்னு யாருக்கும் தெரியாது."

விவேக் தனக்குப் பின்னால் இருந்த பங்கஜ்குமாரிடம் திரும்பினான். "சார்... இந்தப் பகுதியில் உங்களுக்கோ, உங்க மனைவிக்கோ தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா?"

"இல்லை."

"பக்கத்துல கோயில் இருக்கு. ஒருவேளை கோயிலுக்கு வந்து இருப்பாங்களோ?"

"அப்படி கோயிலுக்குப் போறதா இருந்தா மின்மினி என்கிட்ட இருந்து மறைக்க வேண்டிய அவசியம் இல்லையே!"

"பாஸ்!" - கூப்பிட்டுக்கொண்டே விஷ்ணு பக்கத்தில் வந்தார்.

"என்ன?"

"பூட்டியிருந்த காரை 'த்ரூ' பண்ணிப் பார்த்தேன். டிரைவிங் ஸீட்டுக்குப் பக்கத்தில் கியர் போடற இடத்தில் செல்போன் ஒண்ணு எசகுபிசகா மாட்டிக்கிட்டுத் தெரியுது பாஸ். காரோட டூப்ளிகேட் சாவி கிடைச்சா காரைத் திறந்து எடுத்துடலாம்."

கவலையிலும் கலக்கத்திலும் இருண்டுபோயிருந்த முகத்தோடு தெரிந்த பங்கஜ்குமார், ஒரு அனல் பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

"டூப்ளிகேட் சாவி வீட்ல எந்த இடத்துல இருக்குன்னு எனக்குத் தெரியாது. அதைத் தேடிட்டு இருக்கவும் நேரம் கிடையாது. யாராவது ஒரு கார் மெக்கானிக்கைக் கூப்பிட்டு காரை ஓப்பன் பண்ணிப் பார்த்துடலாம்."

"விஷ்ணு... பக்கத்துல மெக்கானிக் யாராவது இருக்காங்களான்னு பாரு."

காரின் லாக்குக்கு விடுதலை கொடுத்துக் கதவைத் திறக்க, அழைத்து வந்த மெக்கானிக்குக்கு 10 நிமிஷ நேரம் பிடித்தது.

காரின் கியர் போடும் இடத்தில் இருந்த செல்போனை எடுத்த விவேக், பங்கஜ்குமாரிடம் காட்டினார்.

"சார்... இது உங்க மனைவியோட செல்போன்தானே?"

"ஆமா..."

"செல்போனின் பேட்டரி சிஸ்டம் சரியா பொருத்தப்படலை. அதுதான் நீங்க இந்த செல்போனுக்கு டயல் பண்ணிப் பார்த்தபோது 'நாட் இன் யூஸ்'னு ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது" - சொன்ன விவேக், செல்போனின் பேட்டரி சிஸ்டத்தைச் சரியாகப் பொருத்தி, அதற்கு உயிர் கொடுத்து, கால் ரிஜிஸ்டருக்குள் நுழைந்து, ரிசீவ்டு கால்ஸ்-ல் மின்மினியைக் கடைசியாக அழைத்தது யார் என்று பார்த்தான்.

பெல்லாரி மல்லய்யா!

"சார்... உங்க மனைவி இந்த செல்போனில் கடைசியா அந்த பெல்லாரி மல்லய்யாகிட்டே பேசியிருக்காங்க. டைம் ஆஃப் கால் 10.50."

பங்கஜ்குமாரின் முகத்தில் திகைப்பு. "ஸோ... 10.50-க்கு பெல்லாரி மல்லய்யா பேசினதும் மின்மினி அடுத்த 10 நிமிஷத்துக்குள்ளே புறப்பட்டுப் போயிருக்கணும். ஏதாவது பேசணும்னா, அந்தப் பெரியவர் வீட்டுக்கே வந்து இருக்கலாமே? அதுவும் இந்த இடத்துல கார் நிற்க வேண்டிய அவசியமே இல்லையே."

"சார்... பெல்லாரி மல்லய்யாவுக்கு போன் பண்ணிப்பார்த்தா, ஓரளவுக்கு விஷயம் பிடிபடலாம்" - சொன்ன விவேக், பெல்லாரி மல்லய்யாவின் செல்போன் எண்களை அழுத்த... மறுமுனையில் ரிங் போயிற்று. தொடர்ந்து கேட்டது பெண் குரல்.

"யெஸ்."

"பெல்லாரி மல்லய்யா?"

"நீங்க யாரு?"
"அவரோட நண்பர்."

"பேரு?"

"சிவராம கிருஷ்ணன்."

"என்ன பண்றீங்க?"

"கவர்ன்மென்ட் சர்வீஸ்ல இருந்து ரிட்டயராயிட்டேன்."

"கோயம்புத்தூர்ல நீங்க இப்போ எங்க இருக்கீங்க?"

"கணபதியில்" என்று எரிச்சலாகச் சொன்ன விவேக், குரலை உயர்த்தி கோபக் குரலில் கேட்டான்... "பெல்லாரி மல்லய்யா அங்கே இருக்காரா, இல்லையா?"

LAPAN_JOY@TAMILTORRENTS.COM

"இருக்கார். பட் அவர் பேசக்கூடிய நிலையில் இல்லை."

"ஏ... ஏ... ஏன்?"

"நீங்க அவரோட நண்பர்தானே?"

"ஆமா..."

"அப்படின்னா உடனே புறப்பட்டு சுபிட்சா மருத்துவமனைக்கு வாங்க."

"என்னாச்சு அவருக்கு?"

"அவர் கீழே விழுந்ததில் தலையில் பலமான அடிபட்டு இப்போ அன்கான்ஷியஸா இருக்கார்."

"நீங்க யாரு?"

"ஸ்டாஃப் நர்ஸ்..."

"ஹாஸ்பிடலோட டாக்டர் யாரு?"

"பாலசுப்ரமணியன்."

"டாக்டர் இருக்காரா?"

"டாக்டர் இங்கேதான் இருக்கார். நீங்க உடனே புறப்பட்டு வாங்க. இங்கே அட்மிட் ஆகி இருக்கிறவர் பேரு பெல்லாரி மல்லய்யான்னு எங்களுக்குத் தெரியாது. ரோட்ல விழுந்துகிடந்த அவரை யாரோ ஒரு ஆட்டோ டிரைவர் கொண்டுவந்து இங்கே அட்மிட் பண்ணிட்டுப் போய்ட்டார். தலையில் அடிபட்டு நினைவிழந்துகிடந்த பெரியவரோட ஜிப்பா பாக்கெட்டில் செல்போன் இருந்தது. டாக்டர் அதை என்கிட்டே எடுத்துக் கொடுத்து, இந்த செல்லுல யாராவது போன் பண்ணிப் பேசினா அவங்களை ஹாஸ்பிடலுக்கு உடனே புறப்பட்டு வரும்படியா தகவல் கொடுக்கச் சொன்னார். நீங்க போன் பண்ணீங்க. நான் தகவல் சொல்லிட்டேன். உங்க நண்பரைப் பார்க்க வர்றீங்களா?"

"வர்றேன். சுபிட்சா மருத்துவமனை எங்கே இருக்கு?"

நர்ஸ் அட்ரஸைச் சொல்ல... விவேக் அதைக் காதில் வாங்கி மனதில் பதியவைத்துக்கொண்டான்.

நியூயார்க்

ஆல்பர்ட்ஸன்னும் எமிலியும் படகில் பயணம் செய்து நியூஜெர்ஸியில் உள்ள ஸ்டுவர்ட் ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்தபோது, உறைக்காத சூரியன் தலைக்கு மேல் இருந்தான்.

ஹாஸ்பிடலின் காரிடாரில் நின்று செல்போனில் பேசிக்கொண்டு இருந்த தாம்ஸன், அவர்களைப் பார்த்ததும் பேச்சைத் துண்டித்துக்கொண்டு வேகமாக வந்தார். ஆல்பர்ட்ஸன் பதற்றக் குரலில் கேட்டார்,

"சார்... என் மகள் சில்வியாவுக்கு இப்போது எப்படி இருக்கிறது? நீங்கள் எங்களுக்கு போன் செய்த நிமிஷத்தில் இருந்து நாங்கள் நெருப்பின் மேல் நின்றுகொண்டு

இருக்கிறோம். அவளுக்கு எந்தப் பிரச்னையும் இல்லையே?"

தாம்ஸன் கையமர்த்தினார். "மிஸ்டர் ஆல்பர்ட்ஸன். உங்கள் வீட்டைச் சுற்றியே வேண்டாத நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டு இருப்பதற்கும், உங்க ளுடைய மகள் சில்வியாவின் உடல் நிலை ஒரு விபரீத நோய்க்கு உட்பட்டு இருப்பதற்கும் ஏதாவது காரணம் இருக்குமோ என்ற யூகத்தில் இந்த ஹாஸ் பிடலுக்கு வந்து சில்வியாவுக்கு சிகிச்சை தரும் டாக்டர் ஸ்டூவர்ட்டைச் சந்தித்துப் பேசினோம். அவர் சொன்ன ஒரு விஷயம் என்னுடைய மனசுக்கு நெருடலாக இருந்தது. அதுதான் உங்களையும் உங்க ளுடைய மனைவியையும் உடனே புறப்பட்டு வரச் சொன்னேன்."

ஆல்பர்ட்ஸன் புருவங்களை உயர்த்தினார். "டாக்டர் ஸ்டூவர்ட் உங்களிடம் என்ன சொன்னார்?"

"அது என்ன என்பதை டாக்டர் ஸ்டூவர்ட்டே உங்களுக்குச் சொல்வார். வாருங்கள், போவோம்."

மூவரும் காரிடாரில் நடந்தார்கள். எமிலி தவிப்போடு கேட்டாள், "சில்லியாவின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே?"

SAYAN JOY@TAMILTORRENTS.COM

"எந்த ஆபத்தும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், முன்னைக் காட்டிலும் சிறிது தெளிவோடு இருக்கிறாள். டாக்டர் ஸ்டூவர்ட் உங்கள் மகள் சில்வியாவை ஆழ்நிலை தியானத்துக்குக் கொண்டுபோய் பேசிப் பார்த்ததில் அவள் சில வார்த்தைகளைப் பேசி இருக்கிறாள். அந்த வார்த்தைகள் டாக்டருக்குப் புரியவில்லை. அந்த வார்த்தைகளுக்கு என்ன பொருள் என்று தெரிந்துகொள்வதற்காக உங்களை வரவழைத்துப் பேச வேண்டும் என்று டாக்டர் நினைத்துக்கொண்டு இருந்த நேரத்தில், நானும் ஸ்மித்தும் என்கொயரிக்கு வந்தோம்."

"அது என்ன வார்த்தைகள்?"

"டாக்டர் ஸ்டூவர்ட் அந்த வார்த்தைகளை ஒரு தாளில் எழுதிவைத்திருக்கிறார்."
"நீங்கள் அந்த வார்த்தைகளைப் பார்த்தீர்களா?"

"பார்த்தேன். எனக்கும் சரி... ஸ்மித்துக்கும் சரி, அதில் ஒரு வார்த்தைகூடப் புரியவில்லை. அதனால்தான் உங்களை உடனடியாகக் கூப்பிட்டோம்."

மூன்று பேரும் பேசிக்கொண்டே ஹாஸ்பிடலில் பளபளக்கும் கிரானைட் தரைப் பரப்பில் நடந்து டாக்டர் இருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

போலீஸ் சார்ஜண்ட் ஸ்மித்தோடு பேசிக்கொண்டு இருந்த டாக்டர் ஸ்டூவர்ட் புன்னகையோடு எழுந்து ஆல்பர்ட்ஸனின் கையைப் பற்றிக் குலுக்கினார். "மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்... உங்கள் மகள் சில்வியாவின் உடல்நிலையில் சின்னதாக ஒரு முன்னேற்றம். இட்ஸ் ஏ மிராக்கிள். நானே எதிர்பார்க்காத ஒன்று. பை காட்ஸ் கிரேஸ் ஆல் திங்க்ஸ் ஆர் வெரி வெல்கோயிங்."

"சில்வியா ஏதோ சில வார்த்தைகள் சொன்னதாக..."

"ஆமாம்... சொன்னாள்! முதலில் நீங்கள் உட்காருங்கள்."

இருவரும் உட்கார்ந்தார்கள். டாக்டர் ஸ்டூவர்ட் தொடர்ந்தார்.

"மிஸ்டர் ஆல்பர்ட்ஸன்... நீங்கள் சில்வியாவை இந்த ஹாஸ்பிடலில் கொண்டுவந்து அட்மிட் செய்தபோது அவளுடைய உடல்நலமும் பாதிக்கப்பட்டு இருந்தது. மனநலமும் பாதிக்கப்பட்டு இருந்தது. ஜஸ்ட் லைக் ஏ வெஜிடபிள்போல் ஒரே திசையைப் பார்த்துக்கொண்டு இருந்த சில்லியாவிடம் கடந்த இரண்டு நாட்களாகச் சின்னதாக ஒரு மாற்றம். திடீரென்று ஏதாவது ஒரு வார்த்தையைப் பேசிவிட்டு, மௌனமாகிவிடுவாள். அது என்ன வார்த்தைகள் என்று எனக்குப் பிடிபடாததால் அவளை சப்-கான்ஷியஸ் மைண்டுக்குக் கொண்டுபோய் பேசிப் பார்த்தேன். சின்னச் சின்னதாக நூற்றுக்கும் மேற்பட்ட கேள்விகளைக் கேட்டேன். கேள்விகளுக்கு மௌனம் சாதித்தாள். சில கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அழுதாள். நான்கைந்து கேள்விகளுக்கு மட்டும், நான் கேட்ட கேள்விகளுக்குப் பொருத்தம் இல்லாமல் ஒற்றை வார்த்தைகளில் பதில் சொன்னாள். அந்த வார்த்தைகளை இந்தத் தாளில் எழுதிவைத்திருக்கிறேன். படித்துப் பாருங்கள். ஒருவேளை, இவை உங்களுக்குப் பரிச்சயமான வார்த்தைகளாக இருக்கலாம்" என்ற டாக்டர் ஸ்டூவர்ட், பேப்பர் வெயிட்டுக்குக் கீழே இருந்த அந்தத் தாளை எடுத்து நீட்ட, ஆல்பர்ட்ஸன் வாங்கிப் பார்த்தார்.

ENJOY@TAMILTORRENTS.COM

ப்ளாக் ஸ்மைல்
ரெட் மமண்ட்
ப்ளூ நாட்
வயலெட் விஷன்
கிரீன் டேஸ்ட்
யெல்லோ டாக்
சைனோ-பாக்

ஆல்பர்ட்ஸன் அந்த வார்த்தைகளை வாய்விட்டுப் படித்துவிட்டு, குழப்பம் அதிகரித்த மனதோடு ஸ்டூவர்ட்டை ஏறிட்டார்.

"ஒன்றும் புரியவில்லையே!"

"மிசஸ் எமிலி... உங்களுக்கு?"

"எனக்கும் புரியவில்லை... பட் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கும் ஒரு கெஸ் ஒர்க்."

"சொல்லுங்கள்..."

"சில்வியா பழங்காலப் பொருட்களையும் அரிதான தாவர-பூச்சி வகைகளையும் சேகரித்து, அதை பிரிசர்வ் செய்து தன் அறையில் மியூஸியம்போல் வைத்திருக்கிறாள். அந்தப் பொருள்களுக்குச் சூட்டிய வித்தியாசமான பெயர்களாகக்கூட இருக்கலாம்."

"ஸாரி மிசஸ் எமிலி... யுவர் கெஸ் ஒர்க் மே பி ராங்."

"எப்படிச் சொல்கிறீர்கள் டாக்டர்?"

"நான் சில்வியாவிடம் சப்-கான்ஷியஸ் மைண்டில் பேசிக்கொண்டு இருந்தபோது, ஒரே கேள்வியை விதவிதமாகக் கேட்டேன். அந்தக் கேள்வி இதுதான். 'சில்வியா... உன்னுடைய உடல்நிலையும் மனநிலையும் 24 மணி நேரத்துக்குள் இவ்வளவு மோசம் அடைந்ததற்கு எது காரணம்? உனக்கு என்ன பிரச்னை? எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்! குணப்படுத்திவிடலாம். இந்தக் கேள்வியை நான் எந்த ரூபத்தில் கேட்டாலும் அவள் சொன்ன பதில் இந்த ஏழு வார்த்தைகள்தான்."

SAVANJOY@TAMILTORRENTS.COM

ஆல்பர்ட்ஸன் நெற்றியைப் பிடித்துக்கொண்டார். "டாக்டர்... இருக்கிற குழப்பங்கள் போதாது என்று இப்போது இந்தப் புதுக் குழப்பம் வேறு. சில்வியாவின் மனநலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அந்தப் பாதிப்பில் இருந்து அவள் இன்னமும் மீளவில்லை என்பதைத்தான், இந்தப் புரியாத, புதிரான வார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்போது அவளுடைய உடல் நலம் எப்படி இருக்கிறது டாக்டர்? அதைக் குணப்படுத்தினால் ஒருவேளை அவளுடைய மனப் பாதிப்பு சீரடையலாம்."

டாக்டர் ஸ்டூவர்ட் பெருமூச்சுவிட்டார். "உங்களுடைய மகள் சில்வியாவுக்கு இதயத்தில் ஏழு விதமான குறைபாடுகள் உள்ளன. அவளுக்குப் பிறப்பிலேயே டெட்ராலஜி ஆ◌ஃப் பாலட் என்ற இதயக் குறைபாடு இருந்துள்ளது. அவளுடைய மகா தமனியில் இருந்து பெரிய ரத்த நாளங்கள் ரத்தத்தை நுரையீரலுக்குக் கொண்டுசெல்கின்றன. இது இயற்கைக்கு மாறான அமைப்பாகும். தவிர, இதயத்தின் அறைகளுக்கு இடையே 3 சென்டிமீட்டர் அளவுக்கு இரண்டு துவாரங்கள் இருந்தன. இருதயத்தின் வலது பக்கத்தில் அதிக சதை வளர்ச்சி இருந்தது பல்மோனரி வால்வு சரியாக இயங்காத காரணத்தால், ரத்தக் கசிவு இருந்தது. மேலும், பெரிய மகா தமனியில் அழற்சி நோய் காணப்பட்டது. அதிகப்படியான கால்சியம் படிந்த ரத்தக் கசிவும், அயோடிக் வால்வில் இருந்தது. இவை அனைத்தையும் சரிசெய்ய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். அப்படிச் செய்தாலும் அறுவைச் சிகிச்சையின் சக்சஸ் ரேட் 50 சதவிகிதம்தான். வெற்றி

என்பது 'cat on the wall' தான். இந்த அறுவைச் சிகிச்சைக்கு நிறையச் செலவாகும். சிகிச்சைக்குப் பிறகு விலை உயர்ந்த மருந்துகளை வாழ்நாள் முழுவதும் சாப்பிட வேண்டும்."

ஆல்பர்ட்ஸனின் கண்கள் வெகுவாகக் கலங்கி அழுகையில் பளபளத்தன. "டாக்டர்! அந்தப் பணத்துக்காகத்தான் வீட்டை விற்க எப்படி எல்லாமோ முயற்சி செய்து வருகிறோம். யாரோ அதற்குத் தடையாக இருக்கிறார்கள். அந்த மகாபாவிகளை..."

"எக்ஸ்க்யூஸ் மீ டாக்டர்..."

கதவருகே குரல் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அந்த நர்ஸ் பார்வைக்குக் கிடைத்தாள்.

"யெஸ்" என்றார் டாக்டர் ஸ்டூவர்ட்.

"டாக்டர், சில்வியா இரண்டு நிமிடங்களுக்கு முன்பு கண் திறந்து பார்த்தாள். என்னைக் கையசைத்துக் கூப்பிட்டுப் பக்கத்தில் நிறுத்திவைத்துக்கொண்டு மூச்சிரைக்கப் பேசினாள்."

"என்ன பேசினாள்?"

"அவளுக்கு மைக்கேல் எர்னஸ்ட்டைப் பார்க்க வேண்டுமாம். அதுவும் உடனே!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

- ***பறக்கும்...***

நானும் ஒரு ராஜேஷ்குமார்! மெகா போட்டி

அன்பு வாசகர்களே!
வணக்கம்.

இது 'இனி, மின்மினி' தொடரின் 20-வது அத்தியாயம். தொடர் நிறைவடைய இன்னும் சில வாரங்களே உள்ளன. கோவையில் ஒரு கதை, நியூயார்க்கில் ஒரு கதை என்று இரட்டைக் குதிரைகளில் பயணிக்கும் இந்தக் கதைகள் எங்கே, எந்த இடத்தில், எப்படிச் சந்தித்து நிறைவடையப்போகின்றன? கோவைக் கதை யில் உள்ள பாத்திரங்களுக்கும், நியூயார்க் கதையில் உள்ள பாத்திரங்களுக்கும் என்ன சம்பந்தம்? கதையின் கிளைமாக்ஸ் எவ்விதம் அமையும்?

இதுபோன்ற கேள்விகளுக்கு எழுத்தாளர் ராஜேஷ்குமாரிடம் 'திக்திக்' பதில்கள் உள்ளன. அவற்றை உங்களால் யூகிக்க முடிகிறதா? முடிந்தால், எழுதி அனுப்புங்கள். உங்களுடைய யூகம் அவர் பதில்களோடு பொருந்தினால், நீங்கள் ஒரு வெற்றியாளர். ராஜேஷ்குமாருடன் அளவளாவிக்கொண்டே அருமையான ஒரு விருந்து உண்ண உங்களில் சிலருக்கு வாய்ப்பு காத்திருக்கிறது.

நியூயார்க்கில் உள்ள சில்வியா, கோவையில் இறந்துபோய்விட்ட மைக்கேல் எர்னஸ்ட்டின் பெயரைச் சொல்லி, 'நான் அவரை உடனே பார்க்க வேண்டும்' என்று சொல்கிறாள். அவள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்னவாக இருக்க முடியும்? ஹீரோ விஜேஷ் திடீர் என்று வில்லனாக மாறுகிறான். அவனுடைய நோக்கம் என்ன? மின்மினிக்கும் அல்போன்சுக்கும் கல்யாணம் நடந்தது உண்மையென்றால், அதன் பின்னணி என்ன? இந்த மூன்று கேள்விகளுக் குப் பதில் அளித்தால்கூடப் போதுமானது.

உங்கள் பதில்களை ஒரு தபால் கார்டில் அடங்கும்படி எழுதி, 'நானும் ஒரு ராஜேஷ்குமார்' என்று தலைப்பிட்டு 27-2-2010 தேதிக்குள் விகடன் அலுவலகத்துக்குக் கிடைக்கும்படியாக அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது!

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

நியூயார்க்

கண்களை மூடி தன்னிச்சையாக 'மைக்கேல் எர்னஸ்ட்'டின் பெயரை உச்சரித்துக்கொண்டு இருந்த சில்வியாவை எல்லோரும் சூழ்ந்தார்கள். டாக்டர் ஸ்டூவர்ட் மெள்ள அவளுடைய கன்னங்களைத் தட்டினார். குனிந்து கூப்பிட்டார்.

"சில்வியா..."

அவளுடைய அரற்றல் சட்டென்று நின்றது. இமைகளை மெதுவாகத் திறந்து பார்த்தவள், ஆயாசமாகக் கண்களை மூடிக்கொண்டாள். பாளம் பாளமாக வெடித்துக் காய்ந்துபோயிருந்த உதடுகளை நாவால் நீவி ஈரப்படுத்திக்கொண்டாள். மறுபடியும் ஒரு தடவை ஈனஸ்வரத்தில் முனகினாள்.

"நான் மைக்கேல் எர்னஸ்ட்டிடம் உடனடியாகப் பேச வேண்டும்!"

தாம்ஸன், ஆல்பர்ட்ஸன்னை ஏறிட்டார். "யார் அந்த மைக்கேல் எர்னஸ்ட்?"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

அவர் தீர்க்கமாகத் தலையை ஆட்டினார்.

"தெரியவில்லையே! நானும் அந்தப் பெயரைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டு இருக்கிறேன்."

"மிசஸ் எமிலி... உங்களுக்கு?"

"எனக்கும் அதே உணர்வுதான். மைக்கேல் எர்னஸ்ட் என்கிற இந்தப் பெயர் எங்களுடைய உறவினர் வட்டத்திலும், நண்பர்கள் வட்டத்திலும்... இல்லை. ஒருவேளை அந்த நபர் சில்வியாவுக்கு மட்டுமே தெரிந்தவராக இருக்கலாம்."

"நீங்கள் சில்வியாவிடம் பேசிப்பாருங்கள் மிசஸ் எமிலி."

எமிலி மகளின் தலைமாட்டில் போய் உட்கார்ந்தாள். அவளுடைய சதைப்பற்று இல்லாத கன்னங்களை வருடிக்கொண்டே மென்மையான குரலில் கூப்பிட்டாள்.

"சில்வியா..."

"ம்..."

"நான் அம்மா வந்திருக்கிறேன்!"

"ம்..."

"யார் அந்த மைக்கேல் எர்னஸ்ட்?"

"ம்..."

"சொல்... யார் அவர்? எங்கே இருக்கிறார் அவர்?" - எமிலி கேள்விகளைக் கேட்டுக்கொண்டு இருக்கும்போதே சில்வியா தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து கண்களை மூடிக்கொண்டாள். டாக்டர் ஸ்டூவர்ட் அவளைச் சோதித்துப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"சில்வியாவுக்கு இப்போது உணர்விழந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவளுடைய இதயத்தின் இயக்கம் ஒழுங்கற்ற முறையில் இருப்பதால், மூளைக்குப் பாய வேண்டிய ரத்தத்தின் அளவு குறையும்போது இதுபோன்ற உணர்விழந்த நிலை ஏற்படும்... மறுபடியும் சில்வியா சுய உணர்வுக்குத் திரும்பச் சிலமணி நேரம் ஆகலாம்."

ஆல்பர்ட்ஸன் குறுக்கிட்டார், "டாக்டர்! சில்வியாவை மறுபடியும் ஆழ்நிலை தியானத்துக்குக் கொண்டுபோய் அந்த 'மைக்கேல் எர்னஸ்ட்' யார் என்று கேட்டு, பதில் தெரிந்துகொள்ள முடியாதா?"

"முடியும். ஆனால்..."

"என்ன... ஆனால்?" LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"சில்வியாவின் உடல்நிலை சரியில்லாத இந்த நேரத்தில் அவளை அடிக்கடி ஆழ்நிலை தியானத்துக்கு உட்படுத்துவது மூளைப் பகுதியைப் பாதிக்கும். முதலில் அவளுக்கு உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும். அதைச் செய்யாதபட்சத்தில் சில்வியா வெகு விரைவிலேயே ஒரு முழு நேர கோமாநோயாளியாக மாற வாய்ப்பு அதிகம். ஆபரேஷனுக்கு நீங்கள் ஒரு பெரிய தொகையைச் செலவழிக்க வேண்டியிருக்கும் என்பதால், இந்த விஷயத்தில் நீங்கள்தான் சீக்கிரமே ஒரு முடிவுக்கு வர வேண்டும்."

ஆல்பர்ட்ஸன் உடைந்துபோன குரலில் கண்களில் வழியும் நீரோடு டாக்டரின் கைகளைப் பற்றிக்கொண்டு பேச ஆரம்பித்தார்.

"டாக்டர்! என் மகள் என்ன பாவம் செய்தாளோ, தெரியவில்லை! கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வீடு எங்களுக்கு இருந்தும் அதை விற்க முடியாமல் தவித்துக்கொண்டு இருக்கிறோம். வீட்டை விற்க முடியாதபடி திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டு உள்ளார்கள். நீங்கள் விரும்பினால்,எங்கள் வீட்டுப் பத்திரத்தை வைத்துக்கொண்டு என் மகள் சில்வியாவுக்கு ஆபரேஷன் செய்யுங்கள். எங்களால் முடியும்போது பணத்தைக்

கொடுத்து வீட்டை மீட்டுக் கொள்கிறோம். இல்லாவிட்டால், அந்த வீட்டை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்."

டாக்டர் ஸ்டுவர்ட், ஆல்பர்ட்ஸன்னின் தோள் மீது கை வைத்தார், "மிஸ்டர் ஆல்பர்ட்ஸன். உங்களுடைய உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், உங்களுடைய கோரிக்கையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஐ'ம் ஹெல்ப்லெஸ். இந்த ஹாஸ்பிடல் எனக்கு மட்டும் உரிமையானது அல்ல. இது 10 டாக்டர்கள் அடங்கிய போர்டு ஒன்றால் இயங்குகிறது. அந்த 10 பேர்களில் ஏழு பேர் பண விஷயத்தில் கண்டிப்பானவர்கள். வீட்டுப் பத்திரத்தை வாங்கிக்கொண்டு ஆபரேஷன் செய்ய அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வேண்டுமானால், நான் உங்களுக்கு ஒரு யோசனை சொல்கிறேன்."

"சொல்லுங்கள்..."

"உங்கள் வீட்டை ஏதாவது ஒரு பேங்கில்வைத்துக் கடன் வாங்குங்கள். எப்படியும் ஒரு நல்ல தொகை கடனாகக் கிடைக்கும். அந்தத் தொகையைக்கொண்டு ஆபரேஷன் செய்துவிடலாமே?"

ஆல்பர்ட்ஸன் கசப்பான புன்னகை ஒன்றை உதடுகளில் தவழவிட... ஸ்டுவர்ட் கேட்டார்.
"ஏன் சிரிக்கிறீர்கள்?"
LAVAN_JOY@TAMILTORRENTS.COM
"வீட்டின் பேரில் கடன் வாங்குவதற்காக இந்த நியூயார்க்கில் உள்ள எல்லா வங்கிகளுக்கும்போய்ப் பார்த்துவிட்டேன். கடன் தர யாரும் தயாராக இல்லை."

"ஏன்?"

"பேரன்டல் டாக்குமென்ட்ஸ் அவ்வளவு துல்லியமாக இல்லை என்பது அவர்களது வாதம். எந்த வங்கிக்குப் போனாலும் அவர்களுடைய லீகல் ஒப்பீனியன் எங்களுக்குப் பாதகமாகவே உள்ளது. அந்த முயற்சி எல்லாம் செய்து பார்த்துவிட்டுத் தான், வீட்டை விற்க முடிவு எடுத்தோம். அதற் கும் யாரோ குறுக்கே நிற்கிறார்கள். என் குடும்பம் சந்தோஷமாக இருக்கக் கூடாது என்று எனக்கு எதிரான யாரோ நினைக்கிறார்கள்."
"உங்களுக்கு எதிரிகள் இருக்கிறார்களா?"

"இருக்க வாய்ப்பு இல்லை. ஏனென்றால், நான் யாருக்கும் எந்தக் காலத்திலும் எந்த ஒரு துன்பத்தையும் செய்தது இல்லை. ஸ்பேஸ் சயின்ஸ் படித்துவிட்டு, கென்னடி விண்வெளி மையத்தில் புரொகிராம் இன்ஜினீயராக இருந்து ரிட்டையரானவன். பிறகு, ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காக ஒரு ஸ்பேஸ் -க்ரா஼ப்ட் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தேன்.

எமிலி, என் அன்பான மனைவி. சில்வியா,எங்க ளுக்கு அன்பு மகள். அவள் ஆட்டோமொபைல் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட படிப்பு படித்துவிட்டு, ஒரு நல்ல

கார் மெக்கானிக்காகத் தன்னை நிலை நிறுத்திக்கொண்டவள். ஒரு பெரிய கார்கம் பெனியில் வேலைக்குச் சேர இருந்தவள். சென்ற வருடம் எங்கள் குடும்பம் ஒரு சந்தோஷமான குடும்பமாக இருந்தது. இன்றைக்கு நிலைமை தலைகீழ். எங்கள் மீது யாருக்கோ இருக்கும் கோபம் இப்போது மற்றவர்களையும் சுட்டெரிக்க ஆரம்பித்துவிட்டது. வீட்டை விற்பதற்குப் பெரிதும் முயற்சி எடுத்த ஃப்ளோரா, இப்போது உயிரோடு இல்லை. வீட்டை வாங்க வந்த விஜேஷைஹோட் டல் அறையில்வைத்துக் கொல்ல முயற்சி நடந்து உள்ளது. கொலை செய்ய வந்த பெண்ணின்பெயர் நிவியா. பாலியல் தொழில் செய்யும் அந்தப் பெண்ணை ஏவியது யார் என்று தெரியவில்லை. இப்படி எல்லாமே குழப்ப நிகழ்ச்சிகளாகவும் மனதுக்குள் பயத்தை ஏற்படுத்தும் சம்பவங்களாகவும் நடந்துகொண்டு இருப்பதைப் பார்க்கும்போது குடும்பத்தோடு தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூடத் தோன்றுகிறது."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

தாம்ஸன் இடைமறித்தார், "ஆல்பர்ட்ஸன்! நம்முடைய மனதில் ஓடிக்கொண்டு இருக்கும் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் உங்கள் மகள் சில்வியாவிடம் இருக்கிறது. உங்களுடைய எதிரிகள் யார் என்பது அவளுக்குத் தெரிந்து இருக்கிறது.

சில்வியாவின் உடல்நிலையும் மனநிலையும் ஒருசேர பாதிப்பு அடைந்ததற்குக் காரணம், அந்த எதிரிகள்தான். சில்வியா வாய் திறந்து தெளிவாகப் பேச வேண்டும் என்றால், அவளுக்கு ஆபரேஷன் நடந்தாக வேண்டும். எனக்குத் தெரிந்த பேங்க் அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் மூலம் உங்கள் வீட்டின் பேரில் கடன் தொகை கிடைக்க நான் ஏற்பாடு செய்கிறேன்!"

"உண்மையாகவா?" - ஆல்பர்ட்ஸன்னின் கண்கள் சந்தோஷ நீரில் பளபளத்தன.

"என்னால் முடியாது என்றால், அதைப்பற்றி நான் பேச மாட்டேன். அந்த பேங்க் அதிகாரி எனக்காகச் செய்வார்."

"நாம் இப்போதே போகலாமே? என் காரிலேயே வீட்டுப் பத்திரம் உள்ளது."

"எனக்கு ஒருநாள் அவகாசம் கொடுங்கள். நான் முதலில் அவரிடம் பேச வேண்டும்" - தாம்ஸன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, டாக்டர் ஸ்டூவர்ட்டின் செல்போன் சிணுங்கியது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார். நியூயார்க் மெடிக்கல் கவுன்சிலில் பணிபுரியும் அட்டன்பரோ பேசினார்.

"டாக்டர் ஸ்டூவர்ட்?"

"ஸ்பீக்கிங்..."

RAVAN_KK@TAMILTORRENTS.COM

"டாக்டர்! சில்வியா என்கிற பேஷன்ட் ஆழ்நிலை தியானத்தின்போது சில வார்த்தைகளைச் சொன்னதாகக் குறிப்பிட்டு, அந்த வார்த்தைகள் என்னவாக இருக்கும் என்று தெரிந்துகொள்வதற்காக மெடிக்கல் கவுன்சிலின் பரிசீலனைக்கு அனுப்பியிருந்தீர்கள் இல்லையா..."

"ஆமாம்..."
"மொத்தம் ஏழு வார்த்தைகள் இல்லையா..."

"ஆமாம்... ப்ளாக் ஸ்மைல், ரெட்மைண்ட்,ப்ளூதாட் வயலெட் விஷன், க்ரீன் டேஸ்ட், யெல்லோ டாக், சைனோ பாக்."

"இந்த ஏழு வார்த்தைகளில் முதல் ஆறு வார்த்தைகள் புரியவில்லை. ஆனால், ஏழாவது வார்த்தையான 'சைனோபாக்' கொஞ்சம் விவகாரமானது... அபாயகரமானது!"

"மிஸ்டர் அட்டன்பரோ! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? 'சைனோபாக்' என்கிற வார்த்தை அபாயகரமானதா?"

"ஆமாம்."

"எந்த வகையில்?"

" 'சைனோபாக்' என்பது பாக்டீரியா-டைனமைட். இந்த நுண்ணுயிர் டைனமைட்டை மைக்ராஸ்கோப் வழியாகத்தான் பார்க்க முடியும். இதை ஊசி மூலம் ஒரு மனிதனின் உடம்புக்குள் செலுத்திவிட்டால் போதும். 12 மணி நேரத்துக்குள் அது பல்கிப் பெருகி இதயத்தின் சுவர்களில் போய் ஒட்டிக்கொண்டுஒரு கெட்ட நேரம் பார்த்து, வெடித்து இதயத்தைசின்னச் சின்ன மாமிசத் துணுக்குகளாக மாற்றிவிடும்!"

மறுமுனையில் அட்டன்பரோ சொல்லிக் கொண்டே போக... டாக்டர் ஸ்டூவர்ட்டின் ரத்த ஓட்டத்தில் எவரெஸ்ட் குளிர் கலந்தது!

கொலை

LAVAN_JOY@TAMILBIBLEMOVIES.COM

சுபிட்சா மருத்துவமனை. அடர்த்தியான பேண்டேஜ் கட்டோடு பெல்லாரி மல்லய்யா கண் மூடிப் படுத்திருக்க, கட்டிலைச் சுற்றிலும் விவேக், விஷ்ணு, பங்கஜ்குமார் கவலையான பார்வைகளோடுநின்று இருந்தார்கள். டாக்டர் பாலசுப்ரமணியன்சொல்லிக் கொண்டு இருந்தார்.

"சார்... இவரோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. நல்ல வெயில் நேரத்துல ரோட்ல நடந்து போகும்போது பி.பி. ரெய்ஸாகி, தலை சுத்திக் கீழே விழுந்திருக்கார். பின்னத் தலையில் சரியான அடி. ஸ்ட்ரோக் வேற அட்டாக் ஆகியிருக்கு. இவருக்குச் சுய உணர்வு திரும்பினாலும் உடனடியாப் பேசறது கஷ்டம். நல்லவேளையா ஒரு ஆட்டோ டிரைவர் பார்த்து மனிதாபிமானத்தோடு ஆட்டோவில் தூக் கிட்டு வந்து அட்மிட் பண்ணிட்டார். நானும்உடன டியா ட்ரீட்மென்ட்டை ஆரம்பிச்சுட்டேன்."

விவேக் டாக்டரின் கையைப்பற்றிக் குலுக்கினான்.

"தேங்க்ஸ் ஃபார் யுவர் டைம்லி ஹெல்ப் டாக் டர். பெரியவரோட சட்டைப் பாக்கெட்டில் செல் போனைத் தவிர, வேற ஏதாவது திங்க்ஸ் இருந் ததா?"

"ம்... இருந்தது... அதையும் எடுத்துவெச்சிருக்கேன்." சொன்ன டாக்டர், பக்கத்தில் நின்றிருந்த நர்ஸைப் பார்க்க, நர்ஸ் சுவரில் பொருத்தப்பட்டு இருந்த கப் போர்டைத்

திறந்து, ஒரு பிளாஸ்டிக் கவரைஎடுத்துக் கொடுத்தார். விவேக் அதை வாங்கி பார்வையை உள்ளே போட்டான்.

மூக்குக் கண்ணாடி, ஒரு பாக்கெட் டைரி, கர்ச்சீப், பால்பாயின்ட் பேனா, இரண்டு 500 ரூபாய் நோட்டுக்கள். கோயில் பிரசாத விபூதி மற்றும் குங்கு மம் அடங்கிய ஒரு மினி பாலிதீன் கவர். கவரின் மேல் அருள்மிகு ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரியம்மன் கோயில், ராஜவீதி, கோவை என்ற எழுத்துக்கள் அச்சிடப்பட்டு பளிச்சென்று தெரிந்தன. விஷ்ணு அதைப் படித்துவிட்டு "பாஸ்" என்றான்.

"என்ன?"

"மேடம் மினிமினியோட கார் இந்தக் கோயில் இருக்கிற மெயின் ரோட்டை ஒட்டியிருக்கிற சந்துக்குள்ளேதான் நின்னுட்டு இருந்தது. விபூதி பிரசாத பாக்கெட்டைப் பார்க்கும்போது பெல்லாரி மல் லய்யா அந்தக் கோயிலுக்குள்ளே இருந்திருக்கார். சாமி தரிசனம் பண்ணியிருக்கார். மேடம், இவரைப் பார்க்கக் கோயிலுக்கு வந்து இருக்கலாம்னு என்னோட மனசுக்குப் படுது.

பங்கஜ்குமார் குறுக்கிட்டார். "அதாவது ரெண்டு பேரும் கோயில்ல சந்திச்சுப் பேச முடிவு பண்ணி இருக்கலாம்னு சொல்ல வர்றீங்க. இல்லையாமிஸ்டர் விஷ்ணு?"

"யெஸ் சார்..."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"பெல்லாரி மல்லய்யா கோயி லுக்குப் போயிட்டு வெளியே வந்து ரோட்ல நடக்கும்போது மயங்கி விழுந்திருக்கார். பட், மின்மினிக்கு என்ன நேர்ந்துள்ளதுனு தெரியலையே?"

விவேக் டாக்டரை ஏறிட்டான்.

"பெரியவரை இங்கே கொண்டுவந்து அட்மிட் பண்ணிய அந்த ஆட்டோ டிரைவர் யார்னுஉங்க ளுக்குத் தெரியுமா?"

"அந்த ஆட்டோ டிரைவர் யார்னு எனக்குத் தெரியாது. ஆனா, அந்த டிரைவர் பெரியவரை அட்மிட் பண்ணிட்டு போகும்போது, தன்னோட பேரையும் அட்ரஸையும் ஆட்டோ ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரையும் எழுதிக் கொடுத்துட்டுப் போயிருக்கார். செல்போன் நம்பரும் இருக்கு. உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா அவரைக் கூப்பிட்டு என்கொயரி பண்ணிக்கலாம்."

"விஷ்ணு..."

"பாஸ்..."

"நீ உடனடியா ரெண்டு வேலை பண்ணணும்."

"சொல்லுங்க பாஸ்..."

"மிசஸ் மின்மினி பெல்லாரி மல்லய்யாவை காலை மணி 10.50-க்கு என்னோட செல்போனில் கூப்பிட்டுப் பேசியிருக்காங்க. அதுக்கப்புறம் 11 மணிக்குத் தன்னோட கார்ல புறப்பட்டுப் போயிருக்காங்க. ரெண்டு பேரும் கோயிலில் மீட் பண்ணியிருந்தால் கோயிலில் இருந்த அர்ச்சகர்கள், ஊழியர்கள் அவங்க ரெண்டு பேரையும் பார்த்திருக்கலாம் இல்லையா?"

"மே பி... பாஸ்..."

"நீ கோயிலுக்குப் போய் அம்பாளைத் தரிசனம் பண்ணிட்டு, பக்குவமா விசாரணை பண்ணிட்டு வரணும்."

"ஓ.கே. பாஸ். ரெண்டாவது வேலை?"

"ஆட்டோ டிரைவரோட அட்ரசுக்குப் போய் ஆள் எப்படின்னு உரசிப் பார்த்துட்டு வரணும்."

விஷ்ணு அடுத்த நிமிஷஆரம் பத்துக்குள் புறப்பட்டுப் போய் விட... விவேக் டாக்டரிடம் திரும்பினார்.

"பெரியவருக்கு எப்போ நினைவு திரும்பும்... எனி ஐடியா?"

JAYAN@YOMAMMA-TORRENTS.COM

"ஸாரி மிஸ்டர் விவேக்!மூளை யின் கீழ்ப் பகுதியான மெடுல்லா ஆப்லேஸ்கேட்டாவில் பலத்த அடிபட்டு இருக்கு. எப்போ நினைவு திரும்பும்னு சொல்ல முடியாது. வீஹேவ் டு வெயிட். ஒரு கான்ஸ்டபிள் வேணும்னா இங்கே இருக்கட்டும். பெரியவருக்கு நினைவு திரும்பும்போது பேசிப் பார்க்கட்டும். உங்களுடைய நேரத்தை இங்கே வீணாக்க வேண்டாம்."

"தட்ஸ் வாட் ஐ'ம் திங்கிங்... நான் உடனே ஒரு கான்ஸ்டபிளை அனுப்ப ஏற்பாடு பண்றேன்."

டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு விவேக்கும் பங்கஜ்குமாரும் ஹாஸ்பிடலுக்கு வெளியே நிறுத்தப்பட்டு இருந்த காருக்கு வந்தார்கள். ஏறி உட்கார்ந்தார்கள்.

விவேக் காரை ஓட்ட பங்கஜ்குமார் இடிந்து போனவராக இரண்டு கைகளாலும் நெற்றியைப் பிடித்துக்கொண்டு ஸீட்டுக்குச் சாய்ந்து உட்கார்ந்தார். "விவேக்! எனக்குப் பயமாயிருக்கு... மின்மினி உயிரோடு இருப்பாளா?"

"சார்! நீங்க இனிமேதான் தைரியமா இருக்கணும்."

"முடியலையே! அந்த அல்போன்ஸ், மின்மினியை ஏதாவது பண்ணியிருப்பானோ?"

"நான் அப்படி நினைக்கலை சார். உங்க மனைவி காணாமல் போனதுக்குக் காரணம், அல்போன்ஸா இருக்க முடியாதுன்னு என்னோட மனசுக்குப்படுது."

"அல்போன்ஸ் இல்லைன்னா வேறு யார்?"

"சார்... உங்க மனைவியோட செல்போனின் சிகிலிலி ஸிணிநிமிஷிஜிணிஸி ஐ கிளறிப் பார்த்துகிட்டு இருந்த போது ஒரு விஷயம் தட்டுப்பட்டது."

"என்ன விஷயம்?"

"பெல்லாரி மல்லய்யாவுக்கு மட்டும் அவங்க போன் பண்ணலை."

"தென்?"

"ரி.வி.ரி. என்கிற ஒரு நபருக்கும் போன் பண்ணியிருக்காங்க."

"ரி.வி.ரி... அது யாரு?"

"மைக்கேல் எர்னஸ்ட்டை நீங்க சொல்லித்தான் நான் கொலை பண்ணினேன்னு உங்ககிட்டே நேற்றைக்கு போன்ல சொன்னது யார் சார்?"

"அந்த கூலிப் படை ஆள் கோட்டை மேடு குமார்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அந்த கோட்டை மேடு குமாரோட சுருக்கம்தான் ரி.வி.ரி."

- ***பறக்கும்...***

கோவை

விவேக், மின்மினியின் செல்போன் இன்பாக்ஸில் நுழைந்து பார்த்துவிட்டு வெளியே வந்தான். பங்கஜ்குமார் கண்களில் கவலை கோட்டிங்.

"சார்... உங்க மனைவி மிசஸ் மின்மினி கோட்டைமேடு குமாருக்கு நாலு தடவை டயல் பண்ணி இருக்காங்க. கால் ரெஜிஸ்டர் சொல்லுது."

"விவேக், எனக்கொரு சந்தேகம்! ரி.வி.ரி.-ங்கிறது கோட்டைமேடு குமாராதான் இருக்கணுமா? வேறு ஏதாவது பேரா இருக்கக் கூடாதா என்ன?"

"மே பி! பட்... அந்த நம்பர் ஏன் சுவிட்ச் ஆ◌ஃப் பண்ணப்பட்டு இருக்கணும்? இதோடு, அந்த நம்பருக்கு ஏழு தடவை டயல் பண்ணிப் பார்த்துட்டேன். நோ ரெஸ்பான்ஸ். அசிஸ்டென்ட் போலீஸ் கமிஷனர் நம்பெருமாளை கோட்டைமேடு குமார் வீட்டுக்கு நேர்ல போய்ப் பார்க்கச் சொல்லியிருக்கேன். முடிஞ்சா, கைது பண்ணவும் சொல்லியிருக்கேன். அந்த கோட்டைமேடு குமார் ஏற்கெனவே இன்னிக்குக் காலையில உங்களுக்கு போன் பண்ணி, 'மைக்கேல் எர்ன்ஸ்ட்டை நீங்க சொல்லித்தான் கொலை செஞ்சதா சொல்லியிருக்கான். அதைப்பற்றியும் அவன்கிட்டே என்கொயரி பண்ணணும்."

DAN_BOOKS@YAHOO.COM

பங்கஜ்குமார் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றிவிட்டு ஏதோ பேச முயன்றபோது, விஷ்ணு வந்தான். வெயிலில் வியர்த்துத் தெரிந்தான்.

"பாஸ்... சௌடேஸ்வரி அம்மன் கோயில் அர்ச்சகர்கிட்டே பெல்லாரி மல்லய்யா வோட அங்க அடையாளங்களைப்பத்திச் சொன்னதுமே புரிஞ்சுக்கிட்டார். பெல்லாரி மல்லய்யா அந்தக் கோயிலில் ஒரு மணி நேரத்துக்கும் மேலா யாருக்கோ வெயிட் பண்ணிட்டு இருந்தாராம். அடிக்கடி எழுந்து போய், கோயிலுக்கு வெளியே நின்னு செல்போன்ல பேசிட்டு வந்தாராம். கோயில் பூட்டப்போறது தெரிஞ்சதும்தான் புறப்பட்டுப் போனாராம்."

"அப்படின்னா அவர் மிசஸ் மின்மினிக்காகத்தான் வெயிட் பண்ணிட்டு இருந்து இருக்கணும்."

"ஆமா பாஸ்! பட், மேடம் தன்னோட கார்ல கோயில் வரைக்கும் வந்து இருக்காங்க. கோயிலுக்குப் பக்கத்து சந்துல காரை பார்க் பண்ணியிருக்காங்க. மேடம் இறங்கிப் போனதை எதிரில் இருந்த பாத்திரக் கடை ஆள் பார்த்திருக்கார். ஆனாலும், மேடம்

கோயிலுக்குப் போகலை. ஏன்? இது ஒரு மில்லியன் டாலர் கேள்வி.

பங்கஜ்குமார் நிமிர்ந்தார்.

"விவேக்... என்னோட கெஸ் வொர்க்கைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க சார்..."

"மின்மினி, பெல்லாரி மல்லய்யாவைச் சந்திக்க கோயிலுக்குத்தான் புறப்பட்டுப் போயிருக்கா.கோயிலுக்குப் பக்கத்துல இருக்கிற சந்தில் காரை நிறுத்திட்டு கோயிலுக்குப் போற வழியில் யாரோஅவளை மீட் பண்ணியிருக்காங்க. அவளைக் கோயிலுக்குப் போகவிடாம டைவர்ட் பண்ணி, வேற பக்கம் கூட்டிட்டுப் போயிருக்காங்க."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அது யாராக இருக்கலாம்னு நீங்க நினைக்கிறீங்க சார்?"

"நோ ஐடியா! மின்மினி இந்த நிமிஷம் நல்லவளா... கெட்டவளான்னு எனக்குத் தெரியாது. கல்யாணத்துக்கு முன்னாடியே மின்மினியோட பூர்வாசிரமத்தைக் கொஞ்சம் கிளறிப் பார்த்து இருக்கணும். அதைச் செய்யத் தவறிட்டேன். அதுக்காக இப்ப ஒரு பெரிய விலை கொடுத்து, வேண்டாத வேத னையை எல்லாம் வாங்கிட்டு இருக்கேன்!"

"பெல்லாரி மல்லய்யாவுக்குச் சுயஉணர்வு வந்து பேச ஆரம்பிச்சால்தான் மின்மினியின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அத்தனை மர்ம முடிச்சுக்களுக்கும் பதில் கிடைக்கும்."

"பாஸ்! நீங்களும் நானும் ஒரு தடவை பெல்லாரி போய்,மேடத்துக்கும் அந்த அல்போன்சுக்கும் கல்யாணம் நடந்ததா சொல்ற அந்த சர்ச்சைக் கண்டுபிடிச்சுக் கல்யாணத்தை நடத்திவெச்ச ஃபாதரையும் சந்திச்சுப் பேசிப் பார்த்தா என்ன?"

விவேக் மையமாகத் தலையாட்டினான். "பெல்லாரி மல்லய்யா கண் விழிக்கலைன்னா இனி நம்முடைய அடுத்தகட்ட நடவடிக்கை அதுதான். நீங்க என்ன சொல்றீங்க சார்?"

"நானும் அந்த முடிவுக்குத்தான் வந்து இருக் கேன்."

விவேக்கின் செல்போன் ரிங்டோனைக் காற்றில் தெளிக்க... எடுத்துப் பார்த்து காதுக்கு ஒற்றினான்.

"சொல்லுங்க மிஸ்டர் நம்பெருமாள்..."

"சார்... கோட்டைமேடு குமார் வீட்ல இல்ல சார்... அவன் வீட்டுக்கு வந்து ஒரு வாரமாகுதாம். சிட்டியில் அவனுக்கு நாலஞ்சு இடத்துல சின்ன வீடு செட்டப் இருக்காம் சார். அந்த வீடுகள்ல ஏதாவது ஒரு வீட்ல இருப்பானாம்."

"யார் சொன்னது?"
"அவன் தாலி கட்டின ஒரிஜினல் பொண்டாட்டி சார்."

"அந்த சின்ன வீடு அட்ரஸை எல்லாம் வாங்கிட் டீங்களா?"

"அவளுக்குத் தெரியாதாம் சார்."

DIVAN_JOY@TAMILTORRENTS.COM

"அவன்கிட்ட வேலை பார்க்கிற அடியாட்கள்ல ஒருத்தனைப் பிடிங்க. லாக்கப்புக்குக் கூட்டிப்போய் ரெண்டு தட்டு தட்டுங்க. அந்த கோட்டைமேடு குமாரோட சின்னவீடு சர்வே புள்ளிவிவரங்களோடு வெளியே வந்துடும்."

"எவனும் கண்ணுக்குச் சிக்கலை சார்" என்று சொன்ன நம்பெருமாள், சட்டென்று குரலைத் தாழ்த்திக்கொண்டார்.

"சார்... அஞ்சு நிமிஷத்துக்கு முந்தி சிட்டி சவுத் கன்ட்ரோல் ரூமில் இருந்து ஒரு செய்தி வந்தது சார். அதைக் கேட்டதில் இருந்து மனசுக்குள் சின்னதா ஒரு பயம்."

"என்ன செய்தி?"

"மதுக்கரைப் பக்கம் இருக்கிற ஒருகல் குவாரியில் ஒரு ஆளோட டெட்பாடி கிடக்கிறதாகவும், தலையில் கல்லைப் போட்டுக் கொலை பண்ணி இருக்கிறதால ஆள் யார்னு கண்டுபிடிக்க முடிய லைன்னும் மதுக்கரை போலீஸ் தகவல் கொடுத்து இருக்காங்க. மதுக்கரை போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டரா இருக்கிற நாராயணன் அந்த டெட்பாடியைப் பார்த்துட்டு, அது கோட்டைமேடு குமாரா இருக் கலாம்னு சொல்லியிருக்கார் சார்."

விவேக் தன் இடது கை விரல்களால் நெற்றியைப் பிடித்துக்கொண்டான்.

"இருக்கிற குழப்பங்கள் போதாது என்று இது போனஸ்."

"என்ன சார் செய்யலாம்... நான் ஸ்பாட்டுக்குப் போய்ப் பார்க்கட்டுமா?

"போய்ப் பாருங்க... கொலை செய்யப்பட்டது கோட்டைமேடு குமார்தான்னு ஊர்ஜிதமானதும் எனக்குத் தகவல் கொடுங்க. நான் ஸ்பாட்டுக்கு வர்றேன்."

"யெஸ் சார்."

விவேக் செல்போனை அணைத்துவிட்டு, பங்கஜ்குமாரிடம் விஷயத்தைச் சொல்ல... அவருடைய முகம் கலவரத்துக்கு உள்ளானது.

"விவேக்! என்னைச் சுற்றி என்ன நடக்குதுன்னு எனக்குத் தெரியலை... புரியலை! எதுக்காக இதெல்லாம்? எதிரிகளோட இலக்கு நானா... இல்லை, என்னோட மனைவி மின்மினியா?"

"சார்... தைரியமா இருங்க. எந்த ஒரு பிரச்னைக் கும் கையும் காலும் முளைக்கத்தான் செய்யும். அதனுடைய பிம்பங்கள் அப்போதைக்குவித்தியாச மாகத் தெரியும். அதைப் பார்த்து நாம பயந்துடக் கூடாது."

"முடியலை விவேக்" பங்கஜ்குமார் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, ஹாலில் இருந்த லேண்ட்லைன் டெலிபோன் குரல் கொடுத்தது.

LAVAN JOY@TAMILTORRENTS.COM

விவேக், விஷ்ணுவிடம் திரும்பினான் "நீ போய் அட்டெண்ட் பண்ணு. ஏதாவது அ஼ீபீஷியல் காலா இருந்தா மட்டும் சார்கிட்ட குடு."
விஷ்ணு போய் ரிஸீவரை எடுத்தான். மெள்ள குரல் கொடுத்தான்.

"யெஸ்..."

"பங்கஜ்குமார் இருக்கிறாரா?" ஓர் ஆண் குரல் நேர்த்தியான ஆங்கிலத்தில் கேட்டது.

"நீங்கள்?"

"ஐ'ம் பிரதாப் சிங். ரிடையர்ட் ஆர்மி மேஜர். என் பெயரைச் சொன்னால் பங்கஜ்குமாருக்குத் தெரியும். நீங்கள் அவருடைய உதவியாளரா?"

"இல்லை. நான் விஷ்ணு... க்ரைம் பிராஞ்ச்."

"ஓ... மிஸ்டர் விஷ்ணு! இன்றைக்கு மதியம்கலெக் டர் அலுவலகத்தில் உங்களையும் மிஸ்டர் விவேக் கையும் பார்த்து என்னுடைய மகளின் திருமணப் பத்திரிகையைக் கொடுத்த அதே பிரதாப் சிங்தான் நான். ஞாபகம் வருகிறதா?"

விஷ்ணு சிரித்தான். "அதற்குள் மறக்க முடியுமா சார்? சார் இங்கேதான் இருக்கிறார். நீங்கள் பேச வேண்டுமா?"

"ஆமா! அவரோடு ஒரு முக்கியமான செய்தியைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்."

"ஒரு நிமிடம்..." சொன்ன விஷ்ணு பங்கஜ்குமாரி டம் திரும்பினான்.

"சார்... பிரதாப் சிங் லைனில் இருக்கிறார்."

ரிஸீவரை வாங்கி காதுக்குப் பொருத்தினார்பங்கஜ் குமார். "சொல்லுங்கள் பிரதாப் சிங்... கல்யாணப் பத்திரிகை கொடுக்கும் வேலை கோவையில் முடிந்ததா?"

"அது ஒரு பக்கம் இருக்கட்டும் பங்கஜ்குமார்... நான் இப்போது கேட்கும் ஒரு கேள்விக்கு நீங்கள் உண்மையான பதிலைச் சொல்ல வேண்டும். உண்மையைச் சொல்வதாக இருந்தால், நான் மேற்கொண்டு பேசுகிறேன். இல்லையென்றால் பேசப்போவது இல்லை."

"எனக்கு உண்மையைப் பேசித்தான் பழக்கம் பிரதாப்."

"ஓ.கே. அப்படியென்றால் இந்தக் கேள்விக்குப் பதில்சொல்லுங்கள். உங்களுக்கும் உங்களுடைய மனைவி மின்மினிக்கும் என்ன பிரச்னை?"

"ஒரு பிரச்னையும் இல்லை."

"மின்மினி இப்போது வீட்டில் இருக்கிறார்களா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"அது... வந்து..."

"எனக்கு வேண்டியது உண்மைபங்கஜ் குமார்."

"மின்மினி இப்போது வீட்டில் இல்லை."

"ஏன்?"

"தெரியவில்லை. காலை 11 மணிக்கு காரை எடுத்துக்கொண்டு வெளியே போனாள். கார் மட்டும் ஒரு சந்தில் நின்று இருந்தது. மின்மினி இன்னமும் வீடு திரும்பவில்லை."

"10 நிமிடங்களுக்கு முன்னால் நான் மின்மினியைப் பார்த்தேன்."

"எ... எ... எங்கே?"

"கோவை ரயில்வே ஸ்டேஷனில்!"

நியூயார்க்

நியூயார்க் போலீஸின் ஹெட்குவார்ட்டர்ஸ் கட்டடம்.

காலை 11 மணி வெயில் எல்லா கண் ணாடி ஜன்னல்களிலும் ஒட்டிக்கொண்டு இருக்க 'மிழி சிகிவிணிஸிகி' என்று சொல்லப்படும் அந்த அறைக்குள் தாம்ஸன், ஸ்மித், டாக்டர் ஸ்டூவர்ட் மற்றும் சில உயர் அதிகாரிகள் நீள் வட்ட பாலிமர் மேஜையைச் சுற்றிலும் கலக்கம் படிந்த முகங்களோடு உட்கார்ந்து இருந்தார்கள்.

தாம்ஸன் பேசிக்கொண்டு இருந்தார். "நியூயார்க் மெடிக்கல் கவுன்ஸில் சீ்ப் ரிசர்ச் அனலைஸராகப் பணிபுரியும்அட்டன் பரோ தெரிவித்த 'சைனோபாக்' எனப்படும் பாக்டீரிய டைனமைட் பற்றிய விவரங்கள் அதிர்ச்சியூட்டுவதாக உள் ளன. அட்டன்பரோ தெரிவித்த இந்தக் கருத்துக்கள் சரி யானதுதானா என்பதை 'க்ராஸ் செக்' செய்து பார்க்க கீபிளி எனப்படும், உலக சுகாதார அமைப்பைத் தொடர்புகொண்ட போதும் சரி, உளவுத் துறையைத் தொடர்புகொண்டபோதும் சரி, அந்தக் கருத்துக்கள் உண்மைதான் என்பதை ஊர்ஜிதம் செய்தனர். நாஸாவில் உள்ள அதிகாரி ஒருவரிடம் இதுபற்றி நான் ரகசியமாக விசாரித்தபோது 'சைனோபாக்' எனப்படும் பாக்டீரிய டைனமைட் ஒருபயோ-வெப்பன் என்றுசொன் னார். யுத்த காலங்களில் எதிரி நாட்டு வீரர்கள் தங்கி இருக்கும் ராணுவ முகாம்களில் உள்ள நீர்த் தொட்டிகளில் இவற்றைக் கொஞ்சம் கலந்தால்போதும். அடுத்த 12 மணி நேரத்துக்குள்ஒட்டுமொத்த வீரர்களும் அதிகாரிகளும் இதயங்கள் வெடித்துச்சடலங்களாக மாற வேண்டியது தான்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ஸ்மித் குறுக்கிட்டுக் கேட்டார்,"எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் சில்வியாவின் வாயில் இருந்து இந்த 'சைனோபாக்' என்ற வார்த்தை வெளிப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?"

"இந்தக் கேள்விக்கான பதிலை என்னால் ஊகிக்க முடிகிறது" சொன்ன டாக்டர் ஸ்டூவர்டை எல்லோரும் பார்த்தார்கள்.

"சொல்லுங்கள் டாக்டர்."

"சில்வியா, அரிதான சின்னஞ்சிறு உயிரினங்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உள்ளவள். அந்த ஆர்வத்தின் காரண மாகத்தான் வீட்டில் ஒரு சிறு மியூஸியத்தையும் உருவாக்கி இருக்கிறாள். அந்த மியூஸியத்தை நானும் பார்த் திருக்கிறேன்... இப்போது நாம் கேள்விப்படும் இந்த 'சைனோபாக்' பாக்டீரியா என்பதும் உயிரினம்தான். இதைப்பற்றி சில்வியா கேள்விப்பட்டு இருக்கலாம். அது எங்கே யாரிடம் இருக்கிறது என்ற தேடுதல் முயற்சியிலும் ஈடுபட்டு இருக்கலாம்.

'சைனோபாக்' பற்றி சில்வியா தெரிந்துகொண்டதை யாரோ விரும்பவில்லை. அதனால், சில்வியாவைத் தீர்த்துக்கட்ட அதே 'சைனோபாக்' பாக்டீரியாவை அவளுடைய உடம்புக்குள் செலுத்தியிருக்கிறார்கள். அதனுடைய பாதிப்பு உடலில் தெரிய ஆரம்பித்துமே சில்வி யாவின் பெற்றோர்பதறிப் போய், அவளுடைய உடல்நிலையும் மனநிலையும் பாதிக்கப்பட்டதன் காரணம் புரியாமல் உடன டியாக ட்ரீட்மென்ட்டுக்காக என்னிடம் அழைத்து வந்தார் கள். ஆரோக்கியமாக இருந்த பெண் ஒருத்திக்கு இவ்வளவு பெரிய அளவில் இதயக் கோளாறு ஏன் ஏற்பட்டது என்று எனக்கு வியப்பாக இருந்தது. தீவிர சிகிச்சைகொடுத்ததில் சில்வியாவின் உயிர் காப்பாற்றப்பட்டுவிட்டாலும் அவளுடைய இதயத்தில் 'சைனோபாக்' காரணமாக ஏற்பட்டு இருக்கும் ஏழு விதமான குறைபாடுகளைச் சரிசெய்ய மிகப் பெரிய அளவில் ஆபரேஷன் ஒன்று தேவைப்படும்."

"டாக்டர்... நீங்கள் சில்வியாவுக்கு ஒருவேளை ட்ரீட்மென்ட் கொடுக்காமல்விட்டிருந்தால், அவள் இதயம் வெடித்து இறந்துபோயிருப்பாளா?"

"சர்வ நிச்சயமாக! அதில் உங்களுக்கு எந்தச்சந்தே கமும் வேண்டாம். இப்போது சில்வியாவின் இதயச் சுவர்களில் பாக்டீரியாவின் வளர்ச்சிகட்டுப்படுத்தப் பட்டு உள்ளது. சரியான நேரத்தில் ட்ரீட்மென்ட் எடுத்துக்கொள்ளப்பட்டதால் பாக்டீரியாக்களின் வீரியமும் குறைந்துவிட்டது."

"டாக்டர்! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்க வந்து அக்ரிமென்ட் போட்ட பிரிட்டனி ஜான்ஸனும், ஜான் கரோலும், அதற்குப் பிறகு வீட்டை விற்க முயற்சி எடுத்த ஃப்ளோராவும் ஒரே மாதிரியான முறையில் இதயம் வெடித்து இயற்கையான முறையில் முடிவு வந்தது போல் இறந்து போயிருக்கிறார்கள். அவர்களின் உடம்புக்குள்ளும் 'சைனோபாக்' பாக்டீரியாக்கள் செலுத்தப்பட்டு இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"அதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். கல்ல றையில் புதைக்கப்பட்டுள்ள அந்த மூன்றுபேர்களின் உடலையும் தோண்டி எடுத்து, போஸ்ட்மார்ட்டத்துக்கு உட்படுத்தினால், அவர்களின் இதயப் பகுதிகளில் இன்னமும் அந்த 'சைனோபாக்' பாக்டீரியாக்கள் உயிரோடு இருப்பதைப் பார்க்கலாம்.

"ஓ.கே... அதற்கு ஏற்பாடு செய்துவிடலாம். மூன்று பேரின் மரணங்களும் இயற்கையானது அல்ல... திட்ட மிடப்பட்டுச் செய்யப்பட்ட கொலைகள் என்கிற தெளிவான முடிவுக்கு வந்துவிட்டோம். இனி கொலை யாளி யார் என்பதை நாம் கண்டுபிடிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உங்களுடைய உள்ளங்களில் இருக்கும் 'கெஸ் வொர்க்குகளை வெளிப்படுத்தினால் அதைப்பற்றி விவாதித்துப் பேசி முடிவு எடுக்க எனக்கு வசதியாக இருக்கும்" - தாம்ஸன் சொல்ல, சில விநாடிகளுக்குப் பிறகு ஒவ்வொருவராகப் பேச ஆரம்பித்தார்கள்.

அதே விநாடிகளில்-

நியூயார்க்கின் மே ஃப்ளவர் ஸ்கொயரில் இருந்த இண்டியன் ரெஸ்டாரென்ட்டில் சீஸ் பர்கரை மென்று விஸ்கியோடு சேர்த்து விழுங்கிக்கொண்டே, செல்போனில் பேசிக்கொண்டு இருந்தான் விஜேஷ். ரெஸ்டாரென்ட்டில் கூட்டம் இல்லை. இரண்டு கறுப்பின இளைஞர்கள் மட்டும் டின் பியரை ருசித்தபடி, பேசிக்கொண்டு இருந்தார்கள்.

செல்போனில் பேசிக்கொண்டு இருந்த விஜேஷ், சட்டென்று முகம் மாறி மறுமுனையில் இருந்த நபரிடம் சொன்னான்.

'நான் அப்புறமாகப் பேசுகிறேன்..."

"ஏன்... என்னாயிற்று?"

"அந்த காமாட்சி ரெஸ்டாரெண்டுக்குள் வந்து கொண்டு இருக்கிறான்."

"சரி! அவன் ஒரு பிரஸ் ரிப்போர்ட்டர். பார்த்துப் பேசு."

"யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று எனக்குத் தெரியாதா!" சொல்லிவிட்டு செல் போனை அணைத்தான் விஜேஷ்.

காமாட்சி கையை உயர்த்தி ஒரு 'ஹாய்' சொல்லிக்கொண்டே விஜேசுக்கு எதிரில் வந்து உட்கார்ந்தான். LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"வாங்க... காமாட்சி நான் இந்த ரெஸ்டா ரென்ட்லதான் இருப்பேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சும்மா... ஒரு அனுமானம்தான்."

"அப்புறம் காமாட்சி... ஆல்பர்ட்ஸன்னோட வீட்டு விவகாரம் என்னாச்சு?"

காமாட்சி, விஜேஷைப் பார்த்து மெள்ளச் சிரித்தான். விஜேஷை வியப்பாகப் பார்த்தான்.

"சிரிச்சா என்ன அர்த்தம்?"

"அது எப்படி விஜேஷ்... உங்களால மட்டும் முகத்தை இவ்வளவு அப்பாவித்தனமா வெச்சு கிட்டுப் பேச முடியுது?"

"நீங்க என்ன சொல்றீங்க... காமாட்சி?"

"நியூயார்க் போலீஸை நீங்க ஏமாத்தலாம். என்னை ஏமாத்த முடியாதுன்னு சொல்றேன்!"

- பறக்கும்...

காத்திருக்குது டின்னர்...
கிடைச்சிருக்குது அவகாசம்!

'இனி, மின்மினி' கதையின் நியூயார்க் - கோவை டிராக்குகள் எங்கே, எப்படி இணையும் என்று எழுதி, தபால்கார்டில்... 'நானும் ஒரு ராஜேஷ்குமார்' என்று தலைப்பிட்டு அனுப்பச் சொல்லியிருந்தோம். ஓரளவு யூகித்த வாசகர்கள்கூட 'ம்ஹ¨ம்... எங்கள் 'டிடெக்டிவ்'தனத்துக்கு க்ளூ போதவில்லை. இன்னும் இரண்டு அத்தியாயம் படிக்க சான்ஸ் கொடுங்கள்' என்று உரிமையோடு கேட்டு இருக்கிறார்கள்.

ஓ.கே! போன இதழ் அத்தியாயம், இந்த இதழ் அத்தியாயம் படித்த பிறகாவது மூளைக்குள் பல்ப் எரிகிறதா? கரெக்டாக 'இனி மின்மினி' கதையின் முடிவை யூகிக்க முடியாவிட்டாலும், கிட்டத்தட்ட ராஜேஷ்குமாரின் ஐடியாவோடு நெருங்கி வருபவர்களுக்குக் காத்திருக்கிறது அவரோடு ஒரு டின்னர்.

இதோ... உங்களுக்கான அவகாசம் 10.3.2010 வரை நீட்டிக்கப் படுகிறது. இப்பவாவது கலக்கிக் காட்டுங்க!

- ஆசிரியர்

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

நியூயார்க்

விஜேஷ் தன் வியப்பான பார்வையை காமாட்சியின் முகத்தின் மேல் ஒரு நங்கூரத்தைப்போல் பாய்ச்சிக்கொண்டே கேட்டான்.

"நியூயார்க் போலீஸை நான் ஏமாத்தறேனா? வாட் டு யூ மீன் காமாட்சி?"

"AN IRON FIST IN A VELVET GLOUSE."

"எனக்குப் புரியலை."

"ஸாரி விஜேஷ்! தூங்கறவங்களைத்தான் எழுப்ப முடியும். ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் பார்த்த விஜேஷ் வேற. இப்பப் பார்த்துட்டு இருக்கிற விஜேஷ் வேற."

"காமாட்சி! நீங்க ஏதோ குழப்பத்தில் இருக்கீங்கன்னு நினைக்கிறேன். ஒரு ஸ்மாலோடு சேர்த்து லார்ஜை அடிங்க... எல்லாம் சரியாப் போயிடும். காக்டெய்ல் ட்ரை பண்றீங்களா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நோ விஜேஷ். இப்படி எல்லாம் பேசி நீங்க என்னை டைவர்ட் பண்ண முடி யாது. கடந்த ரெண்டு நாளா உங்களை க்ளோஸா அப்சர்வ் பண்ணிட்டு வர்றேன். உங்களுடைய நடவடிக்கைகள் எனக்கு அவ்வளவு உடன்பாடா இல்லை."

"அதாவது, உங்களுக்கு என் மேல சந்தேகம்?"

"யெஸ்!"

"எதைவெச்சு அந்த முடிவுக்கு வந்தீங்க?"

"ஃப்ளோராவை அடக்கம் பண்ணின கல்லறையில் நீங்க, நான், ஃப்ரெட்ரிக் அஞ்சலி செலுத்திட்டு இருந்தபோது நீங்க திடீர்னு பாத்ரூம் கிளம்பிப் போனீங்க. அடுத்த சில விநாடிகளில் எனக்கும் பாத்ரூம் போகணும்போல் தோண... பின்னா டியே வந்தேன். அந்தச் சமயத்தில் உங்க செல்போனில் யார்கிட்டேயோ பேசி னீங்க. உங்க முகத்தில் ஓர் இறுக்கம் இருந்தது. நீங்க பேசினதில் சில வார்த்தைகள் என்னோட காதில் விழுந்தன."

"என்ன... என்ன வார்த்தைகள்?"

"விரைவில் புயல் புன்னகை பூக்கும்... ஓவியம் சத்தம் போடும்."

விஜேஷ் புன்னகை ஒன்றைத் தன்னுடைய உதடுகளில் தவழவிட்டபடி கேட்டான்,

"அது தப்பான வார்த்தைகளா?"

"என்னோட மனசுக்கு அப்படிப் பட்டது."

"இதோ பாருங்க காமாட்சி... நான் யார்கிட்டே எதுக்காக அப்படிப் பேசினேன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"தெரியாமே எப்படி அது தப்பான வார்த்தைகள் என்கிற முடிவுக்கு நீங்க வரலாம்? நான் வொர்க் பண்றது ஒரு சா◌ஃப்ட்வேர் கம்பெனி. நான் அந்த கன்சர்னில் மார்க்கெட்டிங் மேனேஜரா இருக்கேன். கம்பெனி சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பத்திப் பேசும்போது, சில சங்கேத வார்த்தைகளை உபயோகப் படுத்தறது என்னோட வழக்கம்."

"பொய்யை மட்டுமே பேசறதுன்னு முடிவு பண்ணிட்டீங்க. அதுக்கப்புறம் நான் பேசறதுக்கு என்ன இருக்கு?"

"ஸோ... நான் சொல்றதை நீங்க நம்பலை?"

"நம்ப முடியலை."

"என்கிட்ட ஏதோ தப்பு இருக்குன்னு நினைக்கிறீங்களா?"

DMAGIC@TAMILFORMENTS.COM

"அப்படி நினைக்கவும் முடியலை."

"ஏன்?"

"நீங்க தப்புப் பண்றவர் மாதிரியும் தெரியலை."

"நான் தப்புப் பண்ண மாட்டேன்னு நீங்க நினைக்கும்போது என் மேல எதுக்காகச் சந்தேகப்படறீங்க?"

"அது சந்தேகம் இல்லீங்க... பயம்!"

"என்ன பயம்?"

"இந்த ஆல்பர்ட்ஸன் வீட்டு விவகாரத்தில் உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துடுமோங்கிறபயம் தான். ஏன்னா, என்னோட கஸின் சிஸ்டர் வாச மதியை இன்னும் மூணு மாசத்துல நீங்க கல்யாணம் பண்ணிக்கப்போறீங்க! உங்களைப் பத்திரமாகப் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டா இல்லையா?"

விஜேஷ் காமாட்சியையே பார்க்க, அவன் கேட்டான்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க விஜேஷ்?"

விஜேஷ் அந்த ரெஸ்டாரென்ட் முழுவதையும் பார்வையால் கழுவிவிட்டு, குரலைத் தாழ்த்தினான். "உங்ககிட்டே மட்டும் உண்மையைச் சொல்லிட லாம்னு நினைக்கிறேன்."

"இதுதான் இந்தியா..." காமாட்சி சிரித்தபடி கண் ணாடி டம்ளரின் அடியில் மீதம் இருந்த விஸ்கியைத் தொண்டைக்குக் கொடுத்துவிட்டு, விஜேஷின் தோள் மீது கையைவைத்தான்.

"சொல்லுங்க..."

"காமாட்சி! என்னோட நலனில் நீங்க காட்டுற அக்கறைதான் என்னை உங்ககிட்டே உண்மையைச் சொல்லவெச்சிருக்கு. இப்ப நான் சொல்லப்போறதை நீங்க யார்கிட்டேயும் சொல்லக் கூடாது."

"நீங்க என்னை நம்பலாம் விஜேஷ். நீங்க சொல்லப்போற விஷயம் என் மனசுக்குள்ளே போயிட்டா, அது கிணத்துல போட்ட கல்லுக்குச் சமம். உங்க உத்தரவு இல்லாம அது வெளியே வராது."

"தேங்க்யூ!" சொன்ன விஜேஷ், தன் சட்டைப் பைக்குள் கையை நுழைத்து பர்ஸை எடுத்து, அதில் இருந்த ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை எடுத்து காமாட்சியின் முகத்துக்கு நேராகப் பிடித்தான்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"இந்த போட்டோவில் இருக்கிற வயதான பெண் யார்னு உங்களுக்குத் தெரியுதா?"

காமாட்சி அந்த போட்டோவைப் பார்த்துவிட்டு முகத்தில் லேசாகத் திகைப்பைக் காட்டியபடி சொன்னான்.

"தெரியாம என்ன... இது பிரிட்டனி ஜான்ஸன். ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்க அக்ரிமென்ட் போட்ட அடுத்த நாளே இறந்து போன பெண். அதாவது, போலீஸின்பார்வை யில் கொலை செய்யப்பட்ட பெண். அது சம்பந்தமான இன்வெஸ்டிகேஷனைத் தானே தனிப்பட்ட முறையில் நான் பண்ணிட்டு இருந்தேன். இந்த போட்டோ உங்க கைக்கு எப்படிக் கிடைச்சது? பிரிட்டனி ஜான்ஸனை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?"

"தெரியும்."

"எ...ப்...ப...டி..?"

"நான் பாரீஸில் வொர்க் பண்ற சா◌ஃப்ட் வேர் கம்பெனியின் பிரசிடென்ட் டேவிட் மாரீஸோட மதர்தான் பிரிட்டனி ஜான் ஸன். தன் கணவர் ஜான்ஸன் இறந்த பின் மறுமணம் செய்துக்காம, மகனை வளர்த்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தவர் பிரிட்டனி ஜான்ஸன். அவர் நியூயார்க்கில் தங்கியிருந்தாலும், அடிக்கடி மகனைப்

பார்க்கிறதுக்காக பாரீசுக்கு வருவார். சில நாட்கள் தங்கியிருப்பார். அது மாதிரியான சமயங்களில் நான் பிரிட்டனி ஜான்ஸனைப் பார்த்திருக்கேன். டேவிட் மாரீஸ் ஒரு தடவை தன்னோட மதரை எனக்கு அறிமுகப் படுத்திவெச்சார். சா◌ப்ட்வேர் இண்டஸ்ரி யைப்பற்றி தெளிவாகப் பேசினார். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால் அவர் நியூயார்க்கில் ஹார்ட் அட்டாக் காரணமாக இறந்துவிட்டதாகச் செய்தி வந்தபோது நிலைகுலைந்துபோனது டேவிட் மாரீஸ் மட்டும் இல்லை. நானும்தான்!

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

தன் தாயோட மரணம் இயற்கையான துன்னு முதல்ல நினைச்சுட்டு இருந்த டேவிட் மாரீஸ், அதுக்கப்புறம் அது ஒரு கொலைன்னு தெரியவந்தபோது கொதிச்சுப்போயிட்டார். போலீஸில் புகார் கொடுத்தும் பிரயோஜனம் இல்லாமல் போகவே கொலை யாளியைக் கண்டுபிடிச்சு தானே தண்டிக்க முடிவு எடுத்தார். என்னைக் கூப்பிட்டுப் பேசினார். என்னோட மனசுக்குள்ளேயும் ஒரு தார்மீகக் கோபம் இருந்ததால, கொலை யாளி யார்னு கண்டுபிடிக்க நானே களம் இறங்கினேன். ஆல்பர்ட்ஸன் வீட்டை வாங்கப்போற ஒரு ஙiuஹ்மீகூழீ ஆக மாறி நியூயார்க் வந்தேன். ◌ப்ளோராவோடு பழகினேன். வீட்டை வாங்க ஆர்வம் காட்டற மாதிரி நடிச்சேன். நான் நியூயார்க் ஏர்போர்ட்ல காலைவெச்சதுல இருந்து நான் எதிர்பார்க்காத சம்பவங்கள் நிறைய நடந்தன. நீங்க போன் பண்ணி பெண் குரலில் வீட்டை வாங்க வேண்டாம்னு வார்ன் பண்ணீங்க. நான் ஆல்பர்ட்ஸன் வீட்டை ◌ப்ளோராவோடு பார்த்துட்டு இருக்கும்போது போலீஸ் அதிகாரிகள் தாம்ஸனும் ஸ்மித்தும், சில்வியாவின் மியூஸியம்போல் இருந்த அறையைப் பார்க்க வந்தாங்க. ஹோட்டலில் தங்கியிருந்த என்னை 'நிவியா'ங்கிற பாலியல் தொழில் பண்ற பெண் கொலை செய்கிற எண்ணத்தோடு அறைக்குள் வந்தாள். அதில் இருந்து நான் தப்பினாலும் ◌ப்ளோரா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டாள். இப்படி நான் எதிர்பார்க்காத சம்பவங்கள் ஒரு பக்கம் நடந்துட்டு

இருந்தாலும், கொலையாளி யாராக இருக்கக்கூடும் என்கிற கெஸ் வொர்க்கோடு என்னோட இன்வெஸ்டிகேஷனைப் பண்ணிட்டு இருக்கேன். ஒரு நாளைக்கு நாலைஞ்சு தடவை டேவிட் மாரீஸ் எனக்கு பாரீஸில் இருந்து போன் பண்ணி விசாரிப்பார். நானும் அவர் கேட்கிற கேள்விக்கான பதில்களை வெளிப்படையாகச் சொல்லாமல் 'பிரச்னை சீக்கிரமே ஒரு முடிவுக்கு வந்துடும்' என்கிற விவரத்தை 'விரைவில் புயல் புன்னகை பூக்கும்'னு சொல்லுவேன். இந்த கேஸில் உள்ள எல்லா குழப்ப முடிச்சுக்களும் சீக்கிரமே அவிழ்ந்துவிடும் என்கிற பதிலை ஓவியம் சத்தம் போடும்னு சங்கேத வார்த்தைகளால் கன்வே பண்ணுவேன்..." விஜேஷ் தன் நீளமான பேச்சை முடித்துவிட்டு ஒரு சின்ன பியர் டின்னைக் கையில் எடுத்துக்கொண்டான்.

காமாட்சி கேட்டான், "கொலையாளி யார்ங்கிறதை ஸ்மெல் பண்ணிட்டீங்களா விஜேஷ்?"

"இன்னும் இல்லை."

"கொலையாளி யார்னு நீங்க கண்டுபிடிச்ச பிறகு அந்த நபரைத் தண்டிக்கக்கூடிய பொறுப்பை உங்க கம்பெனி பாஸ் டேவிட் மாரீஸ் எடுத்துக்கப்போறார். அப்படித்தானே?"

"ஆமா."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"உங்களுக்கு முன்னாடி நியூயார்க் போலீஸ் கண்டுபிடிச்சுட்டா?"

போலீஸ் கண்டுபிடிக்கிறதுக்கு முந்தி கொலையாளியை நான்தான் கண்டுபிடிப்பேன் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு."

"இந்த விஷயத்தில் நான் உங்களுக்கு உதவ லாமா?"

"மோஸ்ட் வெல்கம்."

"நடந்த மூணு கொலைகளுக்கான மோட்டிவ் என்னவாக இருக்கும்னு உங்களால கெஸ் பண்ண முடியுதா?"

"முடியலை."

"நான் ஓரளவுக்கு கெஸ் பண்ணிட்டேன்."

"என்ன...?"

"சில்வியாவோட மியூஸியம்."

விஜேஷ் கேலியாகச் சிரித்தான். "நீங்க மியூஸி யம்னு சொல்ற அந்த அறையை நானும் பார்த் தேன். புழு, பூச்சின்னு பாட்டில்களில் அடைச்சு வெச்சு பார்க்கவே

குழந்தைத்தனமாக இருந்தது. அது எனக்கு ஒரு பெரிய விஷயமாவே படலை காமாட்சி."

"நோ... விஜேஷ்! அந்த அறையில் ஏதோ ஒரு விபரீதம் இருக்கு. வீஹேவ் டு ட்ரேஸ் இட் அவுட்."

"சரி... எப்படிக் கண்டுபிடிக்கப் போறோம்?"

"இன்னிக்கு ராத்திரி நீங்களும் நானும் அந்த வீட்டுக்குப் போறோம். சில்வியாவோட மியூஸியம் அறையைக் கிளறப்போறோம்."

"எனக்குக் கொஞ்சம் உதறலா இருக்கு."

"வேறு வழியில்லை... போயாகணும்."

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்க, காரை சிப்ரஸ் மரங்களுக்கு நடுவில் கொண்டுபோய் நிறுத்தினான் காமாட்சி. பக்கத்தில் விஜேஷ் அந்தக் குளிரிலும் வியர்த்த முகத்தோடு, ஸ்வெட்டர் தரித்துத் தெரிந்தான். தொலைவில் இருட்டின் கெட்டியான பிடியில் ஆல்பர்ட்ஸன்னின் வீடு ஒரு அவுட்லைனைப்போல் பார்வைக்குச் சிக்கியது. எல்லாப் பக்கமும் சில்வண்டு இரைந்தது.

"காமாட்சி... இது ரிஸ்க்!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"எது?"

"இப்படி திருட்டுத்தனமாக ஆல்பர்ட்ஸன் வீட்டுக்குள் நுழையறது."

"முள்ளை முள்ளாலதான் எடுக்கணும். என்கிட்டே பிஸ்டல் இருக்கு. பயப்படாம வாங்க." காரைவிட்டு இறங்கி, டார்ச் வெளிச்சத்தோடு மெள்ள நடந்தார்கள். பூட்ஸ் அணிந்த கால்களுக்குக் கீழே இலைச் சருகுகள் நொறுங்கின.

"காமாட்சி..."

"வீட்டுக்குள்ளே ஒரு கறுப்பு நாய் இருக்கும். பேர் ப்ளாக்கி."

"தெரியும். இனிமே அது இங்கே இருக்காது."

"பின்னே!"

"காலையிலேயே ப்ளூ க்ராஸ் கொண்டுபோய்ட்டாங்க..."

"எப்படி?"

"எல்லாமே என்னோட கைங்கர்யம்தான்!"

வீட்டை நெருங்கினார்கள். இருட்டில் காம்பௌண்ட் கேட் சாய்ந்து தெரிந்தது.

"விஜேஷ்! மொதல்ல நான் ஏறி உள்ளே குதிக்கிறேன். அப்புறமா நீங்க குதிங்க... சுவர் ஏறிக் குதிச்சுப் பழக்கம் இருக்கா?"

"ம்."

"பார்த்து! துருப்பிடிச்ச கேட்!" காமாட்சி வாயில் டார்ச்சைக் கவ்விக்கொண்டு காம்பௌண்ட் கேட்டின் மீது ஏறி அந்தப் பக்கமாகக் கொட்டியிருந்த இருட்டில் குதிக்க, அதைத் தொடர்ந்து விஜேஷ் ஏறினான். பாதி கேட் ஏறியிருப்பான்.

சாலையில் ஏதோ சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

இருட்டில் ஒரு வாகனம் நின்று இருக்க, இரண்டுபேர் நிழல் உருவங்களாக இறங்கிக்கொண்டு இருந்தார்கள்.

கோவை

இயல்பான சுவாசிப்புக்கு வர பங்கஜ்குமாருக்கு சில விநாடிகள் பிடித்தன. டெலிபோன் ரிஸீவரில் மூச்சு வாங்கிக்கொண்டு இரைந்தார்.

"மிஸ்டர் பிரதாப், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என் மனைவி மின்மினியை கோவை ரயில்வே ஸ்டேஷனில் பார்த்தீர்களா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஆமாம்."

"எப்போது?"

"10 நிமிடங்களுக்கு முன்னால்."

"அவளோடு பேசினீர்களா?"

"ஆமாம்... பேசினேன். உங்கள் திருமணத்தின்போது மின்மினியைப் பார்த்தது. அதற்குப் பிறகு நான் பார்க்கவில்லையாதலால், என்னைப் புரிந்துகொள்வதில் அவர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டது. பிறகு, புரிந்துகொண்டு பேசினார்கள்."

"மின்மினி என்ன சொன்னாள் பிரதாப்?"

"நான் கோவை ரயில்வே ஸ்டேஷனின் பின்பக்கம் இருந்த கார் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு ஸ்டேஷனில் எஸ்.எம். ஆகப்

பணியாற்றும் என் நண்பர் சந்திரமௌலியைப் பார்க்க அவசரமாகப் போய்க்கொண்டு இருந்தேன். அப்போதுதான் மின்மினியை டிக்கெட் கவுன்ட்டர் அருகே பார்த்தேன். கலங்கிப்போன முகத்தோடு காணப்பட்டார்கள். நான் என்னைஅறிமுகப்படுத்திக்கொண்டதும் லேசாகப் பதற்றப் பட்டார்கள் நான் இயல் பான குரலில் "எங்கே பயணம்?" என்று கேட்டேன். அதற்கு உங்கள் மனைவி, 'என் தோழி ஒருத்தி உடம்புக்கு முடியாமல்பெல்லாரி யில் இருக்கிறாள். அவளைப்பார்க் கப் புறப்பட்டேன். என்கணவ ருக்கு வேலை அதிகம் என்பதால் நான் மட்டும் கிளம்பிவிட்டேன்' என்று சொன்னார்கள். மேற் கொண்டு என்னிடம் பேசவிரும் பாமல் நகர்ந்துவிட்டார்கள்.

நான் ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்து அழைப்பிதழ் கொடுத்து விட்டு காரில் ஏறி, நான் தங்கி யிருந்த லாட்ஜை நோக்கிப் போகும்போதுதான் உங்கள் மனைவியின் ஞாபகம் மறுபடியும் எனக்கு வந்தது. அவர்கள் பதற் றத்தோடு இருந்தது என்னுடைய மனதுக்கு நெருடலாகப்படவே உங்களுக்கு போன் செய்தேன்... உங்களுக்குள் ஏதாவது பிரச்னையா?"

"அவள் பெல்லாரி போவதாக உங்களிடம் சொன்னாளா?"

"ஆமாம்..."

"பெல்லாரி போவதென்றால், அந்த நேரத்துக்கு எந்த டிரெயின் இருக்கிறது?"

LAVAN.JOY@TAMILTORRENTS.COM

"தெரியவில்லையே?"

"நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள் பிரதாப்?"

"நான் தங்கியிருக்கும் லாட்ஜுக்கு வந்துவிட்டேன்."

"எந்த லாட்ஜ்?"

"சிட்டி டவர்! நான் வேண்டுமானால், இப்போது உங்கள் வீட்டுக்கு வரட்டுமா?"

"வேண்டாம் பிரதாப்! இனிமேல் நான் பார்த்துக்கொள்கி றேன். நீங்கள் கொடுத்த தகவ லுக்கு நன்றி."

"உங்களுக்குள் என்ன பிரச்னை பங்கஜ்குமார்?"

"ஒரு சின்ன கருத்து வேறு பாடு அவ்வளவுதான். நோ பிராப்ளம்... மின்மினியிடம் நான் பேசிக்கொள்கிறேன்!" பங்கஜ் குமார் சொல்லிவிட்டு நடுங்கும் கரத்தோடு ரிஸீவரை வைத்தார். எதிரில் உட்கார்ந்து தன் முகத் தையே பார்த்துக்கொண்டு இருந்த விவேக்கிடம் தொண்டையடைக்க எல்லாவற்றையும் சொல்ல,விவேக் எழுந்தான்.

"சார்! கவலைப்படாதீர்கள், உங்கள் மனைவி எந்த ரயிலில் ஏறியிருந்தாலும் சரி, ஏதாவது ஒரு ஸ்டேஷனில் மடக்கிவிடலாம்."

"நோ... விவேக்! மின்மினி பெல்லாரி போவதாக பிரதாப்சிங்கிடம் பொய் சொல்லியிருக்கிறாள். மின்மினியிடம் வேறு ஏதோ திட்டம் இருக்கு. நாம் எல்லோரும் பெல்லாரிபோய்அவளைத் தேட வேண்டும் என்பது அவளோட எண்ணம். பிரதாப்சிங்கிடம் உண்மையைச் சொல்ல அவளுக்கு என்ன பைத்தியமா?" பங்கஜ்குமார் சொல்லச் சொல்ல... செல்போன் ரிங்டோனை இசைத்தது.

எடுத்தார் "யெஸ்..."

"கலெக்டர் ஐயா?" - ஓர் ஆண் குரல்.

"ஆமா!"

"நான் அல்போன்ஸ்! மின்மினியைப்பற்றி இனிமே கவலைப்படாதீங்கய்யா. அவ எனக்குச் சொந்தமானவள்."

"டேய்ய்ய்ய்..!"

"பார்த்தீங்களாய்யா! உண்மையைச் சொன்னா... எப்படிக் கோபம் வருது? இப்ப மின்மினி எனக்குப் பக்கத்துலதான் உட்கார்ந்துட்டு இருக்கா... பேசச் சொல்லட்டுமா?"

BAVAN_JOY@YAHOO.COM

பங்கஜ்குமார் பதில் சொல்லாமல் தவிப்போடு காத்திருக்க, மறுமுனையில் மின்மினியின் அழுகை கலந்த குரல் கேட்டது.

"எ...எ...என்னங்க... என்னை... ம... ம... மன்னிச்சிருங்க! இனிமே என்னை மறந்துடுங்க!"

- பறக்கும்...

கோவை

பங்கஜ்குமாரின் உடம்புக்குள் இருந்த ஒட்டுமொத்த ரத்தமும் கொதிநிலைக்குப் போக, அவர் தன்னை மறந்து செல்போனில் இரைந்தார்.

"மி... மி... மின்மினி! நீ இப்போ எங்கே இருக்கே?"

"வே... வேண்டாங்க. இனிமே என்னைப்பற்றி நீங்க எதுவும் தெரிஞ்சுக்க விரும்ப வேண்டாம். எ... எ... என்னை மறந்து...." அந்த வாக்கியம் முடியு முன்னரே செல்போன் இணைப்பு அறுந்தது.

பங்கஜ்குமார் உடம்பில் பரவிய நடுக்கத்தோடும், வியர்த்து சோர்ந்துபோன முகத்தோடும் விவேக்கை ஏறிட்டு, செல்போனில் மின்மினி பேசியதுபற்றிச் சொல்ல, விவேக் அவருடைய செல்போனை வாங்கி மின்மினி அழைத் திருந்த எண்ணுக்குத் தொடர்புகொண் டான். 'தி நம்பர் யு ஹாவ் டயல்டு இஸ் ஸ்விட்ச்டு ஆ◌ஃப்' என்றது ஒரு பெண் குரல்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"சார்... பேசியது உங்க ஒய்◌ஃப் மின் மினிதானே?"

"அது மின்மினியோட குரல்தான். பட், அந்தக் குரலில் நிறையப் பயம்... நடுக்கம். யாரோ அவளை மிரட்டறாங்க."

"விஷ்ணு... இந்த செல்போன் நம்பர் யாரோடதுன்னு பார்... விசாரி."

விஷ்ணு அந்த நம்பரைப் பார்த்துவிட்டு, "பாஸ்... இது ஏர்டெல் நம்பர். என்னோட ◌ஃப்ரெண்ட் ஆர்.ஜே.செந்தில் குமார் அந்த கம்பெனியில்தான் ஒரு கீ போஸ்ட்ல வொர்க் பண்றார். இப்ப கேட்டுடறேன்..." சொல்லிக்கொண்டே, செல்போனோடு நகர்ந்தான்.

பங்கஜ்குமார் வெகுவாகக் கலங்கிப் போனவராக கண்களில் கோத்துக்கொண்ட நீரோடு விவேக்கை ஏறிட் டார்.

"சார்... என்னோட மனசுக்குள்ளே உருவாயிருக்கிற ஒரு தீர்மானமான எண்ணத்தைச் சொல்லட்டுமா?" என்று கேட்டான் விவேக்.

"ப்ளீஸ்..."

"உங்க மனைவி தப்பானவங்களா இருக்க முடியாது. ஐ'ம் ஷ்யூர் அபௌட் இட்."

"அப்போ... அந்தக் கல்யாண போட்டோ? அந்தப் போட்டோவில் எந்த ஒரு சில்மிஷமும் இல்லைன்னு சொன்னீங்களே?"

"போட்டோ உண்மையானதுதான். பட், கல்யாணம் நடந்ததா இல்லையான்னு தெரியலையே? ரெண்டு பேரும் மணக் கோலத்தில் இருக்காங்க. சுற்றிலும் ஃபாதரும் கூட்டமும் இருக்காங்க. இந்தக் கல்யாணம் ஒருவேளை கடைசி நேரத்துல நடக்காமக்கூடப் போயிருக்கலாமே?"

"நீங்க சொல்றது உண்மையாய் இருக்கும்பட்சத்தில் மின்மினி ஏன் வீட்டைவிட்டு வெளியேறி, அல்போன்ஸ்கூட போய்ச் சேரணும்?"

"மொதல்ல உங்ககூட போன்ல பேசினது யாரு... அல்போன்ஸா?"

"ஆமா... அல்போன்ஸ்தான்!"

"பேசினது அல்போன்ஸ்தான்னு உங்களுக்கு எப்படி நிச்சயமாத் தெரியும்?"

"விவேக்! நீங்க இப்போ என்ன சொல்ல வர்றீங்க?"

"சார்... மைக்கேல் எர்னஸ்ட் கொலையான நிமிஷத்தில் இருந்து இதுவரைக்கும் அல்போன்ஸை நீங்களோ, நானோ பார்க்க கலை. கொலைச் சம்பவம் நடந்தபோது அவன் வீட்ல இருந்தானா இல்லை வெளியே எங்கேயாவது போயிருந்தானா என்கிற விவரமும் நமக்குத் தெரியாது. நிலைமை இப்படி இருக்கும்போது, நாம் எதை அடிப்படையாவெச்சு டெலிபோன்ல பேசினது அல்போன்ஸ்தான்னு முடிவுக்கு வர முடியும்?"

"மின்மினியும் பேசினாளே..."

விவேக் ஒரு சின்ன சிரிப்போடு, "கண்ணால் பார்ப்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்" என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே விஷ்ணு பக்கத்தில் வந்தான். "பாஸ்... என்னோட ஃப்ரெண்ட் ஆர்.ஜே.கிட்டே பேசிட்டேன். அந்த செல்போன் நம்பருக்குரிய நபரின் பெயர் அல்போன்ஸ்."

"அட்ரஸ்?"

"மைக்கேல் எர்னஸ்ட்டோட அட்ரஸ்தான்."

பங்கஜ்குமார் பதற்றமாகக் குறுக்கிட்டார். "அப்படின்னா என்கூட பேசினது அல்போன்ஸ்தான்!"

"சார்... சிம்கார்டு அல்போன்சுக்குச் சொந்தமானதா இருக்கலாம். அந்த போனை உபயோகப்படுத்தி, வேறு யாராவது அல்போன்ஸ் மாதிரி பேசியிருக்கலாமே?"

"விவேக்... நீங்க இப்படிப் பேசறது என்னைச் சமாதானப்படுத்தவா..? இல்லை... உண்மை நிலவரம் அது தானா?"

"சார்... உங்களுக்கு ஃபால்ஸ் ஹோப் குடுத்து ப்ளீஸ் பண்ண முடியாதுன்னு எனக்குத் தெரியாதா? நடந்த சம்பவங்களையும் இப்போ நடந்துட்டு இருக்கிற சம்ப வங்களையும் பார்க்கும்போதுஎதிரி களோட 'டார்கெட்' உங்க மனைவி மின்மினி கிடையாது."

"தென்?"

"நீங்கதான்! நீங்க பொறுப்பில் இருக்கிற கலெக்டர் பதவிதான். உங்களை மனரீ தியாகப் பலவீனப்படுத்தி, ஒரு கொலைப்பழியை உங்க மேலே சுமத்தி, இந்த கலெக்டர் பதவியில் இருந்து உங்களை அப்புறப்படுத்தத் திட்டம் போட்டு, சம்பவங்களை செஸ் போர்டில் காய்களை மூவ் பண்ணிட்டு இருக்காங்க."

"எனக்கு எதிரிகளே கிடையாதே!"

"ஒருவருக்கு நண்பர்கள்கூட இல்லாமல் இருக்கலாம். பட், எதிரிகள் இல்லாமல் இருக்க வாய்ப்பே இல்லை. சார்... கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணிப் பாருங்க...உங்க நினைவுக்கு ஏதாவது ஒரு முகம் தட்டுப்படும்."

LAVAN.LOK@TAMILTORRENTS.COM

பங்கஜ்குமார் தன் வியர்த்த முகத்தை இரண்டு கைகளாலும் வழித்தபடி யோசிக்க... விவேக் தொடர்ந்தான்.

"சார்... ஒரு கோரிக்கை மனுவோடு உங்களை வந்து பார்த்த மைக்கேல் எர்னஸ்ட் எதுக்காகக் கொலை செய்யப்படணும்? அவரோட போஸ்மார்ட்டம் ரிப்போர்ட்டில் 'மைக்கேல் எர்னஸ்ட் கொலை செய்யப்படலை... அவரோட மரணத்துக்குக் காரணம், கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு இதயம் வெடித்ததுதான்னு சொல்லி, அதுக்குப் பிறகு அவருடைய தலையை இரும்பு உலக்கையால் அடிச்சு யாரோ ரத்தக்களறி ஆக்கியிருக்காங்கன்னு குறிப்பிட்டு இருக்காங்க. பட், இந்த போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் குறித்து டாக்டர்கள் மத்தியில் ஒரு கருத்து வேறுபாடு இருந்தது. தன்னைக் கொலை செய்ய வந்த நபரைப் பார்த்து அதிர்ந்துபோன மைக்கேல் எர்னஸ்ட்டுக்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக இதயம் வெடித்து இறந்துபோயிருக்கலாம். அது தெரியாத கொலையாளி, அவர் உயி ரோடு இருக்கிறதா நினைத்து அங்கே கிடந்த இரும்பு உலக்கையை எடுத்து தலையை நசுக்கியிருக்கலாம். எனவே, இது கொலைதான்... இயற்கையான மரணம் அல்ல. இந்தக் கருத்துக்கு ஆதரவாகச் சில டாக்டர்களும், எதிராகச் சில டாக்டர்களும் இருக்கிற நிலையில், மருத்துவமனையின் டீன் டாக்டர் பரிமளா செல்வராஜன் ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடி எனக்கு எஸ்.எம்.எஸ். பண்ணியிருந்தார். அந்த எஸ்.எம்.எஸ்ஸை நீங்க பார்க்கணும்..." சொன்ன விவேக் தன் செல்போனை உயிர்ப்பித்து, மெசேஜின் இன்பாக்ஸில் இருந்த அந்தச்

செய்தியைக் காட்டினான். பங்கஜ்குமார் படித்தார்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

'மிஸ்டர் விவேக்! நான் கோவை மருத்துவமனையின் டீன் டாக்டர் பரிமளா செல்வராஜன். நீங்கள் இப்போது கலெக்டரின் பங்களாவில் இருப்பது எனக்குத் தெரியும். மைக்கேல் எர்னஸ்ட்டின் மர ணம் சம்பந்தமாக எனக்கு இப்போது ஒரு புதுத் தகவல் கிடைத்துள்ளது. அதைப்பற்றி உங்களி டம் பேச வேண்டும். நான் இப் போது கலெக்டரின் பங்களா வுக்கு வரலாமா? உங்களின் பதில் பார்த்துப் புறப்பட்டு வருகிறேன்.'

பங்கஜ்குமார் விவேக்கைத் திகைப்பாகப் பார்த்தார்

அப்போது கிணுகிணுத்த இன்டர்காம், வாசலில் டாக்டர் பரிமளா செல்வராஜன் காத்திருக்கும் தகவல் சொல்லியது.

விவேக்கும் பங்கஜ்குமாரும் மௌனமான விநாடிகளில் காத்திருக்க... டாக்டர் பரிமளா செல்வராஜன் உள்ளே வந்தார். 40-களின் நடுவில் இருந்த டாக்டர் சின்னச் சின்ன மஞ்சள் பூக்கள் நிறைந்த வெண்ணிற ஆர்கன் சேலையில் பளிச்சென்ற தோற்றம் காட்டினார். கண்களில் ரிம்லெஸ் ஸ்பெக்ஸ்.

பரிமளா செல்வராஜன்பங்கஜ் குமாருக்கு வணக்கம் தெரிவித்தபடியே சொன்னார். "இந்த மாவட்ட கலெக்டரை டிவி-யிலும் பத்திரிகைகளிலும்தான் பார்த்து

இருக்கேன். இன்னிக்குத்தான் முதல் முறையா நேர்ல பார்க் கிறேன். ப்ளீஸ் டு மீட் யூ சார்."

பங்கஜ்குமார் தன் முகத்தில் பதிந்திருந்த வருத்தத்தை ஒரு புன்னகையில் துடைத்துவிட்டு, தனக்கு எதிரே இருந்த சோபா வைக் காட்டினார். சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டுப் பேச்சை ஆரம்பித்தார் டாக்டர்.

"மிஸ்டர் விவேக்! நான் வாரத்துக்கு ஒரு தடவையாவது வீடியோ கான்ஃபரன்ஸ் முறையில் அமெரிக்காவில் உள்ள சில டாக்டர்களைத் தொடர்பு கொண்டு மெடிக்கல் சயின்ஸோட 'அப்டேட் விவரங்களைப்பத்தி டிஸ்கஸ் பண்ணுவேன். அதேபோல் இன்னிக்கும் சரியாக ஒரு மணி நேரத்துக்கு முன்பு நியூஜெர்ஸியில் உள்ள டாக்டர் ஸ்டூவர்ட்டோடு பேசிட்டு இருந்தேன். அப்போ அவர் சொன்ன ஒரு தகவல், என்னை அதிர்ச்சியோட உச்சிக்கே கொண்டுபோயிருச்சு. மிஸ்டர் விவேக். 'சைனோ பாக்' என்கிற வார்த்தையை நீங்க கேள்விப்பட்டு இருக்கீங்களா?"

"சைனோ பாக்?"

"யெஸ்..."

"ஸ்பெல் பண்ணுங்க... டாக்டர்."

"PSYNO BAC."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"கேள்விப்பட்டது இல்லை."

டாக்டர் இன்னமும் குரலைத் தாழ்த்தினார். "மிஸ்டர் விவேக்! இந்த சைனோ பாக் என்பது பாக்டீரியா டைனமைட். இந்த நுண்ணுயிர் டைனமைட்டை மைக்ராஸ்கோப் வழியாதான் பார்க்கவே முடியும். இதை ஊசி மூலமாகவோ, குடிக்கிற தண்ணீர் மூலமாகவோ ஒரு மனிதனோட உடம்புக்குள் செலுத்திட்டா போதும். அது 12 மணி நேரத்துக்குள்ளே கோடிக்கணக்கில் பெருகி, இதயத்தோட பெரிகார்டியம் உறைக்குள் போய் ஒட்டிக்கிட்டு திடீர்னு வெடிக்கவைக்குமாம்.

இந்த 'சைனோ பாக்' டைனமைட் பாக்டீரியாக்களைப் 'பயோ-வெப்பன்'களாகச் சில நாட்டு ராணுவங்கள் பயன்படுத்திட்டு இருக்காம். டாக்டர் ஸ்டூவர்ட் இந்த விஷயத்தை மட்டும் சொல்லியிருந்தா, நான் உங்களைப் பார்க்க வந்து இருக்க மாட்டேன். அவர் சொன்ன இன்னொரு விஷயம்தான் இதை விட அதிர்ச்சியானது!"

விவேக், பங்கஜ்குமார் டாக்டரையே பார்க்க... அவர் தொடர்ந் தார். "இந்த 'சைனோ பாக்' என்கிற வார்த்தை முதன் முதலில் அது ட்ரீட்மென்ட் கொடுத்துட்டு இருந்த ஒரு பெண் நோயாளியின் வாயிலிருந்து வெளிப்பட்டு இருக்கு. அந்த பேஷன்ட்டோட பேர் சில்வியா. ஆரோக்கியமா இருந்த அந்த இளம் பெண் 24 மணி நேரத்துக்குள், இதய நோயாளியா மாறி மனநலமும் பாதிக்கப்பட்டு டாக்டர் ஸ்டூவர்ட்டோட ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகியிருக்கா. அந்தப் பெண்ணை

ஆழ்நிலை தியானத்துக்குக் கொண்டுபோய் டாக்டர் பேசிப் பார்த்தபோதுதான், இந்த சைனோ பாக் வார்த்தை யைச் சொல்லியிருக்கா. இந்த வார்த்தைக்கான அர்த்தத்தை நியூயார்க் மெடிக்கல் கவுன்சில் கண்டுபிடிச்சு, டாக்டர் ஸ்டூவர்ட்டுக்குத் தெரியப்படுத்தி இருக்காங்க.

விவேக் குறுக்கிட்டுக் கேட்டான், "அப்படின்னா... சில்வியா ஒரு இதய நோயாளியா மாறினதுக்குக் காரணம், அந்த 'சைனோபாக்' பாக்டீரியாதானா?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"ஆமா! மைக்கேல் எர்னஸ்ட் இறக்கக் காரணம் எல்லோருக்கும் வருகிற மாதிரியான மாரடைப்பு இல்லை என்பதும், சம்திங் அப்நார்மலாய் இருந்தது என்பதும் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட். இங்கே கோவையில் மைக்கேல் எர்னஸ்ட் எப்படி இதயம் வெடித்து, சதைத் துணுக்குகள் விலா எலும்புகளில் ஒட்டிக்கொண்டு இறந்து போனாரோ அதே மாதிரி நியூயார்க்கிலும் மூணு பேர் இதயம் வெடித்து இறந்து போயிருக்காங்க. அதில் ரெண்டு பேர் பெண்கள். ஒருத்தர் ஆண். பெண்ணின் பெயர்கள் பிரிட்டனி ஜான்சன், ஃப்ளோரா. இதில் ஃப்ளோரா ஒரு லாயர். ஆணின் பெயர் ஜான் கரோல்."

"அந்த முன்று பேரும் ஒரு மாதிரியான முறையில் இறந்து போனதுக்கு என்ன காரணம் டாக்டர்?"

"சில்வியாவின் வைத்தியச் செலவுக்காக அவளுடைய பேரண்ட்ஸ் ஆல்பர்ட்ஸன்னும் எமிலியும் அவங்களுக்குச் சொந்தமான வீட்டை விற்க முயற்சி பண்ணியிருக்காங்க. அதை விற்க எடுத்துக்கிட்ட அவங்க ஃபேமிலி லாயர் ஃப்ளோராவும் அந்த வீட்டை வாங்க ஆசைப்பட்டு அக்ரிமென்ட் போட்ட பிரிட்டனி ஜான்ஸனும், ஜான் கரோலும் ஹார்ட் அட்டாக் முறையில் தீர்த்துக்கட்டப்பட்டு இருக்காங்க."

சில விநாடிகள் யோசனையில் இருந்த விவேக், பிறகு டாக்டரை ஏறிட்டான். "ஓ.கே. டாக்டர்! நியூயார்க்கில் நடந்த மூணு கொலைகளுக்கும் மைக் கேல் எர்னஸ்ட் கொலைக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இல்லாமலா சில்வியாவுக்குச் சுய உணர்வு வந்தபோது, 'நான் மைக்கேல் எர்னஸ்ட்டைப் பார்க்கணும். அதுவும் உடனே பார்க்கணும்'னு சொல்லியிருப்பா?"

நியூயார்க்

காம்பௌண்ட் கேட்டின் பாதியில் நின்றிருந்த விஜேஷ் பதற்றமாகக் குரல் கொடுத்தான்.

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"காமாட்சி! ரோட்ல ஏதோ ஒரு வாகனம் நிக்குது. அது காரா, வேனான்னு தெரியலை."

"விஜேஷ்! அதை நீங்க பார்த் துட்டு இருக்க வேண்டாம். உள்ளே குதிங்க..."

"அந்த வாகனத்தில் இருந்து ரெண்டு பேர் இறங்கி இருட்டுல டார்ச் வெளிச்சத்தோடு இந்த வீட்டைப் பார்த்தபடிதான் நடந்து வர்றாங்க... அவங்க போலீஸாக இருந்தா பிரச்னையாயிடும்."

"எந்தப் பிரச்னையா இருந்தாலும் பரவாயில்லை. அதை அப்புறமாகப் பார்த்துக்கலாம். மொதல்ல உள்ளே குதிங்க விஜேஷ்."

விஜேஷ் உள்ளே குதித்தான்.

இரண்டு பேரும் இருட்டில் ஒரு நிமிடம் வரை அப்படியே மூச்சுக்காட்டாமல் உட்கார்ந்துஇருந்தார்கள். விஜேஷ் வியர்த்து வழிந்தான்.

"அவங்க யார்னு தெரியலையே?"

கேட் அருகே காலடிச் சத்தம் கேட்டது. கனமான பூட்ஸ்கள் தரையைத் தேய்த்தன. தொடர்ந்து அமெரிக்கன் ஆங்கிலத்தில்

இரண்டு ஆண் குரல்கள். கேட்டுக்கு இடது பக்கம் கொட்டிஇருந்த இருட்டில் ஒண்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த காமாட்சி, கேட்டின் இடைவெளியில் பார்வையைச் செலுத்திப் பார்த்தான்.

இரண்டு போலீஸ் சார்ஜன்ட்கள் யூனி◌ஃபார்ம்களில் தெரிந்தார்கள். கைகளில் பென் டார்ச்சுகள்.

காமாட்சி கிசுகிசுத்தான்.

"விஜேஷ்..."

"ம்..."

"வந்திருக்கிறது போலீஸ்தான்!"

"எ... எ... என்ன பண்ணலாம்?"

"அவங்க உள்ளே வந்ததும் போய் அறிமுகப்படுத்திக்க லாம்?"

"வேண்டாம்."

"ஏன்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"நியூயார்க் போலீஸைப்பத்தி உங்களுக்குத் தெரியாது. நாம உண்மையையே சொன்னாலும் நம்ப மாட்டாங்க. ஸ்டேஷனுக்குக் கூட்டிப்போய் விசாரணை என்கிற பேயரில் பாதி உயிரை எடுத்துடுவாங்க"- விஜேஷ் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே அந்த இரண்டு போலீஸ் சார்ஜன்ட் களும் கேட்டைத் தாண்டிக் குதித்தார்கள்.

பிறகு, சில விநாடிகள் நின்று நிதானித்துவிட்டுப் பேசிக்கொண்டே நடந்தார்கள்.

"சார்லஸ்! நம் வேலை எத்தனை மணி நேரத்தில் முடியும் என்று நினைக்கிறாய்?"

"இப்போது நேரம் எவ்வளவு?"

"ஒண்ணு இருபது..."

"எப்படியும் மூன்று மணியாகிவிடும்."

"அவ்வளவு நேரம் பிடிக்குமா?"

"கண்டிப்பாக..."

"எந்த இடம் என்று உனக்குத் தெரியுமா?"

"உத்தேசமாக..."

"சொதப்பிவிடாதே! இந்தக் காரியத்தை நாம் சரியாகச்செய்து முடிக்காவிட்டால் நமக்குக் காரியத்தை நடத்திவிடுவார்கள்."

"சரி... சரி... பயமுறுத்தாதே. அந்த 'டீப் ஃபைண்டர் டார்ச்' சை எடு. அது ஒழுங்காய் வேலை செய்தால் நாம் இரண்டு மணி நேரத்துக்குள் கிளம்பிப் போய்விடலாம்."

வந்தவர்கள் பேசிக்கொண்டே இருட்டில் குற்றுச் செடிகளுக்கு நடுவில் நடந்துபோய்க்கொண்டு இருக்க... விஜேஷின் கையை மெள்ளப் பற்றினான் காமாட்சி.

"விஜேஷ்..." காதருகே கிசுகிசுப்பாகக் கூப்பிட்டதும்

"ம்..."

"வந்தவங்க போலீஸ் மாதிரி தெரியலை. யூனிஃபார்ம் மட்டும் நிஜம்."

"என்ன பண்ணலாம்?"

"உண்மையான போலீசுக்குத் தகவல் குடுத்துடலாம். தாம்ஸன், ஸ்மித் ரெண்டு பேரோட செல்போன் நம்பர் என்கிட்டே இருக்கு."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"வேண்டாம்... உடனடியாகத் தகவல் கொடுக்க வேண்டாம். மொதல்ல இவங்க இங்கே என்ன செய்யறாங்கன்னு பார்க்கலாம்."

"அவங்க நம்மை 'ஸ்மெல்' பண்ணிட்டா?"

"இங்கே கொட்டிக்கிடக்கிற இருட்டில் அதுக்கு வாய்ப்பே இல்லை. இனிமே நாம் அதிகமாகப் பேசக் கூடாது. வெறும் அப்ஸர்வேஷன் மட்டுமே!"

விஜேசும் காமாட்சியும் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு எழுந்து, மெள்ள நடந்து இருட்டில் கலந்தார்கள். இருவரின் இதயங்களும் டிக்கிங் 'டைம் பாம்'களாக மாறியிருந்தன!

- பறக்கும்...

● ராஜேஷ்குமார், ஓவியங்கள்: அரஸ், ஸ்யாம்

◆ இனி, மின்மினி

நியூயார்க்

விஜேசுக்கும் காமாட்சிக்கும் அந்த இருட்டில் டார்ச் உதவியின்றி நடப்பது சிரமமாக இருந்தது. மரங்களுக்குக் கீழே பரவியிருந்த கரி இருட்டில் இருவரும் நடந்து, வீட்டின் பின்பக்கத்தை நெருங்கியபோது, அந்த இரண்டு பேரும் புல்வெளிக்கு நடுவில் நிழல் உருவங்களாகத் தெரிந்தார்கள். அவர்களுக்கு இடையே நடந்துகொண்டு இருந்த சம்பாஷணை குறைவான டெசிபலில் இருந்தாலும், விஜேசுக்கும் காமாட்சிக்கும் தெளிவாகக் கேட்டது.

"வேலையை முடித்துக்கொடுத்தால் பணம் நாளைக்கே கைக்கு வந்துவிடும் சார்லஸ். நீ டீப் ஃபைண்டரை உபயோகப்படுத்தி இரண்டு மணி நேரத்துக்குள் காரியத்தை முடித்துக் கொடுக்க வேண்டியது முக்கியம். சில்வியாவின் விவகாரத்தில் போலீஸார் தீவிரம் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இனியும் தாமதித்தால் எல்லா உண்மைகளும் வெட்டவெளிச்சத்துக்கு வந்துவிடுமோ என்கிற பயம் எனக்கு இருக்கிறது."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"எனக்கு அந்தப் பயம் இல்லை டொமினிக்! நியூயார்க் போலீஸ் திறமையானவர்கள்தான். ஆனால், சில்வியாவின் விவகாரத்தில் நிறையத் தடவை மூக்குடைபட்டு பிளாஸ்திரி போட்டுக் கொண்டார்கள். இப்போதுகூட சில்வியாவுக்கு வெகு அருகில் வந்துவிட்டார்கள். ஆனால், எது உண்மை... எது பொய் என்று தெரியாமல் தாடையையும் நெற்றியையும் சொறிந்துகொண்டு நிற்கிறார்கள்!"

"இருந்தாலும் நாம் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது இல்லையா? நேற்றைக்குக்கூட டாக்டர் ஸ்டூவர்ட்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவன், சட்டென்று பேச்சை அணைத் தான்.

"என்ன டொமினிக்?"

"ஏதோ சத்தம் கேட்ட மாதிரி இருந்தது."

"சத்தமா... என்ன சத்தம்?"

"ஏதோ அதிர்கிற மாதிரி... 'ப்ப்ர்ர்ர்ர்' என்ற சத்தம் அதோ அந்தப் பகுதியில் இருந்துதான் கேட்டது. வா.... போய்ப் பார்க்கலாம்!"

டொமினிக் டார்ச் வெளிச்ச வட்டத்தோடு நடக்க ஆரம்பித்துவிட, சார்லஸ் தொடர்ந்தான்.

விஜேசும் காமாட்சியும் இருட்டில் அந்தக் குற்றுச் செடிக்குப் பின்னால் ஒண்டிக்கொண்டு வியர்த்தார்கள்.

"விஜேஷ்... அவங்க வர்றாங்க."

"வராமே என்ன பண்ணுவாங்க காமாட்சி? உங்க செல்போனை 'சைலன்ட் மோட்'ல வெச்சுட்டு, 'வைப்ரேட்டிங் அலர்ட்'டை ஆ◌ஃப் பண்ணாம விட்டிருக்கீங்க. யாரோ உங்களைக் கூப்பிடப் போய், அது வைப்ரேட்டாகி உங்க பேன்ட் பாக்கெட்டில் இருந்த பேப்பரோடு உரசி 'ப்ப்ர்ர்ர்'னு ஒரு சத்தத்தை எழுப்பி, நாம இருக்கிற இடத்தைக் காட்டிக்கொடுத்துடுச்சு."

"தப்புதான். இப்ப என்ன பண்ணலாம்?"

"பக்கத்துல வந்துட்டா அட்டாக் பண்ண வேண்டியதுதான்!"
"ரெண்டு பேரையும் பார்த்தா எமகிங்கரர்கள் மாதிரி இருக்காங்க. தமிழ்ப் பட ஹீரோ ரேஞ்சுக்கெல்லாம் ◌ஃபைட் பண்ண முடியாது. நிச்சயமா அவங்க கையில துப்பாக்கி இருக்கும். வீ ஆர் ஹெல்ப்லஸ்."

"நெருங்கி வந்துட்டாங்க!"

"நாம இங்கிருந்து தப்பிக்க ஒரே வழிதான் இருக்கு."
LAVAN_JOY@TAMILTORRENTS.COM
"என்ன வழி?"

"அவங்களை இங்கேயிருந்து ஓட வைக்கணும்."

"எப்படி?"

"இப்படித்தான்..." சொன்ன விஜேஷ், தன்னிடம் இருந்த செல்போனை எடுத்து உசுப்பி, 'லிளிஹிஞ்'ல் வைத்து நியூயார்க் போலீஸ் பேட்ரோலிங் வேன் எழுப்பும் சைரன் சத்தத்தை 'ஆன்' செய்தான்.

அடுத்த விநாடி \

செல்போன் உச்சபட்ச டெசிபலில் அலறி, காற்று மண்டலத்தை அதிரவைக்க... இருட்டில் பயத்தைச் சுமந்தபடி வந்துகொண்டு இருந்த சார்லசும் டொமினிக்கும் முதல் விநாடி அதிர்ந்து, இரண்டாவது விநாடியில் ஓட ஆரம்பித்து, ஐந்தாவது விநாடியில் காம்பவுண்ட் கேட்டைத் தாண்டிக் குதித்து, பத்தாவது விநாடியில் வெளியே கொட்டியிருந்த இருட்டில் காணாமல் போனார்கள்.

அடுத்த பத்தாவது நிமிடம் ஆல்பர்ட்ஸன்னின் வீடு. தாம்ஸன், ஸ்மித் தலைமையில் 'ஸ்க்வாட்' வீரர்களின் கைகளில் இருந்த டார்ச் வெளிச்ச வட்டங்களால் கழுவப்பட்டுக்கொண்டு இருந்தது. போலீஸ் நாய் ஒன்று மோப்பம்

பிடித்தது. தாம்ஸன் தன் பீட்ரூட் நிற முகத்தில் கோபத்தை நிரப்பிக்கொண்டு, விஜேஷையும் காமாட்சியையும் மாறி மாறிப் பார்த்தபடி பொரிந்து தள்ளிக்கொண்டு இருந்தார்.

"என்ன செய்திருக்கிறீர்கள் நீங்கள்? டொமினிக், சார்லஸ் என்ற அந்த இருவர் போலீஸ் யூனிஃபார்மில் இந்த வீட்டுக்குள் நுழைந்ததுமே நீங்கள் எனக்குத் தகவல் கொடுத்து இருக்க வேண்டும். நீங்கள் இருவரும் சேர்ந்து ஏதாவது ஒரு வகையில் அவர்களைத் தாக்கியிருக்கலாம். அப்படியும் செய்யவில்லை! இதற்காக நான் உங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

காமாட்சி குறுக்கிட்டான். "சார், நான் ஒரு பத்திரிகையின் சீஃப் ரிப்போர்ட்டர். நியூயார்க்கில் நடந்த பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஒளிந்திருந்த உண்மைகளை ரிப்போர்ட்டர் என்கிற முறையில் இன்வெஸ்டிகேட் செய்து போலீஸ் துறைக்கு உதவியிருக்கிறேன். இப்போதும் அதே நோக்கத்தில்தான் செயல்பட்டேன். சார்லஸ், டொமினிக் எந்த நோக்கத்துக்காக ஆல்பர்ட்ஸன் வீட்டுக்கு வந்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில்தான் இருட்டில் பதுங்கியிருந்தோம். எதிர்பாராதவிதமாக எங்கள் நோக்கம் சிதைந்துவிட்டது. ஆனால், இதை நீங்கள் சட்டப் பிரச்னையாகக் கருதினால், அதையும் நாங்கள் சட்டத்தின் மூலமாகவே எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறோம்!"

தாம்ஸன் சற்றே கோபம் தணிந்தவராகத் தோள்களை குலுக்கிக்கொண்டார். "ஓ.கே. அதைப் பிறகு பார்த்துக்கொள்வோம். சார்லஸையும் டொமினிக்கையும் மறுபடியும் எங்கேயாவது பார்த்தால் உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா?"

"முடியாது சார். இரண்டு பேருமே போலீஸ் யூனிஃபார்மில் இருந்தார்கள். இரவு நேரம். தொப்பி வேறு பாதி முகத்தை மறைத்து இருந்தது. வந்தவர்கள் நல்ல உயரத்தில் இருந்தார்கள் என்பதுதான் இப்போது உறுதியாகச் சொல்லக்கூடிய

அளவில் உள்ள ஓர் அடையாளம்!"

அப்போது இரவு உடைகளில் தூக்கம் கெட்ட கண்களோடு ஆல்பர்ட்ஸன்னும் எமிலியும் டார்ச் வெளிச்சத்தின் உதவியோடு தடுமாற்றமாக வந்துகொண்டு இருந்தார்கள். தாம்ஸன் அவர்களை நோக்கிப் போனார்.

"மன்னிக்க வேண்டும் மிஸ்டர் ஆல்பர்ட்ஸன். இந்த அகால வேளையில் உங்களுக்குத் தகவல் கொடுத்து வரவழைக்க வேண்டியதாகிவிட்டது. சார்லஸ், டொமினிக்... இந்தப் பெயர்களில் உங்களுக்கு யாரையாவது தெரியுமா?"

"தெரியாது."

"இந்த வீட்டில் எதையோ தேட வந்து இருக்கிறார்கள். கையில் டீப் ஃபைண்டர் டார்ச் வைத்து இருந்திருக்கிறார்கள்."

"பாழடைந்துபோன இந்த வீட்டில் தேடுவதற்கு அப்படி என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. டீப் ஃபைண்டர் டார்ச் என்பது என்ன?"

"பூமியின் ஆழத்தை ஊருருவிச் செல்லும் லேசர் கற்றை களைக்கொண்ட டார்ச்சின் பெயர்தான் டீப் ஃபைண்டர் டார்ச்."

LAYAN.JOY@TAMILTORRENTS.COM

"இங்கே அதைக் கொண்டு வரவேண்டிய அவசியம்என்ன?" குழப்பமான முகத்தோடு ஆல்பர்ட்ஸன் கேட்டுக்கொண்டு இருக்கும்போதே, தாம்ஸனுக்கு போலீஸ் கன்ட்ரோல் ரூமில் இருந்து செல்போன் அழைப்பு வந்தது. சி.ஓ. பேசினார்.

"சார்... நியூயார்க் நகரம் முழுவதும் தேடுதல் வேட்டை தொடர்ந்துகொண்டு இருக்கிறது. அந்த நபர்கள் கிடைக்கவில்லை. ஏதாவது ஒரு காட்டுப் பகுதியில் பதுங்கியிருக்கலாம். அந்த நபர்கள் போலீஸ் பேட்ரோலிங் காராகப் பயன்படுத்தியது ரெஜிஸ்ட்ரேஷன் காலாவதியான ஒரு கார். க்ராப் ஃபேக்டரிக்கு உடைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட காருக்கு பெயின்ட் அடித்து, போலீஸ் உபயோகப்படுத்தும் காராக மாற்றியிருக்கிறார்கள்."

"நாளை பொழுது விடிவதற்குள் அவர்கள் பிடிபட வேண்டும்."

"நிச்சயம் பிடிபட்டுவிடுவார்கள் சார்!"

கோவை

டாக்டர் பரிமளா செல்வராஜனையே விவேக்கும் பங்கஜ்குமாரும் பத்து விநாடிகள் வரைக்கும் இமைக்காமல் பார்த்தார்கள்.

"டாக்டர்! நியூயார்க்கில் ஹார்ட் பேஷன்ட்டாக இருக்கிற சில்வியா இங்கே

கோவையில் இறந்து போன மைக்கேல் எர்னஸ்ட்டோட பேரை ஏன் சொல்லணும்?"

"ஏதோ ஒரு லிங்க் இருக்கு... அந்த லிங்க் 'சைனோ பாக்' என்கிற பாக்டீரியா டைனமைட்டாகக்கூட இருக்கலாம். காரணம், நியூயார்க்கில் லாயர் ஃப்ளோரா, பிரிட்டனி ஜான்ஸன், ஜான் கரோல் இந்த மூணு பேரும் புது மாதிரியான முறையில் ஹார்ட்அட்டாக் ஏற்பட்டு இதயம் சதைத் துணுக்குகளாக வெடித்து எப்படி இறந்துபோனாங்களோ, அதே முறையில்தான் மைக்கேல் எர்னஸ்ட்டும் இறந்துபோயிருக்கார்."

"டாக்டர்! நீங்க சொல்றதைவெச்சுப் பார்க்கும்போது, அந்த 'சைனோ பாக்' டைனமைட் இந்தியாவுக்குள் ஊடுருவி, கோயமுத்தூர் வரைக்கும் வந்து இருக்கலாம்னு என்னுடைய மனசுக்குள் ஒரு நெருடல். உங்களோட கெஸ் வொர்க் என்ன?"

LAVAKUSH@TAMILTORRENTS.COM

"என்னோட கெஸ் வொர்க் மட்டும் இல்லை மிஸ்டர் விவேக்... டாக்டர் ஸ்டீவர்ட்டோட கெஸ் வொர்க்கும் அதுதான். இந்த சைனோ பாக் பயோ வெப்பன் ஒரு அசாதாரணமான விஷயம் மட்டும் அல்ல... அபாயகரமான விஷயமும்கூட. மேலும், இந்த 'சைனோ பாக்' விவகாரத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதையும், நியூயார்க்கில் இறந்துபோன லாயர் ஃப்ளோரா, பிரிட்டனி ஜான்சன், ஜான் கரோல், கோவையில் இறந்துபோன மைக்கேல் எர்னஸ்ட் இவர்களின் ஒரே மாதிரியான மரணங்களுக்குக் காரணம் என்ன என்பதையும் நியூயார்க், கோவையைச் சேர்ந்த போலீஸார் இணைந்து கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லி, நியூயார்க் போலீஸ் அதிகாரிகளான தாம்ஸன், ஸ்மித் ஆகியோரின் செல்போன் எண்களையும் கொடுத்து இருக்கார். நீங்கள் விரும்பும்பட்சத்தில் அவர்களோடு பேசலாம். இதுதான் அவங்க செல்போன் நம்பர்ஸ்"- சொன்ன டாக்டர் பரிமளா செல்வராஜன் தன் கைப்பையைத் திறந்து, செல்போன் எண்கள் எழுதப்பட்டு இருந்த துண்டு பேப்பர் ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"தேங்க்யூ டாக்டர்! மைக்கேல் எர்னஸ்ட்டோட மரண விவகாரம் எதுவும் புரியாமல் இருட்டறை மாதிரி இருந்தது. இப்ப நீங்க சொன்ன தகவலால் வெளிச்சம் கிடைச்சிருக்கு. இனி, இந்தப் பிரச்னையை நாங்க ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துடுவோம்."

மேலும், சில நிமிடங்கள் பேசிக்கொண்டு இருந்துவிட்டு டாக்டர் பரிமளா செல்வராஜன் புறப்பட்டுப் போனதும், பங்கஜ்குமார் கலவரம் படிந்த முகத்தோடு விவேக்கை ஏறிட்டார்.

"என்ன விவேக்? இது ஏதோ என்னோட வீட்டுப் பிரச்னையாய் இருக்கும்னு பார்த்தா, ராணுவம் சம்பந்தப்பட்ட ஓர் அபாயகரமான பிரச்னையாக இருக்கும் போலிருக்கே. இந்த விவகாரத்தில் மின்மினி எப்படிச் சம்பந்தப்படறாள்னு தெரியலையே?"

"சார்... நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி எதிரிகளோட டார்கெட் உங்க மனைவி இல்லை. நீங்கதான். அதுக்கு மைக்கேல் எர்னஸ்ட்டை ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்தியிருக்காங்க."

"ராணுவத்துக்கும் மைக்கேல் எர்னஸ்ட்டுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?"

விவேக்கின் உதடுகளில் புன்னகையன்று அரும்பியது. "தொடர்பு இருந்திருக்கு சார்."

"விவேக்... வாட் டூ யூ மீன்?" LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"மைக்கேல் எர்னஸ்ட் கொலை செய்யப்பட்டபோது அவரோட வீட்டை நான் சோதனையிட்டப்போ, ஒரு விஷயம் அகப்பட்டது. அப்போதைக்கு அது எனக்கு ஒரு பெரிய விஷயமாகப்படலை. இப்போ அந்த விஷயம் விஸ்வரூபம் எடுத்து நிக்குது சார். ஊட்டிக்குப் பக்கத்தில் கல்ஹட்டி என்கிற இடத்தில் 'ஆர்மி எக்யூப்மென்ட்ஸ்' என்கிற தொழிற்சாலை ஒண்ணு இயங்கிட்டு இருக்கு. இது இந்திய ராணுவத்தின் ஓர் அமைப்பு. ஆர்மி டெக்னாலஜி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளும் அந்தத் தொழிற்சாலையில் இருக்கு. இந்தத் தொழிற்சாலையில் பயிற்சி பெறுவதற்காக இந்தியாவில் இருக்கிற ராணுவ முகாம்கள், தங்களுடைய வீரர்களை அனுப்பிவைக்கும். ஏறக்குறைய 500 பேர் பணி புரியும் இந்தத் தொழிற்சாலையின் உணவு விடுதிக்கு பீப் மாமிசம் சப்ளை பண்ணிட்டு இருந்தது மைக்கேல் எர்னஸ்ட்தான். வாரத்துக்கு ஒரு தடவை 200 கிலோ மாட்டு இறைச்சியை ஒரு வேன்ல கொண்டுபோய் சப்ளை பண்ணியிருக்கார். அது மாதிரியான சந்தர்ப்பங்களில் மைக்கேல் எர்னஸ்ட்டுக்கு ராணுவ அதிகாரிகளோடு தொடர்பு ஏற்பட்டு இருக்கலாம். நியூயார்க்கில் உள்ள சில்வியா, இங்கே கோவையில் இருந்த மைக்கேல் எர்னஸ்ட், கல்ஹட்டி ராணுவத் தொழிற்சாலையில் உள்ள சம் எக்ஸ் ராணுவ அதிகாரி இந்த மூணு பேருக்கும் அந்த 'சைனோ பாக்' பாக்டீரியா டைனமைட்னு சொல்லப்படுகிற பயோ-வெப்பனைப்பற்றித் தெரிஞ்சு இருக்கலாம்."

"இட்ஸ் ஓ.கே. விவேக்! பட், இதுல என்னை டார்கெட் பண்ண வேண்டிய அவசியம்

என்ன?"

விவேக் எழுந்தான், "அதுக்கான பதிலைத் தெரிஞ்சுக்கத்தான் நாம இப்போ ஓர் இடத்துக்குப் போகப் போறோம் சார்."

"எங்கே?"

"ப்ளீஸ் கம் சார்."

மருதமலைக்குப் போகும் ரோட்டில் இருந்த மஹாராணி அவென்யூவுக்குள், அந்த வீட்டுக்கு முன்பாக கார் நின்றது.

"இது மிஸ்டர் கோகுல்நாத்தோட வீடு. சென்னை க்ரைம் பிராஞ்சில் அதிகாரியாகப் பணிபுரிந்து ரிட்டயரானவர்!" விவேக் சொல்லிக்கொண்டே போய் வாசற்படியேறி அழைப்பு மணிக்கு வேலை கொடுக்கக் கதவு திறந்தது.

கோகுல்நாத், லுங்கி பனியனில் பார்வைக்குக் கிடைத்தார். பங்கஜ்குமாருக்கு வணக்கம் சொல்லிவிட்டு, விவேக்கிடம் திரும்பினார். "என்ன விவேக்? க்ளைமாக்சுக்கு வந்துட்டீங்க போலிருக்கு?"

"கிட்டத்தட்ட..." விவேக் சிரித்துவிட்டு கோகுல்நாத்திடம் குரலைத் தாழ்த்தினான்.

"ஃபர்தரா அவன் வாயைத் திறந்து ஏதாவது பேசினானா?"

JAYAMUSIC.BLOGSPOT.COM

"ஊஹ¨ம்... அதே பழைய பல்லவிதான். வாங்க... போய்ப் பார்க்கலாம்."

கோகுல்நாத் விவேக்கையும் பங்கஜ்குமாரையும் வீட்டின் கடைசியில் இருந்த அறைக்குக் கூட்டிப் போனார். அறை வாசலில் இருந்த சென்ட்ரி சல்யூட்டோடு எழுந்து நின்றார். கோகுல்நாத் கண்ணைக்காட்ட... கதவு திறக்கப்பட்டது.

மூன்று பேரும் உள்ளே நுழைந்தார்கள். சத்தம் கேட்டு அறையின் மூலையில் போடப்பட்டு இருந்த கட்டிலில் ஒரு பிராக்கெட் குறி மாதிரி படுத்திருந்த அவன் எழுந்து உட்கார்ந்தான். 40 வயது. சிவப்பேறிய கண்களில் அலட்சியப் பார்வை, மழிக்காத தாடை. சதைப் பிடிப்பான கழுத்தில் கெட்டியாக ஒரு தங்கச் செயின்.

விவேக் பங்கஜ்குமாரிடம் திரும்பினான்.

"சார் இவன்தான் கோட்டைமேடு குமார். மைக்கேல் எர்னஸ்ட்டை நீங்கதான் கொலை பண்ணச் சொன்னதாக போன்ல மிரட்டினானே... அதே கோட்டைமேடு குமார்."

பங்கஜ்குமார் வியப்பின் விளிம்புக்குப் போனார். "விவேக்... மதுக்கரை கல் குவாரியில் தலையில் கல்லைப் போட்டுக் கொலை செய்யப்பட்ட ஒரு நபரின் உடலைப் பார்த்துட்டு, அந்த ஏரியா போலீஸ் இன்ஸ்பெக்டர் இது கோட்டைமேடு

குமார்னு சொன்னதாக ஒரு தகவல் வந்ததே?"

"அப்படி ஒரு தகவலைப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கச் சொன்னதே நான்தான் சார்."

"நீங்களா... எதுக்காக அப்படி?"

"சார்... இந்த கோட்டைமேடு குமார் உங்களை செல்போனில் கூப்பிட்டு மிரட்டினதுமே நான் உஷாராயிட்டேன். மைக்கேல் எர்னஸ்ட்டைக் கொலை பண்ணச் சொல்லி எனக்குப் பணம் கொடுத்தது கலெக்டர்தான்னு பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கத் தயாராக இருந்த இவனை, கோகுல்நாத் மூலமா கடத்தி இந்த வீட்டுக்குக் கொண்டுவந்து கஸ்டடியில் வெச்சேன். இந்த நடவடிக்கையை நான் எடுக்காமல் இருந்திருந்தா, இந்நேரம் உங்க மனைவி மின்மினியின் விவகாரம் டி.வி-யிலும் பத்திரிகைகளிலும் முதல் இடத்தைப் பிடிச்சிருக்கும். உங்க எதிரிகளோட எண்ணமும் நிறைவேறி இருக்கும்."

"மி... மி... மிஸ்டர் விவேக்!"- கண்களில் நிறைந்துவிட்ட நீரோடு ஏதோ பேச முற்பட்ட பங்கஜ்குமாரைக் கையமர்த்தினார் விவேக். "என்ன சார்... நன்றி சொல்லப்போறீங்களா? உங்க மனைவியைக் கண்டுபிடிச்சு, உங்ககிட்டே ஒப்படைச்ச பின்னாடி ஒட்டுமொத்த நன்றியைச் சொல்லுங்க. இப்ப நம்ம கே.எம்.கே-வை விசாரிக்கலாம்!"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

கோட்டைமேடு குமார் தன் இரண்டு கைகளையும் உயரத் தூக்கி சோம்பல் முறித்தபடியே எழுந்தான்.

"சார்... எத்தனை தடவை கேட்டாலும் என் பதில் இதுதான். எல்லாமே இருட்டுல நடந்த பேரம் சார். மைக்கேல் எர்னஸ்ட்டைத் தீர்த்துக்கட்டு, பழியைத் தூக்கி கலெக்டர் மேல போடு, மத்ததையெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்னு சொல்லி, கையில் அஞ்சு லட்சம் கரன்ஸியைவெச்சாங்க சார். பணத்தை வாங்கிட்டுச் சத்தம் இல்லாம காரியத்தை முடிச்சேன். மறுநாள் காலையில் கலெக்டருக்கு போன் பண்ணி, அவர்தான் கொலை பண்ணச் சொன்னதாக மிரட்டினேன். எல்லாமே அவினாசி மேம்பாலத்துக்குக் கீழே இருட்டுல நடந்த பேரம் சார். வந்த ரெண்டு பேருமே மூஞ்சிக்குத் துணியைக் கட்டியிருந்தாங்க. தலைக்கு மங்கி கேப் போட்டிருந்தாங்க... என்னான்னு அடையாளம் சொல்றது சார்."

'இனி இவன் உதவ மாட்டான்!' விவேக் நினைத்த அதே விநாடி - விவேக்கின் செல்போன் அழைத்தது.

விஷ்ணு பேசினான். குரலில் உற்சாகம்.

"பாஸ்! கை குடுங்க!"

"என்னாச்சு?"

"உங்க யூகம் கரெக்ட் பாஸ். ஹால் மார்க் தங்கம் மாதிரி சுத்தம்... மின்மினியை நாம் நெருங்கிட்டோம் பாஸ்!"

- அடுத்த இதழில் நிறைவுபெறும்

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

ராஜேஷ்குமார், ஓவியங்கள்: அரஸ், ஸ்யாம்

கோவை

விவேக் செல்போனில் "விஷ்ணு" என்றான்.

"சொல்லுங்க பாஸ்!"

"இப்ப நீ எங்கே இருக்கே?"

"பட்சி தங்கியிருக்கிற ஹோட்டல் வாசல்ல."

"சரி... நானும் சாரும் இன்னும் 20 நிமிஷத்துக்குள் அங்கே இருப்போம்" - விவேக் கோகுல்நாத்திடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

காரில் போகும்போது, பங்கஜ்குமார் கேட்டார், "விவேக்! நாம இப்போ எங்கே போறோம்?"

LAVANYA@TAMILTORRENTS.COM

"ரேஸ்கோர்ஸ் ரோட்டில் உள்ள ஒரு தரீ ஸ்டார் ஹோட்டலுக்கு!"

"யாரைப் பார்க்கப் போறோம்?"

"அங்கே போனதும் தெரிஞ்சுக்கலாமே சார்?"- விவேக் ஒரு புன்னகையோடு காரை விரட்டினான். கோவையின் போக்குவரத்து நெரிசலில் 20 நிமிடங்களைத் தொலைத்துவிட்டு, கார் அந்த ஹோட்டலுக்குள் நுழைந்தது. பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு இறங்கினார்கள். விஷ்ணு எதிர்ப்பட்டான்.

"என்ன விஷ்ணு... எல்லாமே விரல் நுனியில் இருக்கா?"

"இருக்கு பாஸ். ரூம் நம்பர் 505."

"ரொம்பவும் உயரத்தில் இருக்கார்... அடுத்த அரை மணிக்குள் கீழே கொண்டாந்துடுவோம்!"- விவேக் சொல்லிக்கொண்டே நடக்க... பங்கஜ்குமார் குழப்பமாகத் தொடர்ந்தார்.

மூன்று பேரும் லி◌ப்ட்டில் பயணித்து, ஐந்தாவது மாடியைத் தொட்டு, வராந்தாவில் நடந்து, அறை எண் 505-க்கு முன்பாக நின்றார்கள். விஷ்ணு அழைப்பு மணிக்கு வேலை கொடுக்க... கதவு வெட்கப்படும் கிராமத்துப் பெண்ணைப்போலத் தயங்கித் தயங்கித் திறந்தது.

உள்ளே... நைட் கவுனில் பிரதாப் சிங் தெரிந்தார். இடது கையில் பியர் டின். மூன்று பேரையும் பார்த்ததும் ஒரு விநாடி முகம் மாறி, மறு விநாடி மலர்ந்தார். "வாட் எ சர்ப்ரைஸ் விசிட். குட் ஈவினிங் டு எவ்ரிபடி!"

விவேக் முதல் ஆளாக உள்ளே நுழைந்தான். "குட் ஈவினிங் எக்ஸ் மேஜர் சார்... ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்."

"நோநோ! இட்ஸ் மை ப்ளெஷர். சில மணி நேரங்களுக்கு முன்புதான் மிஸ்டர் பங்கஜ்குமாரின் அலுவலக அறையில் உங்களைப் பார்த்து, என் மகளுடைய திருமண அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு வந்தேன். இப்போது மறுபடியும் சந்திக்கிறோம்."

"சார்! நாங்கள் இப்போது வந்தது மிஸஸ் மின்மினி யைப்பற்றி விசாரிக்கத்தான். நீங்கள் மின்மினியை ரயில்வே ஸ்டேஷனில் பார்த்ததாக மிஸ்டர் பங்கஜ்குமாருக்கு போன் செய்து சொன்னீர்கள் அல்லவா?"

"ஆமாம்."

"அதைப்பற்றிக் கொஞ்சம் பேச வேண்டும்."

"பை ஆல் மீன்ஸ். முதலில் உட்காருங்கள்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

சோபாவில் உட்கார்ந்தார்கள். பிரதாப் சிங் எதிரே இருந்த நாற்காலியில் சாய்ந்தார். "ஹேவ் சம் பியர்."

"நோ தேங்க்ஸ்" என்ற விவேக், சில விநாடிகள் இடை வெளிவிட்டுப் பேச்சை ஆரம்பித்தான்.

"சார்! நீங்கள் கோவை ரயில்வே ஸ்டேஷனின் பின் பக்கம் இருந்த கார் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு, ஸ்டேஷனில் எஸ்.எம்.மாகப் பணியாற்றும் உங்கள் நண்பர் சந்திரமௌலியைப் பார்க்கப் போனபோது மின்மினியைப் பார்த்ததாகச் சொன்னீர்கள், இல்லையா?"

"ஆமாம்."

"மின்மினியோடு அப்போது யாராவது இருந்தார் களா?"

"இல்லை... அவர் மட்டும் தனியாகக் கலங்கிப் போன முகத்தோடு டிக்கெட் கவுன்ட்டர் அருகே நின்று இருந்தார்."

"பேசினீர்களா?"

"பேசினேன். எங்கே பயணம் என்று கேட்டேன். 'என் தோழி ஒருத்தி உடம்புக்கு முடியாமல் பெல்லாரியில் இருக்கிறாள். அவளைப்

பார்க்கப் புறப்பட்டேன். என் கணவருக்கு வேலை அதிகம் என்பதால், நான் மட்டும் கிளம்பிவிட்டேன்' என்றார்."

"மிஸ்டர் பிரதாப் சிங்... நீங்கள் ஊட்டியில் இருந்து கல்யாணப் பத்திரிகைகளைக் கொடுப்பதற்குக் காரில்தானே புறப்பட்டு வந்தீர் கள்?"

"ஆமாம்."

"காரை ஓட்டியது யார்?"

"நான்தான்."

"கோவை ரயில்வே ஸ்டேஷனின் பின்பக்கம் இருந்த கார் பார்க்கிங்கில் காரை பார்க் செய்த தும் நீங்கள்தானா?"

"ஆமாம்!" என்று தலையசைத்த பிரதாப் சிங், சற்றே கோபத்தோடு குரலை உயர்த்தினார். "இப்போது எதற்காக இந்தத் தேவையற்ற கேள்விகள்?"

"இது உங்களுக்குத் தேவையற்ற கேள்வியாக இருக்கலாம். பட், எங்களுக்கு மில்லியன் டாலர் கேள்வி."

"நீங்கள் பேசுவது புரியவில்லை."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM.

"சரி, உங்களுக்குப் புரியும்படி யாகவே பேசுகிறேன். நீங்கள் கோவை ரயில்வே ஸ்டேஷனில் மின்மினியைப் பார்த்ததாகச் சொன்னது பொய்; பேசியதாகச் சொன்னதும் பொய். ஏனென்றால், நீங்கள் ரயில்வே ஸ்டேஷனுக்கே போகவில்லை. அப்படிப் போய் இருந்தால் நீங்கள் ரயில்வே ஸ்டேஷனின் பின்பக்கம் இருந்த கார் பார்க்கிங்கில் காரை நிறுத்தி இருக்க முடியாது. காரணம், நேற்றில் இருந்து, அங்கே குழிபறித் துப் புதிய தளம் போடும் வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த விவரம் தெரியாத நீங்கள், பொய்யை ஜோடனை செய்யும்போது, சொதப்பிக் கோட்டை விட்டுவிட்டீர்கள்."

பிரதாப் சிங் வெகுண்டு எழுந் தார்... "மிஸ்டர் பங்கஜ்குமார்! வாட் இஸ் திஸ்... உங்கள் மனைவி யைப்பற்றித் தகவல் சொல்லப் போய் கடைசியில் என்னையே சந்தேகப்படுகிறீர்களா?"

விவேக் கையமர்த்தினான். "சார்! டோன்ட் பி எமோஷனல்! நீங்கள் கத்திப் பேசுவதால் ஒரு பயனும் இல்லை. என் அசிஸ்டென்ட் விஷ்ணு, கடந்த ஒரு மணி நேரத்துக்குள் உங்களைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் கலெக்ட் செய்து, ஒரு குட்டி ஆல்பமே தயாரித்துக் கையில் வைத்திருக்கிறான். ஒவ்வொன்றாக எடுத்து விடட்டுமா? விஷ்ணு..."

"பாஸ்..."

"நீ ஆரம்பி."

விஷ்ணு தன் கையில் இருந்த ப்ரீ ்ப்கேஸைப் பிரித்து ஒரு சிறிய டி.வி.டி. ப்ளேயரை எடுத்தான்.

"மிஸ்டர் ஆர்மி! நீங்கள் எனக்குக் கொடுத்த உங்கள் மகளின் கல்யாணப் பத்திரிகையில் உங்கள் செல்போன் நம்பர் இருந்தது. அந்த நம்பரை போலீஸின் சைபர் துறைக்குக் கொடுத்து, நீங்கள் யார் யாரோடு தொடர்புகொண்டு என்ன பேசுகிறீர்கள் என்பதை மானிட்டர் செய்து, அதை ஆடியோ சி.டி-யில் பதிவுசெய்துவிட்டோம். நீங்கள் பேசிய பேச்சில் சில பகுதிகளை மட்டும் ஹைலைட்ஸா போட்டுக் காட் டட்டுமா?" என்ற விஷ்ணு டி.வி.டி ப்ளேயருக்கு மின்சார இணைப்பு கொடுத்து 'ப்ளே' பட்டனைத் தட்டினான்.

சில விநாடி நிசப்தத்துக்குப் பிறகு, இரண்டு ஆண் குரல்கள் கரகரத்தன. அதில் ஒன்று பிரதாப் சிங்கின் குரல். ஆங்கிலத்தில் சரள உரையாடல். 'நான் நிலைமையைப் பார்த்துக்கொண்டுதான் ஊட்டிக்குப் புறப்படுவேன். என் மகளின் கல்யாண வேலைகள் முக்கியமானவைதான். அதைவிட எனக்கு 'பங்கஜ்குமார்-மின்மினி' விவகாரம்தான் முக்கியமானது. மின்மினி ரயிலில் பெல்லாரிக்குப் போய்க்கொண்டு இருப்பதாக பங்கஜ்குமாருக்கு போன் செய்து கொளுத்திப்போட்டு இருக்கிறேன்.'

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

'மின்மினி - அல்போன்ஸ் விவகாரம் இன்னும் மீடியாவுக்கு வரவில்லை. வந்தால்தான் பங்கஜ்குமாரின் சந்தோஷமும் நிம்மதியும் காணாமல் போகும்.'

'கோட்டைமேடு குமார் சரியான நேரத்தில் செயல்பட்டு இருந்தால், இந்நேரம் கலெக்டரின் மானம் மரியாதை எல்லாம் தெரு முனைக்கு வந்து சிரிப்பாகச் சிரித் திருக்கும். அவன் மதுக்கரையில் உள்ள கல்குவாரி ஒன்றில், பழைய விரோதம் காரணமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாகப் பத்திரிகைத் தகவல்.'

'அது உண்மையா?'

'அதில் உனக்கு என்ன சந்தேகம்?'

'தலையில் கல்லைப்போட்டுக் கொன்றிருப்பதால் அடையாளம் தெரியவில்லை. அந்த நபர் கோட்டைமேடு குமாராகக்கூட இல்லாமல் இருக்கலாமே?'

'அவன் உயிரோடு இருக்க வாய்ப்பே இல்லை. அப்படி அவன் உயிரோடு இருந்திருந்தால், இந்நேரம் பிரஸ்ஸைக் கூப்பிட்டு மைக்கேல் எர்னெஸ்ட்டைக் கொலை செய்யச் சொன்னது கலெக்டர் பங்கஜ்குமார்தான் என்று சொல்லி 'மின்மினி-அல்போன்ஸ்' திருமணப் போட்டோவையும் காட்டியிருப்பான்.'

'சே! நல்ல நேரம் பார்த்து செத்துத் தொலைஞ்சான்!'

'எந்த ஒரு திட்டம் போட்டாலும், அதில் சின்னச் சின்ன சறுக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சரி... அல்போன்ஸ் இன்னமும் மயக்கத்தில்தான் இருக்கிறானா?'

'ஆமாம்!'

'இன்னும் இரண்டு நாட்களுக்கு அவன் அதே நிலைமையில் இருக்கட்டும். மின்மினி எப்படி இருக்கிறாள்?'

'பயந்துபோயிருக்கிறாள். பங்கஜ்குமாருக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதற்காக நாம் எதைச் சொன்னாலும் கேட்கிறாள். பங்கஜ்குமாரிடம் என்னை 'மறந்துடுங்க... மன்னிச்சு டுங்க'ன்னு சொல்லச் சொன்னதும், எந்த எதிர்ப்பும் காட்டாமல் சொன்னாள். இதுவரைக்கும் நல்லமுறையில் ஒத்துழைப்பு கொடுத்துக்கொன்டு இருக்கிறாள்.'

'இனிமேல் மின்மினியை பங்கஜ்குமாரோடு பேச வைக்க வேண்டாம். பேசியது போதும். பங்கஜ்குமாரின் பார்வையில் இனிமேல் மின்மினி - அல்போன்ஸோடு ஊரைவிட்டு ஓடிப்போனவள். அவள் ஓடிப்போனதாகவே இருக்கட்டும். அடுத்த இரண்டு நாட்களில் நம் பாதுகாப்பில் உள்ள 'மின்மினி-அல்போன்ஸ்' இரண்டு பேரையும் ஊட்டியில் உள்ள நடுவட்டம் காட்டுப் பகுதிக்குக் கொண்டுபோய் தீர்த்துக்கட்டி, ஆறடி ஆழத்தில் குழி தோண்டிப் புதைத்துவிட வேண்டும். பங்கஜ்குமாரும் போலீசும் பெல்லாரி போய், செத்துப்போன அந்த இரண்டு பேரையும் தேடிக்கொண்டு இருக்கட்டும்!'

LAVANYOTAMILNOVELS.COM

'ஹாஸ்பிடலில் ட்ரீட்மென்ட் எடுத்துக்கொண்டு இருக்கும் பெல்லாரி மல்லய்யாவை என்ன செய்யலாம்?'

'அல்போன்ஸ் - மின்மினி திருமணம்பற்றிய உண்மையான தகவலை அந்த பெல்லாரி மல்லய்யா வெளியே சொல்லிவிடக் கூடாது. அதற்குள் அவரோட மூச்சை நிறுத்தணும். அதுக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணு!'

இந்த இடத்தில் பேச்சுக் குரல்கள் நின்றுபோக... டி.வி.டி ப்ளேயரை மௌனமாக்கினான் விஷ்ணு.

பிரதாப் சிங் உட்கார்ந்த இடத்திலேயே உறைந்துபோனவராக வியர்த்து வழிந்துகொண்டு இருந்தார். அவரையே பார்த்துக்கொண்டு இருந்த விவேக், தன் இடுப்புக்குக் கையைக் கொண்டுபோய் பிஸ்டலை எடுத்து, அவருடைய முழங்காலைக் குறி பார்த்தான். ஆங்கிலத்தில் மெள்ள பேச்சை ஆரம்பித்தான்.

"மிஸ்டர் ஆர்மி! ஒரு சிறிய துவாரம் ஒரு பெரிய அணையையே உடைத்துவிடும் என்பார்கள். அதேபோல்தான், ஒருவன் எவ்வளவு திறமைசாலியான குற்றவாளியாக இருந்தாலும், அவன் சொல்கிற ஒரு சிறிய பொய் அவனைப் புரட்டிப் போட்டுவிடும். உங்களுடைய விஷயத்திலும் இப்போது அதுதான்

நடந்திருக்கிறது. கோவை ரயில்வே ஸ்டேஷனின் பின்பக்கம் நேற்று வரைக்கும் கார் பார்க்கிங் செய்யலாம் என்பது உண்மை. இன்று கார் பார்க்கிங் செய்தேன் என்றால், அது பொய். நீங்கள் சொன்ன அந்தச் சின்ன பொய், நிறையச் செய்திகளை எங்களுக்குச் சேகரித்துக் கொடுத்துவிட்டது. அந்த சி.டி-யில் இன்னமும் உங்களைப்பற்றிய கறுப்பான உண்மைகள் உறங்கிக்கொண்டு இருக்கின்றன. அவை இந்த அறையில் உள்ள காற்றில் கலப்பதற்கு முன்னால், இந்த பிஸ்டலின் முனையில் சில கேள்விகள். என் கையில் இருக்கும் பிஸ்டலுக்குப் பொய் பேசினால் பிடிக்காது..."

பிரதாப் சிங் அந்த ஏ.சி. அறையிலும் வியர்த்து வழிந்துகொண்டு, தன் இரண்டு கைகளையும் உயர்த்தினார். "ஐ அக்ரி வித் மை க்ரைம்."

"கலெக்டர் மேல் உங்களுக்கு அப்படி என்ன கோபம்? ஒரு நண்பராக இருந்துகொண்டே நயவஞ்சகம் புரிய என்ன காரணம்?"

பிரதாப் சிங் உலர்ந்துபோன தொண்டையில் எச்சிலைச் சிரம மாக விழுங்கிவிட்டுப் பேச்சை ஆரம்பித்தார்... "இரண்டு வருடங் களுக்கு முன்னால் பங்கஜ்குமார் நீலகிரி மாவட்டத்தின் கலெக் டராக இருந்தபோது, இந்திய ராணுவத்தின் அமைப்பான ஆர்மி எக்யூப்மென்ட்ஸில் ஒரு ஹானரரி போஸ்டில் இருந்தேன். அதில் சில முறைகேடுகள் செய்து சம்பாதித்த லட்சக்கணக்கான பணத்தைக்கொண்டு, பினாமி பெயர்களில் நிலங்களை வாங்கிக் குவித்தேன். அந்த நிலங்கள் எல்லாம் அரசுக்குச் சொந்தமா னவை என்று பிறகுதான் தெரிந்தது. அரசு அதைக் கையகப்படுத்த முன் வந்தபோது, நான் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்ட முயன்றேன். ஆனால், கலெக்டர் பங்கஜ்குமார் நில ஆர்ஜித விஷயத்தில் தீவிரம் காட்டி, என்னுடைய பினாமி பெயர்களில் இருந்த கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிலங்களை எல்லாம் அரசுக்குச் சொந்தமாக்கிக்கொண்டார். சொத்துக்கள் எல்லாம் பினாமி பெயர்களில் இருந்ததால், சட்டச் சிக்கல்களில் இருந்து நான் தப்பித்துக்கொண்டேன். அதற்குப் பிறகு, கோல்ஃப் மைதானத்தில் அவரோடு நட்பு ஏற்பட்டுப் பழக நேர்ந்தாலும், என் மனதுக்குள் அவர் மேல் இருந்த கோப நெருப்பு ஆறாமல் இருந்தது. அவரை ஏதாவது ஒரு வகையில் பழிதீர்க்கச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தேன். அதற்குள் பங்கஜ்குமாருக்கு டிரான்ஸ்ஃபர் கிடைத்து, கோவைக்கு கலெக்டரானார். என் கோபம் குறையவில்லை. இந்தச் சமயத்தில்தான் ஆர்மி எக்யூப்மென்ஸ்ட்சுக்கு கோவையில் இருந்து பீப் இறைச்சி சப்ளை செய்யும் மைக்கேல் எர்னெஸ்ட்டோடு எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. ஒருநாள் மைக்கேல் எர்னஸ்ட் குடிபோதையில் 'நான் நினைத்தால் கலெக்டரின் மனைவி மின்மினியைச் சந்தி சிரிக்க வைத்துவிடுவேன்' என்று உளறப்போக... நான் உஷாரானேன். மைக்கேல் எர்னெஸ்ட்டைத் தனியாகக் கூட்டிப்போய்ப் பேசினேன். மைக்கேல் சொன்ன விஷயம் எனக்கு வியப்பாக இருந்தது. மைக்கேல் எர்னஸ்ட்டின் மகன் அல்போன்ஸ், ஜெபமாலை என்ற பெண்ணைக் காதலித்ததாகவும், பெல்லாரி சர்ச்சில் கல்யாணம் நடக்க இருந்த நேரத்தில் அந்த ஜெபமாலை என்ற பெண் விபத்து ஒன்றில் இறந்துபோனதாகவும்,

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

அதன் காரணமாக மனம் பேதலித்து மன நோயாளியாக மாறிவிட்ட அல்போன்ஸைக் குணப்படுத்த ஏதேதோ சிகிச்சைகள் செய்தும் முடியாமல் போகவே, சைக்யாட்ரிஸ்ட் ஒருவர், 'அல்போன்ஸைக் குணப்படுத்த அவனுக்கு சர்ச்சில் கல்யாணம் நடப்பது போன்ற ஒரு நிகழ்வை அரங்கேற்ற வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். மைக்கேல் எர்னெஸ்ட் அந்த நாடகத் திருமணத்தை நடத்த முயன்று இருக்கிறார். மணப் பெண்ணாக நடிக்க யாரும் முன் வராதபோது, அதே தெருவில் குடியிருந்த மின்மினி அதற்கு மனமுவந்து ஒப்புக்கொண்டு நடித்தாள் என்று சொல்லித் தன்னிடம் இருந்த அந்த நாடகத் திருமண போட்டோவைக் காட்டினார்..."

விவேக் குறுக்கிட்டான்... "உடனே அந்த போட்டோவை வைத்துக்கொண்டு பங்கஜ்குமாரை நிலைகுலையவைக்கத் திட்டம் போட்டீர்கள். நீங்கள் கொடுத்த பணத்துக்கு ஆசைப்பட்டு, மைக்கேல் எர்னெஸ்ட்டும் ஒத்துழைத்தார். நாளைக்கு உண்மை வெளியே வராமல் இருக்க மைக்கேல் எர்னெஸ்ட்டைத் தீர்த்துக்கட்டி அந்தக் கொலைப் பழியை பங்கஜ் குமார் மேல் போடப் பார்த்தீர்கள். மின்மினியின் மீதும் போலீஸாருக்கு சந்தேகம் வரவேண்டும் என்பதற்காக, ரமலத் என்ற முஸ்லிம் பெண்ணை மிரட்டி, மின்மினி மைக்கேல் எர்னஸ்ட்டைப் பார்க்க வந்ததாகப் பொய் சொல்லி வைத்தீர்கள். அல்போன்ஸையும் கடத்திக்கொண்டு போய் உங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொண்டு, உங்களுக்கு வேண்டிய நபர் ஒருத்தரை அல்போன்ஸ் போல் பப்ளிக் டெலிபோன் பூத்களில் பேச வைத்தீர்கள். அப்படித்தானே மிஸ்டர் ஆர்மி?"

RAVAN_JOY@TAMILTORRENTS.COM

பிரதாப் சிங் "யெஸ்" என்று சொல்லித் தலை குனிந்தார்.

"ஓ.கே! இப்போது மின்மினியும் அல்போன்சும் எங்கே இருக் கிறார்கள்?"

"....."

"மௌனம் இனி உதவாது மிஸ்டர் ஆர்மி! நீங்கள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டிய நேரம் இது. மௌனம் நீடித்தால், உங்கள் வலது முழங் காலுக்குக் கீழே தோட்டா பாயும்."

பிரதாப் சிங் வாயைத் திறந்தார்... "மேட்டுப்பாளையத்துக்குப் பக்கத்தில் கல்வார் என்ற இடத்தில் எனது கெஸ்ட் ஹவுஸ் ஒன்று இருக்கிறது. அங்கே இருவரும் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்."

"அங்கே இப்போது யார் இருக் கிறார்கள்?"

"என்னுடைய நண்பர் கஜபதி. என்னுடைய திட்டங்களுக்கு உறு துணையாக இருப்பவர்."

விவேக் தன் செல்போனை எடுத்து மேட்டுப்பாளையம் போலீசுக்குத் தகவல்

கொடுத்துவிட்டு, பிரதாப் சிங்கை ஏறிட்டார்.

"சரி! இதுவரைக்கும் உள்ளூர் சதிகளைப் பார்த்தோம். இனி, உங்கள் வெளிநாட்டுச் சதிகளைப்பற்றிக் கொஞ்சம் பேசலாமா?"

"வெளிநாட்டுச் சதிகளா?"

"யெஸ்! யார் அந்த ஆல்பர்ட்ஸன்?"

"ஆல்பர்ட்ஸன்..?"

"இதோ பாருங்கள் மிஸ்டர் ஆர்மி! எதுவுமே தெரியாது என்று பாவ்லா காட்டாதீர்கள். நியூயார்க்கில் இருக்கும் ஆல்பர்ட்ஸன்னிடம் நீங்கள் 10 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.. விஷ்ணு... அந்த டி.வி.டி-யை ஆன் பண்ணு..."

டி.வி.டி சில விநாடி மௌனம் காத்த பிறகு, குரல்களை வெளியிட்டது. பிரதாப் சிங்கின் இந்திய ஆங்கிலமும், ஆல்பர்ட்ஸன்னின் அமெரிக்க ஆங்கிலமும் மாறி மாறி ஒலித்தன.

'ஆல்பர்ட்ஸன்... நியூயார்க் நிலவரம் எப்படி இருக்கிறது?'

'போலீஸ் அதிகாரிகள் தாம்ஸன்-ஸ்மித் ஒரு பக்கமும், விஜேஷ் - காமாட்சி ஒரு பக்கமும் நின்று என்னைப் பயமுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். 'சைனோபாக்' பயோ வெப்பன் விவகாரம் எப்படியோ வெளியே வந்துவிட்டது. இப் போது போலீஸ் அதிகாரிகள் மட்டுமல்லாது, ராணுவ அதிகாரி களும் இந்த விவகாரத்தில் இணைந்துகொண்டார்கள்.'

'உங்கள் மீது யாருக்கும் சந் தேகம் வரவில்லையே?'

'நிலைமை இன்னமும் அந்த அளவுக்கு மோசமாகவில்லை. என் வீட்டை விற்பதற்கு நானே தடையாக இருப்பேன் என்றோ, வீட்டை வாங்க வந்து அக்ரிமென்ட் போட்டவர்களை நானே 'சைனோபாக்' பாக்டீரியா டைனமைட்டைப் பயன்படுத்திக் கொலை செய்வேன் என்றோ யாரால் நினைத்துப் பார்க்க முடியும்? என் மனைவி எமிலிக்குக்கூட என் மீது சந்தேகம் வரவில்லை.'

'சில்வியா இப்போது எப்படி இருக்கிறாள்? அவள் மரணம்அடைந்துவிட்டாள் என்ற சந்தோஷச் செய்தியை நீங்கள் எப்போது சொல்வீர்கள் என்று ஆவலோடு காத்துக்கொண்டு இருக்கிறேன்.'

ஆல்பர்ட்ஸன் சிரிப்புடன் சொன்னார்... 'அந்த நல்ல செய்தி, அடுத்த இரண்டு நாட்களுக்குள் உங்களுக்கு வரும் மிஸ்டர் பிரதாப் சிங்.'

'எப்படி?'

'சில்வியாவுக்குப் பாதுகாப்பாக என்னையும் எமிலியையும் ஹாஸ்பிடலிலேயே தங்கச் சொல்லிஇருக்கிறார் டாக்டர் ஸ்டூவர்ட்!'

'ஓ... திருடன் கையில் சாவி?'

'அதேதான்! நள்ளிரவு நேரத்தில் என் மனைவி எமிலி அயர்ந்து தூங்கும்போது, சில்வியாவுக்கு ஒரு சைனோபாக் இன்ஜெக்ஷனைப் போட்டுவிட வேண்டியதுதான்! ஒரு முறை தப்பித்துக்கொண்டாள். இந்த முறை அவளால் தப்பிக்க முடியாது.'

'ஆல்பர்ட்ஸன்... ஜாக்கிரதை! டாக்டர் ஸ்டூவர்ட்டுக்கு உங்கள் மீது சந்தேகம் வந்துவிடப்போகிறது.'

'வராது! பெற்ற மகளையே எந்தத் தந்தையாவது கொலை செய்வானா? அவளுடைய வைத்தியச் செலவுக்குத்தான் வீட்டை விற்கப் படாதபாடு பட்டுக்கொண்டு இருக்கிறேன் என்று நியூயார்க்கின் ஒட்டுமொத்த போலீசுக்கும் தெரியும். அந்த விஜேஷ், காமாட்சிக்குக்கூட என்மீது சந்தேகம் வர வாய்ப்பு இல்லை.'

'சைனோபாக் விவகாரமும் அதைப்பற்றிய ரகசியங்களும் சில்வியாவுக்குத் தெரியாமல் இருந்திருந்தால் வீட்டை விற்கும் பிரச்னையும் வந்து இருக்காது. லாயர் ஃப்ளோரா உட்பட, மூன்று பேரின் உயிர்களும் பலியாகிஇருக்காது."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

'எல்லாம் என் மடத்தனம்தான். சில்வியா தூங்கியிருப்பாள் என்று நினைத்து, ஆப்கானிஸ்தான் பார்ட்டியிடம் 'சைனோபாக்'பற்றி பேரம் பேசிவிட்டேன். அதைக் கேட்டுவிட்டு, என்னைக் கேள்விகளால் துளைத்து எடுத்து காறி உமிழ்ந்துவிட்டாள்.'

'சரி, எல்லாவற்றையும் கடந்து வந்தாயிற்று. இனி யாரும் நம்மை நெருங்க முடியாது!'

'யுவர் கெஸ் வொர்க் இஸ் ராங் மிஸ்டர் பிரதாப் சிங். இப்போது எனக்கு ஒரு புதிய சிக்கல் ஏற்பட்டு உள்ளது.'

'என்ன?'

'என் வீட்டில் எட்டடி ஆழத்தில் புதைத்துவைத்திருந்த சைனோபாக் கன்டெய்னர் பாட்டில்களைத் தோண்டி எடுப்பதற்காக சார்லஸையும் டொமினிக்கையும் அனுப்பிவைத்தேன். விஜேஷ், காமாட்சி அந்த இடத்தில் இருந்த காரணத்தால், அந்த முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டது. போலீஸார் இப்போது விசாரணை என்கிற பெயரில், அந்த இரண்டு பேர் எதற்காக வந்து இருப்பார்கள் என்று என்னைக் கேட்டுக் குடைகிறார்கள்.'

'நீங்கள் என்ன சொன்னீர்கள்?'

'என்னைச் சுற்றி நடக்கிற எத்தனையோ வேண்டாத சம்பவங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லிவிட்டேன். பை த பை... சைனோபாக் டைனமைட்டின் வீரியத்தைச் சோதித்துப்பார்ப்பதற்காக, மைக்கேல் எர்னஸ்ட் என்பவனைப் பரிசோதனை எலியாகப் பயன்படுத்துவதாகச் சொன்னீர்களே, அது என்ன ஆயிற்று?'

'ஆமாம். அவன் குடிக்கும் தண்ணீரில் அந்த சைனோபாக்கைக் கலந்து கொடுத்தேன். அதோடு, எனக்கு வேண்டாத அரசாங்க அதிகாரியான கலெக்டர் ஒருவரை பிரச்னையில் மாட்டிவிட நினைத்து, புரொஃபஷனல் கில்லர் ஒருத்தனை அனுப்பிவைத்தேன். சைனோபாக் வீரியத்தால் இறந்து போயிருந்த மைக்கேல் எர்னெஸ்ட்டின் தலையை ஒரு இரும்புத் தடியால் அவன் அடித்து இருந்தாலும், போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் மைக்கேல் எர்னெஸ்ட் இதயம் வெடித்து இறந்ததாக டாக்டர் குறிப்பிட்டு இருக்கிறார். இதனால் இப்போது என் மனதுக்குள் ஒரு பயம்... சைனோபாக் விவகாரம் எங்கே கசிந்துவிடுமோ என்று.'

'மைக்கேல் எர்னெஸ்ட்டை சைனோபாக் மூலம் கொல்ல நாம் பேசிக்கொண்டதை சில்வியா கேட்டு இருக்க வேண்டும். அதனால்தான் ஹாஸ்பிடலில் அவளுக்குச் சுய உணர்வு வந்தபோது மைக்கேல் எர்னஸ்ட்டின் பெயரைச் சொல்லி, அவரை நான் உடனே பார்க்க வேண்டும் என்று தன்னிலை மறந்து முனகி இருக்கிறாள்.'

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

'ஆல்பர்ட்ஸன்! எது எப்படி இருந்தாலும், இனி நாம் ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டும். இந்தியாவில் உள்ள தீவிரவாத அமைப்புகளிடம் பணம் கொட்டிக்கிடக்கிறது. 'சைனோபாக்'பற்றி அவர்களுக்கு லேசாகக் கோடி காட்டினால் போதும்... பண மழையில் நனையலாம். நீங்கள் ஒரு முறை இந்தியாவுக்கு வந்துவிட்டுப் போக வேண்டும்.'

'இங்கே உள்ள பிரச்னைகளுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டு இந்தியா வருகிறேன். மறுபடியும் நாளை இரவு பேசுவோம்.'

டி.வி.டி ப்ளேயரில் பேச்சு நின்றது.

பிரதாப் சிங் ஒரே திசையை வெறித்துப் பார்த்தபடி நிற்க... விவேக் அவர் அருகில் வந்தான். "ஆர்மி சார்... ஆல்பர்ட்ஸன்னோடு நீங்கள் பேசிய எல்லா விவரங்களுமே நியூயார்க் போலீசுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. தாம்ஸன், ஸ்மித், விஜேஷ், காமாட்சி எல்லோரும் கோவையை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்கள். ஆல்பர்ட் ஸன் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த நபர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்கள். நீங்கள் எல்லாக் குற்றங்களையும் ஒப்புக்கொள்வதாக ஏற்கெனவே கைகளை உயர்த்திவிட்டீர்கள். உங்களுக்காக ஹோட்டலுக்கு வெளியே போலீஸ் ஜீப் காத்தி ருக்கிறது. போகலாமா?"

பிரதாப் சிங் அறைக் கதவை நோக்கித் தளர்நடை போட்டார்.

விமானத்தில் 36 மணி நேரம் பயணித்த களைப்பையும் பொருட்படுத்தாமல், கோவை போலீஸ் கமிஷனரின் பிரத்யேக அறையில், அரை வட்ட மேஜையைச் சுற்றி தாம்ஸன், ஸ்மித், விஜேஷ், காமாட்சி உட்கார்ந்திருக்க... அவர்களுக்கு எதிரே போலீஸ் கமிஷனர், விவேக், விஷ்ணு மூவரும் புன்சிரிப்போடு தெரிந்தார்கள்.

தாம்ஸன் சொல்லிக்கொண்டு இருந்தார்...

"ஆல்பர்ட்ஸன் கென்னடி விண்வெளி மையத்தில் புரொகிராம் இன்ஜினீயராகப் பணிபுரிந்த காலத்திலேயே ராணுவத்துக்கு எதிராக உளவு வேலை பார்த்துப் பணி நீக்கம் செய்யப்பட்டவர் என்கிற உண்மை இப்போதுதான் தெரிந்தது. இன்னொரு முக்கியமான விஷயம், சில்வியா அவருக்குப் பிறந்த பெண் கிடையாது. எமிலியின் முதல் கணவர் மார்ட்டினுக்குப் பிறந்தவள். அதனால்தான் எந்த விதமான மன உறுத்தலும் இல்லாமல் சில்வியாவின் உடம்புக்குள் சைனோபாக்கைச் செலுத்தி உள்ளார்."

விவேக் இடைமறித்துக் கேட்டான்... "சில்வியா இப்போது எப்படி இருக்கிறாள்?"

"அவளுக்கு ஒரு ஆபரேஷன் நடக்க இருக்கிறது. அதற்குப் பிறகு அவள் தேறிவிடுவாள். டாக்டர் ஸ்டூவர்ட் அவளை ஆழ்நிலைத் தியானத்துக்குக் கொண்டுபோய் பேசிப் பார்த்தபோது, அவளுடைய மியூஸியத்தில் உள்ள பல நிற ஸ்பெசிமென்களின் பெயர்களோடு 'சைனோபாக்' என்ற வார்த்தையையும் சேர்த்துச் சொன்னாள். அந்த வார்த்தையை மட்டும் அவள் சொல்லாமல் இருந்திருந்தால், இந்த கேஸில் வெளிச்சம் பிறக்க இன்னும் சில நாட்கள் பிடித்திருக்கும். அதற்குள் ஆல்பர்ட்ஸன் சில்வியாவின் கதையை முடித்திருப்பார்."

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

விஜேஷ் இப்போது தாம்ஸனை ஏறிட்டான்.

"சார்... ஆல்பர்ட்ஸன் வீட்டில் சில்வியாவின் மியூஸியம் இருந்த அறையின் மாடிப்படிகளில் யாரோ இறங்கி வந்த சத்தம் கேட்டதே... அது எப்படி என்று தெரிந்ததா?"

தாம்ஸன் சிரித்தார். "வீட்டை வாங்க வருபவர்களைப் பயமுறுத்துவதற்காக ஆல்பர்ட்ஸன் செய்துவைத்திருந்த சென்ஸார் டிவைஸின் சில்மிஷம் அது. அவரிடம் இருந்த செல்போனிலேயே அதற்கான ரிமோட் கன்ட்ரோலும் இருந்தது."

கமிஷனர் கேட்டார்... "ஆல்பர்ட்ஸன்னின் வீட்டில் புதைக்கப்பட்டு இருந்த சைனோபாக் கன்டெய்னர் பாட்டில்களைத் தோண்டி எடுத்துவிட்டீர்களா?"

"தோண்டி எடுத்து அதை ராணுவத்திடம் ஒப்படைத்து, எப்படி அழிக்க வேண்டுமோ அப்படி அழித்தும் ஆயிற்று. சர்வதேச ராணுவ விதிகள்படி 'பயோ வெப்பன்கள்'

என்பது தடை செய்யப்பட்ட ஒன்று. நாங்கள் இன்னமும் இங்கே ஒரு வார காலம் தங்கி, பிரதாப் சிங் சம்பந்தப்பட்ட விவகாரங்களைப் புலனாய்வு செய்ய வேண்டும். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு வேண்டும்!"- தாம்ஸனும் ஸ்மித்தும் எழுந்துகொண்டார்கள்.

"நிச்சயமாக!" - விவேக் கைகுலுக்கினான்.

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஹோட்டல் அறைக் கட்டிலில் மல்லாந்து படுத்து இருந்த விவேக்கை, செல்போன் அழைத்தது.

எடுத்தான். மறுமுனையில் ரூபலா.

"என்னாச்சுங்க?"

"கேஸ் ஜனகணமன..."

"மின்மினி எப்படி இருக்காங்க?"

"அதிர்ச்சியில் இருந்து மீண்டு, பழைய மின்மினியா மாறி, பங்கஜ்குமாரோடு ரெண்டாவது ஹனிமூனை செலிப்ரேட் பண்ண குளுகுளு குலுமணாலி போயிருக்காங்க."

"அல்போன்ஸ்?"

LAVAN_JOY@TAMILTORRENTS.COM

"குடிப்பழக்கத்துக்கு அடிமையாயிட்ட அவனை அந்தப் பழக்கத்தில் இருந்து விடுவிச்சு, ஒரு நல்ல மனுஷனா மாத்துற பொறுப்பை சமூக அமைப்பு ஒண்ணு ஏத்துக்கிட்டிருக்கு."

"பெல்லாரி மல்லய்யா..?"

"கண்ணை முழிச்சுப் பார்த்துட்டார். மின்மினிக்கு எந்தப் பிரச்னையும் இல்லைன்னு தெரிஞ்சதும், வாயில் இருந்த நாலு பல்லைக் காட்டிச் சிரிச்சார். அடுத்த வாரம் டிஸ்சார்ஜ்."

"விஷ்ணு எங்கே..?"

"பக்கத்தில் இருக்கிற தியேட்டருக்குப் படம் பார்க்கப் போயிருக்கான்."

"என்ன படம்?"

"சாமியாரும் 40 சிஷ்யைகளும்!"

-முற்றும்